'பதிவுகள்' 27 சிறுகதைகள்

(தொகுதி இரண்டு)

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்"



"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்" என்பதைத்தாரக மந்திரத்துடன், எழுத்தாளர் வ.ந.கிரிதரனை ஆசிரியராகக்கொண்டு மார்ச் 2000 ஆம் ஆண்டிலிருந்து வெளியாகும் இணைய இதழ் 'பதிவுகள்' (பதிவுகள்.காம்). 'பதிவுகள்' இணைய இதழில் வெளியான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மின்னூற் தொகுப்புகளாக வெளியாகும். இது அவ்வகையில் வெளியாகும் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு.

www.geotamil.com   www.pathivukal.com   www.pathivugal.com

'பதிவுகள்.காம்' வெளியீடு!

அக்டோபர் 2020

உள்ளே

1. முடிவை நோக்கி! - சி.ஜெயபாரதன் -

டெலி·போன் மணி அகால நேரத்தில் அலறியதும், அதிர்ச்சியோடுதான் அதை எடுத்தார், ஆல்பர்ட் ஐன்ஸ்டைன். யார் இந்த நடுநிசியில் ·போன் பண்ணுவது? தான் லாஸ் அலமாஸ் ரகசிய ஆய்வுக் களத்திற்கு வந்திருப்பது யாருக்குத் தெரிந்தது? இந்த யுத்த சமயத்தில் ஏதாவது அபாய முன்னறிவிப்பா?.... பேசியவள் லாரா ·பெர்மி தான்! பேச்சில் நடுக்கமும், தடுமாற்றமும், கலக்கமும் எதிரொலித்தன!

"ஆல்பர்ட்! ஆய்வுக் கூடத்தில் ஹாரி டக்லியானுக்கு பெரிய விபத்தாம். ஆம்புலன்ஸில் ஆஸ்பத்திக்குக் கொண்டு செல்கிறார்கள். வருகிறீர்களா பார்ப்பதற்கு? நண்பர் ஜேம்ஸ் ·பிராங்க்கும் உடன் வருவதாய்ச் சொல்கிறார்". அவள் விடும் பெரு மூச்சு ·போனிலேயே தெளிவாய்க் கேட்டது.

"அப்படியா லாரா? வீட்டு வாசலின் முன் காத்திரு. பத்து நிமிஷத்தில் தயாராகிக் காரில் வருகிறேன்", என்று ·போனை வைத்தார், ஐன்ஸ்டைன்.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடியும் தருவாய். அமெரிக்கா ஜப்பானில் அணுகுண்டைப் போட்டு ஹிரோஷிமாவைத் தரை மட்டமாக்கி அன்றோடு பதினைந்தாம் நாள்! அந்த நாளைத் தனது "இருண்ட நாள்" என்று நொந்த ஐன்ஸ்டைனின் இதயம், இன்னும் துடிப்பு அடங்காமல் ஆலய மணிபோல் அடித்துக் கொண்டிருந்தது! முதன் முதலாக அணுக் கதிரியக்கம் லட்சக் கணக்கான அப்பாவி மக்களைத் தாக்கி அழித்திருந்தது. உயிர் பிழைத்தோரையும் இனி அழிக்கும்! பிறக்கப் போகும் பின் சந்ததிகளையும் அழிக்கும்! விபரீதமான, வேதனையான அந்த அழிவுச் சக்தியை ஆக்கிய மூல கர்த்தாக்கள் யார்? அணுக்கருவி னுள்ளே ஒளிந்து கொண்டிருக்கும் அந்த அபார சக்தியைக் கணித்தவர் யார்? தன்னைப் போன்ற விஞ்ஞானிகள்! அவர்களது அறிவு மனித இனத்தை நொடிப்பொழுதில் அழிக்கத்தான் பயன்பட வேண்டுமா?

அணுக்கருப் பிளவுச் சோதனையில் உதவியாய் இருந்த பௌதிக விஞ்ஞானி, ஹாரி டக்லியானுக்கு என்னதான் நேர்ந்திருக்க முடியும்?

ஐன்ஸ்டைனின் கார் பத்து நிமிஷத்தில் லாராவின் வீட்டருகில் வந்து நின்றது. லாராவும், ஜேம்ஸ் ·பிராங்க்கும் ஏறிக்கொள்ள, கார் லாஸ் அலமாஸ் ரகசியக் கோட்டத்தின் மருத்துவ மனையை நோக்கிப் பாய்ந்து சென்றது.

யுத்த காலமாகியதால், அந்த மயானப் பாதையில் மின்சார விளக்குகள் எதுவும் எரியவில்லை. கார் விளக்குகளுக்கும் நிறம் பூசி மங்கலான வெளிச்சம்தான். வீட்டு மின் விளக்குகளும் மறைக்கப் பட்டிருந்தன. அந்த பயங்கரக் பாலை வனத்தில் காட்டு

ஜந்துக்களின் கூட்டு ஓலம் வேறு!

"பாவம் ஹாரி! அவரது மனைவி ஊரில் இல்லாத நேரம் பார்த்தா விபத்து நிகழ வேண்டும்? அவள் கேட்டால் துடித்துப் போய்விடுவாள். என் கணவருக்கு இதயமே நின்றுவிடும். ஹாரி என் கணவரின் வலதுகை அல்லவா!" என்று கவலைப் பட்டாள் லாரா.

"உன் கணவர் எங்கே போயிருக்கிறார், லாரா?" என்று கேட்டார், ஐன்ஸ்டைன்.

"வாஷிங்டன் போயிருக்கிறார். பிரெஸிடெண்ட் ட்ருமன் உடனே வரும்படி ஓப்பன்ஹைமரையும், என்ரிக்கோவையும் அழைத்திருந்தார். ஜப்பானில் போட்ட அணுகுண்டுகளின் அழிவுக் காட்சிகளைக் காண வேண்டுமாம். விமானத்திலிருந்து எடுத்த போட்டோ படங்களைக் கொண்டு போயிருக்கிறார்கள். நாளை திரும்புவார்" என்றாள் லாரா.

"இந்தக் கோரச் சம்பவத்திற்கு மூல காரணமே, உன் கணவர்தான், லாரா! என்ரிக்கோ ·பெர்மி அணுக்கருத் தொடரியக்கத்தை முதன்முதல் வெற்றிகரமாக நடத்திக் காட்டாதிருந்தால், இந்த அணுயுகமே எழுந்திருக்காது! அணுகுண்டே இன்று பிறந்திருக்காது! ஹிரோஸிமாவும், நாகசாகியும் நாசமாகி யிருக்காது! ஹாரிக்கும் இப்படி விபத்து நேர்ந்திருக்காது!" என்று வெடித்துப் பேசினார் ஜேம்ஸ் ·பிராங்க்.

பெர்மியின் மீது மட்டும் பழியைப் போடாதே, ·பிராங்க். முதலில் இந்த அழிவுச்சக்திக்கு விதை போட்டவனே நான்தான்! முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்! யுத்தம் சீக்கிரம் முடிவடைய அணு ஆயுதம் தேவை, என்று காலம் சென்ற பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்டுக்குக் கடிதம் எழுதினேன் அன்று! ஏன் அப்படி எழுதினேன் என்று கவலைப் படுகிறேன் இன்று!" என்று கண் கலங்கினார் ஐன்ஸ்டைன். லாரா இருவரையும் பார்த்து திகைப்படைந்தாள். அவளுக்குத் தலை சுற்றியது!

"என்ன, ஆல்பர்ட்! நீங்களா இந்த நாசகுண்டு தயாரிக்கத் தூண்டியவர்? நம்ப முடிய வில்லையே! விபரீதமான விஷப் பரீட்சை! உலக சரித்திரத்தில் யாரும் உங்களை மறக்கவும் முடியாது! யாரும் மன்னிக்கவும் முடியாது! " என்று முகத்தைத் திருப்பிக் கொண்டார், ஜேம்ஸ் ·பிராங்க்.

கார் லாஸ் அலமாஸ் ரகசியத் தளத்தின் தடை வாயிலை வந்தடைந்தது. துப்பாக்கியுடன் ராணுவக் காவலர் இருவர் சூழ்ந்து, காரையும், மூவரின் அடையாளத் தகடைச் சோதித்தபின், கார் நுழைய அனுமதி கிடைத்தது. ஐந்து நிமிடத்தில் ஆஸ்பத்திரி வரவே, மூவரும் இறங்கி உள்ளே நுழைந்தனர். ஹாரி இருந்த அறையிலிருந்து டாக்டர்

வில்ஸன் வெளியே வந்தார்.

"ஹாரி எப்படி இருக்கிறார், டாக்டர்?" என்று ஒருங்கே கேட்டார்கள் மூவரும்.

"மிகவும் மோசமான நிலை! ..... ஜேம்ஸ்! ஹாரிக்கு விபத்து நேர்ந்த போது அவருடன் வேறு யாரும் இருந்தார்களா?" என்று வினாவினார் டாக்டர் வில்ஸன்.

"இல்லை டாக்டர்! ஹாரி தனியாகத்தான் ஆய்வுக் கூடத்தில் இருந்திருக்கிறார். நல்ல வேளை! வேறு யாரும் அருகில் இல்லை!" என்று பதில் அளித்தார், ஜேம்ஸ்.

"அணுக்கருத் தொடரியக்கம் அங்கே எப்படி ஏற்பட்டது? எந்த மெட்டலால் உண்டானது? இருந்த எரிபொருள் யுரேனியமா? அல்லது புளுடோனியமா?", பதட்டத்துடன் கேட்டார், டாக்டர் வில்ஸன்.

"யுரேனியமாகத்தான் இருக்க முடியும்!" என்று பதில் அளித்தார், ஜேம்ஸ்.

"நல்ல வேளை! அது புளுட்டோனியமாக இருந்திருந்தால் ஹாரி இப்போது உயிரோடிருக்கமாட்டார். அதி உக்கிர தீக்கதிர்கள் அவரைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி யிருக்கும்!" என்றார் வில்ஸன்.

"ஹாரி பிழைப்பாரா?" என்று கண்ணீர் பொங்க வினாவினாள், லாரா ·பெர்மி.

டாக்டர் வில்ஸன் தலை குனிந்த வண்ணம், "என்னால் எதுவும் சொல்ல முடியாது இப்போது!" என்றார்.

"இந்த நிலையில் ஹாரியை நாங்கள் பார்க்கலாமா?" என்று கேட்டார், ஐன்ஸ்டைன்.

"பயங்கர அதிர்ச்சி யடைந்து மிகவும் தொய்ந்து போயிருக்கிறார், ஹாரி..... நீங்கள் பார்க்கலாம்" என்று நடந்து சென்றார், டாக்டர்.

பெரு மூச்சோடு அறைக்குள் நுழைந்தார்கள் மூவரும். பேயறைந்ததுபோல் படுக்கையில் துவண்டு கிடந்த ஹாரியைக் கண்டதும் லாராவின் மூச்சே நின்று போயிற்று! கண்களில் கண்ணீர் பொங்கிப் பெருகியது!

எத்தகைய நுட்ப விஞ்ஞானி இந்த ஹாரி! எத்தனை மகத்தான ஆராச்சிகளை அணுத் துறையில் கண்டு பிடித்திருப்பவன் இந்த ஹாரி! இவனுக்கா விபத்து நேர வேண்டும்? இனி யார் பிறக்கப் போகிறார், இவனுக்கு ஈடாக!

"எப்படி இருக்கிறாய் ஹாரி?" என்ற கேட்டாள் லாரா, அருகில் அமர்ந்து கொண்டே.

ஹாரி சற்று நேரம் பேசாமல் லாராவையே உற்று நோக்கினான். தனது கைகளைத் தூக்கி,"லாரா பார்த்தாயா? இந்த விரல்களிலே எந்தவித உண்ர்ச்சியும் இல்லை இப்போது! யானை மிதித்துப் போட்டதுபோல் நொய்ந்து கிடக்கிறேன்!.... இதுபோல் தானே அந்த அப்பாவி ஜப்பானியர்களின் கை, கால், எலும்பு, சதை எல்லாம் படாத பாடு பட்டிருக்கும்?" என்று கூறினான் ஹாரி.

விபத்து நேர்ந்த அரைமணி நேரத்தில் உணர்ச்சியே இழந்து விட்டனவா விரல்கள்? அப்படி என்றால் ஹாரியைத் தாக்கிய கதிரியக்கத்தின் உக்கிரம்தான் என்ன! ...ஜேம்ஸ் ·பிராங்க் தன் மனதில் கணக்குப் போட்டுப் பார்க்கலானார்.

"ஆல்பர்ட்! ஆயிரமாயிரம் ஊசிகள் இப்போது என்னுடம்பைக் குத்தி துளை போடுகின்றன!" என்றான் ஹாரி. அணு குண்டின் கோடான கோடி கதிரியக்க ஊசிகள் இப்படித்தானே ஜப்பானிய மக்களைச் சித்திரவதை செய்திருக்கும்!
அவர்களின் மரண ஓலங்கள் வானையே பிளந்திருக்கும் அல்லவா!"

ஆ'வென' அலறினான் ஹாரி. அந்த ஓசை அலைபோல் எதிரொலித்தது! நர்ஸ் சைகை செய்யவே மூவரும் அறையைவிட்டு அகன்றார்கள். வெளியே பிரமாண்டமான காரிருட் போர்வை! அதில் கண் சிமிட்டும் விண்ணொளி மீன்கள்! சக்தியில்லாமல் மூவரும் நாற்காலில் அமர்ந்தனர்.

"எப்படி நேர்ந்தது இந்த கோர விபத்து? கொஞ்சம் விளங்கும்படி சொல்வீர்களா, ஜேம்ஸ்" என்று தலையில் கைவைத்துக் கொண்டு கெஞ்சினாள், லாரா.

ஜேம்ஸ் சொல்லத் தயங்கினார். இது ரகசியச் சம்பவமல்லவா? எப்படிச் சொல்வது?

"பயப்படாதீர்கள் ஜேம்ஸ்! யாரிடமும் நான் இதைச் சொல்லப் போவதில்லை! கடந்த ஐந்து ஆண்டுகளாக, லாஸ் அலமாஸின் பல ரகசியங்களை, இதுவரை நான் என்மனப் பெட்டிக்குள் பூட்டி வைத்திருக்கிறேன். இது எனக்குப் பழக்கப்பட்டதுதான்! சும்மா சொல்லுங்கள், ஜேம்ஸ்" என்று வற்புறுத்திக் கேட்டாள் லாரா.

அக்கம் பக்கம் பார்த்து, மெல்லிய குரலில் பேசினார், ஜேம்ஸ். "வளர்த்த கடா மார்பிலே பாயும்!, என்று கேள்விப் பட்டிருப்பாயே, லாரா. அதுதான் இந்தக் கதை! இதுவரை நிகழாத சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது, இன்று! பேரதிர்ச்சி அடைந்தோம் எல்லோரும்! இன்று ஹாரிக்கு! நாளை நமக்கு! ஓர் அணுகுண்டு வெடிக்குமுன் என்ன மாதிரி தொடரியக்கம் நிகழுமோ, அவை அனைத்தும் நடந்துள்ளன, லாரா. யாரும் இதை

எதிர்பார்க்க வழியே இல்லை! பூரணத் தொடரியக்கம் பளிச்செனத் துவங்கி, பல்லாயிரக் கணக்கான ராஞ்சன் கதிரியக்கம் பொங்கி, கண்ணிமைப் பொழுதில் ஹாரியைத் தாக்கி யிருக்கின்றன!"

சற்று மூச்செடுத்துக் கொண்டு தொடர்ந்தார், ஜேம்ஸ். "இது எப்படி ஆரம்பித்தது தெரியுமா? மறு நாள் ஆராய்ச்சிக்கு இரவில் தயார்செய்து கொண்டிருந்த ஹாரி, ஒரே ஒரு சிறு தவறு செய்தான்! தெரியாமல் செய்தது! .... ஆய்வு அணு உலையில் யுரேனிய மெட்டலைச் சீராக அடுக்கிவிட்டு, நியூட்ரான் நழுவாது காத்திடச் சுற்றிலும் கரிக் கட்டிகளை மிதவாக்கியாக அமைத்துவந்த ஹாரி, கைதவறி ஒன்றை நழுவவிட்டான். உடனே, சீறி எழுந்தது, பூரணத் தொடரியக்கம்! திடீரென நியூட்ரான்களின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகி, யுரேனியக் கருவைத் தாக்கி, 'நீல ஒளிக் கோளம்' சுடர்விட்டுப் பிரகாசித்தது! பொங்கி எழுந்த கதிரியக்கம் ஊசிகளாய் எல்லாத் திசை களையும் எல்லாப் பொருட்களையும் தாக்கின!"

"அதிர்ச்சி அடைந்த ஹாரி, நடந்துவிட்ட அபாயத்தை அறிந்து, சமத்தாக கரிக் கட்டி ஒன்றை நீக்கிச் சரிசெய்ய, தொடரியக்கம் அடங்கி நின்றது! ஆனால் என்ன பயன்! ஒரு நொடிப் பொழுதில் எல்லாம் நிகழ்ந்துவிட்டது! பல்லாயிரம் ராஞ்சன் வீரியமுடைய தீக்கதிரை ஹாரி சில வினாடிக்குள் ஏற்றுக் கொண்டுவிட்டான். அது அவனுக்கும் தெரியும்!"

"நல்ல வேளை! அணுகுண்டு போல் அது வெடிப்பதற்குள் நியூட்ரான் பெருக்கத்தை விரைவில் நிறுத்தி விட்டான், ஹாரி. இல்லாவிட்டால் லாஸ் அலமாஸிலும் ஓர் அணுகுண்டு வெடித்து நீயும், நானும், ஏன் இந்த ரகசியத் தளமே எரிந்து சாம்பலாகி யிருக்கும்!"

"அமெரிக்காவில் மூன்றாவது அணுகுண்டு! எதிர்பாராத விதமாக வெடித்தது!, என்று எல்லா உலகப் பத்திரிக்கையிலும் வெளியாகும்!"

"லாரா! அமெரிக்கா துவக்கி வைத்த இந்த அணு ஆயுத யுகத்திற்கு, நாம் அளிக்கும் முதல் உயிர்ப்பலி, ஹாரி!" என்று வேசத்துடன் வார்த்தைகளைக் கொட்டினார், ஜேம்ஸ் ·பிராங்க்.

"அப்படிச் சொல்லாதீர்கள், ஜேம்ஸ். கதிரியக்க மருத்துவ நிபுணர்களை அழைத்து வந்து எப்படி யாவது ஹாரியைக் காப்பாற்றியாக வேண்டும். வாஷிங்டன் ராணுவ மருத்துக் கூடத்திற்கு ·போன் பண்ணி அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கெஞ்சினாள் லாரா.

நெற்றியில் கைவைத்த வண்ணம் மௌனத்தில் எழுந்தார், ஜேம்ஸ். மூவரும் வீட்டுக்குக்

கிளம்பினார்கள். "கடவுளே! ஹாரியைக் காப்பாற்று! எங்கள் ஹாரியைக் காப்பாற்று! " என்று மனதில் பிரார்த்தனை செய்து கொண்டே நடந்தாள், லாரா.

கார்ச் சாவியைத் திருக்கிக் காரை இயக்கினார், ஐன்ஸ்டைன். அவர் மனம் அங்கில்லை! பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் ஹாரி டக்லியான்களைப் பற்றி நொந்து, அது அசைபோட்டுக் கொண்டிருந்தது!

மறுநாள் ஜேம்ஸ் ·பிராங்க் லாஸ் அலமாஸ் ஆய்வுக் கூடத்தில் ஹாரியின் அறையில் நிகழ்ந்த விபத்தின் கதிரியக்க விளைவுகளையும், கருவிகளில் பதிவான குறிப்புக்களையும் எழுதிக் கொண்டு, வாஷிங்டன் ராணுவ மருத்துவ மனைக்குப் ·போன் செய்தார். விபரங்களுக்கு ஏற்ப சிகிட்சை சாதனங்களை ஏற்றிக் கொண்டு, கதிரியக்க மருத்துவ நிபுணர்கள் லாஸ் அலமாஸ் நோக்கிப் புறப்பட்டார்கள். ·போன் மூலம் ஹாரியின் நிலையை அவ்வப்போது தெரிந்து கொண்டார்.

நாலைந்து நாட்கள் கழித்து ஹாரியைப் பார்க்க ஜேம்ஸ் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். அறையில் ஹாரியைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்து அப்படியே நின்றுவிட்டார்.

"யார் ஹாரிக்கு இப்படி மொட்டை அடித்தது?" என்று நர்ஸ்களைப் பார்த்துக் கேட்டார், ஜேம்ஸ். நர்ஸ் யாரும் அதற்குப் பதில் கூறவில்லை.

ஹாரி புத்த தேவன் போல் காட்சி அளித்தான்! தலை மயிர் எல்லாம் உதிர்ந்து போயின! முகம் வீங்கி கண்களை மூடிவிட்டது! உடம்பெல்லாம் வீங்கி, தோலுரிந்து மேனியெல்லாம் சிவந்து விட்டது! அவை யாவும் தீக்கதிர்கள் வரைந்த கோலங்கள்!

"தலை மயிர் யாவும் தாமாகவே உதிர்ந்து விட்டன" என்றார் ஒரு கதிரியல் நிபுணர். அருகில் ஹாரியின் மனைவி, லாரா, லாராவின் கணவர் என்ரிக்கோ ·பெர்மி, ஐன்ஸ்டைன், லியோ ஸிலார்டு யாவரும் கூடி யிருந்தனர். வெளியே ஓப்பன்ஹைமர், லெஸ்லி குருவ்ஸ் நடமாடிக் கொண்டி ருந்தார்கள்.

ஹாரி கை அசைத்து லாராவைக் கூப்பிட்டார். "நான் ஆசிய ஜோதியாகி விட்டேன், லாரா! பார்! இப்போது நானொரு புத்த பிச்சு! போர், இம்சை, பழி, பாபம், நாசம், அழிவு இவைகளை எதிர்த்து நிற்கும் போதி சத்துவன்! உயிர்களின் துணைவன்! அறவழியைப் பின்பற்றும் அணுவியல் துறைஞன்! "

அப்போது ஓப்பன்ஹைமர், லெஸ்லி குரூவ்ஸ் இருவரும் வெளியே ஒரு மூலையில் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள். லெஸ்லி முணுமுணுத்தார், "இன்னும்

பத்து அணு குண்டுகளைத் தயாரிக்க கட்டளை வந்திருக்கிறது, ஓப்பி! நேற்றுதான் பிரஸிடெண்ட் ட்ரூமன் என்னிடம் நேரில் பேசினார். அடுத்து ஹைடிரஜன் குண்டு திட்டத்திற்குப் பச்சைக்கொடி! எட்வர்ட் டெல்லரை இன்று பார்க்கப் போகிறேன்." லெஸ்லி குரூவ்ஸ்தான் மன்ஹாட்டன் அணு குண்டுத் திட்டத்தை மேற்பார்க்கும் முக்கிய ராணுவத் தளபதி! இரண்டாம் உலக மகா யுத்த முடிவில், திட்டப்படி அணு குண்டு இரண்டை ஜப்பானில் போட்டுப் புகழ் பெற்ற, போர் ஹீரோ!

ஓப்பன்ஹைமர் உதட்டில் ஒரு புன்சிரிப்பு மின்னியது! "எல்லாம் தயார்! அதற்கு வேண்டிய அளவு யுரேனியமும், புளுடோனியமும் கைவசம் உள்ளது! ஆனால் ஹைடிரஜன் குண்டுக்கு அதிகக் கனஅளவு கன ஹைடிரஜன் தேவை! அது நம்மிடம் இல்லை! அணுகுண்டை விட ஆயிரம் மடங்கு அழிவுசக்தி கொண்டதல்லவா ஹைடிரஜன் குண்டு!" எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பதில் அளித்தார், ஓப்பி! அவர்தான் அணுகுண்டின் பிதா! இருபதாம் நூற்றாண்டில் யுத்த சமயத்தில் பல நாட்டு விஞ்ஞான நிபுணர்களைத் தன்கீழ் இணைத்து, ஆணை யிட்டு, ஆட்டிப் படைத்து, முதன் முதல் அணு ஆயுதங்களை ஆக்கிய தலைமை அதிபதி! ஒப்பற்ற விஞ்ஞான மேதை, ஓப்பி!

இந்த ரகசியப் பேச்சை ஒட்டுக் கேட்ட ஜேம்ஸ் ·பிராங்க் சீறினார். "இன்னும் பத்து அணு குண்டுகளா? அடுத்து ஹைடிரஜன் குண்டு வேறா? எந்த அப்பாவி மக்கள் தலையில் போடவாம்? யுத்த விஞ்ஞான அறிவு உலகின் முடிவை நோக்கித்தான் போக வேண்டுமா?" என்று கடிந்தார், ஜேம்ஸ்!

ஓப்பி, குருவ்ஸ் இருவரும் பதில் பேசாமல் அங்கிருந்து அகன்றார்கள். அமைதி சூழ்ந்தது.

அந்த பயங்கர அமைதியைக் கலைத்தாற்போல் 'ஓ வென' ஓர் அலறல் சப்தம் ஹாரி அறையி லிருந்து எழுந்தது! எல்லா விஞ்ஞானிகளும் ஓடிப்போய் பார்த்தார்கள்.

ஹாரி பைத்தியம் பிடித்தவன் போல் படுக்கையிலிருந்து எழுந்து, கண்களை உருட்டிக் கொண்டு ஓலமிட்டு கத்தினான்! டாக்டர் வில்ஸனும், நர்ஸ்களும் ஓடா வண்ணம் அவரைப் பிடித்துக் கொண்டார்கள்.

"டாம் ஓப்பி! லிட்டில்பாய் ஓப்பி! டாம் குருவ்ஸ்! ·பாட்மான் குருவ்ஸ்! யு போத் கெட் அவுட்! கெட் அவுட்!" என்று ஆர்ப்பாட்டமுடன் கத்தினான், ஹாரி!

ஓப்பன்ஹைமர், குருவ்ஸ் இருவரும் உடனே வெளியேறினர். லாராவுக்கு எதுவும் புரியவில்லை. "என்ன இது? லிட்டில்பாய்! ·பாட்மான்!" என்று ஜேம்ஸைக் கூர்ந்து நோக்கினாள், லாரா.

"லிட்டில்பாய் என்பது ஹிரோஷிமாவில் போட்ட அணுகுண்டு! ·பாட்மான் என்பது நாகசாகியில் போட்ட அணுகுண்டு! இரண்டும் ராணுவ ரகசியச் சொற்கள்" என்று லாராவின் காதுக்குள் குசுகுசுத்தார், ஜேம்ஸ்.

மறுபடியும் புலம்பினான் ஹாரி. "அதோ! குடைக் காளான்! ஓராயிரம் சூரியனைவிட ஒளிமயமான முஷ்ரூம் கிளவ்டு! அதில் நான் மிதக்கிறேன்! அதோ! அணுக் கோளம்! அனல் கோளம்! கதிர்க் கோளம்! கனல் கோளம்! ஒளிக் கோளம்! வெடிக் கோளம்! விஷக் கோளம்! அழிவுக் கோளம்! அவற்றின் அசுரப் பிடியில் நசுங்கும் மக்கள்! முடிவில் மரணக் கோலம்!"

பிதற்றல்களை நிறுத்த ஹாரிக்கு ஓர் ஊசியைக் குத்தினார், டாக்டர் வில்ஸன். மெய் மறந்து தூங்குகினான் ஹாரி.

ஹாரியின் முடிவு நேரம் நெருங்கியது. விபத்து நடந்து இன்றோட இருபத்தி நான்காம் நாள்! வெள்ளை ஆடை அணிந்த கிறிஸ்துவப் பாதிரியார் ஒருவர், மெள்ள அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். வெளியே செய்யும் வேலையை நிறுத்திவிட்டுப் பலர் மௌனமாகக் கூடி நின்றார்கள். லாரா கண்ணீர் சொரிய ஹாரி அருகி நின்றாள். படுக்கையின் இருபுறமும் ஏற்றி வைக்கப்பட்ட மெழுகு வர்த்திகள் சூடான திரவத்தைச் சிந்தி அழுதன!

ஹாரிக்கு மூச்சு மேலும் கீ£ழும் ஏறி இறங்கியது. மெதுவாக பைபிள் நூலைத் திறந்து பாதிரியார் பிரார்த்தனை செய்தார். "பேரண்ட கோளங்களின் பிதாவே! இங்கே துடித்துக் கொண்டிருக்கும், அணு போன்ற இந்த ஆத்மாவின் பாபங்களை மன்னித்து, இனிமேலும் வதைக்காமல், நீர் ஏற்றுக் கொண்டு ஆசீர்வதியும்!"

கண்களைத் திறக்க முடியாமல், ஹாரி கையை அசைத்து, "ஆல்பர்ட்!" என்று தடுமாறி அழைத்தார். பின்புறம் மறைந்து கொண்டிருந்த ஐன்ஸ்டைன் முன்புறம் வந்து நின்றார். அணையப் போகும் மெழுகுவர்த்திகள் இரண்டும் சுடர்விட்டுப் பிரகாசித்தன!

ஹாரி சற்று அழுத்தமாகப் பேசினான். "ஆல்பர்ட்! எனது இறுதி வேண்டுகோள் இது! முதலில் எட்வெர்ட் டெல்லரை அணுகி, அவரது மனத்தை மாற்றி, அடுத்து உருவெடுக்கும் ஹைடிரஜன் குண்டுத் திட்டத்தை நிறுத்த உடனே முயற்சி செய்யுங்கள்! உலக வல்லரசுகள் தொடரப் போகும் அணு யுதப் போட்டியை நிறுத்த விஞ்ஞானிகளை ஒன்று திரட்டுங்கள்! ஏன்? ஆசிய நாடுகளும் கூட இனி அணு யுதங்கள் ஆக்க முற்படலாம்! அதற்கு விஞ்ஞானிகள் ஒத்துழைக்க கூடாது! அணு ஆயுத முடிவை நோக்கி எல்லாரும் போராடுங்கள்! அணுசக்தியை மனித இனத்தின் ஆக்கவழி களுக்குப்

பயன்பட உழைப்பீர்களா? உங்கள் 'இருண்ட நாள்' மீண்டும் உதயமாக வேண்டாம்!" என்று மொழிந்த சிறிது நேரத்திற்குள் ஹாரியின் ஆத்மா பிரிந்தது.

ஐன்ஸ்டைன் கண்களில் நீர் திரளச் சிலையாய் நின்றார். ஜேம்ஸ் ·பிரங்க்கின் இதயத்தில் சிறிது நிறைவு ஊறியது. லாரா சிரம் தாழ்த்தி ஒரு மலர் வளையத்தை ஹாரியின் காலடியில் வைத்தாள். விஞ்ஞானிகள் யாவரும் தலைகவிழ்ந்து அஞ்சலி செய்தார்கள்.

[ஜப்பானில் அணுகுண்டு வீச்சுக்குப்பின், லாஸ் அலமாஸில் நேர்ந்த ஒரு மெய்யான சோக விபத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியது - சி. ஜெயபாரதன். மே 21, 2000]

பதிவுகள் ஆவணி 2000 இதழ்-8

2. ஒரு பனை வளைகிறது! - சி. ஜெயபாரதன்-

சென்னையைச் சேர்ந்த ஜெயபாரதன் எழுத்தாளர் மட்டுமல்ல அணு விஞ்ஞானியும் கூட. பம்பாய் பாபா அணு ஆய்வுக் கூடம், ராஜஸ்தான் அணு மின்சக்தி நிலையம், சென்னை கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையம், கனடாவில் 'புரூஸ்' அணுசக்தி நிலையம் ஆகியவற்றில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தற்போது கனடாவில் வசித்து வருகின்றார். இவரது விஞ்ஞானக் கட்டுரைகள் பல மஞ்சரி, கலைமகள் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. 'அம்பலம்' உட்படப் பல இணைய இதழ்களில் இவரது ஆக்கங்கள் பல வெளிவந்துள்ளன. இவரது 'ஆக்க வினைகளுக்கு அணுசக்தி' என்னும் கலைமகள் பதிப்பக நூலிற்குச் சென்னைப் பல்கலைக்கழக 'மாநில முதற் பரிசு' கிடைத்தது குறிப்பிடத்தக்கது. 'ஒரு பனை வளைகிறது' என்னுமிச் சிறுகதையே 'பதிவுகளி'ல் வெளிவரும் இவரது முதற்படைப்பாகும்.-

பள்ளிக்கூடத்திலிருந்து வந்த இந்துவுக்குத் தாகம் பொறுக்க முடியவில்லை. நேராக சமையல் அறைக்குள் ஓடினாள். தரையில் கிடந்த சிறட்டையை எடுத்துக் குடத்தினுள்ளே விட்டு நீரை மொண்டு கடகட வெனக் குடித்தாள். அப்படியும் அவள் தாகம் தணியவில்லை. இரண்டாம் தடவை உள்ளே விடும்போது, அங்கு வந்த ஜானகி அதைப் பார்த்து விட்டாள்.

"அடி கழுதை! சிறட்டையிலேயா தண்ணீர் எடுத்துக் குடிக்கிறே!", இந்து முதுகில் இரண்டு அடி விழுந்தது.

"அப்புறம் வாய் வச்சுக் குடிச்சி, அந்த அழுக்குச் சிறட்டையை மறுபடியும் குடத்துக்குள்ளேயா விடுவது?" என்று சிறட்டையைப் பிடுங்கி, ஜன்னல் வெளியே விட்டெறிந்தாள், ஜானகி. இந்து அழுது கொண்டு உள்ளே ஓடினாள்.

உச்சிப் பொழுதில், நெற்றிக் கண்ணைத் திறந்து, தீப்பிழம்பைக் கக்கி உயிரினங்களைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தான், சூரியன்! வியர்வை சொட்டச் சொட்ட வேலையில் மூழ்கி இருந்த ஜானகி, முகத்தைத் துண்டில் துடைத்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவள் மாதர் குலத்தின் தனித்துவ மடந்தை! கோடியில் ஒருத்தி! நிரம்ப சுத்தம் பார்ப்பவள். சார குல மாது! கணவன் வாய் வைத்துக் குடித்த தம்ளரில்கூட தான் நீர் அருந்த மாட்டாள்! வீட்டில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி தம்ளர்! பெயர்கூட எழுதப் பட்டிருக்கும்! அவ்வளவு சுத்தக்காரி ஜானகி!

மனிதர்களின் பிறப்பையும், தரத்தையும் நிறுத்துப் பார்த்துப் பழகுவபவள், ஜானகி!. படைப்பிலே ஏற்றத் தாழ்வுகள் உண்டு என்பவள். 'எல்லரும் ஓர்குலம், எல்லாரும் ஓரினம், எல்லாரும் ஓர்நிலை', என்றால் அவள் ஒப்புக்கொள்ள மாட்டள். அதுஅது அந்தஅந்த இடத்தில்தான் இருக்க வேண்டும், என்று சொல்பவள், ஜானகி! கடவுளே பல இனங்களையும் பல நிறங்களையும் பல வடிவங்களையும் காரணமாகத்தான் படைத்திருக்கிறது! என்று நியாயம் பேசுவாள்.

ஒரே ஒரு பெண் குழந்தைதான் ஜானகிக்கு. ஆறு வயது வந்த செல்லப் பிள்ளை இந்திரா. அந்த அறியாச் சிறுமிகூட அவளது சுத்த இலக்கண விதிகளுக்கு அடங்கித்தான் நடக்க வேண்டும்!

பம்பாயிலிருந்து வேலை மாற்றலாகி, அவர்கள் சென்னை கல்பாக்கத்திற்கு வந்து இரண்டு வாரம்தான் கிறது. இருபது ஆண்டுகள் கழித்து, மீண்டும் தமிழ் நாட்டுக்கு விஜயம்! பிறந்த மாநிலமானாலும் சொல்லில், செயலில், முறையில் பல மாற்றங்கள் முளைத்து,ஆல விழுதுகளாய்த் தொங்குவதை அவர்கள் கண்டார்கள்.

இந்துவை அங்குள்ள ஓர் ஆரம்பப் பள்ளியில் இரண்டாம் வகுப்பில் சேர்த்து மூன்று நாளாகிறது. அன்று மாலை பள்ளியிருந்து திரும்பிய இந்து, "அம்மா...அம்மா...! என்று சையோடு ஜானகியின் கால்களைக் கட்டிக் கொண்டாள். பகலில் தாயிடம் வாங்கி அடிகளை எல்லாம் எப்போதே மறந்து விட்டாள், இந்துக்குட்டி!

சுட்டும் விழிச் சுடர்களைச் சுழற்றிக் கொண்டு, "அம்மா, இன்னைக்கு அஞ்சாம் கிளாஸ் மஞ்சு என்னைப் பார்த்து, நீ என்ன சாப்பிடுவே? மாமிசமா? அல்லது மரக்கறியா? என்னு கேட்டாள். ஏம்மா! மரக்கறின்னா என்ன? மாமிசமென்னா என்ன?"

"மஞ்சு! அது எந்த நாய்? உன்னைப் பார்த்து, 'என்ன சாப்பிடறே' ன்னு கேட்டது?"

"அப்புறம், 'இந்து! நீங்க என்ன குலம்?' என்னு இன்னொரு பிள்ளை கேட்டது. தெரியாதுன்னு சொன்னேன். அம்மா! நாமெல்லாம் என்ன குலம்? குலமுன்னா என்ன?"

"அது எந்தக் கழுதை? சின்னப் பிள்ளையைப் பார்த்து குலம், கோத்திரம் கேட்குது! இரு! நாளைக்கு உன்னோடு ஸ்கூலுக்கு நானும் வர்றேன். வந்து உன் டீச்சரிடம், 'ஒன்னும் தெரியாத சின்னஞ் சிறிசிடம், பிள்ளைகள் இப்படியா கேட்பது?' என்னு புகார் பண்ணுறேன்", என்று ஆத்திரத்தில் பேசினாள்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரவி, மாடியிலிருந்து கீழிறங்கி வந்தான். "ஜானகி! நானும் ஸ்கூல் பிரின்ஸ்பாலிடம் இதைப் பற்றிக் கேட்கிறேன். என்ன குப்பை ஸ்கூல்

இது? மிகவும் பிற்போக்கான சுற்றுப்புறம் இது! பம்பாயை விட்டு நாம் சென்னைக்கு வந்ததே தப்புன்னு இப்போ தெரியுது. அங்கே இந்த மாதிரி யாரும் குலம் கேட்கலே! சாப்பிடுற காரத்தைக் கேட்கலே! இது புது அனுபவம் நமக்கு! நம்ம தலையெழுத்து!" என்று தலையில் அடித்துக் கொண்டான், ரவி.

மறுநாள் பள்ளியிலிருந்து வந்த இந்து இன்னொரு அருவருப்பான கதையைச் சொன்னாள்.

"அம்மா! இன்னைக்கு என் கிளாஸ் டீச்சர் என்னைத் தனியாகக் கூப்பிட்டு, 'உன் அப்பா பேரு என்னான்னு' கேட்டாங்க. 'ரவிச்சந்திரன்' ன்னு சொன்னேன். அப்புறம் அம்மா பேரைக் கேட்டாங்க. நான் 'ஜானகி' ன்னு சொன்னேன். நான் போகத் திரும்பும் போது, மெதுவா .... 'நீங்க என்ன ஜாதி' ன்னு கேட்டாங்க.... நான் 'தெரியாது' ன்னு முழிச்சேன்.... அம்மா! நாம என்ன ஜாதி? ஏம்மா! ஜாதின்னா என்ன?" என்றுஆர்வமாய்க் கேட்டாள், இந்துக்குட்டி.

ஜானகிக்கு கோபம் சீஃறிக் கொண்டு வந்தது. "இங்கே கொஞ்சம் கூட கூச்சமில்லாமல் டீச்சர்கூட சின்னப் பிள்ளையிடம் இப்படி பச்சையாய் கேட்டிருக்காளே! வெட்கக் கேடு! படிச்சுப் பட்டம் வாங்கின டீச்சரே இப்படி ஜாதி கேட்பாளா?....சீஃ! சீ! ...'பிள்ளைகளைப் பத்தி புகார் செய்யலாம்' என்றால், இப்போ டீச்சரே அசிங்கமா கேட்கிறா...... பிரின்ஸ்பாலும் இப்படித்தான் இருப்பார்".

ரவி எதுவும் சொல்லாது சற்று யோசித்தான். "பழைய தலைமுறையில் பாரதியார், 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடினார்! இப்போ புதிய காளான்கள் முளைத்த உடனே, 'ஜாதிகள் உள்ளதடிப் பாப்பா' என்று தேடுதுகள்!" என்று வருந்திக் கொண்டு வெளியே சென்றான் ரவி.

"ஏம்மா! நாமெல்லாம் என்ன ஜாதி? சொல்லம்மா!" என்று ஜானகியின் கண்களை நோக்கினாள், இந்து.

ஜானகிக்கு பற்றிக் கொண்டு வந்தது. "சீ! போடி!" என்று மறுத்து, சமையல் அறைக்குள் போய் புகுந்து கொண்டாள். இந்து விடுவதாய் இல்லை. அவளைப் பின் தொடர்ந்தாள்.

"ஏம்மா! ஜாதின்னா உங்களுக்கும் தெரியாதா?"

"போடீ மண்டு! இதை எல்லாம் நீ தெரிஞ்சிக்கப்படாது, இந்த வயசிலே!"

"அப்புறம் ஏம்மா டீச்சர் என்கிட்ட ஜாதி கேட்டாங்க?" என்று அம்மாவை மடக்கினாள், இந்து. ஜானகிக்கு எப்படி, என்ன பதில் சொல்வதென்று தெரிய வில்லை. ரவி போய்விட்டானா

என்று வெளியே பார்த்துக் கொண்டு, அங்கும் இங்கும் எதையோ தேடினாள். அடுக்கியுள்ள அலமாரிப் பாத்திரங்கள் அவள் கண்ணில் பட்டன. பளிச்சென்று அவளுக்கு உதய மானது!

"அதோ பார் அலமாரியில். அது என்ன சொல், இந்து?"

"அது எனக்கு தெரியுமே. எவர்சில்வர் தம்ளர்"

"இது என்னவென்று சொல் பார்க்கலாம்?"

"இதுவா, இது கிளாஸ் தம்ளர்"

"கறை படிஞ்சிருக்கே அதோ, அது என்ன?"

"பித்தளைத் தம்ளர், அம்மா!"

பின்பு ஜானகி குனிந்து குப்பைக் கூடையில் ஒன்றைத் தேடினாள். "இதுதான் உனக்கு நல்லா தெரியுமே!"

"எது? ஓ! அதுவா? ....அது கொட்டங்கச்சி" என்றாள் இந்துக்குட்டி.

ஜானகியின் முகம் பொங்கியெழும் முழு நிலவாகி, புன்னகையை மின்னியது! இந்து எதுவும் புரியாது விழித்தாள். "ஏம்மா இந்த தம்ளர் பேரை எல்லாம் கேட்கிறீங்க?" என்றாள்.

"இந்துக்கண்ணு! ஜாதி நான்கு! நாமெல்லாம் எவர்சில்வர் மாதிரி நினைச்சுக்கோ......!"

"எவர்சில்வருன்னா, நாமெல்லாம் பளபளன்னு இருக்கோமா.......?"

"அதெல்லாம் இல்லே. எவர்சில்வருன்னா ஸ்டெயின்லஸ் ஸ்டீலுன்னு அர்த்தம். அதாவது கறை பிடிக்காத வெள்ளி!" என்றாள் ஜானகி, சிரித்துக் கொண்டே.

"ஏம்மா! அப்போ கிளாஸ் தம்ளருன்னா யாரு? பித்தளைன்னா யாரு? கொட்டங்கச்சின்னா யாரு?" என்று ஆர்வமோடு கேட்டாள், இந்து.

"இதை எல்லாம் நானுனக்குச் சொல்ல மாட்டேன். நீயே தெரிஞ்சுக்குவே....! பள்ளிக் கூடத்திலே டீச்சரும் பிள்ளைகளுமே சொல்லிக் கொடுப்பாங்க! போ! போயி வெளியே விளையாடு!"

இந்து விளையாடப் போக வில்லை. முற்றத்தில் நின்று சிந்தித்தாள். மற்ற மூன்று தம்ளர்களும் யாருன்னு இப்பவே தெரிஞ்சாக வேணும்! யாரிடம் கேட்கலாம்?...... இருக்கவே இருக்கார் அப்பா. நேரே மாடிக்கு ஏறினாள்.

மாடி அறையில் சோபாவில் அமர்ந்து கொண்டு பத்திரிக்கையை வாசித்துக் கொண்டிருந்தான், ரவி.

"அப்பா!" என்று கூவி ஓடிப்போய், பேப்பரைப் பிய்த்துக் கொண்டு ரவியின் மடியில் பொத்தென விழுந்தாள், இந்துக்குட்டி. வந்த கோபத்தை விழுங்கிக் கொண்டான், ரவி.

"ஜாதி எத்தனைன்னு சொல்லுங்க பார்க்கலாம்?.... எனக்குத் தெரியும், அப்பா! அம்மா சொல்லிக் கொடுத்தாங்க!...."

"அடி சக்கை! இப்போ அம்மாவே உனக்கு அந்தப் பாடங்களை எல்லாம் சொல்லிக் கொடுக்கிறாளா, வீட்டிலே! பலே ஜோர்! .... இந்து! ஜாதிப் பிரிவுகள் சொல்லி குலத், தாழ்த்தி உயர்ச்சி சொல்லல் பாவம்!" என்கிறார், பாரதியார்.

"அப்பா! எனக்கு பாரதியாரைத் தெரியாது. இதுதான் தெரியும். ஜாதி நான்கு!" என்று வெகு அழுத்தமாகச் சொன்னாள், இந்து. "நாலையும் சொல்லட்டா? இப்போ!"

"கேள் இந்து! ஜாதி இரண்டு! அம்மா நாலுன்னு சொன்னது தப்பு! தப்பு! தப்பு!" என்று கனிவாகச் சொன்னான், ரவி.

"இல்லை! இல்லை! இல்லை! ஜாதி நான்கு! இரண்டுன்னு சொல்ற நீங்கதான் தப்பு! தப்பு! தப்பு!" நாலையும் நான் சொல்றேன்; கேளுங்க! முதல்லே எவர்சில்வர் தம்ளர்! ரெண்டாவது கிளாஸ் தம்ளர்! மூன்றாவது பித்தளை தம்ளர்! நாலாவது கொட்டாங்கச்சி! ஆக ஜாதி நாலு!" என்று நான்கு விரல்களைக் காட்டினாள்.

ரவி தன்னையும் அறியாது சிரித்து விட்டான். இந்துவை அணைத்துக் கொண்டு அவளது மாம்பழக் கன்னத்திலே இரண்டு முத்தமிட்டான். இந்து திணறிக் கொண்டே, "நாமெல்லாம் எவர்சில்வர்! அப்படின்னா, கறை பிடிக்காத வெள்ளி".

"அடி மண்டு! ஜாதி இரண்டொழிய வேறில்லை! ஒன்னு ஆண் ஜாதி! இன்னொன்னு பெண் ஜாதி. கடவுள் படைச்சது இந்த இரண்டு ஜாதியைத்தான்! ஆணும் பெண்ணும்தான் ஆண்டவன் உண்டாக்கிய மாறுபாடான ஜீவன்கள்! மனுசன்தான் அதை நாலாக்கி. பின் நாற்பதாக்கி, அப்புறம் அதை நானூறாக்கி, இப்போ நாலாயிரத்துக்கும் மேல் போயிருச்சி!"

கால வெள்ளத்தில் கரை புரண்டு, மக்களை எல்லாம் அடித்துக் கொண்டு போய் மூழ்க்கிய, இந்த ஜாதிப் பெருக்கத்தை, இந்துவுக்கு புரிய வைப்பது எப்படி?

அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "அப்பா ஜாதின்னா என்ன?" என்று மறுபடியும் அவனைக் குடைந்தாள், இந்து.

ரவிக்கு கோபம் வந்து விட்டது. "இந்து! ஜாதி ஒரு தொத்துநோய்! இந்த நாட்டு மக்களைப் பல நூறு ண்டுகளாகப் பற்றிக் கொண்டு ஆட்டிப் படைக்கும், ஒரு புற்றுநோய்! அதை ஒழிக்க இங்கு மருந்தே இல்லை! அந்த நோயால் துன்பப்படாத மானிடரே இல்லை! புனிதமான உன் இள மனதைக் கெடுத்து விட்டாள் உன் அம்மா! அத்தனையும் ஒரே அபத்தம்".

இந்துவுக்கு தொத்துநோய், புற்றுநோய், மருந்து இதெல்லாம் எதுவும் புரியவில்லை! "அப்பா! இதைச் சொல்லுங்க, யாரு கிளாஸ் தம்ளர்? யாரு பித்தளை? யாரு கொட்டங்கச்சி?"

"அசடு மாதிரி கேட்காதே! எனக்கு இதெல்லாம் பேசப் பிடிக்காது. நீயும் இந்த வயசிலே இதைத் தெரிஞ்சு கொள்ளக் கூடாது".

இந்து மெதுவாகப் படியில் இறங்கினாள். அவள் மூளை வேலை செய்யத் தொடங்கியது! சட்டென ஒன்று நினைவில் வந்தது. மீண்டும் படியேறி ரவியிடம் வந்தாள்.

"அப்பா! எதிர்வீட்டு மாமா போன வாரம் நம்ம வீட்டுக்கு வந்து உங்களோடு ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவர்தான் கிளாஸ் தம்ளர்! ஏன்னா? அம்மா கிளாஸ் தம்ளரில்தான் அவருக்கு கா·பி கொடுத்தாங்க!" என்று சொல்லிக் கொண்டே கீழே ஓடினாள், இந்து.

இரண்டு நாட்கள் கழிந்தன. பகல் பனிரண்டு மணி இருக்கும். மதிய உணவு சாப்பிட இந்து வீடு நோக்கி வரும்போது, வாசலில் ஜானகி கூடைக்காரியிடம் காய்கறி வாங்கிக் கொண்டி ருந்தாள். பணத்தைப் பெற்றுக் கொண்டு எழுந்த கூடைக்காரி, குடிக்கத் தண்ணீர் கேட்கவே, ஜானகி உள்ளே சென்று ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டு வந்தாள். தவ்வித் தவ்வி வந்த இந்து, சட்டென பொம்மைபோல் சிலையானாள்.

பித்தளைத் தம்ளரில் நீரைக் குடித்துக் கொண்டிருந்த கூடைக்காரியைப் பார்த்து, "ஓகோ! இவள்தான் பித்தளையா?" என்று மனதில் பதித்துக் கொண்டாள், இந்து.

சிறிது நாட்களாக வீட்டில் வேலைக்காரிப் பிரச்சனை இருந்து, ஜானகிக்குச் சிரமத்தைக் கொடுத்தது. வேலை பார்த்து வந்தவள், திடீரென்று விலகி நின்று விட்டாள். பைத்தியம் பிடித்ததுபோல், ஜானகி திணறியபோதுதான், எதிபாராத விதமாக பார்வதி வந்து சேர்ந்தாள், வேலைக்கு.

பார்வதி காக்கை நிறம்! பத்துப் பதினொரு வயதிருக்கும். மெலிந்த உடல்கட்டு. கிழிந்த பாவாடை. காற்றோட்டம் மிகுதியான மேல்சட்டை. எண்ணை தோயாத தலை மயிர். வறுமைக் கோலத்திலும் முகத்தில் தோன்றியது ஒரு லட்சணம்! ஜானகி பார்வதியை வேலைக்கு வைத்துக் கொண்டாள்.

முதல் நாள் துள்ளி குதித்து, ஒரு சினிமாப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டு பம்பரமாய் வேலை செய்தாள், பார்வதி. வீட்டை துப்புரவாய்த் துடைத்தாள். பளிச்சென வாசலைக் கழுவினாள். முகம் தெரியும்படி பளபளவென பாத்திரங்களைத் தேய்த்தாள். சுத்தமாய்த் துணிகளை எல்லாம் துவைத்தாள். ஜானகிக்கு அவளை மிகவும் பிடித்து விட்டது.

அன்று, அவள் டீ தயார் செய்து, பார்வதியை கனிவாகக் கூப்பிட்டாள்.

"வா! பார்வதி! வா! இதைத் தின்னு, டீயைக் குடி! அலுமினியத் தட்டில் நாலு இட்லியும் சிறிது சாம்பாரும் இருக்கு. சாப்பிடு! நான் போய் டீ கொண்டு வர்ரேன்".

பார்வதியின் முகம் மலர்ந்தது. தயங்கித் தயங்கி வந்து, வாசற் படியில் உட்கார்ந்தாள். ஈரக் கையைப் பாவாடையில் துடைத்துக் கொண்டு, அவக் அவக்கென்று ஒரு நொடியில் தின்று முடித்தாள். இட்லியும் சாம்பாரும் ருசியாய் இருந்தது. ஜானகி எவர்சில்வர் பாத்திரத்தில் டீயைக் கொண்டு வந்தாள்.

"பார்வதி! அந்த கொட்டாங்கச்சியை எடு! அதிலே டீயை வாங்கிக்கோ! சூடாக இருக்கு".

பூரித்துப் போனாள், பார்வதி. இதுபோல் யார் அவளை உபசரித்தார்கள்? டீயை ஊதி ஊதிக் குடித்தாள். சிறட்டையில் இருந்த டீ தேனாய் இனித்தது!

சிட்டுக் குருவிபோல் பாய்ந்து வந்த இந்து, பார்வதி சிறட்டையில் டீக் குடிப்பதைப் பார்த்து, கண்ணிமைக்காது நின்றாள். அவளது நாலாவது புதிரும் தீர்ந்தது!

"ஓ! இவள்தான் கொட்டாங்கச்சியா?" இந்துவின் மீன்விழிகள் இரண்டும் விரிந்தன. இந்தப் புதிய கண்டுபிடிப்பை உடனே அப்பாவுக்குச் சொல்லியாக வேண்டுமே, என்று மாடிக்கு ஓடினாள்!

ரவி காலையில் குளித்துவிட்டு தலை வாரிக் கொண்டிருந்தான். மூச்சு இழைக்க ஏறிவந்த இந்து, "அப்பா! கொட்டாங்கச்சின்னா யாரு தெரியுமா?....பார்வதி!... புதுசா வேலைக்கு நம்ம வீட்டுக்கு வந்திருக்காளே, அவள்தான்" என்றாள்.

"ஏய் இந்து! நீ என்ன சொல்றே?"

"இன்னைக்கு அம்மா பார்வதிக்கு சிறட்டையிலே டீ கொடுத்தாங்க......!"

கேட்டவுடன் சிலையாய் நின்றான், ரவி.

"என்ன கேவலம்? பார்வதிக்கு, சிறட்டையிலேயா டீயைக் கொடுத்தாள், உன் அம்மா?" ரவி கோபத்தோடு கீழே விரைந்தான். இந்துவும் புரியாமல் அவனைத் தொடர்ந்தாள்.

ஜானகி சமையல் அறையில் தன் பின்னழகைக் காட்டிக் கொண்டு தோசை சுடுவதில் ஈடுபட்டிருந்தாள்.

"ஜானகி! என்ன கீழான புத்தி உனக்கு! பார்வதிக்கு சிறட்டையிலேயா டீ கொடுத்தே? இது அநாகரீகச் செயல்!" என்று கத்தினான், ரவி.

"பின்னே என்ன, வெள்ளித் தம்ளரிலா அவளுக்கு டீ தருவாங்க", என்று வெடுக்கென வெடித்துப் பேசினாள், ஜானகி.

"இது தகாத செயல், ஜானகி! ஒரு மனிதப் பிறவிக்குச் செய்யும் அவமானம் இது! நீ இப்படிச் செய்தது எனக்கு அசிங்கமாகத் தெரியுது!"

"டீ கொடுப்பதா தகாத செயல்? யார் இட்லியும், சுடச்சுட டீயும் தர்ராங்க? எது அவமானம்? வயிறு நிறைய அன்னம் தருவதா? இது தர்மம்! இது சன்மானம்!" என்று விளக்கம் தந்தாள், ஜானகி.

"சுடச்சுட டீ தருவது மனிதாபிமானச் செயல்தான்! சந்தேகமில்லே. ஆனால் அதைச் சிறட்டையிலே நீ கொடுத்ததால், அந்த தர்மம் அழிஞ்சி போச்சு! உன் சன்மானம் அவமானமாச்சு!"

"பார்வதியே சந்தோஷமாக சிறட்டையிலே குடிக்கும் போது, உங்களுக்கு ஏன் அது அநாகரீகமாகத் தோணுது? அவமானமாகத் தோணுது? அதுதான் எனக்குப் புரியலை!"

"ஜானகி! பசி கண்ணை அடைக்கும் என்று சொல்வாங்க. பார்வதி பசியில், நீ தந்த டீயைத் தான் கண்டாள்! சிறட்டை அவள் கண்ணுக்குத் தெரியலை! என் கண்ணுக்கு நீ தந்த சூடான டீ தெரியலை! நார்நாராகத் தொங்கும் அந்த கீழான சிறட்டைதான் தெரியுது!"

"கொட்டாங்கச்சின்னா கேவலமா? நாமெல்லாம் இளநீர் குடிக்கிறதில்லையா?"

"ஜானகி! தேங்காய்லே நாம் இளநீர் குடிப்பது வேறு. நல்ல தம்ளர் இருக்க சிறட்டையிலே டீயைக் கொடுப்பது வேறு. சிறட்டை ஒரு கீழ்மையின் சின்னமாகத் தெரியுது, எனக்கு! நாய், கோழிகளுக்குத்தான் அதிலே தீனி வைப்பாங்க!"

"இதோ பாருங்க! இது என் ஏற்பாடு! சமையல் துறை என் ஆட்சிக்குக் கீழ்பட்டது! அதில் நீங்க தலையிட வேண்டாம்! தர்மம், அதர்மம் என்னவென்று எனக்குத் தெரியும்!" என்று வெடித்துவிட்டு வீட்டினுள்ளே மறைந்தாள், ஜானகி.

இந்த தர்ம யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இந்து மேலும் குழப்பமடைந்தாள். நாலாவது புதிருக்குள் ஏதோ சிக்கல் இருப்பதை அவள் உணர்ந்தாள். அப்பாவும் அம்மாவும் ஏன் சிறட்டை வைத்துச் சண்டை போடுகிறார்கள்? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பள்ளிக்குச் செல்லும் நேரம் நெருங்கவே, அவள் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டாள்.

அன்று பீஸில் இந்த நிகழ்ச்சி, ரவியின் மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது. 'ஏதோ ஒரு பாபத்தைச் செய்துவிட்டோம்', என்ற குற்றம் அவனை வாட்டியது. இரவில் தூங்கிய போதுகூட அவனால் அதை மறக்க முடியவில்லை.

பொழுது விடிந்தது. தூங்கி எழும்போது அவனுக்கு உடம்பெல்லாம் வலித்தது. காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, ரவி பீஸ் போகத் தயாரானான்.

அப்போது 'தடதடவென' யாரோ மாடிப் படியில் ஏறி வரும் அரவம் கேட்டது. இந்துக்குட்டி மூச்சுவாங்க மாடி நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

"அப்பா! கீழே வந்து பாருங்கோ! மறுபடியும் அம்மா சிறட்டையிலே பார்வதிக்கு, டீ தர்ராங்க!" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

ரவியின் உதிரம் கொதித்தது! அவனது இரத்த அழுத்தம் ஏறியது! நேற்று உபதேசித்த தெல்லாம் வீண்தானா? ஜானகியின் மண்டை ஓட்டில் அறிவுரை எதுவுமே நுழையாதா? பார்வதியை மனுச ஜென்மமாய்க் கருதாமல், ஒரு நாயைப்போல்

நடத்துவதை, எப்படிப் பார்த்து சகித்துக் கொண்டிருப்பது?....மாடிப் படிகளை எல்லாம் மின்னல் வேகத்தில் கடந்து, ரவி பின்புறத் தோட்டத்தை அடைந்தான்.

பார்வதி பல்லெல்லாம் தெரிய மகிழ்ந்து, சிறட்டையில் டீயை வாங்கிக் கொண்டிருந்தாள். அவள் குடிப்பதற்குள், ரவி பாய்ந்து சென்று சிறட்டையைக் கையிலிருந்து பிடுங்கி, தூர வீசினான். கீழே கொட்டிய டீயை மண்தரை உறிஞ்சிக் குடித்தது! ரவி சட்டென உள்ளே சென்றான்.

அப்பாவித்தனமாக ஓடிப்போய், பார்வதி கீழே விழுந்த சிறட்டையை மீண்டும் எடுத்து, மண்ணைத் தட்டி விட்டு, ஜானகியிடம் மறுபடியும் நீட்டினாள். ஆவி பறக்க இன்னமும் டீ பாத்திரத்தில் இருந்தது.

வெளியே வந்த ரவி. "பார்வதி! சிறட்டையிலே டீ குடிக்காதே!" என்று தடுத்தான். வெடுக்கென அதைப் பிடுங்கி, தரையிலே போட்டு பூட்ஸ் காலால் மிதித்து உடைத்தான். தான் எடுத்து வந்த எவர்சில்வர் தம்ளரிலே டீயை ஊற்றி பார்வதியின் கையில் கொடுத்தான், ரவி.

அதிர்ச்சி அடைந்த ஜானகி பிரமித்து நின்றாள். பார்வதி நடுங்கிக் கொண்டே டீயை குடித்தாள்.

"இதைக் கேட்டுக்கோ, ஜானகி! இனி பார்வதிக்கு நீ சிறட்டையிலே டீ கொடுத்தால், நானும் தினமும் கா·பியை சிறட்டையிலேதான் குடிப்பேன், தெரிகிறதா?" என்று காதில் அறைந்தால்போல் சொல்லிவிட்டு பீஸ் நோக்கிக் கிளம்பினான், ரவி.

முதன்முதலாக ரவியின் சொற்கள் அவள் நெஞ்சிலே ஈட்டிபோல் பாய்ந்தன! நின்று சிந்தித்தாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தது! புள்ளினம் ஆர்த்தன! பார்வதிக்கு டீ தரும் நேரமும் வந்தது! ஒரு கிளாஸ் தம்ளரில் டீயை ஊற்றிக் கொண்டு வந்தாள், ஜானகி! ... இதைப் பார்த்த இந்து, ஓடிப்போய் ரவியிடம் சொல்லவில்லை!

"இந்து! பார்வதி இப்போ பார்வர்டு கிளாஸ், தெரியுமா?" என்றாள் ஜானகி, சிரித்துக் கொண்டே!

இந்துக்குட்டிக்கு இந்தப் புதிர் புரியவில்லை!

பதிவுகள் ஆடி 2000 இதழ்-7

3. என் விழியில் நீ இருந்தாய் ! - சி. ஜெயபாரதன் -

"என்னப்பா! டிப் டாப்பா டிரஸ் பண்ணிக் கொண்டு யாரைப் பார்க்கப் போகிறாய்? புதிதாக வந்திருக்கும் மாடல் அழகி, கோகிலாவைத் தானே?" என்று கேலிச் சிரிப்புடன், டாக்ஸியில் ஏறப் போன அசோகனை நிறுத்தினான், மோகன். திடுக்கிட்டுத் திரும்பிய அசோக் ஒரு அசட்டுப் புன்னகையை உதிர்த்து விட்டு பதில் பேசாமல், காரை நோக்கி விரைந்தான்.

அன்று பௌர்ணமி! அந்திப் பொழுது மங்கி, பொங்கி வரும் பெருநிலவு மேகங்களுக் கிடையே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது! இளந்தென்றல் மேனியைத் தழுவி மெய் சிலிர்க்க வைத்தது! முதன் முதலாக அவன் கோகிலாவைச் சந்திக்கப் போகிறான். அந்த நினைவே அவன் நெஞ்சில் இன்பத் தேனைச் சுரந்தது. வெள்ளித் திரையில் பார்த்தது! காதல் காவியங்களில் படித்தது! கனவுகளில் அவன் கண்டது! அதை ஓர் எழில் மங்கையுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறான்! புதிய அனுபவம்! அதுவும் முதல் அனுபவம்! ஆனாலும் நெஞ்சு ஏனோ 'பக் பக்கென்று' விடாமல் அடித்ததுக் கொண்டது! டாக்ஸியில் ஏறி பின் ஸீட்டில் அமர்ந்த பின், கோகிலா இருக்கும் தெருப் பெயரை டிரைவருக்குக் கூறினான்.

ஓடிவந்த மோகன் "நானும் வருகிறேன்" என்று கதவைத் திறந்து கொண்டு காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அசோக்கின் கண்கள் இரண்டும் வியப்புடன் விரிந்து அவனை நோக்கின!

"நீ போகும் இடத்திற்கு நான் போகவில்லை! கோயிலுக்குப் போகிறேன், தேவியைத் தெரிசிக்க! மீனாட்சி அம்மன் கோயிற் தலைவாசலில் இறங்கிக் கொள்கிறேன்". என்று சற்று பணிவோடு சொன்னான் மோகன். அவனது நெற்றியில் திருநீறும் குங்குமப் பொட்டும் பளிச்செனத் தெரிந்தது! அசோக்கின் நெற்றியில் முத்து முத்தாய் வேர்வைகள் தான் தென்பட்டன!

அசோக்கும் மோகனும் இணைபிரியா நண்பர்கள். மதுரை மாநகரில் ஒன்றாகப் படித்தவர்கள். ஒன்றாக வளர்ந்தவர்கள். ஒரே சமயத்தில் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்று, மதுரையில் உத்தியோகம் பார்ப்பவர்கள். ஆனால் கொள்கை வேறுபாடு கொண்டவர்கள். அசோக் வட துருவம்! மோகன் தென் துருவம்! அடிக்கடி அவர்களுக்குள் தர்க்கம், சச்சரவு, வாய்ச் சண்டை வராமல் போகாது. தர்க்கம் ஓய்ந்த பின் இருவரும் சேர்ந்து கொள்வார்கள். எதிர்த் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்த்துக் கொள்ளும் அல்லவா!

மோகன் தெய்வ நம்பிக்கை கொண்டவன். தவறாது கோயிலுக்குச் செல்பவன். அசோகனுக்குக் கடவுளைப் பற்றி நினைக்க நேரமில்லை! தெய்வம் உண்டா, இல்லையா

என்று பிறரிடம் தர்க்கம் செய்தாலும், மனதை அலட்டிக் கொள்ளாதவன். முப்பது வயதாகியும் அசோக் தனி மரம்! மோகன் திருமண மாகி இரு குழந்தை களுக்குத் தந்தை! ஆனலும் கோயிலுக்குப் போகும் போது மட்டும் தனியாகத்தான் போவான். தெருவில் அவனுடன் மனைவி நெருங்கி நடப்பது, அவனுக்குப் பிடிக்காத ஒன்று! கடைக்கோ, சினிமாவுக்கோ, கோயிலுக்கோ அவள் செல்ல வேண்டு மென்றால், தனியாக அல்லது மற்றவருடன் சேர்ந்துதான் போக வேண்டும்!

டாக்ஸி கிழக்கு வெளிவீதியிலிருந்து கிளம்பி கிழக்குக் கோபுர வாசலை நெருங்கியது. அன்று வெள்ளிக் கிழமை. எங்கு பார்த்தாலும் ஜனக்கடல்! அந்தக் கடலில் அநேகர் பெண்டிர். அதில் கோயிலுக்குப் போவோர் பலர்! கோயிலுக்குப் போகும் பெண்டிரை வேடிக்கை பார்ப்போர் சிலர்! டாக்ஸி வீதியில் நின்று நின்று மெதுவாய் போனது. ஆனால் டாக்ஸி மைலா மீட்டர் மெதுவாகப் போகவில்லை! வேகமாய் ஓடியது! பணத்தொகை ஏறிக் கொண்டே போவதைப் பார்த்த அசோக்கின் இதயமும், 'டக் டக்கென்று' மீட்டருடன் ஒன்றாய்ச் சேர்ந்து ஓசை யிட்டது!

'சிற்றின்பம் நாடிக் கோகிலாவிடம் போகிறான், அசோக்' என்று பொறாமைப் பட்டான் மோகன்! 'பேரின்பம் கிட்டக் கோவிலுக்குப் போகிறான், மோகன்' என்று விரக்தி அடைந்தான், அசோக்.

"முப்பது வயதாகிறதே! கண்ணியமாக ஓர் அழகுப் பதுமையைத் திருமணம் செய்து கொண்டு, புண்ணியம் அடைவதை விட்டு, இப்படி ஒரு மாடல் அழகியைத் தேடிப் போகிறாயே! இது உனக்கு சரியாகத் தெரிகிறதா, அசோக்?" என்று சட்டெனக் கேட்டான், மோகன்.

"எப்படித் திருமணம் செய்து கொள்வது? நான்தான் கோபுரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறேனே! என் சம்பாத்தியத்தில், என்னிரு தங்கைகளுக்கும் முதலில் திருமணம் முடிய வேண்டும். அது இந்தப் பிறவியில் நடக்காது! கேட்ட வரதட்சணையைக் கொடுக்க முடியாமல் தங்கைகளின் வயது ஏறிக் கொண்டும், வனப்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டும் போகிறது! மேலும் எனக்கு இல்வாழ்க்கையில் விருப்பம் இல்லை! அந்தச் சிறைச்சாலையில் அடைபட்டுக் கொண்டு, பெற்ற பிள்ளைகளோடு போராடி, உன்னைப் போல் வாழ எனக்கு ஆசை இல்லை! நான் என்றும் சுதந்திரப் பறவையாகவே வாழப் போகிறேன்.

"கோகிலாவுக்கு அடிமையாக இருப்பதா சுதந்திர வாழ்வு? இது நிலையற்ற இன்பம்! இல்லறம் அல்லது நல்லறம் இல்லை! உனக்கென ஒருத்தி வேண்டாமா? மனைவியே வேண்டாம் என்பதும் ஒரு மாதிரித் துறவறம் தான்!"

"நான் துறவி இல்லை! இல்லறம், துறவறம் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வாழ்வைத் தேடுகிறேன்! இதைச் சுயவறம் என்று சொல்வேன்! இதில் ஆண், பெண் இருவருக்கும் பூரண சுதந்திரம்! சம உரிமை! விருப்பமுள்ள ஆண்பெண் இருவர் சேர்ந்து வாழும் ஒரு கூட்டகம்! அதுதான் இணையறம்! மனப்பிளவு ஏற்பட்டால், யாரும் எப்போது வேண்டு மானாலும் உறவை வெட்டிக் கொள்ளலாம்! பிடித்த வேறு யாருடனும் ஒட்டிக் கொள்ளலாம்! இதில் யாருக்கும் கைவிலங்கு, கால்விலங்கு போடுவ தில்லை! பிடிக்காதருடன் வாழும் மன வேதனை, சண்டை, சச்சரவு, விவாகரத்து, வரதட்சணை விவகாரம் எதுவும் இல்லை!

"அப்படி என்றால், கோகிலாவோடு நீ கூட்டகம் வைத்துக் குடித்தனம் நடத்துவாயா?"

"கோகிலா எனக்கு நிகரானவள்! நான் தயார், அவள் உடன்பட்டால்! மனைவி ஒரு போதும் மாதவி போல் கவர மாட்டாள்! குடும்ப வலையில் மாட்டிக் கொண்ட பின், கணவனைக் கவர வேண்டு மென்ற கடமை, மனைவிக்குத் தேய்பிறைபோல் குறைந்து, கடேசியில் அமாவாசை யாகி விடுகிறது!"

"உனக்குத் தேவை, மாதவி! மனைவி அல்ல! என்று சொல்கிறாய். பெண்ணைக் கவர்ச்சிப் பண்ட மாகத்தான் நீ கருதுகிறாயா? மனைவி எப்போதும் கவர்ச்சிப் பதுமையாக இருக்கத் தேவை யில்லை!"

"காரிகையை ஆண்டவன், கவர்ச்சிப் பிறவியாகத் தான் படைத்திருக்கிறான்! ஆடவரை மயக்கி ஆளத்தான் மங்கைக்கு மான்விழி, மதிமுகம், எழில் இடை, மயில் நடை, பொங்கியெழும் கொங்கை போன்றவற்றை அளித்திருக்கிறான்! ஆண்மை பெண்மை என்பது காமசக்தியின் இரு துருவங்கள்! மின்சக்தி, காந்தசக்தி போல், காமமும் ஓர் இயற்கைச் சக்தியே! அதன் கவர்ச்சி வலையில் சிக்காதவர் யார்?" கவிமுனி வால்மீகி! மாமுனிவர் விசுவா மித்திரர்! ஆண்டாள்! மகாக்கவி காளிதாஸ்! ஷேக்ஸ்பியர்! கவிஞர் ஷெல்லி! பைரன்! ... வள்ளுவர் காமத்துப் பாலைக் காவியமாக வடித்துள்ளார்! 'மோகத்தைக் கொன்றுவிடு! - இல்லால் எந்தன், மூச்சை நிறுத்திவிடு!' என்று பாரதியார் கூட மோகத் தீயில் படாத பாடு பட்டிருக்கிறார்!"

"காமசக்தி தான் கன்னிப் பெண்ணுக்கு எழிலையும், இனிய குரலையும், நளின மேனியையும் தருகிறது. ஆணுக்கு கம்பீரத் தோற்றத்தை அளிக்கிறது! வயிற்றுக்கு உணவுபோல், உடலுக்கு உறவு! உறவு இல்லையேல் உடல்நலம் சிதைகிறது! காமசக்தி ஓர் ஆக்க சக்தி! காமசக்தி இல்லையேல் இனவிருத்தி இல்லை! கவிஞனின் கற்பனைச் சுரங்கம் வரண்டு போகும்! எழுத்தாளன் மூளை பாலைவனம் கிவிடும்! சிற்பியின் கைகள் செதுக்க முடியாது! இசைக்குயில் பாட முடியாது! நர்த்தகி நளினமாய் ஆட முடியாது! ஓவியன் சித்திரத்தைத் தீட்ட இயலாது! கலையோ, காவியமோ

எந்தவிதப் படைப்புமே உருவாக்க முடியாது! காமசுரப்பிகள் சுருங்கிக் காய்ந்து போகும் போது, மனிதனை முதுமை கவர்ந்து கொள்கிறது!

"இல்லை, அசோக்! காமம் கண்ணைக் குருடாக்குகிறது! காமம் சிற்றின்பம்! காமவெறி ஓர் அழிவுசக்தி! காமசக்தியில் குளித்தவர் எல்லாம் கடைசியில் கரையேற, கடவுளைத் தான் தேடினர்! நமக்குத் தேவை ஆன்மீக சக்தி! அதுதான் உயர்ந்தது! உறுதியானது! முடிவில்லாப் பேரின்பம்! மனிதப் பிறவியின் இறுதிப் பீடம்! ஆன்மீக சக்திதான் ஆக்கசக்தி!

டாக்ஸி கிழக்குக் கோபுர வாசலை வந்தடைந்தது. பூக்கடைகளிலிருந்து மல்லிகை மணமும், ரோஜாவின் மணமும் நாசியில் நுழைந்து மோகனைக் கிறங்க வைத்தன! "இறங்கிக் கொள்கிறேன், இங்கு" என்று காரை நிறுத்தச் சொன்னான், மோகன். "நான் தேங்காய், பழம், பூ, சூடம் எல்லாம் வாங்க வேண்டும்".

"கோயில் முன், பார் மோகன்! எங்கெங்கு நோக்கினும் மங்கையர் கூட்டம்! இப்படிப் பெண்டிர் பலர் அலங்காரமாய் கண்முன் நிற்கும் போது, தேவியை நோக்கி எப்படிப் பூஜிப்பாய் நீ? இந்தச் சூழ் நிலையில் கண்ணை மூடிக் கொண்டு, மனதைக் கட்டுப் படுத்தி, சிந்தையில் தெய்வத்தை தியானிக்க முடியாது!"

"அசோக்! நீ கோகிலாவைப் பூஜிக்கப் போகிறாய்! உன் கண்ணில் தெய்வமே தெரியப் போவதிலை! அந்த மாயக்காரி தரும் மதுவை அருந்தப் போகிறாய்! உடலையும் ஆத்மாவையும் பாழாக்கி உன்னைப் போல் என்னால் வாழ முடியாது! பிறவிப் பெருங்கடல் நீந்த, ஒரு நேரமாவது தெய்வத்தை வழிபடு! அதைச் செய்யாமல், சிற்றின்பத்தைத் தேடிப் போகிறாய், நீ! நினைவில் இதை வைத்துக் கொள்! நிச்சயம் உனக்கு மோட்சம் இல்லை! .. நரகம் தான்! .... நன்றி, வருகிறேன்", என்று சாபம் போட்டு விட்டுப் பூக்கடை நோக்கி விரைந்தான், மோகன்.

டாக்ஸி தெற்கு வெளிவீதி நோக்கித் திரும்பியது. கோகிலாவைப் பற்றிய அவன் கற்பனை சற்று சிதைந்து போனது! "ஒரு நேரமாவது தெய்வத்தை வழிபடு! உனக்கு மோட்சம் இல்லை! நரகம் தான்!" என்று மோகன் சொல்லி விட்டுப் போனது நெஞ்சில் முள்ளாய்க் குத்தியது! பையிலிருந்த வண்ணப் படத்தைக் கையில் எடுத்துப் பார்த்தான். கோகிலா அதில் சிரித்துக் கொண்டிருந்தாள். காமன் அவளது புருவங்களை வில்லாய் வளைத்து, அவன் நெஞ்சைக் குறி வைத்து, கனல் அம்புகளை ஏவி விட்டான்! ..... எது முதல்? ... எது தேவை? ...... அவன் மூளை குழம்பியது! ..... கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ..... டாக்ஸி ஏன் இப்படி மெதுவாய்ச் செல்கிறது?

தேங்காய், பழம், பூக்களைத் தட்டில் ஏந்திக் கொண்டு, கோயில் உள்ளே நுழைந்தான்,

மோகன். மீனாட்சி அம்மன் சன்னதி நோக்கி நடந்தாலும், அவன் மனக்கண் முன் கோகிலாவின் அழகுதான் வந்து விளையாடியது! சந்தேக மில்லாமல் அவள் பேரழகி! நேரிலேயே பார்த்திருக்கிறான், மோகன். கலா மன்றத்தில் முந்திய வாரம் நாடகம் பார்க்கப் போன போது, முன் நாற்காலியில் எந்த நேரமும் சிரித்துக் கொண்டு, அவள் ஜம்மென அமர்ந்திருந்தாள். அசோக் ஒரு வகையில் கொடுத்து வைத்தவன்! அழகை ரசிக்கவும் ஒரு யோகம் வேண்டும்! மோகனுடைய மனைவி சுந்தரி, அப்படி யொன்றும் அழகி இல்லை! ஆறரை அடி உயரத்தில், எடுப்பான தோற்றமுள்ள மோகனுக்கு, அழகற்ற ஐந்தடிப் பெண் சுந்தரியின் ஜாதகம் தான் முழுமையாகப் பொருந்தியது!

அங்கு இங்கு எனாதபடி எங்கும் கூட்டமாய், மங்கையர் கோவிலை நோக்கிப் போய்க் கொண்டிருந் தார்கள். ஜரிகைச் சேலைகளின் சல சலப்பும், ஜவ்வாதுப் பொட்டின் பள பளப்பும், மல்லிகைப் பூக்களின் மண மணப்பும், அன்று ஏனோ மோகனின் மனத்தை நிலை தடுமாறச் செய்தன! நேராகப் பார்த்து நடக்கும் கால்கள் திசை கோணி நெளிந்தன! முன்னோக்கி வழி காட்டும் விழிகள், முப்புறமும் தலையை திருப்ப விட்டு, அழகை ரசிக்கத் தூண்டின! மரத்துக்கு மரம் தாவும், மனக் குரங்கு மாதரை விட்டு மாதர்மேல் தாவி, அழகை ஒப்பிட்டுப் பார்த்தது! ...ஆண்டவா! இது என்ன சோதனை?

பொற்றாமரைக் குளத்தில் தன் பிம்பத்தைப் பார்த்து, பொங்கி வரும் பெருநிலவு நடனமாடிக் கொண்டிருந்தது! கோயிற் தூண்களில் எல்லாம் ஒய்யாரமாய் நிற்கும், பெண் சிற்பங்கள் உயிர் பெற்று எழுந்தன! அவன் மதி மயங்கியது! ஏனிந்த கற் சிலைகள் கூட அவனைச் சித்திரவதை செய்கின்றன? தெய்வ சன்னதியில் காமச் சிலைகளை ஏனிந்தச் சிற்பி செதுக்கினான்? தேவியைத் தொழப் போகும் ஆடவனைத் திக்கு முக்காடச் செய்யும் கவர்ச்சிச் சிலைகளுக்குச் சேலைகட்டி மார்பை மறைக்க வேண்டும்! ...... ஆண்டவா! இது என்ன தர்ம சங்கடம்?

கோகிலாவின் வீட்டு வாசலில் டாக்ஸி நின்றதும், டிரைவருக்குப் பணத்தைக் கொடுத்து விட்டுப் படியேறி வந்தான், அசோக். கதவு சற்று திறந்திருந்தது. திறந்த இடைவெளியி லிருந்து, மனத்தைக் கவரும் நறுமணப் பத்தியின் வாசம், மெதுவாய் நாசியின் வழி புகுந்து அவனை வரவேற்றது! செவியைக் குளிரச் செய்யும் சினிமா இசை அடுத்து விருந்தளித்தது!

> வாராய்! நீ வாராய்!
> போகு மிடம், வெகு தூர மில்லை!
> வாராய்! நீ வாராய்!

'மந்திரி குமாரி' சினிமாவில் வில்லன், மலை உச்சியில் தன் மனைவியை அழைத்துக்

கொண்டு போய்க் கீழே படு பாதாளத்தில், தள்ளுவதற்கு முன்னால் பாடுகிற பாட்டு! இனிமையான, ஆனால் கோரமான அந்தப் பாட்டை ரசித்த அசோகனுக்கு... இதயத்தில் திக்கென்றது! என்ன! கோகிலா தன்னைக் கீழே படு பாதாளத்தில் தள்ளப் போகிறாளா? ... நரகத்தில் விழப் போகிறானா அசோக்? ...... 'நரகம் தான் உனக்கு!' ... என்று பாவிப் பயல் மோகன் சீர்வதித்துப் போனானே! .... கதவைத் திறந்து கொண்டு உள்ளே மெதுவாக நுழைந்தான், அசோக்.

வீடு பளிச்சென சுத்தமாக இருந்தது. பார்க்கும் இடமெல்லாம் நீச்சலுடைப் பெண்டிர் காட்சி! தலைக்கு மேல் மின்விசிறி மெதுவாகச் சுழன்று கொண்டிருந்தது. உள்ளே இருந்து, மான்போல் விழித்து, மயில்போல் நெளிந்து, மோனா லிஸா முறுவலுடன் வந்த, வணிதா மணியைக் கண்டு சிலையாய் நின்றான், அசோக்! பார்த்ததும் நெஞ்சில் கனமாக ஏதோ அடைத்தது! சோ·பாவில் வந்து அவனை அமரச் சொன்னாள், கோகிலா. தானும் நெருங்கி உட்கார்ந்து, அவனது கையைப் பற்றினாள்.

நீல நிற ஸில்க் ஸாரியைக் கண்ணியமாக, கவர்ச்சியாக அணிந்திருந்தாள். மேனியிலிருந்து எழுந்த செண்டின் மணம், அவனை அவள் பால் இழுத்தது! இளநுங்கு போன்ற கரங்கள் தொட்டவுடன், அவன் உடலில் மின்சக்தி பாய்ந்தது! முதன்முதல் பெண்ணுடல் பட்டவுடன் மெய் சிலிர்த்தது! அசோக் அவளது காந்த மண்டலத்தில் சக்தி யற்றுச் சாய்ந்து கிடந்தான்! நெஞ்சடுப்பு பற்றி எரிந்து, உடம்பெல்லாம் நெருப்பை வெளியாக்கியது! வேர்த்துக் கொட்டியது! கைகளும் கால்களும் நடுங்கின!

மெதுவாகப் பையில் கையைவிட்டு, ஒரு கவரை எடுத்துக் கோகிலாவிடம் கொடுத்தான். அவள் எண்ணிப் பார்த்து, மேஜை டிராயருக்குள் வைத்து விட்டு, ஆயிரம் ரூபாய் சரியாக இருப்பதாகச் சொன்னாள். புன்முறுவலோடு அவனுக்கு நன்றி கூறினாள்.

கோகிலாவின் காந்த உடம்பு அவனை நெருங்கியது! கைகள் அவனது தலை மயிரை மெதுவாகக் கோதி விட்டன! புல்லரித்துப் போன அசோக், சொர்க்க லோகத்தில் மிதந்து கொண்டிருந்தான்!

மோகன் கூட்டத்தில் நெருக்கிக் கொண்டு அம்மன் சன்னதிக்குள் இறுதியில் வந்து சேர்ந்தான். அசோக் சொன்னது சரியாய்ப் போயிற்று. அப்பப்பா! என்ன கூட்டம்? என்ன சத்தம்! காற்றோட்டம் இல்லாத இடம்! சாம்பிராணிப் புகை! சூடம் எரிந்து எழும் கரி வாய்வு! மனிதரின் வேர்வை நாற்றம் வேறு! எல்லாம் சேர்ந்து மோகனுக்கு மூச்சு முட்டிக் கொண்டு வந்தது! காதைப் பிளந்தது, லயமணிச் சத்தம்! சந்தைக் கடைபோல் இருந்தது, சன்னதி! மூலையில் ஒதுங்கி நின்ற போலீஸ் காரன் ஒரு பெண்ணின் பின் புறத்தைத் தடவிக் கொண்டிருந்தான். அவள் சட்டெனக் கையைத் தட்டித் திரும்பியதும், தன் கையை எடுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றான்.

முன் வரும் அழகியைப் பார்த்துக் கொண்டு, முண்டி இடித்து மோகன் நுழையும் போது, யாரோ ஒருவன் தட்டிவிட, தட்டு தரையில் குப்புற விழுந்தது! கீழே குனிந்து எடுப்பதற்குள், பூச்சரம் முன்னே போனவரின் காலைச் சுற்றிக் கொண்டது! வாழைப் பழங்கள் யாவும் பாதம் பட்டு நசுங்கிப் போயின! தேங்காய் காலில் விழுந்து கிழவி ஒருத்தி, 'ஆ வென' அலறினாள். வாழைப் பழத்தோல் வழுக்கி விழுந்த இளம்பெண் ணொருத்தி, குனிந்து கிடந்த மோகன் மேல் சாய, அவன் சட்டென அவளைக் கட்டிப் பிடித்துக் கொள்ள நேரிட்டது! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது, மோகனுக்கு! அந்தப் பெண்ணுக்குத் தர்ம சங்கடமாய்ப் போனது. சேலையைச் சரிசெய்து எழுவதற்கு, அவளுக்கு சற்று நேரம் எடுத்தது!

மோகன் விடுவித்து எழுவதற்குள், கண்ணத்தில் 'பளாரென்று' ஓர் அறை விழுந்தது! அறைந்தவன் பின்னால் நின்று கொண்டிருந்த யோக்கியமான போலீஸ்காரன்! "அயோக்கிய பயலே! எங்கேடா தொடுறே! கன்னிப் பெண்ணைக் கட்டியா பிடிக்கிறே? அறிவு கெட்டவனே! கூட்டத்திலே தெரியாமல் போயிடுமேன்னு பார்க்கிறாயா?" என்று முதுகில் பிரம்பால் நான்கு தரம் விலாசினான். மோகனுக்கு அவமானமாய்ப் போய்விட்டது! சுற்றிலும் கூட்டம் கூடி விட்டது! பட்டர் கூட தீப ராதனையை மறந்து விட்டு, வேடிக்கை பார்க்க வந்து விட்டார்! மீனாட்சி அம்மை இமை தட்டாமல் தன் மீன் விழிகளால் இந்த தெருக் கூத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்! கை கட்டி நடுங்கிக் கொண்டிருந்த மோகன், சுவாமி தெரிசனத்தையே மறந்து போனான்!

கோகிலா மெதுவாக முன் கதவைத் தாழிட்டு மூடினாள். அசோகனின் கையைப் பற்றி படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள். புடவையை நீக்கி பாவாடையில் தன் அழகைக் காட்டினாள்! அசோக்கின் கண்கள், அவளது மார்பின் அழகைப் பார்க்க வில்லை! தலைக்கு மேல் எதிரே, அவனைத் துளைத்து நோக்கிக் கொண்டிருந்த, திருப்பதி வெங்கடா ஜலபதியின் கண்களைப் பார்த்தன! அவன் நெஞ்சில் ஒரு பயம் எழுந்தது! அப்போது கோகிலாவின் கத்தி விழிகள் அவன் நெஞ்சைக் குத்திடத் தாவின!

அசோக்கின் தோளின் மேல் கைகளை வைத்து அணைக்க முனைந்த போது, 'ஓ வென' அலறும் ஒரு குழந்தையின் குரல் கேட்டது! .. திடுக்கிட்டான், அசோக்! .. திகைத்தான் அசோக்! .. தடுமாறினாள், கோகிலா! .... அவன் சொர்க்க லோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தான்! .. எங்கே குழந்தை அழுகிறது? .. யாருடைய குழந்தை அது? ... திரும்பினான் அசோக்! ....கோகிலா அவனைப் பிடித்திழுத்தாள்! ... குழந்தையின் அலறல் அதிக மானது! ... அவளைத் தீண்டாமல், அலறல் வரும் திசையை நோக்கி விரைந்தான், அசோக் !

பிள்ளையின் அழுகையைப் பொருட் படுத்தாது காரியத்தை சீக்கிரம் முடித்திட

முனைந்தாள் கோகிலா! அசோக் திமிரிக் கொண்டு, அவளை உதறித் தள்ளி விட்டு அடுத்த அறைக்கு ஓடினான். அங்கே அவன் கண்ட காட்சி! ஐந்தாறு மாதப் பச்சிளம் குழந்தை! அழுது அழுது தொய்ந்து போயிருந்தது! நெற்றியில் கையை வைத்தான். நெருப்பாய்க் காய்ந்தது, உடம்பு! ... ஒரு நிமிடம் தான் சிந்தித்தான்! ... உடனே, கிடந்த போர்வைத் துணியைப் பிள்ளைமேல் சுற்றித் தூக்கிக் கொண்டு, கதவைத் திறந்து தெருவை நோக்கி ஓடினான், அசோக்!

அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த கோகிலா, புடவையைக் கட்டிக் கொண்டு, பிள்ளைப் பையையும், மேஜை டிராயரில் இருந்த தன் கைப்பையையும் எடுத்துக் கொண்டு, அவன் பின்னால் ஓடினாள். வீதியில் ஓடிய ரிக்ஸாவை நிறுத்தி இருவரும் ஏறிக் கொள்ள, ஸ்பத்திரியை நோக்கி ட்டோ பறந்தது!

குழந்தையை அட்மிட் செய்து வெளியே வருவதற்குள் இரண்டு மணி நேரம் கிவிட்டது. உயிரில்லாமல் வீதிக்கு வந்தான் அசோக்! ஓடிக் கொண்டிருந்த ட்டோ ரிக்ஸாவுக்குக் கையைக் காட்டினான். உடம்பெல்லாம் வலித்தது! பெரு மூச்சோடு வண்டியில் ஏறி அமர்ந்ததும், கோகிலா கவரைக் கையில் ஏந்திக் கொண்டு ஓடி வந்தாள். அசோக் அதை வாங்கிக் கொள்ள வில்லை!

ரிக்ஸா வீடு நோக்கிக் கிளம்பியது. நன்றி பொழியும் கண்களுடன் வழி அனுப்பினாள், கோகிலா! ....ஆட்டோ போகும் வழியில், ஒரு பிள்ளையார் கோயில் பளிச்சென வெளிச்சத்தில் தெரிந்தது. அவன் கைகள் தானாகவே சேர்ந்து கும்பிடத் தொடங்கின! 'பிள்ளையாரப்பா! அந்த பச்சிளம் பிள்ளை உயிரைக் காப்பாத்து' என்று அவன் வாய் முணு முணுத்தது! ... எதிரே போலீஸ் ஜீப்பில் கை விலங்குடன் மோகன், தலை குனிந்து போய்க் கொண்டிருந்தான்!

ஆடி 2000 இதழ்-7 பதிவுகள்

4. கோடு - 'சித்தார்த்த "சே" குவேரா'

[இணையம் பல தமிழ் படைப்பாளிகளை வெளிக்கொணர்ந்திருக்கின்றது. அவர்களில் முக்கியமானவர்களிலொருவர் சித்தாந்த சேகுவார. இவர் ஒரு காத்திரமான படைப்பாளி. இவரது படைப்புக்களை http://www.egroups.com/messages/tamilit/2 என்னும் இணையத் தளத்தில் காணலாம்.]

நாட்பட்ட உந்துதல் தாளமுடியாமலேதான் வரைபலகையையும் தூரிகையையும் எடுத்தான். உந்துதல் என்றால்,ஒருநாள் இருநாள் உந்துதல் அல்ல. கிட்டத்தட்ட ஏழு வருட உந்துதல். இன்றைக்கு உச்சியிலும் மறுநாள் கிடப்பிலும் என்று காண்புகட்கேற்ப, நினைவில் நுரைத்து வடியும் உந்துதல். வீடுகூட்டும் தும்புக்கட்டைகூட, அந்தச் சீனத்து எழுத்தோவியனின் தூரிகையோட்டத்தை எழுப்புவதுண்டு. சொல்லப்போனால், ஒழுக்கிலே இலயித்து நகரும் நதியும்கூட.

செஞ்சீனத்துச் சைத்திரீகனின் கைவிரல்களின் துடிப்பையும் தூரிகையின் துரிதத்தையும் மட்டுமாவது, ஒரு தளக் கடதாசியிலே ஏற்றிவிடவேண்டிவிட விரும்பித்தான், இத்தனை நாட்பயிற்சியும் நீர்வண்ணமும் வரைபலகையும்.

அன்றைக்கு மாலை அவன் புகைப்படக்கருவியைக் கொண்டுபோயிருக்கவில்லை; ஆரம்பத்திலே, அதற்காக கவலைப்பட்டான்;

நான்ஜிங் நகர புழுதிவீதிகளிலும் யான்ஸி ஆற்றுக்கும்மேலாக புகைப்படக்கருவியை எடுத்துக் கொண்டு எப்போதும் போகின்றவன், அன்றைக்கு மழையை எண்ணிக் கொண்டு கொண்டுபோகவில்லை. பிரமாண்டமான பாலத்தின் மேலிருந்து அகண்ட மஞ்சளாற்றிலே, ஆற்றுமணல் அள்ளிக்கொண்டு போகும் சுமைக்கப்பல்களிலே மழைத்துளிகள் விழுகின்றதைப் பார்க்கும்போது, தனக்குள் ஏற்படும் 'நான்மட்டுமே இதைக் கண்டேன்' திருப்தியை நோக்கிப் போனவனுக்கு, 'பங்பூ' நகரத்து நாடோடிச் சீனத்து எழுத்தோவியனும் நனைந்துகொண்டு வந்து அருகிலே நிற்பான் என்று என்று தெரிவதற்கு நியாயம் இல்லைத்தான்.

ஆமையோட்டத்தில் மூங்கிற்குழல்களிலே நெளிபாம்பாய் ஊர்ந்த விரல்களின் நர்த்தனத்தைப் புகைப்படம் எடுத்திருந்தாலும்கூட, அந்த வரைதலின் நேர்த்தியினை கருவி அழகுப்புலனற்று சடமாகவே உள்வாங்கியிருக்கும் என்று பின்னர் தோன்றியது; கிட்டத்தட்ட கருவி ஒரு கட்டிடவரைஞனின் தொழிலையே செய்திருக்குமேயொழிய, கலைஞனினதினை அல்ல..... மூங்கிலிலே இவன் பெயரைப் பொறித்த ஓவியத்தை இவனால் கடைசி நேரத்திலே ஓவியனிடமிருந்து வாங்கிக் கொள்ளமுடியவில்லை. எல்லா ஓவியர்களையும் இவன் தான் கலைஞன் என்று எண்ணிக்கொண்ட வரையறைக்குள்ளே இட்டுக் கொள்ளமுடியாது என்று கற்றுக்கொண்டதும் அந்த யாங்ஸி

ஆற்றுமழைக்குட்தான். ஓவியன், இத்தனை 'யுவான்' வைத்தாற்றான் ஓவியத்தைத் தரமுடியும் என்று சொல்லிவிட்டான். ஒரு மூன்றாம் உலகப் புலமைப்பரிசல் மாணவனுக்கு நிச்சயம் ஓவியத்தை மீறிய உடற்தேவைகள் உண்டு, ஒரு சீனத்துக் கிராம ஓவியனுக்குள்ளதுபோலவே....

ஓவியத்தை வாங்கமுடியவில்லை; அதே நேரத்திலே ஓவியனின் கட்டுப்படா விரலசைவும் தூரிகையும்கூட அவன் மனதிலே மழைக்கால இலையிலே தலையும் வாலும் குத்தி ஒட்டி குத்துக்கரணம் அடிக்கும் மயிர்க்கொட்டியின் அசைவுகளிலும்கூட கண்ணிற்பட்டு அழுத்திக்கொண்டிருந்தது. நதியிலே புதைந்த பெருந்தேர்போல, சில கணங்கள் மின்னிமுடிந்தும் வருடங்களுக்கும் நினைவிலிருந்து அசைவதில்லை; இ·து ஒரு பொழுது- அ·தொரு பொழுது என்று நெஞ்சுக்குள்ளே, "இந்தா பார்; இன்னும் இருக்கின்றேன் உன்னுள் நான்" என்று அங்குசத்தால் நிமிண்டிக்கொண்டே இருக்கின்றன.

நிமிண்டல், சுகத்தை மீறி சொறியாகிப் போகும் நிலை வந்தபோதுதான், தானே அதை ஒரு தாளில் தூரிகையால் இறக்கினால் என்ன என்று தோன்றியது. அவன் முறைப்படி ஓவியம் கற்றுக்கொண்டதில்லை; ஓவியம்தான் என்றில்லை, சிற்பமோ, அல்லது சங்கீதம்கூடவோதான்.. ஆனால், முறைப்படி கற்றுக்கொண்டுதான்பாட்டிலே பேர் பெறவேண்டும் என்றில்லையே; முறைப்படி கற்றுக்கொள்வது பாடுவதைச் சுலமாக்குகின்றது. பழைய பாட்டைகளின் முகவரிகளை வரிசையாகச் சொல்லிக் கொடுக்கின்றது; ஆனால், புதியவழியையும் போய்ச்சேர்தலையும் பாட்டுக்காரன் தன் திறமையிலும் கற்றுக்கொள்ளும் ஆர்வத்திலுமே கண்டுகொள்ளலாமேயொழிய, குருவின் சங்கீதஞானத்தை நம்பி அல்ல என்ற எண்ணமே அவனை ஓர் ஓவியனாக -குறைந்த பட்சம்- ஓர் ஓவியனின் கையின் தாளம் தப்பாத சங்கீதத்தை பொறிவைத்துச் சிக்குப்படுத்தும் ஓர் ஓவியனாக முயலச்சொன்னது; செய்தது.

ஐந்து ஆறு வயதுகளிலே நிரையவே கிறுக்கியிருக்கின்றான்; அதன் பின்னர், பொறியியற்கல்வியின் ஆரம்பத்திலே அவன் பொறிமுறைவரைதலிலே, இயந்திர உதிரிப்பாகங்களின் பன்முகத்தோற்றத்தைக் கோடுகளாக உள்வாங்கியிருக்கின்றான்; ஆனால், அவை வெறும் இயந்திர உதிரிப்பாகங்கள்; திருகாணி, சுரை, புரி,பொருத்தி, மூட்டுக்கள், கப்பி.... சடங்கள் கோடுகளில் வட்டங்களாகவும் நீள்வளையங்களாலும் நீள அகல உயர்வு அளவுகளை தோற்றுவிக்கப்படக்கூடியவை; ஆனால், உயிர்களின் இயல்புகள் அப்படியல்ல; ஓர் இறந்த சிறுசிலந்தியை எறும்புகள் காவிக்கொண்டு செல்லும் காட்சிகூட, கோடுகளின் மூன்று நீட்டலலகுப் பரிமாணத்துள் அடங்காதது...கோடுகளினாலே அளந்தளந்து வரைந்து முடித்தபின்னும், காட்சி தோன்றாமல், கோடுகள் மட்டும் நீட்டித்துருத்திக்கொண்டு... ஒழுங்கான பல்வரிசையிலோடுலாவும் ஒரு தெற்றுப் பல்லுப்போல...எத்தனை எத்தனிப்புகள்... ஓவியனின் விரல்களையல்ல, அதன் நகங்களைக் கூட அவனுக்குக் கோடுகளால் நகர்த்தமுடியவில்லை.... 'கும்பிட்டுக்கொண்டிருக்கும்

காய்ந்த நட்புக்கை'யை வரைந்த ஓவியனைப் பற்றி வியந்துகொண்டான்; அந்த வியத்தல்கூட முதற்தடவையல்ல. வரையத்தொடங்கும்போதுதான், வரைந்தவர்களின் விரல்களைப் போற்றத்தோன்றுகின்றது. கண்ணுக்குள்ளே அப்படியே நிற்கின்றன சீனத்தோவியனின் விரல்களும் முற்றிய மூங்கிஏகுழல்களும் தூரிகையும் மழையும் வர்ணங்களும் இவையனைத்தும் ஒட்டி ஒன்றாயாடு அசைவுத்தொகுதியும்....அவன் விரல்கள் மட்டும் எதையும் எடுத்து ஒன்றாயிழுந்து விழுத்த மறுத்தன. நினைவில் ஒவ்வொன்றாய்ப் பாகம் பிரித்து முன்னைப்பதிவை சிற்றமையங்களின் தொகுதியாக்கி, ஒவ்வொரு அமையத்தையும் விரற்கட்டைகளிலேவரைகோலை வைத்து, அளவைக்குட்படு கோடுகளாய் மாற்றமுயன்றான்; கோடுகளை குறுக்கும் நெடுக்கும் வரைகோலைச் சாய்த்துச்சாய்த்து காகிதத்தைத் தொட்டும் தொடாமலும் உருவெழுப்ப முயற்சித்தான். அங்குமிங்கும் நினைவிலே துருத்தித் தள்ளியவற்றுக்கு முதன்மை செய்து காகிதத்திலே இடம்பெயர்த்தான். காற்றிலோடும் செறிவற்ற மேகக்கூட்டம்போல திட்டுத்திட்டாக பரவிப் பெருகின காகிதத்திலே கோடுகள்..... ஆனாலும், அதிருப்தி மட்டும் அழிப்பானைப் போட்டுத் தேய்த்துத் தேய்த்து அழுக்குருளைத் தூளாய்த் தள்ளியது. இவன் தன் விரல்களினை நொந்துகொண்டான். கோணல்மாணக் கோடுகள் உருக்களைப் பெற்றுத்தள்ளின; முறிந்தகோட்டு மழை, வளைகோட்டுப்பாலம், சுருள்கோட்டு ஓவியன்சிகை, நெளிகோட்டு மண்ணிற ஆற்றுநுரை....கோட்டுப்பொறிமுறைவரைதல்... குளிர்மழையைக் காணவில்லை. புகையிரதம்போக அதிரும் பாலம் செத்துக் கிடந்தது; ஓவியனின் விழிகளிலே தெரிந்த அவனின் விரல்களின் தாளமோ, பனிக்கு விறைத்துச் செத்த தெருநாயின் கண்களுக்கு ஒப்பான நிலைகுத்திய நிர்ச்சீவனத்தன்மையிலே இரட்டை முற்றுத்தரிப்புப் புள்ளிகளுக்குப் பின்னால் தென்படாது தொலைந்துகிடந்தது.

ஆனாலும், தன் விரல்களை அந்த சீனத்தோவிய விரல்களை வடிக்க அவன் போராடிக்கொண்டிருந்தான். போராடுதல் என்பதும் போய்ச்சேர்தல் என்பதின் ஒரு படிதான்; விழிகளுக்கும் மூளைக்கலங்களுக்குமிடையிலே போய் வருகின்றதை, விரல்களுக்கிழுத்து படியவைத்தலும் ஒரு போராட்டம்தான். ஆயாசத்திலே கதிரையிலே சாய்ந்தான்; விழிகள் குத்திட்டு வரைபலகையிலே நின்றன. கோட்டோவியனின் முன்னால், இவன்போய் உருச்சுருங்கி நின்று, 'வா' என்று கேட்டான்; மழையிடமும் மல்லுக்கட்டி, பாலத்தை விழிகளினாலே எறியத்துள்ளே எடுத்துக்கொள்ள முயன்றான்.... அங்கிருந்தே, யாங்ஸி ஆற்றுக்கு முன்னால், வெளியிலே மழையையும் படகையும் பாலத்தையும் விரல்களையும் சட்டத்துள் அடக்கி, ஊஞ்சலாட்டிப் பார்த்துக்கொண்டான்....மனைவி வந்து குரலை விட்டு வெளியே இழுத்துப்போட்டாள்; நினைவோடு உடலைச் சுற்றி உறுஞ்சிய அவள் நாவுடன் சட்டத்துக்குள்ளிருந்து அதன் முன்னால் வந்து மூன்றாம் மனிதனான் அவன்.

"உங்கள் நண்பர் கலாநிதிப் பட்ட ஆய்வு நேற்று முடித்து விட்டாரம்; வரும்வாரம் ஊருக்குப் போகிறாராம்;அதற்குமுன்னால், தொலைபேசியிலே பேசும்படி கூறினார்" - சொன்னாள்.

சிறுவயதுமுதலே ஒன்றாக பொறியியல் இளமாணிப்பட்டம் வரை படித்தவன்; இவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது; இப்போதே தொலைபேசியிலே அழைத்துப் பாராட்டவேண்டும் என்று போனான். பாராட்டி முடிந்து வந்தபோது, மனைவி இவனது ஓவியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். முகத்திலே துயரும் தொனிப்புக்காட்டியது. அவள் வருத்தம் இவனுக்குப் புரியும்; ஏழு வருடங்கள் இங்கும் அங்கும் இதே கலாநிதிப்பட்டத்துக்காகத் தாவிக் கொண்டிருக்கின்றான்; அதைப் பொறுப்பாக கவனம் வைத்துக் கற்றிருந்தால், ஒரு மூன்று வருடங்களின் முன்னரே இதே கலாநிதிப்பட்டம் ஒட்டிக்கொண்டிருக்கும். இவனுக்கும் அந்தக்கவலை இல்லாமல் இல்லை; ஆனால், அவனைத் தவிர எவனை நோவது? அவள் சத்தத்தைக் குறைத்து தனக்குத்தானே கேட்பாள்போலக் கேட்டாள்; "பயனற்ற விரல்களைக் கிறுக்கிக் கொண்டிருப்பதிலும் விட, பொருளாதார அழுத்தத்தை நினைவிலே கொண்டு, கற்கையினை முடிப்பது மேலல்லவா? விரல்களை உங்கள் விரல்கள் இயங்கிக்கொண்டிருக்கும் காலம் வரைக்கும் கிறுக்கமுயற்சிக்கலாம் என்பது கூடவே இத்துணை பெரியமனிதனுக்குத் தெரியாது போய்விடும்? வெறும்கோடுகள் மட்டும் எமது எதிர்காலத்திற்குப் பாதை காட்டும் என்றா எண்ணுகின்றீர்கள்?"

ஆனாலும், இவனிடம்தான் கேட்டாள்.இவன் கத்தினான்; " விரல்களைக் கோடுகளாகக் காட்ட எத்தனையோ உடற்கூற்றாளிகள் பிறக்கலாம்; ஆனால், நான் முயற்சிப்பது விரல்களின் நடையைப் பதிவு செய்துகொள்ள... காகிதத்திலே விரல்களின் நாட்டியத்தை......"

விரற்சந்துகளிற்கு இடைப்பட்டுத் தூங்கிய வரைகோலை வெளியிலே தூக்கி காற்றை குறுக்கும் நெடுக்கும் வெட்டி வெட்டிக் கதைகூறினான். தன் இயலாமையிலும் குற்றத்திலும் பேசுகின்றவன் இப்படித்தான் பேசமுடியும். அவள் வருத்தப்பட்டுக்கொண்டாள்;

"விரல்கள், விரல்கள்,விரல்கள்!! இப்படியா ஒருவன் விரல்களிலே நாட்பொழுது, நிலை எல்லாம் மறந்து நினைவழுந்திக் கிடக்கமுடியும்?"

இப்போது அவள் கண்களிலே இவன் எதிர்காலத்தைப் பற்றிய பயம் வந்து விழுந்துகிடந்தது.தன்னால் எப்போதாவது இயலக்கூடியதை மற்றவர்கள் புரிந்துகொள்ள முயற்சி செய்கின்றார்கள் இல்லையே என்று எண்ணுகின்றவனும்கூட இதே தன் செய்கையை நியாயப்படுத்தும் இயல்பினைக் காட்டக்கூடும் என்று பதிலுக்கு இவன் அவளை அமைதிகொள்ளச் செய்ய பேசினான்; ஆனாலும், குழந்தை வளர்ப்பைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிய ரூஸோவின் குழந்தைகள் வளர்ந்தநிலைதான் இவனுள்ளே நினைவிலே படர்ந்தது.

அவள் மேலும் ஏதோ பேச முயன்றாள். இவன் அது தன் காதிலே விழக்கூடாது

என்பதாகவோ தன்னை நியாயப்படுத்தவோ, நேரத்தைச் செலவுபண்ணி ஓவியவிரல்களைப் பதிவு செய்ய முயன்ற காகிதத்தை தன்விரல்களுக்கு அகப்பட்ட துரித இலயத்திலே கிழித்து வரவேற்பறை முழுக்கத் தூவி விட்டு, படுக்கையறைக்குள்ளே அவளின் பொறுமையின்மையினையும் கலையுணர்வின்மையையும் வைது கொண்டு நுழைந்து கதவை அடித்துச் சாத்தினான். அவள் அழுவது அவன் நிதானத்துக்கு வந்து தூங்கிப் போகும்வரைக்கும் கேட்டது.

எவ்வளவு நேரம் தூங்கினோம் என்றறியாது, எழுந்து அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து பார்த்தபோது, அவள் இந்தப்புறத்துக்கு முதுகைக்காட்டியபடி, சீனத்தோவியனின் கிறுக்கல்விரல்களைக் கிறுக்க முயன்றது கிழித்துப் போட்டதைச் சேர்த்தெடுத்து ஒவ்வொரு துண்டாக இருக்கவேண்டிய இடத்திலே பொருத்தி ஒட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. சத்தம்போடாமல் பூனை அடியடி வைத்துப் பின்னால், போய் நின்று பார்க்கும்போது, மழைத்துளிகள் ஈரம்கொண்டு காகிதத்தை நனைத்திருந்து தெரிந்தது; படகுகளின் அழுக்குப்படுதாக்களிலும்கூட ஆற்றுநீர்த்தெறிப்பு . சீனத்து ஓவியனின் விழிகளிலே நீர்ச்சலனம் தெரியத் தெரிய, விரல்களினால் மூங்கிலிலே நீர்த்தூரிகையால் விடாது ஓவியனின் உளப்பாரம் இறக்கத் துழாவிக் கொண்டிருந்தான்.

*****

இனி ஒருகாலத்திலே எத்துணை பாராட்டும் புகழ்த்துணுக்கும் ஓர் விரலின் சலனத்தைப் பதிவுசெய்த ஓவியன் என்று கிடைக்கக்கூடும் என்றானாலும்கூட, அதை விட தன் இயலாமையோடும் சுய அங்கீகரிப்பின்மையோடும் போராடி, இன்றைக்குத் தெளிவற்றுக் கிறுக்கும் அவனிலே உள்ளூரத் திடநம்பிக்கை கொண்ட ஒருத்தியின், அந்த ஒரே ஒருத்தியின் நீர்க்கறை பொருந்திய விழிகளின் துடிப்பையும் பயத்தையும் பாதுகாப்பையும் என்றைக்காவது நான், எனது தனித்தன்மையான நீட்டலளவுக்கப்பாற்பட்ட கோடுகளிலே வடித்தெடுப்பேனாயின், அதுவே -அவளுக்குப்பின்னர்- என் ஓவியத்திற்குக் கிடைக்கும் ஒப்பற்ற பரிசென்று கருதுவேன். அதுவரை எந்நிலையும் என் கோடுகளுள் எனக்கும் புரியாமலே தொலைந்தவனாக மட்டுமே
நானிருப்பேன்.

பதிவுகள் ஆடி 2000 இதழ்-7

5. ஒரு குறை! ஒரு நிறைவு! - அனுஷா -

ஐந்தாவது பிறந்ததும் பெண்பிள்ளை என்று, நர்ஸ் சொன்னதும் நெஞ்சே ஒருகணம் நின்று உயிர் போய் உயிர் வந்தது! ஒவ்வொரு பேறு காலத்தின் முடிவிலும் டாக்டரம்மா எனக்கு எச்சரிக்கைதான் செய்கிறாள். நானும் பிழைத்துக் கொண்டுதான் வருகிறேன். ஒரு வேளை, ஆறாவது பிள்ளை யாவது ஆணாகப் பிறந்து என் வயிற்றில் பாலை வார்க்காதா, என்ன?.....

இருபது ஆண்டுகளாக தவமிருந்தும் தீராத ஓர் ஆத்ம தாகம்! பொங்கிப் பொங்கி மோதும் கடல் அலையாய் வருகிறது! நெஞ்சின் உட்கருவைச் சுட்டெரித்து, உடல். உயிர் இரண்டையுமே உருக்கி திரவ மாக்குகிறது! அதற்கு வேண்டாத தெய்வம் இல்லை. போகாத கோயில் இல்லை. செய்யாத தர்மம் இல்லை. இரவு பகல் எந்நேரமும் என்னைப் பேயாய்ப் படுத்த, செக்குமாடாய் ஒன்றையே சுற்றிச் சுற்றி, மயக்கம் அடைகிறேன்.

இந்தப் பாழும் வயிற்றில் ஓர் ஆண் மகவு பிறக்காதா? வேண்டாத பெண் ஜென்மங்களாய் பிறக்கிறது. அதற்கு என் கருப்பையில் தான் பிசகா? அல்லது அவர் விந்து தான் காரணமா? ஒவ்வொரு பிரசவத்திலும் எனக்கு ஏமாற்றம்தான்! இந்த அக்கினிப் பரீட்சைக்கு நானே பலியாகி விட்டால், பிறகு இந்த ஐந்து பிள்ளைகளையும் யார் காப்பாற்றுவது? பிறக்கும் பெண் பிள்ளைகளைக் கண்டு கண்ணீர் வடிக்கிறேன்.

தெய்வமே! உனக்குக் கருணை இல்லையா? எப்போது எனக்குப் புலிக்குட்டிபோல் ஓர் ஆண் மகன் பிறப்பான்? ஐந்தில் ஒன்றாவது ஆணாகப் பிறக்கக் கூடாதா? தினமும் நொந்து நொந்து வேகிறது மனம்! ஆத்மாவின் அந்தரங்க சுத்தமான ஆசையெல்லாம் நிறைவேறும் என்பதெல்லாம் உண்மை தானா?

என் உடம்பையே பகடைப் காயாக வைத்து சூதாட்டம் டுகிறேன். இதுவரைத் தோற்றால்தன் என்ன? ஒரு முறையாவது வெற்றி கிட்டாதா? எனக்கு அதில் பயம் இல்லை. துணிச்சல் இருக்கிறது. தெய்வத்தின் மீது நம்பிக்கை உள்ளது. இந்தப் பம்பாய் நகரில் பெரிய குடும்பத்தையும் பராமரித்து விடலாம் என்ற குருட்டு ஊக்கம் உள்ளது. அசையாத திடசக்தியோடு அடுத்தடுத்து விதியோடு மோதிப் பார்க்கிறேன். முதலில், பிள்ளை வரம் பெற்று, இறுதியில் எமனையே ஏமாற்றி கணவன் உயிரை மீட்க வில்லையா, சாவித்திரி?

ஆனால் இப்போது பார்த்து எங்கள் தாம்பத்திய உறவு அற்று விடுகிறது. என் கணவர் என்னைத் தீண்டுவதில்லை! கண்ணோடு கண்ணினை நோக்கி, காந்தவலை வீசி என்னைக் கவர்வ தில்லை! பின்புறம் பூனைபோல் நெருங்கி, கட்டியணைத்து என்

நெஞ்சிளகப் பிணைத்துக் கொள்வதில்லை! ஏன்?.... ஐந்து குஞ்சுகள் பொரித்து விண்ட கூடாக இருக்கிறேன், இப்போது! சுட்ட கத்தரிக்காய் போல் சூம்பிய என்முகம், அவரைக் கவர முடியவில்லை! ஒட்டி உலர்ந்து தொங்கும் எனது கொங்கைகள் அவரது விழிகளைச் சுண்டி இழுப்பதில்லை! எனது அருகாமையை அவர் மிகவும் வெறுக்கிறார். என்னை விட்டுத் தூர விலகிச் செல்கிறார். ஐந்து ஜீவன்களைப் பெற்றபின் பட்டமரம் போல் காட்சி அளிக்கிறேன். பெண் மேனியில் மிளிரும் காந்த சக்தி எனக்கு மந்தமாகி விட்டது. இளமையில் துளிர்க்கும் வளர்பிறை போய், எனக்குத் தேய்பிறைக் காலம், இப்போது! பாலை வனத்தில் தாகத்தோடு அலைகிறேன்!

அவரோ சீர் குலையாமல், சிங்கம் போலிருக்கிறார். மன்மதன் இவரைப் போல்தான் இருக்க வேண்டும்! என்னைப் போல் அவருக்கும் நாற்பது வயதுதான். முப்பது வயது வாலிபன் போல் முறுக்குடனும், செருக்குடனும் கன்னிப் பெண்களைக் காமக் கண்களோடு விழுங்கிக் கொண்டு திரிகிறார்.

இப்போது அடிக்கடி எங்களுக்குள் சண்டை வருகிறது. பயங்கரச் சண்டை! வாய்ச் சண்டைதான்! கருத்தொருமித்து, காதலித்து, கல்யாணம் செய்து கொண்ட கலியுகத் தம்பதிகள்தான்!

காதல்! காதல்! காதல்!
காதல் சற்றே கசந்து போயின்,
மோதல்! மோதல்! மோதல்!

பண விஷயத்திலே தான் முதலில் சண்டை துவங்கும். அது பிறகு மகா யுத்தமாக முடியும்! பல நாட்கள் எங்களுக்குள் பேச்சு வார்த்தையே இருக்காது.

பம்பாய் நகரில் செம்பூரில்தான் எங்கள் வாடகை வீடு. அபார்ட்மெண்ட் கட்டடத்தில் ஒரு பகுதி. முன்னூறு ரூபாய் வாடகை. எங்கள் மாளிகையைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். சோப் பாக்ஸ் பிளானில் கட்டிய வீடு! முன்னால் ஓர் அறை. பின்னால் சமயற் கட்டு தனி. இடையில் கக்கூஸ் உடன் குளியல் அறை. இந்த பங்களாவில் தான் ஆறு பெண்கள், ஓர் ஆண்! ஏழு உயிர் ஜென்மங்கள் உண்பது, உறங்குவது, குளிப்பது, உடை மாற்றிக் கொள்வது, பிள்ளைகள் படிப்பது, பெற்றோர் சண்டை இடுவது, பின் சமாதான மாகி இரவில் உறவு கொள்வது, எல்லாம்!

ஆபீஸிலிருந்து கணவரின் சம்பளப் பணம் கையில் முழுசாக எண்ணூறு ரூபாய் வருகிறது. வீட்டு வாடகை மற்றும் கணவர் கைச் செலவு போக, எஞ்சிய தொகை நானூறு என் கையில் விழுகிறது. சரியான உணவு உண்டா? உடை உண்டா? ஒரு

சினிமா உண்டா? மாதக் கடைசியில் பணம் பற்றாமல் கடன் வாங்க வேண்டி வரும். கடன் வாங்குவது அவர். கடனை அடைக்க வேண்டியது என் பொறுப்பு! நான் எங்கே சம்பாதிக்கிறேன்? சண்டையின் ஆரம்பமே இங்குதான்!

சண்டை அமர்க்களப்படும். சாப்பிடும் தட்டுகள், பறக்கும் ஸாசர்களாய் பறக்கும்! இறுதியில் அவர் சாப்பிடாமல் வெளியேறி விடுவார். தலை மறைவில் இருந்து, சில நாட்கள் கழிந்து வருவார். பின் என்னிடம் இரவில் கொஞ்சுவார்! ஐந்து பிள்ளைகள் எப்படி பிறந்தன? இப்படித்தான்! இது சகஜமாக நடப்பது! அபூர்வ காதல் தம்பதிகள்!

இந்தச் சமயத்தில் ஊரிலிருந்து ஓர் அதிர்ச்சி செய்தி வருகிறது எனக்கு. நோயில் கிடந்த என் தந்தை இறந்து விட்டதாக தங்கை வாணி, மதுரையிலிருந்து தந்தி அடித்திருந்தாள். நான் மட்டும் அவசரமாய் ரயிலில் மதுரைக்குச் செல்கிறேன். மூன்றாம் நாள் போய்ச் சேர்ந்த நான், வெறும் வீட்டைத்தான் கண்டேன். எல்லாம் அதற்குள் முடிந்து விட்டது. வாசலில் நின்று கொண்டு கதறிக் கதறி அழுகிறேன்.

துக்கம் உருக்கி விட்ட வாணியைக் கண்டு என் இதயம் துடிக்கிறது. அம்மா இறந்து ஆறு வருடங்கள் கடந்து விட்டன. வாணி இப்போது தனி மரம்! முப்பது வயதைத் தாண்டிய குமரி! இதுவரை ஒரு கல்யாண ஏற்பாட்டைக் கூட அப்பா செய்ய முடியவில்லை. அதற்குள் கண்ணை மூடிவிட்டார்.

வாணிக்கு மூன்று தடவை நிச்சயமாகி, திருமணம் நடக்காமல் நின்று விட்டது. அதற்குப் பின் அவளும் கல்யாணமே வேண்டா மென்று வெறுப்புடன் வேலை பார்க்கிறாள். பி.ஏ. பட்டதாரியான வாணி, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் டீச்சராக இருக்கிறாள். கட்டுக் குலையாத மேனி! கவர்ச்சியான தோற்றம்! தங்கக் குடம்போல் உடம்பு! எடுப்பாய் எழுந்த கொங்கைகள்! அவளுக்கு என்ன குறை? ஒரே ஒரு குறைதான்! பொங்கிவரும் முழு நிலவா, முகம்? இல்லை! அரை நிலவு! காந்தவலை வீசும் கண்கள் இரண்டா! இல்லை! ஒன்றுதான்! வாணிக்கு ஊனமாய்ப் போனது ஒரு கண்! சிறு வயதில் பெரியம்மை நோய் வந்து, ஒரு கண்ணில் வெள்ளை விழுந்து விட்டது. கறுப்புக் கண்ணாடி போட்டு மறைத்துக் கொள்கிறாள். அப்போது அவளைப் பார்த்தால், எழில் அரசி, ஊர்வசிதான்!

திருமணச் சந்தையில் இரண்டாம் தாரம், ஏன் மூன்றாம் தாரமாக் கூட வாணி விலை போகவில்லை!

வாணியை நான் என்னுடன் பம்பாயிக்கு அழைத்து வந்து விட்டேன். அதுதான் நான் செய்த முதல் பிசகு! நாகரீகப் பம்பாய் நகரம் அவளைப் புதிய பறவையாய் க்கியது! எங்கெங்கு நோக்கினும் எழில் பாவையர்! கண்கவரும் டவர்! அவளது பெண்மை

கட்டுமீறிப் பொங்கி எழுந்தது! நடை, உடை, பாவனை, நளினம் எல்லாம் மாறி, அவள் ஓர் அழகு மேனகையாகத் தோன்றினாள்!

வந்த உடனே வாணிக்கு கல்லூரியில் டீச்சர் வேலை கிடைத்தது, என் கணவர் உதவியால். ஆயிரம் ரூபாய்ச் சம்பளம்!

வாணியின் கால்கள் தரையிலே இல்லை! வானில் பறந்தாள், விடுதலைப் பறவையாய்! வீட்டில் பணம் செழித்தது. அவள் சம்பாத்தியத்தில் எல்லாருக்கும் நல்ல சுவையான உணவு! வயிறு நிறைய உணவு! அலங்கார உடை! உல்லாசப் பொழுது போக்கு! பிள்ளைகளுக்கு வாணியை மிகவும் பிடித்து விட்டது. "சித்தி, சித்தி" என்று எல்லாரும் அவளையே சுற்றிச் சுற்றி வந்தார்கள்! என் கணவரோ, அவள் காந்த மண்டலத்தில் இழுக்கப்பட்டு, அவள் நிழலாய் ஒட்டிக் கொண்டு விட்டார்!

வாணி என் கணவரைக் கைப்பற்றி, என்னிடமிருந்து அவரைக் களவாடிக் கொண்டாள்! வீட்டில் அவளே அவருக்கு கா·பி கொடுப்பாள். சாப்பாடு போடுவாள். குளித்தபின் அவருக்குச் சட்டையை எடுத்துக் கொடுப்பாள். டையைக் கழுத்தில் மாட்டிவிடுவாள். பட்டனைத் தைத்துக் கொடுப்பாள். அவர் படிக்கும் புத்தகங் களைத் தானும் படிப்பாள். படித்துத் தர்க்கம் செய்து ஆனந்தப் படுவாள். மனைவி என்ற பெயரில் நான் ஒருத்தி முன்னால் இருந்தும், இருவர் கண்களுக்கும் தெரியாது போயிற்று!

பிரவசி இல்லாத சோப்பாக்ஸ் வீட்டில் நெருங்கிப் பழகவும், விரிந்த பம்பாய் நகரில் திரிந்து புரளவும், இருவருக்கும் நிறைய சந்தர்ப்பங்கள் கிடைத்தன! எங்கும், எப்போதும், எதற்கும் இணைந்தே போவார்கள். இணைந்தே வருவார்கள். அபார்ட்மெண்டின் மொட்டை மாடியில் மாலையிலும், இரவிலும் மணிக்கணக்காய் உரையாடுவார்கள். ஒன்றாக இருப்பார்கள்.

பொருமினேன், நான்! புழுங்கினேன், நான்! வெடித்தேன், நான்! என்ன பயன்? அவர்களது நட்பு இறுகிக் கொண்டது! இருவரில் ஒருவரைப் பிரிப்பது என்று முடிவு செய்தேன். யாரைப் பிரிப்பது? எப்படிப் பிரிப்பது? சம்பாதிக்கும் கணவனை வெளியேற்றுவதா? அல்லது மணமாகாத, அனாதைத் தங்கையை விரட்டி விடுவதா? எதைச் செய்வேன், நான்? மதுரையிலிருந்து அவளைப் பம்பாயிக்கு அழைத்து வந்தது, என் மூடத்தனம்! வாணிக்குச் செய்த கல்யாண ஏற்பா டெல்லாம் எதுவும் பலன் தரவில்லை! பார்த்து விட்டுப் போனவர் யாரிட மிருந்தும் திரும்பக் கடிதம் வருவதில்லை! இந்த விபரீத நட்பு எதில் போய் முடியப் போகிறது? தீயின் அருகில் ஈசல் வட்ட மிட்டுக் கொண்டே இருந்தால் என்ன நடக்கும்? இரவும் பகலும் எனக்கு வேதனைதான்!

எது நடக்கக் கூடாது என்று பயந்து கொண்டிருந்தேனோ, அதுவும் நடந்து விட்டது! ஒரு

நாள் காலையில் குளியல் அறையில், யாரோ வாந்தி எடுக்கும் அரவம் கேட்டு, எழுந்து வந்து பார்த்த எனக்குப் பகீரென்றது! தொண்டையில் ஏதோ அடைத்தது, எனக்கு. நெஞ்சே பிளந்து இரு கூறாக விழுவதுபோல் வலித்தது! என் அருமைத் தங்கை வாணிதான்! வாணியேதான்! எனக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

"அடிப் பாவி! என்ன காரியம் செய்தே? இது துரோகம்! வெட்கக் கேடு! மானம் மரியாதையோடு இனி எப்படி வாழ்வது? இந்தப் பெண்பிள்ளைகள் என்ன நினைக்கும், உன்னைப் பற்றி? கேட்டால், நான் என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? எங்கள் குடும்ப வாழ்வையே பாழாக்கி விட்டாயே, பாவி!" என்று தலையில் அடித்துப் புலம்புகிறேன். அவளைத் திட்டிக் குவிக்கிறேன்.

வாணியோ, எதுவும் பேசாமல், கேளாதவள்போல் தலையைத் திருப்பிக் கொண்டு அகன்று விடுகிறாள். எந்தவித தப்பு உணர்ச்சியும் அவளிடம் இல்லை! எந்தவித அதிர்ச்சியோ, அவமானமோ, அருவருப்போ அவளிடம் ஏற்படவில்லை! வந்ததெல்லாம், எனக்குத்தான்!

எதிரே வந்த கணவரையும் மானப்பட, மரியாதை இல்லாமல், மனதாரத் திட்டுகிறேன்.

என் கணவரும் பதில் பேசாமல் என்னைக் காணாதபடி போகிறார்! எப்போதும் பதிலுக்குப் பதில் சண்டையிடும், போர்க் கணவனைக் கூட சாந்த மூர்த்தி யாக்கி விட்டாளே, வாணி! இருவரும் இப்படி ஊமையா யிருந்தால், இதற்கு என்ன அர்த்தம்? என்னைத் தோற்கடித்து விட்டோம் என்றா?

காலை விடிந்ததும் பிரச்சனையும் முடிந்தது! சிக்கலான முடிச்சு சுலபமாக அவிழ்ந்தது! இல்லை ஒரு சிக்கல் நீங்கி, இன்னுமொரு சிக்கலை உண்டாக்கியது! நெஞ்சிலிருந்து பாரம் இறங்கி, என் தலைமேல் போய் விழுந்தது!

"சித்தியைக் காணோம்" என்று என் இளைய பெண் ஓடி வந்து என்னிடம் சொன்னாள்! "அப்பாவைக் காணவில்லை" என்று மூத்த பெண் பதறிப்போய் சொன்னாள்! எனக்கு எல்லாம் புரிந்து விட்டது! இதயத்திலே மின்னல் தாக்கி குப்பென எரிகிறது! இடி விழுகிறது என் தலையில்! எப்படிக் காப்பாற்றுவேன், இந்த சின்னஞ் சிறிய பிள்ளைகளை? தள்ளாடி மயக்கமோடு தரையில் சாய்கிறேன்! பிள்ளைகள் புரிந்தும், புரியாமலும் விழித்தார்கள்! தொண்டை அடைத்துக் கொள்ள, கண்ணீர் அருவியாய்க் கொட்ட, உடற்சக்தி எல்லாம் உருக, விக்கி விக்கி அழுகிறேன்!

கிளியோபாத்ரா அண்டோனியை இழுத்துக் கொண்டு எங்கேயோ போய்விட்டாள்! எங்கே? எங்கே? எங்கே? என்று துளைத் தெடுக்கிறது என்மனம்! வாணியைச் சாபமிடுகிறேன்!

கணவனைக் காரி உமிழ்கிறேன்!

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருஷங்களாகி, எப்படியோ ஐந்து ஆண்டுகள் ஓடி ஒழிகின்றன! பெண் பிள்ளைகள் யாவரும் வளர்ந்து விட்டார்கள். முதல் மூன்று பெண்களும் 'பெரியவளாகி' விட்டார்கள்! ஓடிப் போன மிருக ஜென்மங் களைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை! எங்கே ஒளிந்து கொண்டு குடித்தனம் நடத்துகிறார்கள்? அவர்கள் வேலை செய்த ஆபீஸிலும் யாருக்கும் தெரிய வில்லை! எல்லாம் மர்மமாகவே இருந்தது!

மூத்த பெண்கள் மூவரும், நானும் வேலை செய்கிறோம், டைப்பிஸ்டுகளாக!. வேறு வழி இல்லை! கால் வயிற்று, அரை வயிற்றுச் சாப்பாட்டில் உயிர் வாழ்கிறோம்! கடல் அலைகளில் மூழ்கியும் மூழ்காமலும், ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டு, கரை சேர முடியாதபடி தத்தளித்துக் கொண்டிருக்கிறோம்!

அடுத்து ஓர் இடி மின்னல் எங்களை எல்லாம் தாக்குகிறது! இது பேரிடி! "அத்தான், திடீர் மாரடைப்பில் காலமானார்" என்று வாணி அடித்த தந்தி வருகிறது! துக்கம் என் நெஞ்சைக் கோடாரியால் உடைத்துப் பிளக்கிறது! "அப்பா போய்விட்டாரே" என்று பிள்ளைகளெல்லாம் கோவென அழுகிறார்கள். எதிர்நீச்சல் போட்டுக் கரையேறும் போது, தரையே வெள்ளத்தில் கரைந்து போகவேண்டுமா?

தந்தி கல்கத்தாவிலிருந்து வந்திருந்தது. ஒரு மொட்டைத் தந்தி! முகவரி யில்லை! வாணியின் பெயர் மட்டும் தான் இருந்தது! எங்கேயோ கணவர் வேறு ஒருத்தியோடாவது உயிரோ டிருக்கிறார், என்ற என் சிற்றின்பத்தையும், விதி பறித்துக் கொண்டு போய் விட்டதே!

எதற்காக இப்படி ஒரு மொட்டைத் தந்தி? என் முகத்தில் விழிக்க, வாணிக்கு மன உறுதி இல்லையா? கல்கத்தாவில் எப்படி இறந்தார்? எங்கே இறந்தார்? தனியாக எப்படி அவரை அடக்கம் செய்தாள், வாணி? பிள்ளைகளும் நானும் இறுதிச் சடங்கில் பங்கு கொள்ள வேண்டாமா?

இனிமேலும் ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறாள்? எங்கே இருக்கிறாள்? அவளும் இப்போது ..... என்னைபோல்.......! அந்த வார்த்தையைச் சொல்ல என் நா கூசுகிறது ....!

இப்போது இந்தப் பெண் பிள்ளைகளுக்கு அப்பா இல்லை! அவர் பெற்ற பிள்ளைகள். கல்யாணம் போன்ற நல்ல காரியங்களில் நடக்கும் போது, கைப்பிடித்துக் கொடுக்க அப்பா என்றோர் ஆத்மா இருக்காது! இனி அந்த இடம் காலியாக இருக்கும்! பாவி வாணி, சுயநலக்காரி! பெண்களுக்குத் தந்தை இல்லை என்று சொல்ல வைத்து விட்டாள்.

எனக்கும் கணவன் இல்லை என்னும் ...... அந்த பயங்கரப் பட்டத்தையும் சூட்டி விட்டாள், என் அருமைத் தங்கை வாணி! அவளது பேராசைக்கு அவர் பலி!
திருடித் தின்ற கனியும் தீய்ந்து போனது!

நாட்களும், மாதங்களும் ஆமைபோல் நகர்கின்றன. வாணியிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. என்ன ஆயிற்று அவளுக்கு? எங்கே தனியாக இருக்கிறாள், அவள்? ஏன் தலைமறைவாக இருக்கிறாள்? மொட்டைக் கடிதமாவது வராதா? என்று தினம், துடிக்கிறது மனம்! இப்படியே ஆறு மாதங்கள் ஓடி விட்டன!

ஒருநாள் காலை. உடல் நலமில்லாமல் படுத்திருந்தேன். கதவு தட்டும் ஓசை கேட்டு, தாழ்ப்பாவை இழுத்து கதவைத் திறந்தேன். யாரோ நடுத்தர வயதுள்ள ஒரு மாது, கையில் பையுடன் நின்று கொண்டிருந்தாள். அருகில் ஒரு சிறு பையன். வந்தவள் எதுவும் பேசாது, என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டுகிறாள்.

ஆச்சரியத்தோடும்,ஆ ர்வத்தோடும் கடிதத்தை வாங்கிய நான், வைத்தகண் வாங்காமல் என்னையே நோக்கும் சிறுவனைப் பார்க்கிறேன். பால் வடியும் அந்தப் பிஞ்சு முகத்தில் வாணியின் கண்களையும், கணவரின் சாயலையும் கண்டு என் நெஞ்சு பாகாய் உருகியது! கை நடுங்கிப் பதட்டமோடு அந்தக் கடிதத்தைப் படிக்கிறேன்.

அருமை அக்கா!

காலம் கடந்து இந்தக் கடிதத்தை எழுதுவதற்கு என்னை மன்னித்துவிடு. பம்பாயிக்கு வரும் என் சிநேகிதி, நர்ஸ் கமலா சேகரை உன்வசம் ஒப்படைப்பாள். அக்கா! அவனை ஏற்றுக் கொள். என் வயிற்றில் பிறந்த சேகரை, உன் மகனாக வளர்த்து வா. ஒட்டுமாங்கனி ஒட்டிய வேறு கிளையில் உண்டான போதிலும், அதுவும் ஓரே மரத்தில் பழுத்த கனிதான்! ன் கண்மணியைக் காப்பாற்று. சுமைதாங்கி யான உன்மேல் இன்னுமொரு பாரத்தை வைக்கிறேன். வேறு வழி இல்லை.

ஒரு குறையை உடைய நான், எல்லோரையும் போல வாழ முடியவில்லை. ஆனாலும் உன்னால் எனக்கு ஒரு நிறைவு கிடைத்தது. வழிப்பறி செய்து தர்மம் புரிவதைக் கைமாறு என்று கூற மாட்டேன். அக்கா! குறுக்கு வழியில் சென்ற எனக்குச் சரியான தண்டனை கிடைத்தது. ஆத்மாவின் ஆசை நிறைவேற வேண்டுமானால், ஏதாவது ஒன்றை இழக்கத்தான் வேண்டும் போல் தெரிகிறது! வாழ்க்கையில் "நிறை, குறை" என்னும் ஒரு தெய்வ நியதி சிலரை ஏற்றி இறக்குகிறது! சிலரை இறக்கி
ஏற்றுகிறது!

அக்கா! உங்களை எல்லாம் விட்டுப் பிரிந்த வேதனை தாங்க முடியாமல் தான், அத்தான்

சீக்கிரம் போய்ச் சேர்ந்தார்.

நான் மூன்று மாதங்களாக ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாகக் கிடக்கிறேன். எனது நாட்கள் எண்ணப் படுகின்றன! கர்ப்பப் பையில் ஏதோ புற்று நோயாம்! அக்கா! என்னைப் பற்றிக் கவலைப் படாதே! எனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடாதே! என்னைக் காணவும் முயற்சி செய்யாதே! நான் ஒரு வஞ்சகி!

ஒரே ஒரு இறுதி வேண்டுகோள்! என் கண்மணியை ஏற்றுக் கொண்டு, அவனை ஆளாக்கு. அத்தானின் மரண இன்ஸ்சூரன்ஸ் பணச்செக் ரூபாய் பத்தாயிரத்தை கடிதத்தில் வைத்து அனுப்பி இருக்கிறேன்.

அன்புத் தங்கை,
வாணி.

கடிதம் முடியும் முன்னே, கண்கள் இரண்டும் குளமாயின. அணையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளம் போல், எனக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வருகிறது! இதயத்தில் ஒரு எரிமலை வெடித்து தீப்பொறிகள் பொங்குகின்றன! கண்ணீரும் கம்பலையுமாக ஓடி, சேகரை வாரி அணைத்துக் கொண்டு முத்த மாரி பொழிந்து, கதறிக் கதறி அழுகிறேன்! பெண்களும் வாஞ்சையோடு அவனைச் சூழ்ந்து கொள்கிறார்கள். இருபது ஆண்டுகளாகத் தவமிருந்தும், நிறைவேற்ற முடியாத ஒரு குறையை இன்று நிறைவாக்கி விட்டாள், தங்கை வாணி!

பதிவுகள் ஆவணி 2000 இதழ்-8

6. மரதன் ஓட்டம் - கடல்புத்திரன்

கிருஸ்சை சந்திப்பதற்காக கொட்டக்காட்டுப் பக்கமாக சென்றபோது வீதியில் ஒரே சனப்புழக்கமாக இருந்தது. வசந்தி உட்பட சிறுவர் சிறுமிகள் நீர் நிரப்பிய வாளிகளுடன், கைகளில் சிறிய பிளாஸ்டிக் குவளைகளை வைத்தவாறு...பரபரப்புடன் காத்திருந்தார்கள். பொம்பிள்ளைப் பிள்ளைகளின் சிரிப்பும், பேச்சும், நளின அசைவுகளும் எப்பவும் ரசிக்ககூடியனவாகவே இருக்கின்றன.காரணம் மாறுபட்ட தன்மைகள் என்பதாலோ?

இயற்கையை ஆராய்வதை விட்டு பரபரப்புகளை பார்த்தேன்.நேற்று ஸ்பீக்கர் காரில் சோதி ஒலிப்பரப்பிக் கொண்டு போனது ஞாபகம் வந்தது. அவனுடைய அடைத்த குரல் எனக்கு எப்பவும் பிடிக்கும். "நாளை,கிழக்கராலி சரஸ்வதி வாசிகசாலை முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி,பெருமையுடன் நாடாத்தும் மரதன் ஓட்டத்திற்கு ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறோம் .வாசிகசாலையில் ஆரம்பிக்கும் மரதன் ஓட்டம்..பிரதான வீதியான தெற்கராலி பஸ் வீதி வழியாக வந்து, வடக்கராலிப் பக்கமாகவிருக்கிற காரைநகர் வீதியில் ...நீள ஓடி,பாலத்தடியில் திரும்பி மீளவும் வாசிகசாலையை அடையும். "

பள்ளிக்கூடத்திலேயே, சரஸ்வதிப்பூசையில் சினிமாப்பாட்டு பாடுறவன் இவன் ஒருத்தனே."கற்பகவள்ளியின் பொற்பதங்கள் பிடித்தே நற்கதியடைவாய் "என்ற வீரமணி ஐயரின் பாடலை நல்லாவே பாடுவான். தமிழில் பண்டிதரான வள்ளுவர் மாஸ்ரர் கூட எதிர்ப்பு தெரிப்பதில்லை பாடவைத்தவர் விஜயம் ரீச்சரே. அவர் புதிதாக வந்த பிறகே சில மாற்றங்கள் ஏற்பட்டன.சங்கீதம் பெரிதாக படிக்காவிட்டாலும் அவர் கலாரசிகராவிருந்தார். ஒரு தாய்மைக்குரிய அன்புடன் பழகியதில்..அவருடைய மாணவர் என்று சொல்லுறளவுக்கு சிறிய கூட்டம் இருந்தது. கிருஸ்,சின்னப்பு,சோதி போன்றவர்கள்..சிலர். இன்று நாமெல்லாம் பள்ளிக்கூடத்தை விட்டு விலகிய பிறகும், அங்கே ஏதும் விசேசம் என்றால் சோதியை கூப்பிடுகிறார்கள். வெளியவிருக்கிற வாசிகசாலைகளும் அவனையே அழைக்கிறார்கள்.

இந்த அராலி குக்கிராமம் என்றில்லை;.அதே சமயம் பெரியதும் இல்லை. கடற்கரைப் பக்கமாகவிருக்கிற...எல்லாசாதி மக்களையும் கொண்ட நடுத்தர கிராமம். நிறைய நெல்வயல்களையும்,குளங்களையும் கொண்டது. வழுக்கியாறு என்கிற செயற்கையாக வெட்டப்பட்ட வாய்க்காலை வடக்குப் பக்க எல்லையாக கொண்டுள்ளது. அவ்வாறு,கடலோடு கலக்கிற பகுதியில் பல மதகுக்தவுகளைக் கொண்ட சிறிய வட்ட நீர்த்தேக்கம் ஒன்று உள்ளது.வீதி , மேலாகப் போவதக்காக பெரிய பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அப்பாலத்தைக் கடந்தே அராலிக்குள் வர முடியும். யாழப்பாணத்திலிருந்து காரைநகருக்கு போகிற குறும் பாதை அது.வழுக்கியாறு ' நல்ல முறையில் காலனியாட்சிக் காலங்களில் இருந்ததாகத் தான்

சொல்கிறார்கள்.'அதில், ஓடங்களில் பயணித்தாகவும் அறியப்படுகிறது.சங்கானைப் பிரிவில் ,இதற்கருகில் இருக்கும் ஒடக்கரைக் கள்ளுத் தவறணை பேர் போனது. இன்றிருக்கும் ஆற்றின் நிலை ... பரிதாபகரமானது. தூர்ந்தும் தூராமலும்,கட்டுக்கள் சிதைந்தும் ...இருந்த போதிலும் குறிப்பிட்ட தூரத்தில் மதகுக் கதவுகள் திறந்து மூடக்கூடியதாக நல்ல நிலையிலே இருக்கின்றன.' போதியளவு நீர் தேக்காத படியால் குறைவான வயல்களே இன்று அந்நீரை பயன்படுத்துகின்றன.சரியாகப் பாராமறிக்கப்படுமாயின் '...சங்கானை, அராலிப் பகுதிகள் தன்னிறைவானவையாக திகழும்' என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ,தமிழ்ப் பகுதியில் இருப்பதால் தொடர்ந்தும் பாராமுகமாகப் புறக்கணிக்கும் ஆட்சியாளர்கள்..என்று தான் மாறுவார்களோ? பெருமூச்சு எறிந்தேன்.

பாலத்தைக் கடக்கிற வீதி இடப்பக்கமாக பிரிந்து தெற்கு,கிழக்கராலிப் பக்கமாக ஒரு கிளையும்; வடக்கராலிப் பக்கமாக ....நீளவும் போகிறது. நிறைய நெல்வயல்கள் நிலப்பரப்புக்களை அங்காங்கே தனிமைப்படுத்தி பிரித்து விட்டதால், அவ்வீதிகளை மயமாகக் கொண்டதாக மூன்று அராலிகள் ஏற்பட்டு விட்டிருக்கின்றன. கடற்கரைப் பக்கமாக நீர் பெருகி நிற்பதால் உப்புச் செறிவுள்ள பயன்படுத்த முடியாத கணிசமான நிலப்பரப்புகளும் இருக்கின்றன.அந்நிலத்தில் உப்புத்தாவரப் புதர்களையும்,சிப்பி தோண்டிய மண் குவியல்களையும்,இந்து... கிருஸ்துவ சுடலைகளையும் காணலாம்.அராலியில் மட்டுமின்றி எல்லா இடங்களிலும் பனைமரத் தோப்புக்களை காணமுடிகிறது .பனை வடலிகளை அழித்தே மக்கள் குடியிருப்புக்களை கட்டியிருப்பார்கள்

போல தோன்றுகிறது.தெற்கராலி வீதி,வளைவாக வந்து மேற்கராலி, கொட்டைக்காட்டை உள்ளடக்கியுள்ளது] வட்டுக்கோட்டையில் ..மறு வீதியை மீளவும் சந்திக்கிறது. அராலிக்காரர்கள் மரதன் வைத்திருப்பதென்றால் இந்த அரைவட்ட வீதி வழியே வைப்பார்கள்.மற்றவர்கள் வைக்க பல வழிகள் இருந்தன.

கிருஸ்ணன் எனக்கு மச்சான் முறையானவன். என் அக்காவை அவனுடைய அண்ணரேமுடித்திருந்தார். அவன் கண்ணில் படவேயில்லை.விதானையாரின் மகன் -செல்வனே எதிர்ப்பட்டான். சைக்கிளை உருட்டிக்கொண்டு அவனருகில் போனேன்.

"சரஸ்வதி வாசிகசாலை நடாத்தும் மரதன் ஓட்டம் வந்து கொண்டிருக்கிறது.வீதியில் நிற்பவர்கள் ஒதுங்கி நின்று ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறோம் ." சோதியின் குரல் ஸ்பீக்கரில்..தெளிவாக ஒலிக்க, ஏ.40 - கார் ஊர்ந்து வந்துகொண்டிருந்தது .வடக்கராலி செல்லையா காரை ஓட்டிக்கொண்டிருந்தார்.அது அவருடைய கார் தான்.'நல்ல மனுசர்:விளையாட்டுப்போட்டி எங்கே வைத்தாலும்,பெற்றொல் காசை மட்டும் வாங்கிக்கொண்டு ஓட்டும் பிறவி.'அவர்க்கு பிள்ளைகள் இல்லை."எவரும் படிப்பில் மட்டுமின்றி, விளையாட்டிலும் சிறந்து விழங்கவேண்டும்" என்று சைக்கிள்

கடையிலிருந்து சதா சொல்கிறவர்.அராலிப்பெடியள் கொடிகட்டிப் பறக்க வேண்டும் என்று கனவு ...காண்கிறவர். அவருடைய கார்,அதனால் தான் நேற்றெல்லாம் தாராளமாக ஓடித்திருந்திருக்கிறது. எனக்கும், ஓட்டங்களைப் பற்றி கொஞ்சம் தெறியும். பள்ளிக்கூடத்தில்...,படிக்கையில் 'கட்டையன்களை நீண்ட ஓட்டத்தில் விலத்த முடியாது' என்று முதுகில் தட்டு வாங்கியிருக்கிறேன். குறுந்தூர ஓட்டத்தில் நெடுவலான குமாரை என்னால் எவ்வளவு ஓடியும் விலத்த முடியவில்லை.பள்ளிக்கூட ஓட்டங்களை விட மரதன் ஆக நீண்ட ஓட்டம். சீராக ஓட வேண்டும். 'சக்தியைக் காட்டுகிறேன்' என்பதெல்லாம் சரிப்பட்டு வராது. மனவலிமை முக்கியமானது. ஓடத்தொடங்கிற போதே,வயிற்றில் கடபுடா சத்தங்களெல்லாம் வரும்.முடியுமா? என்று மலைப்பாகவிருக்கும்! ஓடத் தயாராக நிற்கும்' வட்டுக்களை'பார்த்துத்தான் மனத்தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.பிறகு தன் பாட்டிலே..ஓடுவோம் என்பது வேறு விசயம். முடிவுக்கோட்டுக்கு 200-100 மீற்றர் இருக்கிற போதே,ஆற்றலைக் காட்ட வேண்டும்.

ஆனால்,பலருக்கு பொதுவாக வேக ஓட்டம் கடைசிவரை சரிவராது.வேக ஓட்டக்காரர்களுக்கு மரதன் ஒத்துவருவதில்லை .குமார்,எத்தனையோ தடவைகள் யாற்றையும் சைக்கிள்களில் ஏறி தான் மரதனை முடித்திருக்கிறான். வருகிற வீரர்களை பார்க்க சிறிது ஆவலாகவிருந்தது .முதலாவதாக ரஞ்சன் தெறிந்தான். என்னோடு படித்தவன், குண்டடித்ததால் கீழ்வகுப்புக் காரர்களுடன் சேர்ந்து படிக்கிறவன் . கிராமப்புறங்களில்,சில பெற்றோர் பிறந்தவுடனே பிறப்புச்சாட்சிப் பத்திரம் பதியாது.ஒரு வருசம் கழிச்சு பெறுகிறது பொதுவாக இருக்கிறது .சில சலுகைகள் கிடைக்கலாம் என்பதால் இருக்கலாம் . ரஞ்சனுடையதும் அப்படி பதியப்பட்டது.அதனால் அவனுக்கு சிறிது யோகம் அடித்தது .நான்,குமார்..எல்லாம் விலகிய பிறகு,நடந்த இல்ல வருடாந்த விளையாட்டுப் போட்டியில் எல்லா விளையாட்டிலும் அவனே கதாநாயகனாக விளங்கினான்.பள்ளிமரதனிலும் முதலாவதாக வந்தான்.அவனிடமும் திறமை இருப்பதையும் மறக்க முடியாது தான்.இரண்டாவதாக சேகர் வந்து கொண்டிருந்தான்.இவன் கீழ் வகுப்பு மாணவன்.தவிர,அயலிலுள்ள பாரதி வாசிகசாலைக் கால்பந்தாட்டக் குழுவில்'மேல் பகுதி'யில் நன்றாக விளையாடுகிறவன் .

மூன்றாவதாக வந்தவனைத் தான்..நம்ப முடியவில்லை திலகன்!விஜயம் ரீச்சரின் மற்ற பிள்ளைகளைப் போலவே இவனும் புத்தகப் பூச்சி.இவன் அவர்களில் மூன்றாவது ஆள் விளையாட்டுக்காற்றே படாதவர்கள்..அராலியிலே கல்கி,விகடன்,குமுதம் வசிக்கிறவர்கள் என்றால் இவர்கள் தான். கிராமத்தவர்கள்'ரீச்சர்ர பொடி'என்று தனி மரியாதை குடுத்து பிழங்குவது இவனுக்கு பிடிப்பதில்லை . வகுப்பில் மற்ற பெடியள்களையும் இவனுக்கு..பிடித்திருந்தது.அராலி கடற்கிராமமாக இருந்தபோதும் கடலுக்கு போறது,மீன் பிடிப்பது எல்லாம் இவனுக்கு நிறைவேறாத கனவுகளாகவே இருந்தன.ஒன்றாக படிக்கிற போது,'இவனின் அப்பா திடிரென மாரடைப்பால் இறந்தது'பெரிய

விசயமாகவிருந்தது கிருஸ்னண்,சின்னப்பு போன்ற மாணவர்கள் செத்தவீட்டை முன்னின்று நடத்தினார்கள்.அந்த செத்தவீடு..எங்களையயும் பாதித்தது . வீட்டிலே ,கவலைப்பட்டுக் கொண்டிருந்த எங்கப்பா சரியாய் அடுத்தக் கிழமையே மண்டையைப் போட்டு விட்டார் இருவரின் சாவிற்கும் மோசமான குடி தான் காரணம்.அவர் ஒரு காலத்திலே குடித்திருந்தார்;எங்கப்பா வேலை நிமித்தம் நெடுக குடிக்கிறவர் . அதுவரையில் வாடலாகவிருந்த இவனை ஒரு பொருட்டாக எண்ணியிராத என்னுள்,'பார்க்கிற போது ஏதோ ஒரு பாசம் ஏற்படுவதை உணர்ந்தேன்.அந்த முறை,வந்த ஆடியமாவாசைக்கு கீரிமலைக்கு போனபோது,அவனையும் வற்புறுத்திக் கூட்டிக் கொண்டு போனேன் ; தர்ப்பையும் போடவைத்தேன்.பிறகு,வேற வேற நகரத்துப் பள்ளிக்கூடங்களுக்கு..பிரிந்து விட்டோம்.சந்திப்பது,கதைப்பது எல்லாம் பெரிதாகவிருக்கவில்லை கனநாளைக்குப் பிறகு,சனி,ஞாயிறு தினங்களில் அவன் நமசிவாயம் மேசனோடு வேலைக்கு போவதாக கேள்விப்பட்டேன்.அராலிப்பெடியள் கைச்செலவை சமாளிக்க..இப்படி போறது வழக்கம்.சந்திரன் அவன்ர கூட்டாளி.'அவன் கூட்டிச் சென்றிருப்பான்'என்று பட்டது. அந்த காசில் ஒரு பழைய சைக்கிளை வாங்கியிருந்தான்.எங்க வீட்டில்,ஜெயமண்ணை"சரிவர பிரேக் பிடிக்காத அதை அவன் வாங்கியிருக்க வேண்டாம்"கருத்து தெறிவித்தான்.ரீ£ச்சருக்கு எலலாரும் வளர்ந்த பிள்ளைகள்;படிப்பவர்கள்..என்றால் என்ன செய்வார்!

திலகனுடைய அப்பாவிற்கு சைக்கிள் விடத்தெறியாது.அதனால்,சிறுவயது முதலே அங்கே சைக்கிள் கிடையாது.அவனுடைய அண்ணன் நகரத்திலே இருக்கிற ஆச்சி வீட்டிலே இருந்து படிப்பவன்.அவனும் பழைய சைக்கிள்ளை வாங்கி பாவித்துக் கொண்டிருந்தான் .திலகன் சைக்கிள் விட பழகியதே..லேட்டாகத் தான் . ரீச்சர சம்பளம் வீட்டுச் செலவுகளை சமாளிக்கவே போதியதாகவிருக்கவில்லை. கிராமத்திலே இருந்த எல்லாக்கடைகளிலும்..அவருக்கு கடன் கொப்பிகள் இருந்தன.என்னோடு,திலகன் வாரசமயங்களில் பாலு,சங்கர்க் கடைக்காரர்கள்"தம்பி ஒருக்காய் அம்மாட்ட கணக்கை அடைக்க சொல்லு" என்பார்கள்.அப்ப அவனுடைய முகம் சுருங்குவதைப் பார்த்திருக்கிறேன்.எல்லா வீடுகளிலும்'வெளிப்படையாகத் தெறியாது நிலவுகிற இந்த வறுமை மோசமானது தான். அவன் சைக்கிள் விடுறதைப் பார்த்திருந்த குணத்தார் “என்ன லோகு,உன்ர கூட்டாளி சந்தி வராமல் எல்லாம் ஓடுகிறான் “ என்று பகிடியாக சொன்னார்.எங்க அண்ணை பயந்த மாதிரியே ஒரு நாள்..நடந்து விட்டது. நவாலிப் பக்கமாக வேகமாக வந்த போது,சிறுமி ஒருத்தி குறுக்காலே ஓட..ஒருபக்கமாகவிருந்த உக்கிய கறுக்கு மட்ட வேலிக்குள் அவன் சைக்கிள்ளை இறக்கி விட்டிருந்தான். சைக்கிளுக்கு காயம் இல்லை.அவனுடைய கைவிரல் ஒன்றிலே உடைந்த கறுக்குச் சிதறல்கள் ஏறி விட்டிருந்தன சிறுமிட தகப்பன் வெளிய வந்து,அவனை வீட்டுக்குள் கூட்டிச் சென்று தேத்தண்ணியும் கொடுத்து,மெல்ல மெல்ல கறுக்குகளை எடுத்து விட்டார்.மருத்துவ அறிவு அவ்வளவில்லாத அவர் மருந்தையும் வைத்து கட்டி விட்டிருந்தார். அவனால் ஏலும் என்று சொல்லவே போக விட்டார் அராலிப்பரியாரியிடம்

வந்து அவன் காயத்தைக் காட்டிய போது,"மருந்து வைத்து கட்டியதால் இழை பிடித்தால் இரசாயன தாக்கங்கள் ஏதாவது ஏற்பட்டு பாதித்து விடலாம்,இனி முடியாது'என்று கூறி பிரித்து,அற்ககோலால் கழுவி,சரியான மருந்தை வைத்து கட்டி அனுப்பினார். அவனுடைய அந்த விரல் சொத்தியாகவே போய் விட்டது. அவனுடைய நகரத்து பள்ளிக்கூடத்திலே சுந்தரம் மாஸ்டர் " ஓடினால் உடம்பு வைக்கும்" என்று சொன்னதை நம்பி,சைக்கிளை அராலியிலே விட்டு விட்டு யாழ்ப்பாணத்திலிருக்கிற ஆச்சி வீட்டுக்கு 2- 1 நாள் கல்லுண்டாய் வீதி வழியால் ஓடிப்போய்யிருக்கிறான்.அந்த முயற்சி தான் இதிலேயும் ஓட வைத்திருக்க வேண்டும் .

ரஞ்சனும் சேகரும் வேக ஓட்டத்தில் ஒருத்தரை ஒருத்தர் விலத்தப் பார்ப்பதாக பட்டது.வசந்தி திலகன் மேல் தண்ணியை அள்ளி அள்ளி எத்தி "ஓடு..ஓடு " என்று கத்தினாள். சிறுமிக்கூட்டமும் " ஓடு அண்ணை..ஓடு அண்ணை " என்று கத்தியது.அவன் அங்கே பழகிய முகம் .பக்கத்திலே யாரும் சைக்கிளிலே வராமல் தனிய வந்து கொண்டிருந்த திலகனில் , அந்த ஆர்ப்பரிப்பு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் .ரஞ்சனுக்கும்,சேகருக்கும் பக்கத்திலே 'சைக்கிளை விட்டுக் கொண்டிருந்தவர்களின் அவசரப்புத்தி 'இருவரின் ஓட்டத்தையும் கெடுத்து விட்டததாகப் பட்டது. திலகன் கலங்கிய கண்களுடன் எங்களைப் பார்த்தான் ." நீ அவனோட போவண்டா" என்றான் செல்வன் .

பிறகு..வாரவர்களுக்கும் சிறுமிகள் உற்சாகமாக தண்ணி எத்திக் கொண்டிருந்தார்கள். வசந்தியிடமிருந்து ஒரு தண்ணிப்போத்தலை வாங்கிக் கொண்டு "பிறகு வாரன் என்று அண்ணையிடம் சொல்லு " என்று விட்டு திலகனை நோக்கி சைக்கிள்ளை விட்டேன் . அவன் தலையிலே ஊத்தியவாறு "விடாமல் ஓடு!சேகரை விலத்தி விடலாம் " என்றேன்.சேகர், மூச்சாக ஓடியதால் வேகம் குறைந்து பின் தங்கிக் கொண்டிருந்தான் .
"
இப்படியே சிலோ பண்ணாமல் வா " கத்தினேன். அவனுக்கு வாய்யில் நுரை தள்ளியது .
"
கொஞ்சம் இடைவெளி எடுத்தால் நல்லது,விடாதே ஓடு " சைக்கிளையும் சீராக விட்டேன்.திலகன் ஒருவாறு சேகரை விலத்தி விட்டான் . ரஞ்சனை அணுகிக் கொண்டிருந்தோம்.எனக்கு உள்ளுக்குள் சந்தோசமாக இருந்தது.முன்னால் காரில் போய்க் கொண்டிருந்த சோதி "ரீச்சர்ர பொடி களைக்காமல் வாரான்" என்று பக்கத்திலிருந்தவனுடன் மெதுவாக கதைப்பது ஸ்பீக்கரில் கேட்டது "மாபெரும் மரதன் ஓட்டம் வந்து கொண்டிருக்கிறது; வீதியில் நிற்பவர்கள் ஒதுங்கி நின்று..ஒத்துழைக்க வேண்டுகிறோம் "என்று ஒலிப்பரப்புவதுடன், வேணுமென்றே பக்கத்திலிருந்தவனுடன் இடையிடையே கதைத்தும் வந்தான் ."காரிலே போறவர்களும் பார்த்து விட்டார்கள்.விடாதே ஓடு!" விரட்டினேன்.ரஞ்சன் விடுவதாக இல்லை.கிட்ட போவது..பின்னால் வருவது..ஆக ஓடிக் கொண்டிருந்தோம்.நானும் திலகனை சோர

விடாமல்'ஏதோதோ சொல்லிக் கொண்டே வந்தேன் .சேர்ச்சடிப்பக்கம் வர,ரஞ்சனுக்கு உதவியாய் வந்தவன் ஏனோ? கழன்று விட்டான்.அது அவனை மனச்சோர்வுக்குள் தள்ளி விட்டதாகப் பட்டது .அவனுடைய பிடி தளர்ந்து, ஓட்டம் குறைந்து விட்டிருந்தது . .திலகன் விடாதே! இப்ப,உன்னால் பிடிக்கலாம். ஓடு ஓடு " மெதுவாக சொன்னேன்.ஆச்சரியப்படும் வகையில் ரஞ்சனை விலத்தி விட்டான் .

நாமெல்லாம் ஒன்றாய் படித்தவர்கள்,' இவன் முதலாவதாக வரட்டுமே என்று விட்டுக் கொடுத்தானோ? பின் தங்கி ஓடிவந்து காண்டிருந்தான் திலகன் விரைவு ஓட்டக்காரன் இல்லை என்று எனக்குத் தெறியும்.எனவே,உள்ளுக்குள் சிறிது பயம் இருந்து கொண்டேயிருந்தது "" கொஞ்சம் கூடவாய் இடைவெளி எடுத்து விட்டாய் என்றால்,அவனால் உன்னை பிடிக்க முடியாது" விரைவு படுத்தினேன் கணிசமாய் இடைவெளி எடுத்த பிறகே,அப்பாடா! என்றிருந்தது. அவனுடைய வேகம் குறையாமல் பார்த்துக் கொண்டிருந்தேன் ." கொஞ்ச தூரம் தான்.. ஒரே மூச்சாக ஓடி முடி " அவன் எப்படி ஓடுறேன் என்று தெறியாமல் ஓடிக் கொண்டிருந்தான் .இன்னமும் 500 - 600 மீற்றர் தூரமே இருந்தது. விரைவு ஓட்டத்தில் அவனை தள்ளி விட முயற்சித்தேன் ." ரீச்சர்ர பொடி அப்படியே வாரான்ரா " சோதி வியப்புடன் கதைப்பது மெதுவாகக் கேட்டது. " உன்னுடைய ஓட்டம் பராவாயில்லை, பயப்படாமல் நீ வேகமாக ஓடலாமடா" என்றேன் ." 5 கி.மீ ஓட்டம் முடிவுக்கோட்டை அண்மித்துக்கொண்டிருக்கிறது, வீரர்களை உற்சாகமாக வரவேற்கும்படி கேட்டுக் கொள்கிறோம்" சோதியின் குரல் முழக்கத்துடன் ஒலிப்பரப்பாகியது "ஞாயமான வித்தியாசத்திலே வந்திட்டே, நீ தான் முதல்வன்" என்றேன்.எனக்கு களைப்பாகவிருந்தது.கார் மண் பாதையில் இறங்கியது . முடிவுக்கோட்டை தாண்டிய பிறகு திலகன் துவண்டு, எங்கேயோ போய் இருக்கப்போனான்.சைக்கிள் கடை ரமேஸ் ஜுஸ் கொண்டு வந்து கொடுத்தான் . திலகனின் தோளைத் தட்டி "அவசரப்பட்டு இருந்திராதே! காலிலே சரணவாதம் பிடித்து விடும்" சிறிது தூரம் நடக்க வைத்தேன் .2 -வதாக,ரஞ்சன் வந்தான்.அடுத்ததாக சேகர்..என ஓடியவர்களெல்லாம் வந்து சேர்ந்து கொண்டிருந்தார்கள்.ரமேஸ் சிரிச்ச முகத்துடன் , எல்லோருக்கும் ஜுஸ் கொடுத்துக்கொண்டிருந்தான் திலகன்,கணேஸ் -குகன் இருந்த பனங்குற்றியை நோக்கி நடந்தான்.சைக்கிளை அவனுக்குப் பக்கத்திலே நிறுத்தி விட்டு ' நீர் கழிப்பதற்காக பனைமர மறைவை நாடி,வாசிகசாலைக்கு பின் புறமாக போனேன். ரவியும்,சிவாவும் நின்று ரகசியமாக குசுகுசுப்பதைக் கண்டேன். அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை.' என்ன கதைக்கிறார்கள்? 'அறியும் ஆவல்ஏற்பட்டது. சத்தமில்லாது, கிட்டவாகவிருந்த பனை மறைவில் போய் நின்றேன்." ரஞ்சனே வருவான் என்று முழு நம்பிக்கையோடு வாசிகசாலைக் கமிட்டி இருந்தது.இவன் வந்ததில் அவர்களுக்கு திருப்தி இல்லை ." சிவா ." எப்படியடா எதிர்பார்க்க முடியும் ? " ரவி " எங்கட பெடியள் வந்தால் 2 சிறிய குத்துவிளக்குகள் குடுக்கிறதாக இருந்தவயள்.இப்ப ஒன்றாக குறைத்து விட்டினம் " சிவா" இங்கேயும் அரசியலா ? " ரவி . " எங்கட பெடியள்ளை ஊக்குவிக்க தானே இந்த போட்டியையே வைச்சவயள் ." சிவா .

“ வேற சாதிப் பெடியள் பங்கு பற்றுறதை உள்ளூர விரும்பவில்லையா” வியப்புடன் ரவி .
“ இல்லை தான்.வெளிப்படையாய் சொல்ல முடியுமா ? திலகனை விட, மற்றவர்கள் எல்லாம் எங்கட பெடியள் தானே! “ சிவா. ‘ யார் தான் சரியானவர்கள் ? ,இவர்களை..பரவாய்யில்லை என்று தான் சொல்ல வேண்டும்.எல்லாச் சாதிகளையும் சுயநலம் பிடித்து ஆட்டுவதாகவே இருக்கின்றன 'ஓட 'என வாரவர்களை மறுக்காது தளர்வாக நின்றார்களே, அது பெருந்தன்மைதான்! தெளிவானவர்களும் ,படித்தவர்களும் கணிசமாகிற போது 'நேர்மையான அணுகுமுறைகளே இவர்கள் மத்தியிலும் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும் 'என்பதை புரிந்து கொள்வார்கள். எல்லாவற்றையும் விட.. திலகன் ‘ வெள்ளோட்டத்திலேயே முதலாவதாக வந்தது பெரிய பரிசாற்றே ! சத்தமில்லாது நழுவிகிறேன் .

பதிவுகள் ஜூலை 2002 இதழ் 31

7. ஜடாயு - ஜெயரூபன் -

சூரியன் இறங்கி வெக்கையை விதைத்துக் கொண்டிருக்கும் எமது எல்லாக் கடலோர கிராமங்களையும் போல இதுவும், தட்டி விழுத்தவும், து¡க்கி அணைக்கவும், இதயம் சுமக்கும் மனிதர்கள் வாழும் சின்னக்கிராமம். கிழக்குத் தொடுவானம் கடலின் மடியிலும், மற்ற திசைகள் பூராவும் விரிந்து நின்ற பனைகள் தலையிலும் வானம் தாங்கும் அந்த ஊரில் ஐந்து கல்வீடுகளைத் தவிர மிச்சமிருந்த முப்பத்திச் சொச்சம் வீடுகளும், கிடுகும், பனையோலையும் வேய்ந்த மண்வீடுகள். கடலும், பனையும், ஓயாத உடலுழைப்புமே அக்கிராம மக்களின் வயிற்றுக்கான நம்பிக்கைகள்.

நிலவில்லாத வானத்தில், பரந்து காலித்துக் கிடந்த நட்சத்திரங்களின் தெறிப்பில் இருட்டுக் கசிய, காற்றுத் து¡க்கிவரும் கற்கோவளக்கடலின் இரைச்சலும், கூரைக்கு மேலால் அவ்வப்போது கத்திச் செல்லும் இரவுப்பறவைகளின் சத்தமும், இரவின் அமைதியைக் கீற உறங்கிக் கிடந்தது ஊர்.

சடாய்த்து வளர்ந்த மாமரத்தின் கீழிருந்த சுப்புக்கிழவனின் வீட்டில் மட்டும் இன்னமும் வெளிச்சம் தெரிந்தது. மாரிமழைக்கென சாய்வு இறக்கிய கிடுகுக் கொட்டகைக்குள் வாங்கில் போட்டு, கிழவனை வளத்தியிருந்தார்கள். அடங்கி விடுவது போன்ற கேவலுடன் நெஞ்சுக்கூடு ஏறி இறங்கும் ஒவ்வொரு தரமும், "என்ர குஞ்சியய்யா" என யாராவது ஒரு சொந்தம் அழத்துவங்க கிழவனின் மூடியிருந்த கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து காதுச்சோணைக்குள் இறங்கும். பின்னர், வாய்க்கால் நீர் போல மூச்சு சீராக ஓடத்துவங்கும்.

தலைவாசல் மண்குந்தில் எரிந்த கைவிளக்கு வெளிச்சத்தில், மூலைக்கு மூலை குந்தியிருந்த முகங்களில் இரண்டு இரவுகளின் நித்திரையின்மையும், பசியும், களைப்பாய்த் தொங்கிக் கிடப்பது தெரிந்தது. வருவதும் போவதுமாயிருந்த ஆட்களைப் பார்த்து, குலைப்பதற்கும் தெம்பில்லாமல் கூட்டுக்கால் போட்டு படுத்திருந்தது நாய். கிழவனின் முடக்கம்; கவனிப்பாரற்றுப் போன பிராணியின் ஒட்டிய வயிறு காட்டியது. துக்கவீட்டில், அழுகை, ஒப்பாரி எல்லாவற்றையும் மீறிக்கொண்டு படர்ந்திருக்கும் அந்தகாரமும், ஒரு மணமும் இருக்கும்.

அந்த மணமும் காற்றுடன் மெல்ல மெல்ல வீட்டுக்குள் நுழைந்துவிட்டது.

~~~~~~

ஒரேயொரு கைவிளக்கான அவரது மகன் கல்லு¡ரியிலிருந்து வீடு திரும்பாமல் போனதிலிருந்து சுப்புக்கிழவனின் ஜ£வன் சரியத் தொடங்கியது. மகன் போன சிலநாட்கள்
~~~~~~

கடலுக்குச் சென்ற கிழவன் நிறைவெறியில்தான் வீடு திரும்பினார். வெறியில் கிழவன் அழுத காட்சியின் மீது, வயோதிகத்தின் சாயல் படிந்து விட்டாலும், முறுக்கவிழ்ந்து போன தேகத்தில், முன்னாளைய வலிமையின் சுவடுகள் பதிந்துதான் இருந்தன. அன்னகாரம் சிறுத்து பல மாதங்களாகியும் நடமாடித்திரிந்த கிழவன்; ஒருநாள் விடிகாலை மூன்றுமணிக்கு நல்ல உறக்கத்தில் கிடந்தபோது, "ஐயா" என்ற அழைப்புக்குரல் கேட்டு எழும்பி, கடற்கரையை நோக்கி நடக்கத் தொடங்கி, நான்கு ஐந்து மைல்களுக்கப்பால் மணற்காடு கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்து அட்டணக்கால் போட்டபடி நாள்பூராக அலைக்கரையில் அமர்ந்து கடலைப்பார்த்து சிரிக்கத் தொடங்கியதிலிருந்து ஆரம்பமாயிற்று கிழவனின் உள்வாழ்வு.

பேச்சு மூளையிலிருந்து தொலைந்து போயிற்று.

திடீர் திடீரென பிறக்கும் வெடிச்சிரிப்பும், ஓயாமல் பனித்துக் கொண்டிருக்கும் கண்ணீருமே; மனசு லயம் தப்பிவிட்டதற்கான குறிப்புகளாய் இருந்தது. கெஞ்சி மன்றாடி சாப்பிட இருத்திவிட்டால் கை சோற்றைப் பிசைந்து கொண்டிருக்க, பார்வை, வேலிப்பூவரசின் மீதோ, அதற்கு மேலால் கவிந்துள்ள வானத்தின் மீதோ வெறித்துவிடும். "ஐயா...ஐயா..." எனப் பத்துத் தடவைக்கு மேல் கூப்பிட்டுத்தான் மனதை இழுத்து சோற்றில் வைக்கமுடியும். அப்படியும் இரண்டோ மூன்றோ கவளத்துடன் கண்ணீரும் சிரிப்பும் வந்து இடைநிறுத்திவிடும். காவலிருந்த நாயின் நம்பிக்கை மட்டும் பொய்க்காது.

மனிதர்களுடன்தானே பேச்சுக்கு அவசியமற்றுப் போனது. மாங்கிளைகளில் வந்தமரும் காகங்களுடன் பேசுவது வழமையாகியது. கானல் தெறித்தோடும் மத்தியானங்களில் நிழல் தேடி வந்த காகங்களின் கரைதல் அவருக்கு அர்த்தமாகியது. பதில் சொல்லிக் கொள்வார்.

"ஓம்.. ஓம்.. இண்டைக்கு தம்பி வருவான்... கட்டாயம் வருவான்... ஐயாவைத்தேடி."
"அவனைப்பாக்காமல் நான் சாகமாட்டன்..."

அந்த நம்பிக்கைக்குரல் அன்றிரவு வரை தொடர்ந்து ஒலிக்கும். பக்தர்களின் "ஓம்" என்ற சுநாதம் காற்றில் மிதந்து பயணிப்பது போல, "இண்டைக்கு தம்பி வருவான்" என்ற வார்த்தைகளை சொல்லிக்கொண்டே இருப்பார். இடையிடை அழுகை வெடித்து துடித்துக் கொண்டிருக்கும் கன்னங்களை கண்ணீர் நனைக்கும். எனினும் வார்த்தைகள் தொடரும்.

"இண்டைக்கு தம்பி வருவான் ஐயாவைத் தேடி..."

~~~~~~

மாரிக்காலம் சில நாட்கள் கடல் கோ"மிட்டு அரைப்பனை உயரத்திற்கு அலையெறியும். மீன்பிடிப்பு இருக்காது. விறகிலிருந்து வீடுவரை ஈரத்தில் ஊசிப்போய் இருக்கும் ஒறுப்புக்காலம் அது. கிழவன் கையில் கொக்கைத்தடியுடன் பனங்கூடல், பற்றைகளுக்குள் அலைந்து திரிந்து சண்டி, குறிஞ்சா, முல்லை இலைக்கறிகள் பறித்துவந்து திண்ணையில் இருந்தபடி அரிந்து கொண்டிருப்பார். மகனோ பசி பொறுக்க மாட்டாமல் அடுக்களையைச் சுற்றிச்சுற்றி வருவான். அவனைப் பார்த்து நரைத்தாடிக்குள் சிரித்துக் கொண்டு கிழவன் பாடுவார்.

"தம்பீ.!.. கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும்...."

பாட்டையும், அவரது சிரிப்புக்குள் ஒளிந்திருக்கும் நக்கலையும், பார்த்துவிட்டு பசிவேகத்துடன் வந்து தகப்பனுடன் வாதம் செய்வான் மகன்.

"ஐயா!.. அங்கை கல்லுக்கை ஒண்டும் உங்கட கடவுள் கொண்டே வைக்கிறேல்லை. அது இயற்கை."

"ம்..ம்"

கிழவன் படிக்காத தற்குறியாக இருந்தாலும் அநுபவஸ்தன். தந்திரசாலி. பதிலால் மடக்கிப் பிடிப்பான் மகனை.

"அப்பதம்பி!.. பசியும் இயற்கைதானே? பொறு!..ஆக்கப்பொறு. ஆறப்பொறு. பொறுத்தார் பூமி ஆளுவார்..!!"

"ம்கூம்... அதெல்லாம் அந்தக்காலம். இப்ப பொறுத்தார் வாய்க்கு பொரியும் கிடையாது."

மகன் பொறுத்திருக்கவில்லை. கல்லு¡ரி விடுமுறைநாட்களில் வழமையாக, சோமுச்சம்மாட்டியின் வலையில் எடுபிடியாக கடலுக்குப் போய் உழைத்து, ஐந்தோ பத்தோ தாயிடம் கொடுப்பவன். இப்போது வேறு எங்கேயோ சைக்கிளில் அலைந்து வெயில் குளித்தான். கனவுகள் வளர்த்தான். இரவும் இருட்டும்கூட அவன் கைகளில் விழுந்தது. கூட்டங்களும், கூடிப்பேசுவதுமாக வெளியில் எவ்வளவுக்கெவ்வளவு வாயையும், காதையும் விரித்து வைத்தானோ அவ்வளவுக்கும் மாறாக வீட்டுக்குள் மௌனியாகிப் போனான்.

பின்னேரத் தேத்தண்ணி, நேயர்விருப்பம் எல்லாமே அவனில்லாமல் சப்பென்று போனது. கடைகண்ணிக்குப் போக, அவனைத்தேடிவிட்டு புறுபுறுத்துக்கொண்டு அம்மா தான் போய்
~~~~~~

வந்தாள்.
குட்டுவதற்கும், சண்டை பிடிப்பதற்கும் ளில்லாமல் அவனது அக்கா தனித்துப் போனாள்.

எதிர்காலத்திற்கான ஒத்திகையை அவளுக்கு நடத்திக் காட்டியது போல, ஒருநாள் கல்லு¡ரிக்குப் போனவன் காணாமலே போனான். அவனது சைக்கிள், புத்தகம் என்பன மட்டும் மறுநாள் யார் மூலமாகவோ வீடுதிரும்பின.

அன்று காலை கல்லு¡ரிக்குப் போவதற்கு படலையைத் திறந்தவன் தயங்கித் தயங்கித் தமக்கையைத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வையின் ஈர்ப்பு, அன்பின்பிரிவு. அதை என்றென்றைக்குமாக அவளது நெஞ்சத்தில் விதைத்துவிட்டு அவன் போய்விட்டான்.

~~~~~~

தகப்பனின் கால்மாட்டுப் பக்கம் கீழே தாழ்வாரத்திண்ணையில் சாய்ந்தபடி இருந்தாள் சாந்தி. கண்ணீர் இல்லை. வத்திப்போனதோ, விரக்தி செழித்து அடங்கிப் போனதோ தெரியவில்லை அவள் அழவில்லை. தம்பியின் நினைவுகள் நெஞ்சிலிருந்து படரும்போது, கிழவனின் மூச்சு இழுக்கும் சத்தம் அவளை நிஜத்திற்கு திருப்பிக் கொண்டிருந்தது. அம்மா அரைமயக்கத்தில் சாய்ந்துவிட்டாள். நாகம்மாச்சி அம்மாவின் தலையை மடியில் வைத்து பனையோலை விசிறியால் விசுக்கிக் கொண்டிருந்தார். ஒரு கிழவியை இன்னொரு கிழவி குழந்தையாக அணைத்து வைத்திருந்தது.

தம்பியும் ஒரு குழந்தையாகத்தானே இருந்தான். ஐயாவுக்கும், அம்மாவுக்கும், எனக்கும், குழந்தையாக இருந்த அவனுக்கு எப்படி எங்களை விட்டுவிட்டுப் போக தைரியம் வந்தது?

தகப்பன்சாமி போல, வேலி அடைப்பதிலிருந்து வேட்டி கட்டுவது வரை, அவனது சொல்லுக்கு தலையாட்டிக் கொண்டிருந்த அன்புதான் ஐயாவை விழுத்திவிட்டதோ?

ஏமசாமங்களில் அவன் வந்து சைக்கிளை ஸ்ராண்ட் போடும்போது, பாயிலிருந்து தலையைத் து¡க்கி "காலைக்கழுவு தம்பி" என்று கோபமில்லாமல் சொல்லும் ஐயா இப்பொழுதுகூட அவன் வந்தால் எழும்பிவிடக்கூடும்.

சைக்கிள் சத்தம் கேட்டதும் "சாமப்பிசாசு வந்திட்டுது" என்று முணுமுணுத்துக் கொண்டு கைவிளக்கைக் கொளுத்தி, அடுப்படிக்குச் சென்று சாப்பாடு போட்டு, அவன் திறுத்தியாக சாப்பிட்டதும்; கீரைச்சட்டிக்குள் மிச்சச் சோத்தைப் போட்டுக்குழைத்து ஏனோதானோவென்று சாப்பிட்டு எழும்பும் அம்மா, அவன் வீடுவிட்டுப்போன இரண்டு மாசமாக கால்வயிறும் நிறையாமல் அதுவும் என்ரைஆய்க்கினையாலை கண்ணீரும்
~~~~~~

சோறுமாகச் சாப்பிட்டு உயிர்தாங்கிய அம்மா மயங்கி விழுந்துவிட்டாள்.

"பாடமாக்காதை பாடத்தை விளங்கிப்படி" எண்டு எனக்கு யோசனை சொல்லி, அதைக் கேக்காமல் நான் சத்தம் போட்டுப் படிக்க, என்னுடன் சண்டைக்கு வந்து, இப்ப ஆரோடை அவன் சண்டை பிடிப்பான். சண்டை என்று நினைத்ததும் சாந்திக்கு உடம்பு நடுங்கியது. "என்ர வயிரவரே தம்பியை சண்டைக்கு மட்டும் போகவிடாதை" என்று வேண்டினாள்.

அப்போது கோடைவிடுமுறை. உசரிப்பனைக்கு மேலால் விடிவெள்ளி கிளம்ப, வெள்ளாப்பு வலைக்கு கடலுக்கு நடக்கும் ஐயாவுக்குப் பின்னால் சாரத்தை அவிட்டு தலைவரை போர்த்திக்கொண்டு ஓடுவான் தம்பி. நித்திரையைக் குளப்ப மனமில்லாமல் பலநாட்கள் அவனை எழுப்பாமலே ஐயா கடலுக்குப் போய்விடுவதுண்டு.

முதல்முறையாக சோமுச்சம்மாட்டி அவனை "ணியம் வலிக்க விட்டபோது, வெற்றிவீரன் போல திரும்பி வந்து, ஐயாவை அவன் செய்த கேலியில் அன்று வீடு அதிர்ந்தது. "அம்மா..! ஐயா கடைகால் வலிக்க, நான் "ணியம் வலிச்சன். இண்டைக்கு ஐயாவைவிட எனக்கு ரெண்டு பங்கு கூட."

"குறுக்காலபோன சம்மாட்டி..! உன்னை ஏன்ரா "ணியம் வலிக்க விட்டவன்? நெஞ்சுக்கை பிடிச்சா அவனே வந்து வைத்தியம் பாப்பானாம். அறுதலிமோன்..!!."

அம்மா சம்மாட்டியைத் திட்டிக்கொட்டி விட்டு இரவுச் சாப்பாட்டுக்கு தம்பிக்கு முட்டை அவித்து வைச்சாள்.

கேலியும் சிரிப்புமாக கழிந்த காலம் இழந்து போய்விட்டதா.? இந்தக் கிடுகுக்கூரைக்குள் ஒழிந்திருந்து அந்தச் சந்தோசகாலம் திரும்பி வந்தால் இளமை பூத்து, எழும்பி நடந்துவிடும் வீடு.

படலை திறக்கும் சத்தம் கேட்டது. நாய் தலையைத் து¡க்கிப் பார்த்துவிட்டு மீண்டும் படுத்துவிட்டது. இருட்டை ஊடுருவி ஒரு மெலிந்த உருவம் வந்து கொண்டிருந்தது.

நடையை வைத்தே வருவது தங்கச்சியாச்சி என சாந்தி தெரிந்து கொண்டாள். தம்பி இருந்தால் கிழவி வீட்டுக்குள் வரமாட்டாள். இப்போ இரண்டு மாசமாக திரும்பவும் வந்து போய்கொண்டிருக்கிறாள்.ஆரம்பத்திலிருந்தே ஆச்சிக்கும் அவனுக்கும் ஒத்துவரவில்லை. "சீலையைத் தோச்சுக் கட்டு" என்று ஓயாமல் கரைச்சல் கொடுப்பான். ஆச்சி அதே பச்சைச்சீலையைத்தான் இப்பவும் உடுத்திருக்கிறாள்.

"அது விரதமடா தம்பி..! துச்சாதனன் வந்து உரிஞ்சால்த்தான் உவள் விடுவாள்" என்று ஐயா சொல்லப்போய், ஒருநாள் இரண்டுபேருக்கும் சண்டையே வந்துவிட்டது.

அன்றிலிருந்து ஆச்சி ஐயாவுடனும் கதைப்பதில்லை.ஆனால், ஐயா படுக்கையில் விழுந்த நாளிலிருந்து இந்தக்கிழவி படும் பாட்டைப் பார்க்க ஐயாவிலை எவ்வளவு பாசம் வைச்சிருக்கெண்டு தெரியுது. கூனல் முதுகுடன் வாதக்காலையும் இழுத்து இழுத்து இப்ப வந்திருக்குது. வெற்றிலை போடாத நாளே இல்லாத ஆச்சி; பொக்கை வாய் இடிஞ்சு போய் திரிவதைப் பார்க்கவே பாவமாக இருக்குது.

அதுசரிஇ அடிச்சாலும் பிடிச்சாலும் அன்பு வைச்ச சீவன் சரிஞ்சு போய்க் கிடக்க ஆருக்குத்தான் மனசு பொறுக்கும்.

வீட்டுக்கப்பைப் பிடித்துக்கொண்டு மெல்லக் குந்தினாள்ஆச்சி. வாடின வெற்றிலையாகக் கிடக்கும் சாந்தியைப் பார்த்துக்கொண்டு பெருமூச்சு விட்டாள்.

"ராத்திரியாது ஏதாவது சாப்பிட்டியேடி பிள்ளை..?"

"இடியப்பம் அவிச்சு வச்சிட்டு வந்து நு¡றுதரம் கூப்பிட்டுப் பாத்தன். இந்த இடத்தைவிட்டு எழும்பிறாள் இல்லை. நாங்கள் என்னணை ச்சி செய்யிறது..?" என்றாள் பாக்கியம்மாமி.

"எத்தின நாளைக்கெண்டு இந்தச்சீவன் இழுத்துக்கிடக்கிறது. எடீ.. தங்கச்சி..! தந்தியைக்கிந்திய அடிச்செண்டாலும் தம்பியைக் கூப்பிடுங்கோடி."

சாந்தி நிமிர்ந்துஆச்சியைப் பார்த்துவிட்டு பேசாமலே இருந்தாள். எந்தத் திக்கில எந்தக் காட்டுக்குள்ளை இருக்கிறானோ ஆருக்குத் தெரியும். தெரிஞ்சால் நானே போய் இழுத்துக்கொண்டு வந்திடுவனே. என மனதில் எண்ணினாள். அவளுக்கு, ஐயா சேடம் இழுக்கும் ஒவ்வொரு தரமும் தலைக்குள் வாளால் அரிவதுபோல வேதனை கண்டது. நாரி இத்துவிடும்போல வலித்தது. இடம் மாறி இருக்கக்கூட உடம்பில் பலம் இல்லாமல் முழங்காலில் தலையை முட்டுக்குடுத்துக் கொண்டு வெறித்தபடி இருந்தாள்.

ஆருக்கணை அவன்ரை விலாசம் தெரியும்..? விசயம் தெரிஞ்சாலும் அவன் உடன வரேலாதணை" என்று அங்கலாய்த்தாள் கிளி மச்சாள்.

கிளிமச்சாளின் பதிலைக் கேட்ட ச்சி பலநிமி"மாக எதுவும் பேசவில்லை. கடுமையான யோசனையில் இருந்தாள். அவளுக்கு, கிழவனின் உசிர் அந்தரிச்சுக்கிடப்பது, தாயையும் மகளையும் சரிச்சுப் போடும் எண்ட பயம் கிளம்பி விட்டது. குமர்ப்பிள்ளைஆனசாப்பாடு இல்லாமல் வதங்கிப் போவது நெஞ்சை அறுத்தது. பின்னர் ஏதோ முடிவுக்கு

வந்தவள்போல "கிளி உடன போய் உவன் ராசனைக் கூட்டி வா" என்று கட்டளையிட்டாள். ராசன் தம்பியின்ர கூட்டாளி. இரண்டு பேரும் இரணையள் மாதிரி. இவன் செய்யிற குளப்படிகளுக்கெல்லாம் குற்றச்சாட்டு தம்பியின் தலையில் விழுந்து விடும். படிப்பு ஏறவில்லை என்று கடலுக்குப் போகிறான். தம்பி போனபிறகு, விறகு கொத்துவதிலிருந்து கடைக்குப் போறதுவரை அவன்தான் செய்து தருகிறான். நல்ல பாசமான பிள்ளை. இவ்வளவு நேரமும் இந்த மாமரத்துக்குக் கீழ குந்தியிருந்துட்டு இப்பத்தானே போனான். வெள்ளாப்பு வலைவழைக்க போறவன்ர நித்திரையை ஏன் குளப்புகிறார்கள் என மனதில் கவலைப்பட்டாள் சாந்தி.

நித்திரைக் குளப்பத்துடன் கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்த ராசனைக் கையைப்பிடித்து இழுத்துப்போய்ஆச்சி குசுகுசுவெண்டு ஏதோ சொல்லிவிட்டு வாதக்காலை மறந்து தாவித்தாவி வெளியே போனாள். சொற்ப நேரத்தில் நாகம்மாச்சியின் வீட்டிலிருந்து ஒரு குண்டுக்கோப்பையில் பால் கொண்டு வந்தாள். பாலை ராசனின் கையில் கொடுத்துவிட்டு கிழவனுக்குக் கிட்டவந்து நனைந்திருந்த கன்னத்தை தன் சீலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு "அப்பு உன்ர மோன் வந்திருக்கிறானடா முளிச்சுப்பார்..!" எண்டு கூப்பிட்டாள்.

ஒவ்வொரு புலனாக மெல்ல மெல்ல இழந்துபோய்க் கொண்டிருக்கும் அந்தத் தேகத்தில் மூச்சைத்தவிர எந்தவித இயக்கமும் தெரியவில்லை.

அருகே வந்த ராசன் ஒரு கரண்டி பாலை எடுத்து வாயில் விட்டபடி "ஐயா.. ஐயா..! நான் தம்பி வந்திருக்கிறன்" என்று கூறினான்.

ஏங்கிக் கிடந்த செவிகளுக்கு குரல்பேதம் தெரியுமா.? ஓய்ந்துபோன ஓராயிரம் நரம்புகளிலும் "ஐயா" என்ற சத்தம் பாய்ந்தது. சிறகுகளை இழந்தும், அந்தஆத்மாவுக்குள் அடைபட்டுக்கிடந்த உயிர்ப்பறவை இதயச்சுவர்களை உடைத்துக் கொண்டு விம்மிப் புடைத்தது. வாய்க்குள் விட்ட பால் கடைவாயால் வழிய, மூச்சு சீரில்லாமல் பதகளித்தது. ஒட்டிவற்றிய உடம்பிலிருந்து நெஞ்சுக்கூடு தனியாக பிரிந்து விடுமாப்போல ஏறி இறங்கியது.

பிறகு,சீவன் அடங்கி விட்டது.

பதிவுகள், மே 2002 இதழ் 29 -

8. மனோரஞ்சிதம்! - வ.ந.கிரிதரன் -

நான் மனோரஞ்சிதத்தை மீண்டுமொரு முறை சந்திப்பேனென்று எண்ணியிருக்கவேயில்லை. அதுவும் இவ்விதம் எதிர்பாராமல். இருபது வருடங்களாவதிருக்கும் அவளைக் கடையாகச் சந்தித்து..முன்பை விட இன்னும் தளதளவென்று பூசி மெழுகி மின்னிக் கொண்டிருந்தாள். அழகென்றால் அப்படியொரு அழகு. சங்ககாலக் கவிஞர்கள் வர்ணிப்பதைப் போல் பணை, வன, தட, பருத்த, அகன்ற போன்ற வார்த்தைகளைத் தாராளமாகவே பாவிக்கலாம் அவளை வர்ணிப்பதற்கு. அவ்விதமானதொரு உருவ அமைப்பு. அப்பொழுது நான் மிகவும் கட்டுப்பெட்டி என்று சொல்வார்களே அவ்விதமானதொரு குண அமைப்பு எனக்கு. என் வாழ்வில் எப்பொழுதுமேயே நிதானமானதொரு வளர்ச்சி தான் ஏற்பட்டு வந்திருக்கின்றது. நிதானமென்றால் அப்படியொரு நிதானம். ஒவ்வொரு மட்டத்திலும் ஆற அமர நின்று நிதானித்து உணர்ந்து அறிந்து வந்திருக்கின்றேன் என் வாசிப்புப் பழக்கத்தைப் போல். ஆரம்பத்தில் அம்புலிமாமாவில் மண்டுகோட்டை மந்திரவாதியில் நிதானமாக ஆரம்பித்துப் பின் அறுபது சதத் துப்பறியும் நாவல்களில் மேதாவி, சிரஞ்சீவி, பிடிசாமி, சந்திரமோகனென்று உழன்று, மணியன், அகிலன், ஜெகசிற்பியன், கார்க்கி, டால்ஸ்டாய், தி.ஜா, சு.ரா,காவ்கா..வென்று நிதானமாகவே வளர்ந்து வந்திருக்கின்றது. வளர்ச்சியென்பது பரிணாமவளர்ச்சியாகவே அமைந்து வந்திருக்கின்றது. திடீர்ப்பாய்ச்சல் என்பதெல்லாம் என் வாழ்வில் கிடையவே கிடையாது. என் அரசியல் பற்றிய கருதுகோள்களும் இவ்விதமாகத் தான்...ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பதில் தவறென்ன என்ற தமிழரசுக் கட்சியினரின் ஆவேசத்துடன் ஆரம்பித்துப் பின் படிப்படியாக மார்க்ஸ்,லெனின்,....என வளர்ந்து வந்திருக்கின்றது. என் வாழ்வில் மனோரஞ்சிதம் எதிர்ப்பட்ட காலகட்டத்தில் நான் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் பயின்று கொண்டிருந்தேன்.

என்னுடன் 'டியூசன்' வகுப்பில் சக மாணவியாக அறிமுகமானவள் தாள் மனோரஞ்சிதம். அப்பொழுதெல்லாம் நான் நான் பண்பாடு, கலாச்சாரம் ,கற்பு, ...என்று சிந்தனையோட்டங்களில் வளைய வந்து கொண்டிருந்த காலம். மனோரஞ்சிதமோ சிட்டுக் குருவியாகச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தாள். அவளது சிந்தனையோட்டங்கள் எனக்கு மலைப்பை மட்டுமல்ல ஒருவித ஆத்திரத்தையும் ஏற்படுத்தின. பெண் என்றால் இவ்விதம் தான் இருக்க வேண்டுமென்று சில வரையறைகளை நான் வைத்துக் கொண்டிருந்தேன் 'இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பிளை. இங்கிலீசு படிச்சாலும் இன்பத் தமிழ் நாட்டிலே..' என்று வாத்தியார் பாடுவாரே அது போல. சக மாணவர்களுடன் சகஜமாகச் சிரித்துச் சிரித்துப் பழகும் அவளது போக்கு எனக்கு ஒரு வித எரிச்சலைத் தந்து கொண்டிருந்தது. இதனால் உள்ளூர அவளது அழகு என்னைப் படாத பாடு படுத்திக் கொண்டிருந்த போதும் எட்டியே இருந்து வந்தேன் என் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி. எத்தனை முறை நானும் இவளும் சண்டை பிடித்திருப்போம்.

'ஆணுக்கொரு நியாயம். பெண்ணுக்கொரு நியாயமா? தாலி பெண்ணுக்குச் சுதந்திரத்தை அடக்கி வைக்கப் பாவிக்கின்றதொரு வேலி' என்று அடிக்கடி வாதிக்கும் மனோரஞ்சிதத்தை என்னால் ஏற்கவே முடிந்ததில்லை. 'கற்பு பெண்ணடிமைத்தனத்தின் வெளிப்பாடு' என்று அவள் குற்றஞ் சாட்டுவதை என்றுமே நான் ஏற்றதில்லை. பதிலுக்கு 'பாரதியின் புதுமைப்பெண்ணென்று உனக்கு நினைப்போ?' என்று அவளைச் சீண்டுவேன். 'கற்பு என்பது இருவருக்கும் பொது. ஆண் தவறு செய்தால் பெண்ணும் தவறு செய்ய வேண்டுமா?' என்று பதிலுக்கு வாதிப்பேன். ஆனால் மனோரஞ்சிதமோ அவற்றையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவே மாட்டாள். 'நீ ஒரு சரியான Male Chauvanist' என்று வைவாள்.

மனோரஞ்சிதம் பாடும் போது மிகவும் இனிமையாகவிருக்கும். அவளது உடல் வளம் மட்டுமல்ல குரல் வளமும் அனைவரையும் வசியம் செய்து மயக்கி விடும். குறிப்பாக அவள் 'அமுதைப் பொழியும் நிலவே' , 'மாலைப் பொழுதின் மயக்கத்திலே' போன்ற அன்றைய பி.சுசீலாவின் பாடல்களைப் பாடும் பொழுது எவ்வளவு நேரமானாலும் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். அப்படியே உருகிக் குழைந்து மனமொன்றிப்பாடுவாள். அவளது அழகும் குரல் வளமும் 'கோழி கூவத்தொடங்கியிருந்த' பருவத்திலிருந்த என்னைப் படாத பாடு படுத்தின. ஆனால் நான் கோட்பாடுகளை மையமாகவைத்து வாழ்வினை நடத்துபவன். நானாக உணரும் வரையில், உணர்ந்து அறிந்து தெளிவு பெறும் வரையில் பிடித்துக் கொண்டிருக்கின்ற கோட்பாட்டினை விட்டு விட்டு ஓடுவதென்பது என்னால் முடியாத செயல்.

அவளை எவ்வளவுக்கெவ்வளவு நான் உணர்வுகளின் அடிப்படையில் விரும்பினேனோ அவ்வளவுக்கவ்வளவு என் சிந்தனையோட்டங்கள், கருதுகோள்கள் அடிப்படையில் வெறுத்தேனென்று தான் கூற வேண்டும்.

அவளுக்குக் கவிதையென்றால் உயிர். நானோ அந்தக் காலத்தில் கவிதைகளென்று என் அன்றைய மனநிலையோட்டங்களைக் கிறுக்கிக் கொண்டிருந்தேன். என் கவிதைகளின் கருப்பொருளாகப் பெண், பண்பாடு, கற்பு, காதல் போன்ற பழமைத்துவமான கருத்துகளே நிறைந்திருக்கும். யாரோ சிலர் அவளிடம் நான் இவ்விதம் கவிதைகள் எழுதுவதைக் கூறி விட அவள் என்னிடம் 'காதல்' பற்றி உடனடியாகக் கவிதையொன்றைப் பாடுமாறு சவால் விடவே நானும் வரகவியொருவனைப் போல் ஏற்கனவே என் மனதில் உருவாகியிருந்த காதல் பற்றிய கவிதையொன்றை அள்ளி விட்டேன். 'ஓர்நாள் அவள் முகம் காணாவிடில் மனமொடிந்து ஓரத்தே முடங்குவதும், உன் கூர்விழிகள் முன்னால் மன்னவன் கூர் வேலென்ன வேலென்ன என மயங்குவதும், கார் குழல் நங்கையர் மேல் கண்ட காதலினாலன்றி வேறெதனால்?' என்று அந்தக் கவிதை அமைந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டிலிருந்து கொண்டு 'மன்னவன் கூர்வேல்' பற்றிப் பாடியிருந்தேன். அந்த அப்பாவிப் பெண்ணோ அதனைக் கேட்டு உருகியே

விட்டாள். சிறிது காலம் அதன் விளைவாக என் பின்னால் சுற்றிக் கொண்டேயிருந்தாள். அவள் உண்மையில் அவ்விதம் சுற்றிக் கொண்டிருந்தாளா அல்லது நான் தான் அவ்விதம் கற்பனை செய்து கோண்டிருந்தேனோ என்பதில் இன்று வரையில் எம்னக்கொரு சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அவள் செயல்கள், பேச்சு முதலியவற்றை வைத்து நான் அவ்விதம் எண்ணிக் கொள்வதற்கு எனக்கு நியாயமான காரணங்கள் இருக்கத்தான் செய்தன. ஆனால் அடிக்கடி அவள் ஆண் நண்பர்களை மாற்றிக் கொண்டிருந்தாள். அவளுடன் ஒருமுறையாவது பழகினால் அதுவே ஜென்ம சாபல்யம் என்பது போல் நாண்பர்களும் அவள் பின்னால் அடிக்கடி சுற்றிக் கொண்டேயிருந்தார்கள். அவளால் கைவிடப்பட்டவர்களும் சரி, மற்றவர்களும் சரி ஒருமுறையாவது அவள் பொருட்டுச் சண்டைகள் போட்டதென்பது கிடையாது என்பதுதான் அதிசயமான விடயம்.

இத்தனை வருடங்கள் கழித்து, புலம் பெயர்ந்த சூழலில், டொராண்டோ மாநகரில் ஆலயமொன்றில் அவளைத் தற்செயலாகச் சந்தித்த பொழுது எனக்கு ஆச்சர்யத்துடன் பழைய சம்பவங்களும் ஞாபகத்தில் வந்தன. இந்த இடைப்பட்ட காலத்தில் நான் மிகவும் அதிகமாகவே பரினாமம் அடைந்திருந்தேன். பெண்ணியம் பற்றிய தீவிரமான கருதுகோள்கள் என்னை ஆட்கொண்டிருந்தன. 'கற்பு' என்பது பெண்ணடிமைத்தனமென்பதில் எந்தவிதச் சந்தேகமுமற்றதொரு நிலைக்கு மாறியிருந்தேன். இத்தனைக்கும் என் மனைவி மிகவும் எதிர்மாறான கருத்துகளைக் கொண்டிருந்தாள். ஆலயம் அது இதென்று அலைந்து கொண்டிருப்பவள். ஆனால் அதற்காக அவள் மேல் என் கருத்துகளைத் திணிப்பவனல்ல. அவள் சுயத்தினை, கருத்துகளை மதிப்பவன். அதனால் தான் ஆலயமே செல்லாத நான் அவளை ஆலயத்தில் இறக்கி விட்டு, வெளியில் வாகனத் தரிப்பிடத்தில் அவளுக்காகக் காத்திருந்தேன். அவ்விதம் காத்திருந்த சந்தர்ப்பமொன்றில் தான் நான் மனோரஞ்சிதத்தை மறுபடியும் என் வாழ்வில் சந்தித்திருந்தேன். ஜீன்சும், டீசேர்ட்டுமாக மிகவும் நாகரிகமாகத் திரிந்து கொண்டிருந்த மனோரஞ்சிதம் காஞ்சிபுரப்பட்டில் ஜொலித்துக் கொண்டிருந்தாள். பல 'பவுண்'களில் மின்னிய தாலியைத் தெரியும்படியாகத் தொங்க விட்டிருந்தாள்.. மூக்குத்தி மூக்கில். கையில் அர்ச்சனைத் தட்டு. பின்னால் சிறிது தள்ளி அவளது கணவர் குழந்தையுடன் வந்து கொண்டிருந்தார். எதிர்பாராமல் கண்டதும் சிறிது திகைப்புடன் ஆச்சரியமும் கலக்கவே வார்த்தைகள் தாமதமாகவே வெளிவந்தன.

'மனோரஞ்சிதமா..நம்பவே முடியவில்லை.' என்றேன். ஒரு கணம் அவளது முகத்திலும் பழைய நினைவுகள் படர்ந்து என்னை இனங்கண்டுகொண்ட உணர்வுகளோடின. 'யார். கருணாகரனா!' என்று சிறிது வியந்தாள். 'நல்லாப் பழுதாகிப் போனீர்கள். என்ன குடும்பப் பாரமா?' என்று இலேசாகச் சிரித்தாள். இன்னும் அதே மாதிரித்தான் பேசுகின்றாள். இந்தக் குறும்புத்தனமான பேச்சு அவளது முக்கியமான சுபாவம். 'நீர் முன்பை விட இன்னும் அழகாகவிருக்கின்றீர்' என்று பதிலுக்குச் சிரித்தேன். 'தாங்ஸ்' என்று சிறிது நாணினாள். 'நம்பவே முடியவில்லை. மனோரஞ்சிதம் கோயிலிலா 'என்றேன்.

பதிலுக்கு மனோரஞ்சிதம் சிரித்தாள். 'குழந்தைகளுக்கு எங்களது பண்பாட்டையெல்லாம் பழக்க வேண்டாமா' என்றாள். அத்துடன் பின்னால் வந்து கொண்டிருந்த தனது கணவரிடம் 'இவர் கருணாகரன். என் பாடசாலை நண்பர்' என்று அறிமுகப்படுத்தினாள். ஒரு காலத்தில் 'தாலி பெண்ணின் சுதந்திரத்தை மறுக்கும் வேலி"யென்று முழங்கியவளைத் தாலியும் காஞ்சிபுரப்பட்டுமாக மேற்கு நாடொன்றில் இந்துக் கோயிலொன்றில் சந்திப்பேனென்று நான் நினைத்திருக்கவேயில்லை. காலத்தின் கோலத்தை எண்ண வியப்பாகவும் சிரிப்பாகவுமிருந்தது. 'பண்பாடு. பண்பாடு' என்று முழங்கிய நானும் அதற்கு எதிராக முழங்கிய அவளும் முற்றிலும் மாறானதொரு எதிர் எதிரானதொரு சூழலில் மீண்டும் சந்தித்திருக்கின்றோம். ஒவ்வொரு முறை மனோரஞ்சிதம் என் வாழ்வில் எதிர்ப்படும் சமயங்களிலெல்லாம் ஒருவருக்கொருவர் முரண்பட்டு நிற்க வேண்டுமென்பதிலிருந்த முரண்நகையினை எண்ணிச் சிரிப்பு வந்தது.
ஆலயத்திலிருந்து குழந்தையுடன் வந்து கொண்டிருந்த என் மனைவி கேட்டாள். 'யாரவள்? உங்களுடைய பழைய காதலியா?' இன்னும் சிறிது காலத்துக்கு என்னுடன் மோதுவதற்கு என் மனைவிக்கு புதியதொரு கருப்பொருள் கிடைத்து விட்டது.

மானசரோவர்.காம், பதிவுகள் மே, 2003 இதழ் 41

9. கூடு கலைதல் - பொ.கருணாகரமூர்த்தி-

அலுவலகம்விட்டு அறைக்குத் திரும்பும் வழியில் எனது பொழுதுபோக்கு வேலைகளுக்கு வேண்டிய சில எலெக்ரோனிக் உதிரிப்பாகங்கள் வாங்க வேண்டியிருந்தது. வெள்ளவத்தை டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை பஸ்தரிப்பில் இறங்கி வாடிக்கையான அந்தக் கடையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். எதிர்த்திசையில் வந்து, என்னை உரசுவதுபோல் கடந்து சென்றிருந்தவரைக் கண்டதும் ஆச்சர்யம் என் முகத்தில் ஓங்கி அறைந்தது. திரும்ப§ப் பார்த்தேன். பெண்கள் வைப்பதைப்போல சின்னச் சின்னதாக, ஆனால் அவசர அடிகள் வைத்துச் சென்றுகொண்டிருந்தார். அந்தக் கோலத்தில் அவரைப் பார்த்த அவ்வதிசயக் கணத்தில் 'இது அவர்தானோ அல்லது அவர் சாயலில் வேறு யாரேனுமாக இருக்குமோ' என்று சற்றுச் சந்தேகமாகவும் இருந்தது.

என் மலைப்பு நீங்குவதற்குள் அவர் இருபது மீட்டர் கடந்துவிட்டிருந்தார். பிடரியில் காலிய முழுநிலவு நீங்கலான மீதிப்பரப்பு முழுவதும் வெள்ளம் அள்ளிய வயலில் தப்பிப்பிழைத்த பயிரைப்போல நரைத்த முடி இங்கொன்றும் அங்கொன்றுமாக வெகு ஜதாக முளைத்திருந்தது. போட்டிருந்த வெள்ளை §'ர்ட்டிலும் காற்சட்டையிலும் திட்டுதிட்டாகப் பல நாள் அழுக்கு. சித்த சுவாதீனம் தப்பிய ஒரு மனிதக்கோலம்.

'அவர் எமது ஆர்ட் மாஸ்டராக இருக்கமாட்டார்' என்று ஒரு கணம் தோன்றினாலும் அதை உறுதி பண்ணாதவரை சமாதானமற்ற மனது முரண்டுபிடித்தது.

“சேர்... சேர்... சேர்...” என்றுகொண்டு ஓடிப்போய் அவரை முன்மறித்தேன்.

என்னை வழிப்பறிக்காரனைப்போல மிரட்சியுடன் நோக்கியவர் கையில் வைத்திருந்த தோல் பையைக் கக்கத்துள் இடுக்கிக்கொண்டு ஏதோ மிக அவசர அலுவலாகச் செல்பவர்போல் என்னைத் தவிர்த்துவிட்டு இன்னும் வேகமாக மேலே செல்ல முயன்றார்.

கவிஞர் அப்துல் ரகுமான், ¦ஜயகாந்தன், சுந்தர ராமசாமி கியோர் அணியும் தினிசில் பெரிய கறுப்புச் சட்டத்துடனான கண்ணாடி அணிந்திருந் தார்.

அதனு¡டாகத் தெரிந்த அதே பரிச்சயமான தீட்'ண்யம் மிக்க விழிக்கோளங்களில் முந்திய மலர்வும் சினேகமும் தொலைந்திருந்தன. எனினும் அவை சந்தேகமின்றி ஷநான் பழைய அதே சிவானந்தன் ஆர்ட் மாஸ்டர்தான்' என்றன. முகத்தில் ஒரு வாரத்தாடி. அதுவும் நரைத்துவிட் டிருந்தது.

“சேர்... சேர்... சேர்... நீங்கள் எங்கட ஸ்ரீசோமாஸ் கந்தாக் கல்லு¡ரி ஆர்ட் மாஸ்டரல்லே.”

நிமிர்ந்து என்னை அந்நியமாகப் பார்த்தார்.

“சேர்... நீங்கள் எங்கட ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லு¡ரி ஆர்ட் மாஸ்டரல்லே.”

நடையின் வேகத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, ஈடுபாடு எதுவுமற்று மீண்டும் அதேபோல் என்னைப் பார்த்தார்.

“சேர்... சேர்... சேர்... நீங்கள் எங்கட ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லு¡ரி ஆர்ட் மாஸ்டரல்லே.”

“ஓம்... அதுக்கிப்ப என்ன?”

எங்கள் பழைய சிவானந்தன் மாஸ்டருக்கு இப்படிப் பேசவராது... எங்கோ கொஞ்சம் கோளாறிருக்கு.

“நான் திவாகரன்.”

மீண்டும் என்னை ஆச்சர்யப்பட்டு ச்சர்யப்பட்டுப் பார்த்தார்.

“நான் உங்கள் மாணவன் திவாகரன் சேர்.”

நடையின் வேகம் இன்னும் கொஞ்சம் குறைந்தது.

“உங்கள் புத்து¡ர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லு¡ரியின் பழைய மாணவன் திவாகரன் சேர், என்னை ஞாபகமில்லையோ சேர்...

"டேய்... முசக்குட்டி, முசக்குட்டி என்பீங்களே... அது நான்தான் சேர், இப்ப இப்பிடி யானைக்குட்டியாய் வளர்ந்திருக்கிறன்.”

ஸ்நானப்பிராப்தியிலிருந்து என்னை ஞாபகம் செய்ய முயன்றவர்போலும் நெற்றியைச் சுருக்கிக் கொண்டும், அதேவிதமாகப் பார்த்துக்கொண்டும் மெல்ல மெல்ல நடந்தார்.

நானும் அவரோடுகூட நடந்துகொண்டே

“இவ்வளவு காலங்கழித்துத் திடீரென்று உங்களைக் கொழும்பில சந்திக்கிறது எனக்குச் சந்தோ'மாயிருக்கு சேர்” என்றேன்.

இப்போது நடப்பதை நிறுத்திவிட்டிருந்தார்.

“ஒன்றும் ஞாபகத்திலில்லை மகன்.”

என் கோணங்கித்தனமான உடலவதாரம் வேறு நேரம்பார்த்து காலை வாருகிறது. எமக்கு எவ்வளவு காலப் பழக்கம்? எனக்கு ஆச்சர்யத்தைவிட என் அப்பாவே ஷஎன்னைத் தெரியவில்லை’ என்றதுபோல் என்மேல் கழிவிரக்கமே வந்தது.

எவருக்கும் ஒரு முப்பத்தைந்து, நாற்பது வயதுக்குமேல் உடலமைப்பு முகவாகுகளில் பெரிய மாற்றங்களேதும் ஏற்படாதாகையால் பொதுவாக மாணவர்கள் ஆசிரியர்களை மறந்துவிட சந்தர்ப்பம் அரிது. கல்லு¡ரிக் காலத்தில் அலர் அகவைகளில் இருக்கக்கூடிய மாணவர்கள் அதைக் கடந்து மனித களாக மாறும்போது தோற்றத்திலும் பெரிதும் மாற்றம் நிகழ்ந்துதான் விடுகிறது.

பதின்மூன்றாம் வாய்ப்பாடு மனனமாகவில்லை யென்று என்னை ண்டுக்கணக்காக விரட்டியடித் துக்கொண்டிருந்த ஆறுமுகம் வாத்தியாரே ஒருமுறை சந்தித்தபோது என்னைத் தெரியவில்லை யென்று சொல்லியிருக்கிறா .
(எனக்கு இப்போதாவது பதின்மூன்றாம் வாய்பாடு தெரியுமாவென்று நீங்கள் கேட்பதுவும் கேட்கிறது. அதைவிட்டிடுங்கள், சின்ன விசயம்.)

“இங்கே எப்படி... எப்போ வந்தீர்கள்?”

“நான் என்னுடைய பென்சன் விசயமாய் வந்தனான். அதை முடிச்சுத்தராமல் முகத்துவாரத்துப் பார்ட்டி கொண்டுபோய் என்னை ஆஸ்பத்தரியில விட்டிட்டுது. அங்கை மனுசனிருக்கமுடியாது.......... வந்திட்டன்.”

பயந்த ஒரு சிறுவனைப்போலத் திக்கித்திக்கிப் பேசினார்.

“முகத்துவாரத்தில யார் இருக்கிறது...?”

“......”

மௌனமாகவிருந்தார்.

மிகவும் களைத்துப்போய் வருவதாகத் தெரிந்தது. அணுக்கத்தில் வியர்வையும் அழுக்குமாகச் சேர்ந்து முறித்த பிள்ளைக்கற்றாழைமாதிரிக் கமழ்ந்தார். நாசிரோமங்கள் தம்பாட்டுக்கு வளர்ந்து சாமரம் வீசிக்கொண்டு நின்றன. கார் றிப்பெயர் பார்த்தவர்போலவும் நகங்களில் அழுக்கேறியி ருந்தது. கன்னத்தில் அகலமான ஒரு பிளாஸ்டர் ஒட்டியிருந்தது. அதுவும் அழுக்கில் கறுப்பேறியிருந்தது.

“சரஸ்வதியில போய் ஒரு டீ சாப்பிடுவோமா சேர்?”

சற்றே தயங்கிவிட்டு

“எ குட் ஐடியா” என்றார்.

அவரைக் கூட்டிக்கொண்டு காலி வீதியைக் குறுக்கறுத்து சரஸ்வதியை நோக்கி நடக்கையில் அவதானித்தேன் மாஸ்டர் தன் வலது காலை கொஞ்சம் நொண்டியபடியே நடந்தார்.

“சேருக்கு காலிலே என்ன நோவோ?”

“லேசா ஒஸ்டியோ ஆர்த்திறிடிஸ்... முழங்கால் மூட்டுடெலும்பு தேய்ஞ்சுபோச்சு, வயசாச்சில்ல?”

இந்தக்கோலத்தாடு நம்மைக் ஹொட்டலுள் விடுவார்களோவென்று சந்தேகமாயிருந்தது. இவ்வார ராசி பலன்வேறு 'அவமானப்பட நேரும் ஜ¡க்கிரதை' என்று எச்சரித்திருந்தது.

கல்லாவிலிருந்த உசிலைமணி தினமும் எகிறுகின்ற விலைவாசிகள் பற்றி யாருடனோ நொந்து கொண்டிருக்க நாம் அவர் கவனியாதவொரு நுண்கணத்தில் உள் நுழைந்தோம்.

அங்கு நின்றிருந்த பரிச்சயமான பரிசாரகரிடம் “தம்பி எங்களுக்கு டீயும் வடையும் கொண்டாரும்'' என்றேன்.
“டீ எதுக்கு” என்றவர் மென்றுவிழுங்கிவிட்டு “சாப்பிடலாமே” என்றார்.

“ஓம்... வெறி குட் ஐடியா. தாராளமாகச் சாப்பிடலாமே!

சரி, நான் மதியம் சாப்பிட்டாச்சு சேர், அதனால ... நான் டீ, வடை சாப்பிடுறன3 நீங்கள் சாப்பாடு சாப்பிடுங்கோ சந்தோ'ம்.”

எமது விருப்பத்தைச் சொன்னோம்.

உள்ளே சாப்பாடு இருக்கிறதா என்று பார்த்து வருவதாகச் சொன்ன பரிசாரக திரும்பிவந்து “இறைச்சி முடிஞ்சுபோச்சு, மீன்கறியும், மரக்கறிகளுந்தானிருக்கு, பரவாயில்லையா?” என்றார்.

மாஸ்டர் “ஐ¡... தட்ஸ் மோர் தான் இன·ப்...” என்றார்.

பல ஆண்டுகளின் பின் அவரின் இங்கிலி¨க் கேட்க ஆசையாகவிருந்தது.

“சிவப்பு நாட்டுமுட்டையிலை இரண்டு ஒம்லெட்டும் கொண்டுவாரும்.”

எக்ஸ்டிரா ஓடர் பண்ணினேன்.

மீன் குழம்பைச் சோற்றில் பிசைந்து சாப்பிட்ட அவரது வலைப் பார்க்கச் சாப்பிட்டுக் குறைந்தது இரண்டு, மூன்று நாட்களாவது இருக்கும் போலிருந்தது.

தாய்க்கோ தந்தைக்கோ பசியென்றால் தாங்குமா...? இது குரு. மனது நெக்குருகியது.

சாப்பிட்டு முடித்ததும் கிளாசில் தண்ணீரைப் பருகிவிட்டுக் கேட்டார்:

“எங்கே வேலை பார்க்கிறீர்?”

“செலான் பாங்கில எக்கவுண்ட் செக்‘ன்.”

“புத்து¡ரில யாருடைய மகன்?”

“கந்ததாசனென்று...”

“எந்த கந்ததாசன், றைஸ் மில் வைத்திருந்தாரே அவரா?”

“அவர் கந்தசாமி.”

“கோப்பிறேட்டிவில வேலை பார்த்தாரே அவரா?”

“அவரும் கந்தசாமிதான்.”

“சதுர்க்கோஷ்டிகள் வைத்திருந்தாரே ஒருத்தர்?”

“அவருமில்லை சேர். இவர் யாழ்ப்பாணத்தில கடைச்சல் பட்டறை வைத்திருந்தவ . சேறின்ர மோட்டார் சைக்கிளேமாதிரி ஆனால், இன்னும் பழைய ஒரு பிஎஸ்ஏ மோட்டார் சைக்கிளில போய் வந்து கொண்டிருப்பார்.” (அவர் அதில் ஏறி ஓடிய தூரத்தைவிட தள்ளிக்கொண்டு ஓடிய து¡ரம் அதிகம்.)

தெரிந்திருக்காது. அவர் ஒன்றுஞ்சொல்ல வில்லை.

“என்னுடைய சைக்கிள் உமக்கு இன்னும் ஞாபகமிருக்கா?”

“அந்த சைக்கிளுக்கு மட்டும் அதன் ஸ்பீடோ மீட்டர் பெற்றோல் டாங்கின் மேலிருப்பது எனக்கு அந்த வயதில அதிசயமாகவிருக்கும். அதனால அதைச் சுத்திச்சுத்திப் பாப்பேன்.”

ஒரு காலம் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரி குமாரசுவாமி அதிபரின் தலைமையில் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தது. அவ்வேளையில் நகர்ப்புற கல்லு¡ரிகளுக்கு இணையான தொகையில் அங்கிருந்தும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இடம்பிடிக்கத் தொடங்கவும் நகரங்களிலிருந்தும் மாணவர்கள் அங்கு வந்து படிக்க ஆரம்பித்தனர். இவ்வதிபர் கல்லு¡ரியே தன் ஆச்சிரமமாக ஒரு தபோமுனிவனைப் போலத் தங்கி வாழ்ந்து தன் வருமானம் முழுவதையும் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், ஏழை மாணவர்களின் கல்விக்காகவும் செலவு செய்த மாமனு‘ன். தனது சமூகத்துக்கே தன் வாழ்நாளை அர்ப்பணித்த அவரது வாழ்வே தனியான வேறொரு தியாகக் கதை.

அவர் காலத்தில்தான் சிவானந்தன் மாஸ்டர் ஓவியக்கலை ஆசிரியராக அங்கு பணியாற்றினார். சுதுமலையிலிருந்து ஒரு மொறிஸ் மைனர் காரில் வந்துபோவார். எங்கள் வகுப்புக்கு மட்டும் ஓவியத்துடன் சிறப்பாக ஆங்கிலமும் எடுத்தார். ஆங்கிலப் பாடமென்றால் வகுப்புக்குள் நுழையும்போதே படிப்பித்துக்கொண்டுதான் வருவார். வில்லியம் வேர்ட்ஸ்வேர்த்தின் கவிதைகள் அவருக்கு பாதிக்குமேல் அத்துபடி.

சில நாட்களில் மட்டும் அபூர்வமாக அந்தப் பழைய பச்சை நிற மோட்டார் சைக்கிளில் வருவார். இருக்கைகள் தனித்தனியாக பொருத்தியிருக்கும், அதற்கு என்ன பெயரென்றுந் தெரியாது. னால் அது சிங்கப்பூர் மொடலென்று அப்போது விஷயம் தெரிந்தவர்கள்’ சொல்வார்கள்.

எப்போதும் ஷைவட் அன்ட் வைட்’தான் அணிந்திருப்பா . மிஞ்சிப்போனால் டிரௌசரை மாத்திரம் லைட்டான சந்தனக்கலரில் அணிவார். அது தவிர்ந்து வேறெந்த நிற உடையிலுமே அவரை நாம் பார்த்ததில்லை. பொக்கெட் வைத்திராத லண்டன் மைக்கேல் சேர்ட்டுக்கள் அவர் அணிந்து நாம் பார்த்ததுதான். அவர் அணியும் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் சப்பாத்தில் யாரும் முகமே பார்க்கலாம்.

ஓவியப்பாடத்திற்குப் பயன்படும் கலர் பொடிகள் ஏதாவது உடையில் கொட்டிவிட்டாலுமென்ற முன்னெச்சரிக்கையில் ஆர்ட் றூமில் தனது பீரோவில் மேலதிகமாக இரண்டு செட் உடுப்புக்கள் வைத்திருப்ப . உடையில் அவ்வளவு சுத்தமும் ரசனையும். மீசை கிடையாது. தினமும் மழுங்க சேவ் பண்ணியிருக்கும் புஷ்டியும் ரோக்கியமுமான கன்னங்கள். உச்சியோ , கன்னமோ என்று தீர்மானிக்க முடியாத இடத்தில் வகிடெடுத்து அலையலையாக கறுத்திருக்கும் முடியை நாதஸ்வரக்காரர் போலப்

பின்னோக்கி வாரியிருப்பார். சிகரெட் எதுவும் பிடிக்கமாட்டார். ஆதலால் உதடுகள் சிவந்தேயிருக்கும். கைவிரல்கள் பியானோ கலைஞர்களது விரல்களைப்போல மெலிந்து நீண்டிருக்கும். நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருப்பார். மாணவர்களிடமும் விரல்களைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்பார்.

அதிர்ந்து பேசத்தெரியாது. கருணை கசியும் கண்களால் யாரைப்பார்த்தாலும் பெண்மையுடன் கூடிய ஒரு மென்னகையை அவிழவைப்பார். சின்னப் பற்கள் கொஞ்சமாகத் தெரிய அழகாயிருக்கும். மிகவும் நட்பான தோரணை. அதனால் அவர் அணுக்கத்தில் எப்போதும் மாணவர்கள் சூழவேயிருப்பர்.

ஓவிய வரைதல் பலகையில் அழுத்துகியால் பொருத்தப்பட்டிருக்கும் வெற்றுத்தாளில் பல்வேறு வர்ணங்களைத் து¡ரிகையில் தொட்டு எமது இ-டம்போல் விசிறச்சொல்வார். நாங்கள் போட்டி போட்டுக்கொண்டு விசிறி முடியவும் மாஸ்டர் வேறொரு து¡ரிகைகொண்டு தன் வேலையை ஆரம்பிப்பார்.

சிந்திய நிறங்களினு¡டே வானமும் கடலும் அலையும் கட்டுமரமும் பறைவைகளும் சூரியனும் ஜனித்துவரும். சிலவேளைகளில் பசிய நெடுவயலும் பயிரும் உழவரும் காளைகளும் உயிர்கொண்டு வரும் அழகை அங்கார்ந்து பார்த்திருப்போம்.

ஒருமுறை யாரோ கறுப்பு வர்ணத்தைத் தற்செயலாக தாளில் விசிறிவிட்டார்கள். அது வெள்ளை உடையில் 'கரும்பேன்' பிடித்தமாதிரி சிறு சிறு புள்ளிகளாகத் தாளெங்கும் பரவிக்காட்சியளித்தது. ஒரு தாள் வீண் என்றே நினைத்திருந் தோம். மறுநாள் அதைப் பார்த்தபோது அத்தனை புள்ளிகளும் மானிடத்தலைகளாய் மாறி ஜனத்திரள் செறிந்த ஒரு மாபெரும் மாநாடாகியிருந்ததைக் கண்டு வியந்தோம்.

பொங்கல், புதுவருசம், தீபாவளி வந்தால் மாணவர்கள் போஸ்ட்காட்கள் வாங்கி வைத்துக்கொண்டு ஆர்ட் றூம் வாசலில் கியூவில் நிற்பார்கள். அனைவருக்கும் நிமி'த்தில் விதவிதமான ஓவியங்கள் வரைந்து தருவார். சிலவேளைகளில் அட்டையில் வைத்த போனாமுனை எடுக்கப்படாமலே முடிவுறாத அலைகளாகச் சுழித்துச் சுழித்து வந்து ஈற்றில் ஒரு நவீன ஓவியமாக முடிவுற்றிருக்கும்.

நண்பர்களுக்கு அனுப்புவதற்காக அவரைக் கொண்டு நான் வரைவித்த அஞ்சலட்டைகளில் பலவற்றை அனுப்ப மனது வராமல் நானே வைத்துக்கொண்டது ஞாபகம். து¡ரிகையில் வர்ணங்களைத் தொடும்போதும் வரையும்போதும் விரல்களில் நடன பாவங்களும், பல முத்திரைகளும் வெளிப்படும்.

முட்டையே ஒழுங்காக வரையத்தெரியாத நம்மைச் சேர்த்துவைத்துக்கொண்டு

லியனார்டோ டாவின்ஸி, மைக்கேல் அஞ்ஜலோ, அல்பிறெட்ச் டியூறர், போல் கௌகுயின், வான் கோவ் , பிக்காஸோ, ரவிவர்மா, கிளாசிக்கல் ர்ட்ஸ், மொடேர்ண் ர்ட்ஸ், சர்றியலிஸ்டிக் ஆர்ட் என்று நிறைப்பேசியிருக்கிறார்.

சிவானந்தன் மாஸ்டர் பத்துப் பதினைந்து மைல் து¡ரம் இருக்கக்கூடிய சுதுமலையில் இருந்து கல்லு¡ரிக்கு வந்துபோய்க்கொண்டிருந்ததால் படிக்கும் காலத்தில் அவரைப் பற்றியோ, அவர் குடும்பம் பற்றியதான பெர்சனல் வி'யங்களோ யாருக்கும் அதிகம் தெரியாது. சிலர் அவர் குடும்பம் சிங்கப்பூரில் வாழ்ந்துவிட்டுத் திரும்பிவந்ததாகச் சொல்லுவார்கள். அவரும் தன் குடும்பமன்ன பிற வி'யங்கள்பற்றி அன்னாளில் வேறு யாரிடமும் கலந்து கொண்டதாகவும் தெரியவில்லை.

ஒரு தோல் பையுள் டைம்ஸ், நியூஸ்வீக், றீடேர்ஸ் டைஜஸ்ட், நஷனல் ஜ¢யோகிறபி மற்றும் ஓவியங்கள் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு சஞ்சிகைகள் நிறைய வைத்திருந்து படிப்பார். அவர் பேசும் ங்கிலத்தின் உச்சரிப்பு அசல் ஆங்கிலேயப் பாணியிலேயே இருக்கும்.

சிவானந்தன் மாஸ்டரின் சிரிய சேவையில் பல அர்ப்பணிப்புகள் இருந்ததாகச் சொல்வார்கள். அவர் தன் சேவைக்காலத்தில் ஒரு நாளாவது ஒரு நிமி'மாவது கல்லு¡ரிக்கு லேட்டாக வந்ததில்லை. எல்லா ஆசிரியர்களையும்போலவே வருடத்தில் சம்பளத்துடனான 32 நாட்கள் விடுப்பு இவருக்கும் உள்ளதுதான். தன் சேவைக்காலத்தில் ஒரு நாளாவது பணிநாட்களில் விடுப்பு எடுத்துக்கொண்டது கிடையாது. தனது சகோதரியின் புருசன் மறைந்த அன்றும் கல்லு¡ரிக்கு வந்திருந்தது அவர் கடமை உணர்வின் அதி உச்சப்படி.

அதை ஏதோவிதமாக அறிந்துவிட்ட அதிபரே நேரே அவரிடம் வந்து “சரியான கிறுக்குப்பிடிச்ச மனி'னாய் இருக்கிறீரே ஓய்... மனுசன் கொள்கைகள், சித்தாந்தங்களுக்காக வாழ்றதா... இல்லை வாழ்க்கைக்காகச் சித்தாந்தமா... அரசாங்கம் சம்பளத்தோட தாற லீவையே எடுக்காமவிடுறது சுத்த பைத்தியக்காரத்தனமில்லை... போம்... போய் கவேண்டிய காரியத்தைப் பாரும்” என்று அவரைக் கார்வரைக்கும் தள்ளிக்கொண்டுபோய் ஏற்றிவிட்டார்.

குமாரசுவாமி அதிபரையே நேரில் பார்ப்பதுபோலிருக்கும் சிவானந்தன் மாஸ்டர் வரைந்த ஓர் உருவப்படம், கல்லு¡ரியில் அதிபரின் காரியாலயத்தின் கிழக்குச் சுவரில் நான் கல்லு¡ரியை விடுத்தபோதுமிருந்தது.

“கொலிச்சில வேறு யாரிட்டையெல்லாம் படிச்சீர்?”

“சிவவீரசிங்கம் மாஸ்டர்தான் லாஸ்ட் இயரில கிளாஸ் டீச்சர்.”

“ஓ... அவனா?” என்றுவிட்டுப் புன்னகைத்தார்.

இவரால் சிவவீரசிங்கம் மாஸ்டரை மறக்கவே முடியாதென்பது எனக்குத் தெரியும். இவர் காலத்தில்தான் இன்னுமொரு அறிவுஜ£வியும் முழுக்கிறேக்குமான சிவவீரசிங்கம் மாஸ்டரும் அங்கு படிப்பித்தார். இந்த இருவருக்கும் ஒரு நாளும் சரிப்பட்டு வராது.

இவரை அவரும், அவரை இவரும் 'வைத்தியம் பார்க்கப்படவேண்டிய கேஸ்கள்’ என்று கூறிக்கொள்ள நிறையக் காரணங்களும் இல்லாம லில்லை .

முழு நாத்திகரான சிவவீரசிங்கம் கல்லு¡ரி இல்ல விளையாட்டுப் போட்டிக்கு பட்டுவேஷ்டி, உத்தரீயம், விபூதிப்பட்டை , சந்தனப்பொட்டு சகிதம் வந்தார். மறுநாள் கல்லு¡ரியன்று சாம்பல்நிற கோட் சூட்டுக்கு, கருஞ்சிவப்பு டை கட்டி வெள்ளைக்காரத் துரை ஷகெட் அப்’பில் வந்தார்.

ஒருமுறை அவ எமக்குப் பாடம் நடத்திக்கொண் டிருந்தபோது ஒரு விநாயக சதுர்த்தியோ என்னவோ ஒரு நு¡றுபேர்வரையில் அருகிலுள்ள சிவன்கோவிலில் இருந்து ஏதோவொரு விக்கிரகத்தை அலங்கரித்துச் சகடையில் வைத்து எமது கல்லூரி அருகிருக்கும் ஒழுங்கையூடாக நெய்ப்பந்தங்கள், சங்கு, சேமக்கலம், மேளதாளத்துடன் தள்ளிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

மேளச்சத்தம் அதிகமாகவிருந்ததால் நடத்திக் கொண்டிருந்த பாடத்தை நிறுத்திவிட்டுக் காத்திருந்தவர் ஊர்வலம் கடந்து சென்றதும் சொன்னார்:

“போற சனத்தில ஒரு ஆள் ஆயிரம் கலோரீஸ் செலவு செய்வதாயிருந்தாலும், இதில இப்ப ஒரு லட்சம் கலோரீஸ் அட்டர்லி வேஸ்ட்.”

வகுப்பே சிரிப்பால் அதிர்ந்தது.

அவரது சிறப்புப் பாடம் ஷபொட்னி’. ஒருமுறை அவரிடம் விசுவாசமாகப் படித்த மாணவி ஒருத்தி உயர்தரப்பரீட்சை முடிவுகள் வந் தபோது அவரிடம் நன்றியுடன் போய் ஷசேர் எனக்கு பொட்னியில -பி- கிடைச்சிருக்கு’ என்று சொன்னாள்.

சிவவீரசிங்கம் திருப்பிக்கேட்டுது: “அதுக்கு எனக்கென்ன?”

பிள்ளை அவமானத்தால் வெம்பி கேவிக் கொண்டு திரும்பிவந்தது.

சிவவீரசிங்கத்தின் பெண்வெறுப்புக்கும், பிரமச்சாரியத்திற்கும் காரணம் 'அவரது தாம்பத்திய விருப்புக்கான நரம்பு நன்னாரிவேர் மாதிரிக்காய்ந்து போய்விட்டதே' என்பது 'அசகு' மாஸ்டரின் கண்டுபிடிப்பு.

கல்லுமரியில் 'அசகு' என்று அழைக்கப்படும் அ.ச.குமரேசன் என்றொரு பட்டையணிந்து வரும் ஐம்பதுகளைத் தொட்டுக்கொண்டிருக்கும் பிள்ளைகளில்லாத ஆசிரியர் தன் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு மாலையில் நீ வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் சப்பறாக் கட்டை, தாளத்தோடு பஜனை நடத்திவந்தார். பின்னர் அப்பஜனையில் சுருதிப்பெட்டி மீட்டுக்கொண்டும் , ஐல்ராபோட்டுக்கொண்டும், அவ்வப்போது சேர்ந்துபாடியும் வந்த ஒரு இளம் ஸ்திரியை எப்படியோ அவர் மடக்கித் திருமணம் செய்துகொண்டது சிவவீரசிங்கத்துக்குத் துண்டறப் பிடிக்கவில்லை.

“கல்யாணம் செய்திட்டார், இனி என்ன செய்யப்போறார்?” என்பது போன்ற காட்டமான பல விமர்சனங்கள் வந்தபோதும் கிறுங்கினாரில்லை அசகு. அவரது திருமணத்தன்று சிவவீரசிங்கம் கல்லுமரிக்கு வந்தவுடன் அ.ச.குமாரேசன் மாஸ்டரது வகுப்புக் கரும்பலகையில் பெரிதாக எழுதினார்.

--அசகு இன்று நீர் செய்வது முழுப் பிசகு--

ஹோட்டலைவிட்டு வெளியே வந்து எதிரிலிருந்த பஸ் தரிப்பிடத்திற்கு நடந்தோம். மாலை நாலு மணியாகியிருந்தும் வெய்யிலின் காங்கை சற்றும் குறைந்திருக்கவில்லை.

மாஸ்டரிடம் பணமெங்கே இருக்கப்போகிறது. மாதம் முடிய உள்ள பத்து நாட்களையும் சமாளிக்க வைத்திருக்கும் முன்னுறையும் அவர் கைச்செலவுக்கு கொடுத்துவிட்டு யாரிடமாவது கைமாறிச் சமாளிக்க வேண்டியதுதான்.

இன்று மாலை (என்னுடன் வேலை செய்யும்) அல்விஸ் தெமட்டகொடவில் தன் மைத்துனன் வீட்டுக்கு ஒரு றேடியோகிராம் திருத்துவதற்காக வரச்சொல்லி விலாசம் தந்திருக்கிறான். இன்றே அதைத் திருத்த முடிந்தால் கிடைப்பதில் இன்றைய எதிர்பாராத செலவை ஈடுசெய்யலாம். மாஸ்டருக்கு எங்கே போகவேணும் என்பதைக் கேட்டு அவரை அந்தத் திசையில் போகும் பஸ்ஸில் ஏற்றிவிட்டு நான் தெமட்டகொடவுக்கு 155 பஸ் பிடிக்கவேணும்.

“சேர் அப்ப முகத்துவாரத்திலேதான் இப்ப தங்கியிருக்கிறியளோ?”

“..........”

முகத்துவாரம் என்றதும் அவ முகம் கலவரமாகியது. அங்கு யாரையோ அவருக்குப் பிடிக்க வில்லை. மௌனமாகவிருந்தார். முகத்துவாரத்தைப் பிடிக்கவில்லையோ அல்லது பதில் சொல்லப் பிடிக்கவில்லையோ அல்லது சொல்லத் தெரியவில்லையோ அவர் மௌனத்திலிருந்து எதுவும் புரியாதிருந்தது. எனக்கு நேரம் வேறு போய்க்கொண்டிருந்தது.

“சேருக்கு என்னுடைய விலாசம் தாறன், சனி ஞாயிறுகளில நேரங்கிடைத்தால் அந்தப் பக்கம் வாங்கோ.”

“நீர் எங்க இருக்கிறீர்?”

“இங்கதான் வெள்ளவத்தை ஷமனிங் பிளேசில’.”

“·பமிலியோடையா?”

“இல்லை சேர் நான் இன்னும் பச்சிலர்.”

“மனிங் பிளேசுக்கு எப்பிடிப் போவீர்?”

“இப்படி நடந்துதான்...”

“அப்ப நடவும் நானும் வாறன்.”

தெமட் டகொட பார்ட்டிக்குத் தான் நாளைக்குச் சமாதானம் சொன்னாலும் இந்தக் கோலத்தில் இவரை நான் பங்குபோட்டிருக்கும் அறைக்குக் கூட்டிப்போனால் அங்கிருந்து நானே விரட்டப்படும் அபாயமிருப்பதை மாஸ்டர்தான் எங்ஙினை அறிவார்?

வங்கிச்சிறாப்பர் கொழும்பில் கொம்போட்டபிள் று¡ம் எடுத்து இருப்பதாயின் சம்பளம் வாடகையோடு போய்விடும். நீர்கொழும்பில் போய் கொஞ்சக்காலம் இருந்து பார்த்தேன். எட்டு மணிநேரப் பணிக்கு போக்குவரத்தில் நாலு மணிநேரம் பஸ்ஸில் சஞ்சரிக்க வேண்டியிருந்தது. எப்போதும் இருந்து பயணிக்கலாம் என்பதற்கு உத்தரவாமும் கிடையாது.

கடைசியாக பாமன்கடை ஈறோஸ் தியேட்டர் பக்கம் ஜன்னல்கள் இல்லாத ஒரு எட்டுக்கு நாலு ஒடுங்கல் அறையில் மூச்சுமுட்டிக்கொண்டிருந்த என்னை ஊரோ, உறவோ,

கல்லு¡ரித்தோழமையோ, முன்பரிச்சயமோ எதுவும் இல்லாமலேயே மனிதம் இன்னும் முற்றாக உலகிலிருந்து அழிந்துவிட வில்லை என்பதற்கு அத்தாட்சியாக மனிங் பிளேசில் தன் அறையிலே பங்குபோட வைத்தவன் என் ஒபீஸ்மேட் வருணன். அறையைப் பங்குபோட்ட பரோபகாரி மட்டுமல்ல வாடகையைக்கூட சமபங்கிடாமல் எம் சம்பளத்தின் விகிதத்தில பகிர்வோம் (அவன் அக்கவுண்டன்ட்) என்று சொன்ன மென் ஹிருதயன்.

இவரை அழைத்துப்போக வருணன் என்ன சொல்வானோ, அவனுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ, அவன் மனத்தைப் புண்படுத்திவிடுவேனோ என்று உண்மையில் இப்போது பயமாக இருந்தது.

சிவானந்தன் மாஸ்டர் எனக்குத்தானே குரு. அவனுக்கு வெறும் 'யாரோ'தானே?

அவர் அணிந்திருந்த டிரௌசரின் நிறத்தை இப்போதுதான் அவதானித்தேன். பிறவுண் நிறமாக இருந்தது. வாழ்க்கை பல விசயங்களை அவரிடமிருந்து அடித்துச்சென்று விட்டிருப்பது தெரிந்தது.

அறைக்குள் நுழைந்ததும் ஷவாட் எ பிறிட்டி று¡ம்' என்ற படி தன் புராதன தோற்பையை மேசையில் வைத்தார். சப்பாத்துகளைக் கழற்றி அறைமூலையில் வைத்தார். 'அப்பாடா'வென்று வருணனின் கட்டிலில் சாய்ந்தார்.

ஷசேர் அது என்னுடைய கட்டிலில்லை. என் ·ப்றெண்டின்ரை' என்று சொல்ல நினைத்தேன். மூளையின் செயலிகள் செயற்பட மறுத்தன.

பகல் எங்கெங்கெல்லாம் அலைந்து திரிந்தாரோ பத்து நிமிடத்துள் அயர்ந்து தூங்கிவிட்டார்.

எந்த நேரமும் வருணன் வந்துவிடலாம். எப்பிடித்தான் எகிறிக் குதிக்கிறானோ, அவனைச் சமாளிக்கத் தேவையான வார்த்தைகளை தேடி நிரைப்படுத்திக்கொண்டு கெட்டிலுள் தண்ணீரை வார்த்து அதை ஓன் பண்ணிவிட்டு நிமிரவும் என் மானசீக ஒத்திகைகளுக்கு அவகாசம் தராமல் ஒரு குஷி மூட்டில் வருணன் விசிலோடு அறைக்குள் நுழைந்தான்.

என்றாலும் தன் கட்டிலில் உரிமையுடன் படுத்திருப்பவரைப் பார்த்ததும் "ஹ¤ இஸ் திஸ் லூனாட்டிக்?" என்றான்.

"மச்சான் தயவுசெய்து பெலத்துக் கத்தாதை... உன்ரை இங்கிலிசை மடிச்சு முதல்ல உள்ளை வை ராஜ¡... எனக்கும் என் சந்ததிக்கும், உனக்கும் உன்ர கோத்திரத்துக்கும் தெரிந்ததைவிட

மனு'னுக்குக் கூட இங்கிலிஸ் தெரியும். அவர் இங்கிலிஸ் எம்.ஏ ஹோல்டர் சாந்திநிகேதன். இன்று என்னுடைய விருந்தாளி" என்றுவிட்டுத் தயாரான வெந்நீரில் அவனுக்கு விருப்பமான போர்ன்வீட்டாவைப் பாலுடன் கலந்து கொடுத்து சாந்தப்படுத்திக்கொண்டு சிவானந்தன் மாஸ்டர் என் குரு என்பதையும் அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த விருத்தாந்தம் முழுவதையும் பிட்டுவைத்தேன்.

"ஏன் இப்பிடி, ஹிப்பிக்கோலத்தில இருக்கிறார்?"

"அதுதான் மச்சான் எனக்கும் புரியேல்ல... டிசிப்பிளின்ஸ் அன்ட் பிறின்சிபிள்ளோட ஒரு பிரபுபோல வாழ்ந்த மனு'னடா... இப்போ ஏதேதோ டிப்பிறசனுகள்போல கிடக்கு. வாழ்க்கை எல்லாம் தலைகீழாகி ளே இப்பிடி மாறிப்போனார், என்னையே அவரால முழுசாக ஞாபகப்படுத்த இயலாமல் இருக்கென்டால் பாரன்."

"பின்னைப் போகட்டுமென்டு விடாதையன், என்னத்துக்குப் பிடிச்சந்தனி?"

"எனக்கு வருணன் கிடைச்சமாதிரி மாஸ்டருக் கொரு திவாகரன், ஒரு படிப்பிச்ச டீச்சரைப் பார்த்த னந்தம், இப்படியாக கிவிட்டரேயென்ற அதிர்ச்சி... மனசு கேட்கேல்லைப் பார்."

"உனக்குத்தான் பெரிய மனசிருக்கிறதாய் நினைப்பு. அதுக்குள்ள சமத்காரமாய்ப் பேச்சு வேறை... எப்போதும் தன்னால முடிஞ்சதைத்தான் து¡க்கவேணும், முட்டாள்தனம் பண்றது இது முதல்தடவை அல்ல... பி பிறைக்டிகல் மான்."

"கோவிக்கிறியோ?"

"கோவிக்கேல்ல...-----(கெட்ட வார்த்தை)க்கிறன்... ளைச் சீக்கிரம் வெளிய அனுப்பு, இப்ப சில்வா கண்டானெண்டால் (வீட்டுச் சொந்தக்காரன்) வெளிநாட்டு ஏ¦ஜன்ட் வேலை முடிஞ்சு இப்பவிஞ்சை என்ன பைத்தியக்கார ஸ்பத்தரியோ நடத்திறியள் எண்டு இரண்டு பேரையும் பிடிச்சு ஒரேயடியாய் வெளியே தள்ளப்போறான். நடு றோட்டில நிக்கவேணும், கொழும்பில லொட்ஜுகளும் இப்ப எல்லாம் ·புல் கண்டியோ."

முன்பு வெளிநாட்டுக்குப் போவதற்காக ஏ¦ஜன்டுக்கு காசுகட்டிப்போட்டு தங்க லொட்ஜ¤க்கு காசில்லாமல் அலைந்த இரண்டு ஊர்ப்பையன்களை நான் கூட்டிவரவும், அவர்களை றுமாதத்துக்கு மேல் வைத்திருக்க உதவிய புரவலன் அவன். அதில் ஒருவன் வெளிக்கிட்டுப்போய் போலந்தில் எங்கேயோ தொங்கிவிட்டான். மற்றவன் இங்கே பொலீஸ் தொந்தரவு தாங்காமல் நீர்கொழும்பில் எங்கேயோ யாருடனோ இன்னும் நிற்கிறான்.

வருணனின் அச்சமும் கோபமும் நியாயமானவை. எனக்கே இடம் தந்த அவனது

அசௌகரியங்களுக்கு நான் ஏன் இப்படிக் கருவியாகிப் போகிறேன்?

இரவானது. மாஸ்டருக்கு வியர்த்துக்கொட் டியது. ·பானைப்போட்டு (அதுவும் வருணனதுதான்) மெல்ல அவர் பக்கம் திருப்பி வைத்தேன். ஏழு மணிக்கு மேல் மெல்லக் கண்விழித்தார். எனது டவலைக்கொடுத்து, கூட்டிக்கொண்டுபோய் பாத்று¡மைக் காட்டினேன். முகம் கழுவிவிட்டு வந்தார்.

வருணனை அறிமுகப்படுத்தினேன். "ஹலோ" என்றார்.

எல்லோருக்குமாக மீண்டும் தேநீர் தயாரித்தேன்.

"இரவு இங்கே சான்ட்விச்தான், சாப்பிடுவியள் தானே சேர்?" என்றேன்.

"பின்ன இடியப்பம் தோசை செய்துதர எங்களுக் கென்ன பெண்டாட்டிமார்களா இருக்கினம்?" என்று விட்டு ஷஇஸ¥க்..... இஸ¥க்...... இஸ¥க்...' என்று காற்று வெளிவரக் கெக்கலித்துச் சிரித்தார்.

அவர் அப்படிச் சிரிப்பதை அன்றுதான் பார்த்தேன்.

"மை போய்ஸ் யூ ர் ரூ ஜெனறஸ், ரூ ஜெனறஸ்..." என்றபடி சாப்பிட்டார்.

எமது பள்ளிப் பருவத்தில் ஒருநாளில் எட்டு மணித்தியாலங்கள் பெற்றார் கிடைத்திருப்பார்களோ, எங்கள் ஐயங்களைத் தீர்க்கவும் கற்பிக்கவும் வழிநடத்தவும் ஆசிரியர்கள் தயாராக அருகில் இருந்தார்கள். அவர்களை நாங்கள் என்றாவது முழுமையாகப்
பயன்படுத்தியதுண்டா?

இல்லையென்றேபடுகிறது.

இரவு என்னிடமிருந்த சலவைசெய்த பெட் சீட்டை வருணனின் கட்டிலுக்கு மாற்றிக் கொடுத்துவிட்டு எனது கட்டிலில் மாஸ்டரைப் படுக்கவைத்தேன்.

அடுத்த நாள் காலை இருவருக்கும் காப்பி போட்டுக்கொடுத்துவிட்டு தமிழ் க்கடைக்குப்போய் தோசையும் வாழைப்பழமும், சில ஆங்கிலத் தினசரிகளும், மாஸ்டருக்கு டூத் பிறசும் வாங்கி வந்தேன். எல்லோரும் சாப்பிட்டான பின் நாங்கள் பீஸ் புறப்படும்போது அவரும் சிலவேளைகளில் புறப்படுவாரென்று எதிர்பார்த்தோம்.

அவர் நாங்கள் புறப்படுவதில் கவனம் கொள்ளவே இல்லை. தினசரிகளில் ஆழ்ந்துபோயிருந்தார்.

'சேர் புறப்படுங்கோ' என்பது அவர் கழுத்தில் பிடித்துத் தள்ளுவதாகாதா?

அவர் புறப்படவில்லை.

ஏதோ எல்லாம் உன்பாடென்பதுபோல்' வருணன் அறையைவிட்டு முதலில் புறப்பட்டுப்போய் விட்டான். நேரம் எட்டரை ஆகிவிட்டிருந்தது. அடுத்த பஸ்ஸை நான் பிடித்தேயாகவேண்டும்.

அவர் பார்க்கும்படி அறைத்திறப்பையும் ஐம்பது ரூபாய் காசையும் மேசையில் வைத்து "சேர் வெளியில் போவதானால் மறவாது அறையைப் பூட்டுங்கோ, மதியம் சரஸ்வதியில போய் சாப்பிடுங்கோ" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

"எத்தனை மணிக்கு வருவீர்?"

"நாலு மணிக்கெல்லாம் வந்துவிடுவேன்."

"சரி... கெதியாய் வாரும்" என்றார்.

அலுவலகத்தால் வந்ததும் பார்த்தேன்.

பணம் வைத்த இடத்திலேயே தீண்டப்படாமல் இருக்க, அவர் நான் மருதானை செகன்ட் ஹான்ட் கடையொன்றில் வாங்கியிருந்த ஜேம்ஸ் ஜாய்ஸின் அட்டையில்லாத யூலிசெஸை வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தார்.

"சேர் இன்னும் சாப்பிடவில்லைப்போலிருக்கு?"

"............."

அப்பாவியாய்ச் சிரித்தார்.

வெளியில் கூட்டிப்போனேன். அனேகமாக எல்லாக் கடைகளிலும் சாப்பாடு தீர்ந்துவிட்டிருந்தது. முகமதியா கடையில் வெள்ளையப்பமும் சீனிச்சம்பலும் வாங்கிக்கொடுத்தேன். சாப்பிட்டார். அலுவலகத்தில் இரண்டாயிரம் ரூபா சம்பள முற்பணம் எடுத்துக்கொண்டுவந்திருந்தேன். மாஸ்டருக்கு ஒரு சாரமும் ஒரு டவலும் இரண்டு

சேர்ட்டும் சேவிங் செட்டும் வாங்கி ஒரு டிரௌசரும் தைப்பித்துக் கொடுத்தேன். தனியாக அவருக்கு சுவேந்திரா சோப் வாங்கிக்கொடுத்து குளிக்கவைத்தேன்.

அவர் போட்டிருந்த உடுப்புக்களை ஒரு பொலித்தீன் பையில் போட்டுக்கட்டி கட்டிலின் மூலையில் தள்ளிவைத்தேன்.

குளிப்பு தந்த இதம் இரவு நல்ல சுகமாகத் து¡ங்கினார்.

நானே கூடப்போய் சாப்பாடு வாங்கிக் கொடுத்தாலொழிய தானே போய் ஹொட்டலில் சாப்பிட மறுத்தார். தலால் அவருடைய மதியச் சாப்பாட்டை நான் சரஸ்வதியில் சொல்லிவைத்து நான் அலுவலகத்திலிருந்து வரும்போது பார்சலாக கொண்டுவந்து தரவேண்டியிருந்தது.

தனக்கிருந்த வசதிகளை நினைத்துக்கொள்கிறாரோ என்னவோ சாப்பிடும்போது சிலவேளைகளில் அவரது கண்கள் கலங்கிப்போகின்றன.

மனிதன் மற்றவர்களுடைய அந்தரங்கங்கள்பற்றி எதுவும் விசாரிப்பதில்லை. அதேபோல் தன்னுடையதைப்பற்றியும் விளம்புவதில்லை.

பொழுதுபோகாத வருணன் நான் இல்லாத வேளைகளில் அவருடைய பூர்வாசிரமம்பற்றி மெல்ல உசாவியிருக்கிறான். அவரோ அவைபற்றி எதுவுமே பேச விரும்புகிறாரில்லையாம்.

“முகத்துவாரத்துக்கு மட்டும் போகமாட்டேன், அவன் மனுசனேயில்லை” என்றாராம்.

ஒரு வாரம் கடந்துவிட்டிருந்தது.

வருணன் மாஸ்டர் இரவில் தன்னில் கத்தியைக் கித்தியைச் சொருகிவிருவாரோ என்ற பயத்தில் பாண்கூட வெட்ட மறுக்கும் கத்தியைக்கூட மேசைலாச்சியுள் வைத்துப் பூட்டித் திறப்பை உள்மடிக்குள் வைத்துக்கொண்டே இரவில் தூங்கினான்.

பின்னர் இடையில் மூன்று நான்கு நாட்கள் தன் வேறொரு ·ப்ரெண்டின் அறையில்போய் படுத்தான்.

சித்தசுவாதீனம் குன்றியுள்ளாருக்கு உலகத்திலுள்ள அனைவருமே எதிரிகளாகவும், எல்லோரும் தன்னைத் தாக்கத் தருணம் பார்த்திருப்பதாகவும் படுமாம். அதனால் மாஸ்டருக்குக்கூட எந்நேரமும் நிலமை மாறலாம், எதையும் செய்யலாம் என்பது

அவன் வாதம். ஒரு ஆங்கில நாவலில் ஒரு பைத்தியம் அப்படித்தான் திடீரென்று விழித்துக்கொண்டு காரணமின்றியே அருகில் தூங்கிக்கொண்டிருந்த ஒருவரின் குரல்வளையை சேவிங் பிளேடால் அறுத்துவிடுகிறதாம்.

வருணனை நான் மிக அசௌகரியப்படுத்துகிறேன்.

விழிப்புவரும் இரவுகளில் மனச்சாட்சி பல ஊசிகள் கொண்டுவந்து என் உடல்பூரா குத்திக்குத்தி மேலே து¡ங்கமுடியாமலடித்தது.

வருணன் தனது அறையையே எமக்குவிட்டுத் தந்துவிட்டு தான் போய் வேறொருவர் அறையில் படுத்துக்கொள்ளும் அளவுக்கு அவனிடம் நாம் பண்ணும் அடாவடித்தனம் மனதுக்குச் சங்கடம் தந்தது.

அலுவலகத்தில் இன்னொரு நண்பனொருவனிடம் எனது முழுப் பிரச்சினையையும் போட்டுவைத்தேன்.

"இந்தக் கொழும்பில அப்பிடி ஒரு சுதுமலைப் பார்ட்டி யாரும் இல்லாமல் போகாது... நான் விசாரிக்கிறேன்" என்றவன் சேமிப்பு கணக்கு வைத்திருக்கிற தமிழர்களின் விபரங்களை கணனியில் துழாவி இரண்டொரு விலாசங்கள் எடுத்துத்தந்தான்.

முதலாவது வாடிக்கையாளரது கொழும்பு விலாசம் செல்வத்துரை இராமநாதபிள்ளை, அஜந்தாஸ் சாறி எம்போறியம், மணிக்கூட்டு கோபுர வீதி, புறக்கோட்டை என்றிருந்தது. அது கொழும்பில் பிரபலமான புடவைக்கடைதானே? அங்கு விற்பனைப் பிரிவில் ஒருவரைக் கண்டால் தலையாட்டுகின்ற' அளவுக்குப் பழக்கமும்கூட. நேரே போய் அவரிடம் விசயத்தை வேண்டிய வீதத்தில் சுருக்கிச்சொல்லி முதலாளியைப் பார்க்கவேண்டுமென்றேன்.

அவர் நேரே முதலாளியிடம் என்னைக் கூட்டிப்போனார். பேசினேன். முதலாளி 'தான் குரும்பசிட்டியென்றும் தன் மனைவியின் ஊர்தான் சுதுமலையென்றும் அவரிடம் விசாரித்தால்தான் விபரமான தகவல் கிடைக்குமென்றும்... தம்பி இயக்கயிக்கம் ஒன்றுமில்லைத்தானே' என்று கேட்டுத் தெளிவுபடுத்திக்கொண்டு அன்றே மாலை ஏழுமணிக்கு மேல் வீட்டுக்கு வரச்சொல்லி முகவரி தந்தார்.

போனேன். அந்தக் கோடீஸ்வரி முதலாளினி எளிமையாக நு¡ல் சேலையில் இருந்ததே முதலில் பிடித்துப்போனது. முதலாளியும் வி'யத்தைக் முதலிலேயே கொஞ்சமாய் சொல்லிவைத்திருப்பார் போலுள்ளது.

“சிவானந்தன் மாஸ்டர் என்று பாருங்கோ ஒரு ஆர்ட்மாஸ்டர் அறுபதுகளில சுதுமலையிலிருந்து ஒரு பச்சை மொறிஸ் மைனர் காரில வந்து புத்துர் சோமாஸ்கந்தாவில படிப்பிச்சவவர்” என்றதும்...

என்னைக் கையமர்த்திவிட்டு மேலே சொல்லலானார்.

“தெரியும் தம்பி அவர் சிங்கப்பூர் பென்சனர் குமரப்பெருமாள் என்று அவருடைய ஒரே மகன். என்னோடை வயதொத்த பிள்ளைதான், இரண்டு தலைமுறையாய் சிங்கப்பூரில நல்லாய் வாழ்ந்த குடும்பம் பாரும். அவன் பிறந்ததுகூடச் சிங்கப்பூரிலதான். அந்தப் பிள்ளை பிறந்து பதினைந்து பதினாறு வயது நடக்க அவை இங்கால வந்து சேர்ந்திட்டினம். அந்தப் பிள்ளையோட அவை வந்திறங்கினதுகூட ஏதோ நேத்தெண்டதுபோல எனக்கின்னும் கண்ணுக்க நிக்குது.

இங்கே வரும்போது பயலுக்கு சரியாய் தமிழும் கதைக்க வராது. தகப்பன் பிறகு அவனை ஐ·ப்னா கொலிச்சில போடிங்கில விட்டுத்தான் படிப்பிச்சவர். அவன் ஆர்ட் மாஸ்டரென்று இப்ப நீங்கள் சொல்லித்தான் தெரியுது. பிறகு தாய்வழியில சொந்தத்துக்கதான் கலியாணமும் கட்டினவன் பாரும். பெண்சாதியும் மகராசி ரதிதேவியென்று பேருக்கேற்ற ரதிமாதிரித்தான் இருப்பாள். முகம் கனிந்து சிரிச்சாளேயென்டால் எப்போ இன்னொருக்கா சிரிப்பாள் என்றிருக்கும். ஏதோ இவனுக்குக் கொடுப்பினை இல்லைப்போல கிடக்கு ஒரு ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழந்தைகள். இரண்டாவது பிரசவத்தில காயாசுவாதம் வந்து வேளைக்கே அவள் செத்துப்போனாள். அவள் செத்ததல்லத் தம்பி சோகம் அவன்ரை பிள்ளையள் இரண்டையும் குறுக்காலை அள்ளிக்கொண்டு போனதுதான் ஆகக்கொடுமை.”

“என்ன அம்மா சொல்லுறியள் பிள்ளையளும் செத்துப்போச்சோ?”

“ஓம் ராசா மூத்தது பெடியன், அவன் இந்தத் தரப்படுத்தலுக்குள்ளாலும் இஞ்ஜ¢னியறிங் என்டர் பண்ணி இரண்டாம் வரு'ம் படிச்சுக்கொண்டிருக்கும்போது எண்பத்தேழில பேராதெனிய யூனிவேசிற்றி யில நாலு தமிழ் ஸ்ருடன்ட்ஸைக் காணேல்லயெண்டு கதை வந்துதல்லே அதில இந்தப் பெடியனும் ஒண்டு தம்பி. சிங்களப்பெடியளோ, இல்லைக் காடைகளிசறையளோ, ஆமி பொலிஸோ இன்டைக்கும் பெடியை இல்லாமப்பண்ணினது யாரெண்டது தெரியா, ஆனா ஆளில்லை.

பிறகு தங்கைக்காரியும் வெறிபிடிச்சுப் படிப்பைக் குழப்பிக்கொண்டு திரிஞ்சு இயக்கத்தில சேர்ந்து முல்லைத்தீவு தாக்குதலிலை அவளும் போட்டாள். மனு'ன் இப்ப தனி மரமாய்ப்போச்சு.”

“மாஸ்டரின்ரை தாய் தகப்பன் யாரும் இருக்கினமோ?”

“தாய் மனு‘¢ வேளைக்கே செத்துப்போச்சு, தகப்பன் இன்னும் இருக்கிறாரோ செத்துப்போனாரோ தெரியேல்லை. நானும் ஊர்மண்ணை மிதிச்சு எங்க பதின்மூன்று வரு‘மாச்சு, அதில மெய்யாத்தான் எனக்கும் தெரியேல்லை. அவரிப்ப இருந்தாலும் வயதும் எண்பதுக்கு மேலேதான் பேசும்.”

அருகிலிருந்த வெற்றிலைத்தட்டத்துள் சில நல்ல பாக்குச்சீவல்களைத் தேடியபடியே மேலும் சற்றே யோசித்துவிட்டுச் “செத்துத்தானிருப்பர்” என்றார்.

“வேறை யாரும் சொந்தம் கிந்தமெண்டு...?”

“ரமணியென்று சொல்லி பெண்சாதியின்ரை தமையன் ஒருத்தன் இருக்கிறான். இஞ்சைதான் முகத்துவாரத்தில இருக்கிறனெண்டு கடையில கண்டபோது ஒருமுறை சொன்னவன். அட்டிரஸ்தான் தெரியேல்லை.”

நெற்றியைத் தேய்த்துவிட்டுக்கொண்டே, “இன்சூரன்ஸ் கோப்பறேசனிலயோ, மஸ்கன்ஸிலயோ வேலை செய்யிறதாய் சொன்ன ஒரு சின்ன ஞாபகம், இரண்டு மாசத்துக்கு முன்னையும் கண்டு கதைச்சனான் தம்பி, நான் ஏன் மோனை விலாசத்தை விசாரிச்சன்?”

என்னுடன் பேசிக்கொண்டே குசினி வாசலுக்கு கைகளைத் துடைத்தபடி வந்த உதவிப் பெண்ணுக்கு கண்களால் சில சமிக்கைகள் கொடுத்தார்.

“படிக்கிற காலத்தில மாஸ்டருக்கு சுதுமலையென்டது மட்டும் எங்களுக்கு தெரியும். மற்றும்படி அவர் தன் குடும்பத்தைப் பற்றி மாணவர்களான எங்களோடை ஏன் கதைக்கப் போறார்? இன்றைக்கு ராயவேண்டி வந்திட்டுது அதுதான். தந்த தகவல்களுக்கும் மிச்சம் பெரிய நன்றி மடம்.”

உதவிப்பெண் நுரைக்கின்ற கிறீம் சோடா கொண்டுவந்தாள். அவர் அதை எழுந்து வாங்கி என் கையில் தந்தார்.

“ஓ... தாங்ஸ்.”

“அப்பிடி என்னதான் வந்தது ராசா?”

“ஷவி‘யம் என்னண்டா சிவானந்தன் மாஸ்டர் தற்போது என்னோட என்ரை று¡மிலதான் தங்கியிருக்கிறார். நீங்கள் சொன்ன இத்தனை சம்பவங்களும் சேர்ந்து கொடுத்திருக்கக்கூடிய டிப்பிறசனுகளால மனு‘ன் லேசாய் மனநிலை

பாதிக்கப்பட்டிருக்கிறார், தன்பாட்டிலை ஒரு இலக்கில்லாமல் போய்க்கொண்டிருந்தவரை நான்தான் தற்செயலாய் கண்டுபிடிச்சுக் கூட்டிவந்தனான். னா எத்தனை நாளைக்குத்தான் நானும் அவரைக் கவனித்துப் பராமரிக்கலாம்? அதனால அவரைச் சொந்தக்காரரோ, பாத்யதையுள்ள வேறு யாரிடமோ சேர்ப்பித்துவிட்டால் மனு‘ன் நாதியற்று அலையாமல் மிச்ச யுளை நிம்மதியாய் கழிக்குமேயெண்டு ஒரு த்மார்த்த மான விருப்பம்.”

“வாழ்ந்த மனு‘னுக்கு வந்த நிலமையைக் கேட்கப் பரிதாபமாய்த்தான் கிடக்கு. என்றாலும் அவை எங்களுக்குச் சொந்தமில்லை ராசா. நாங்கள் வெள்ளாளர், அவை மேற்குப் பக்கம் ...ர் ” என்று ஏதோ கெட்ட வார்த்தையை உச்சரிக்க நேர்ந்தது போலத் தாழ்ந்த குரலில் அவர்களின் சாதிப் பெயரைச் சொன்னார்.

வருணனுக்கு ·ப்றெண்டின் அறையில் என்ன அசௌகரியமோ இடையில் திரும்பவும் தானாக வந்து அறையில் தங்கினான். தங்கத்தொடங்கிய பின் இரண்டு நாளால் காதோடு இரகசியமாய் சொன்னான் “மாஸ்டர் விறாந்தையில சில்வாவின்ரை கதிரையில படுக்கிறாராம், சில்வா வந்து முனகிவிட்டுப்போறான்.”

“அதுக்கு என்ன சொன்ன நீ?”

“அவர் வைத்தியத்துக்காக வந்திருக்கிறார், கெதியில போடுவர் என்றிருக்கிறன். நல்ல காலம் கிழவன் ஷஎன்ன சுகவீனம்’ என்று மட்டும் துழாவேல்லை.”

அது ஒரு ஈசிசேர். எங்கள் அறைக்கு முன்னான விறாந்தையின் மறுகோடியில் போட்டிருக்கிறது. எப்போதாவது மழை பெய்தால் மாத்திரம் கட்டைக் கிழவன் சில்வா அதில் கால் நிலத்தில படாமல் இருந்துகொண்டு மழையைப் பார்க்கும். மற்றும்படி சில்வா வீட்டிலும் யாரும் அதைப் பயன்படுத்துவதில்லை. மறுநாள் ஒரு பிரம்புச் சாய்வுகதிரை வாங்கிவந்து மாஸ்டருக்கு கொடுத்தேன்.

அடுத்து வந்த வாரவிடுமுறை கழிந்து வந்த மறு திங்கள் அரை நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு முதலில் இன்சூரன்ஸ் கோப்பிறேசனைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு அங்கு விரைந்தேன்.

ரி‘ப்சன் பெண் பெயரை விசாரித்து கணனியை நோண்டிவிட்டு மொனிட்டரிலிருந்து தலையைத் திருப்பாமலே “மிஸ்டர். ரமணி டிவி‘ன் மனேஜர் கொம்பன்சேசன்ஸ் டிப்பார்ட்மென்ட், தேர்ட் ·ப்ளோர் பிளீஸ்” என்றாள். கணனிக்கு மீண்டும் ஒரு நன்றி. செக்கியுறிட்டிக்காரன் உடம்பெல்லாம் மெட்டல் டிடெக்டரால் தடவோ தடவென்று தடவிக் கூச்சங்காட்டிவிட்டு மேலே செல்லவிட்டான்.

மேலே சென்று மூன்றாவது ·ப்ளோரில் விசாரித்ததில் ஒரு மூலையில் இரண்டு ஸ்கிறீன்களால் தடுத்து க்கப்பட்ட அவரது அறையைக் காட்டினார்கள். மேசை அருகே சென்று ஷகுட்மோர்ணிங்' சொல்லவும் ·பைலுக்கு வெளியே கிளீன் §'வ் செய்த ஒரு தமிழ்முகம் எட்டிப் பார்த்தது.

"மிஸ்டர் ரமணி என்கிறது..."

"ஐ¡, தட்ஸ் மீ பிளீஸ். வட் கான் ஐ டு ·போர் யூ தி யங் மன்?" என்றபடி எதிரிலிருந்த சனத்தைக் காட்டினார்.

நான் தனித் தமிழுக்கு வந்தேன்.

"என் பெயர் திவாகரன்... சிவானந்தன் மாஸ்டரென்று..."

அவர் புருவங்கள் விரிந்தன.

"இஸ் எனிதிங் அன்பிளெசன்ட்?"

"ஓ... நோ!"

"வெல்... பின்னே அவரை எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது?"

"நான் அவருடைய ஸ்ருடென்ட்."

"அப்படியா... கேஸ் இப்ப எங்க?"

"சொல்றன்."

"அந்தக் கேஸைக் கஸ்டப்பட்டுக் கொண்டுபோய் அங்கொடை ஸ்பத்தரியில சேர்த்துவிட்டனான், அங்கையுமிருக்கப் பிடிக்காமல் பிச்சுக்கொண்டு எங்கயோ வெளிக்கிட்டிட்டுது. சரி அதையிட்டு இப்ப என்ன பிரச்சினை... புதிசா ஏதுங்கோல்மால் பண்ணிச்சா?"

அ·றிணையில் பேசினார்.

"பிரச்சினையெண்டு ஒன்றும் பெரிதாயில்லை. மாஸ்டர் போனகிழமை வெள்ளவத்தையில காலி றோட்டில திசைகெட்டுப் போய்க்கொண்டிருந்தார். நானும் பள்ளிக்கூடம் விட்ட பிறகு அவரைக் காணேல்லை, வழியில கண்டவுடனே ஆளை உடனே

என்னால மட்டுப்பிடிக்கவும் முடியேல்லை, ஒரு சந்தேகத்தில ஓடிப்போய் ஆளை முன் மறியாய் மறிச்சுப் பேசிப்பார்த்ததில மாஸ்டர் கொஞ்சம் மென்டலி அப்செற் எண்டது புரிஞ்சுது, என்னையும் அவரால சரியாய் ஞாபகப்படுத்த முடியுதில்லை. மனங்கேட்கேல்லை ளைக்கூட்டி யந்து என்னோடைதான் வைச்சிருக்கிறன். அவர் என்னுடைய குரு அதனால அவரை என் யுள்பரியந்தம் வைத்துக் காப்பாற்றவும் எனது மனது சம்மதம்... ஆனால் பிறக்டிகலாய் வேறும் பல பிரச்சினைகளும் எனக்கிருக்கிறதால என்னால அது முடியாமலிருக்கு பாருங்கோ. விபரமாய் சொன்னால் நானும் பச்சிலர், இரண்டாவது இந்தக் கொழும்பில எனக்கே கொஞ்சம் அக்கமடேசன் புறப்ளெம்ஸ் இருக்கு, வெட்கமில்லாமல் சொல்றதென்டால் நானே என் ·பிரெண்ட ஒருத்தன்ரை றூமிலதான் தொங்கியிட்டிருக்கிறேன், அதுகள் எல்லாத்தையும் விட அவருடைய மெமொறிப் பிசகாலேயோ அல்லது அவரோட இயல்பான சுபாவத்தாலோ தெரியேல்லை தன்னுடைய தேவைகள் என்ன, விருப்பங்கள் என்னென்றதை எங்களோடை கலந்தொன்றும் கதைக்கிறாரில்லை. அதால எமக்கு அவருடைய மனதில உள்ளதை ஒன்றும் அறியேலாமலிருக்கு. குந்த ஒரு கிளை அகப்படாத ஒரு பறவையைமாதிரி அலையிற அந்த மனு'னைப் பார்க்க எமக்கும் பரிதாபமாயிருந் தாலும் எம்மாலும் எவ்விதத்திலும் அவருக்கு மேல உதவவும் ஏலாமலிருக்கு."

"உம்முடைய நல்ல மனசு புரியுதெனக்கு, இதெல்லாம் நாங்கள் வைச்சிருந்து அனுபவிச்சது தான்... ஒன்றும் வாய் திறந்து பேசமாட்டான். அவன்டை முக்காவாசிப் ப்றொப்ளமே அதுதான். னால் அவனைக்கூட வைச்சிருக்கிறது மகா றிஸ்க் பாரும்! றிஸ்க் அன்ட் , டேஞ்ஜர்! உடனை பொலிசிலை சொல்லி ளைத் திரும்ப ஸ்பத்தரியிலை சேர்ப்பிக்கவேணும். தாட் வில் பி த ஓன்லி அன்ட் குட் சொலு¡'ன்."

"நான் நினைக்கிறன் அவர் அவ்வளவுது¡ரம் பாதிக்கப்படேல்லையென்று. றுதலாய் மனம்விட்டுப் பேச இரண்டு மனு'ர் தனக்கும் இருக்கினமென்று அவரை நினைக்க வைத்தாலே நோர்மலாய் விடுவார், அவருக்குத் தேவையெல்லாம் அன்பும் தரவுடனுமான ஒரு சரணாலயந்தான்."

இப்போது எங்கிருந்தோ அவருக்கு ஷடப்'பென்று கோபம் மூக்கின் மேல் வந்தது. (இங்கிலீசில் பொழிந்தார்.)

"அதைப்பாரும் நீரும் நானும் தீர் மானிக்க ஏலாது. அவனோடை உலைஞ்ச எனக்குத்தான் அவனுடைய நிலமை சரியாய் தெரியும். எனக்கும் அவனையிட்டான அனுதாபமிருக்குத்தான்... மச்சானாச்சே? நானும் அதைவிட வேறை என்னதான் செய்யலாம் சொல்லும்?"

சிறு இடைவெளி மீண்டும் பேசினார்.

“ஜ¡ப்னாவிலிருந்து யாரோடை வந்தானோ, எப்பிடித்தான் வந்தானோ தெரியாது. ஒரு நாள் டாக்ஸியிலை வந்து இறங்கினான். எனக்கின்னும் பென்‘ன் வரேல்லை, பென்‘ன் ஒபிஸிலை போய் என்னெண்டு விசாரிக்கவேணும் வா” என்றான்.

" He has no papers at all. No papers from his department. No papers from his college. No service record, nothing...He posseses not even his National identity card. You say ஸ how can one proceed with his case? Nonsense!"

நான் அவரைத் தமிழுக்குத் திரும்பத்திரும்பப் பிடிச்சுக்கொண்டு வந்துவிடவும் அவர் ஸ்பிறிங்கில் மீள்கிறாப்போலும் இங்கிலிசுக்கே திரும்பத்திரும்பத் தாவிக்கொண்டிருந்தார். ஏதோ நானே குற்றவாளிபோல தலையைக் கவிழ்ந்துகொண்டு அவர் சொன்னது எல்லாவற்றையும் கேட்டேன்.

“ஜடென்டிரிக் கார்ட் இல்லாமல் அங்கொடையிலும் சேர்க்கமாட்டம் என்றிட்டாங்கள். பிறகு றிஜ¢ஸ்டர் கிளார்க், சைக்கோதெறபிஸ்ட் என்று கண்ட நிண்ட ஒவ்வொரு சும்ப நிசும்பனுக்கும் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் வெட்டியல்லே சேர்த்துவிட்டனான்... அடுத்த கிழமை பாவமென்று அவனிட்ட விசிட் பண்றன்... The fellow is missing.”

"What a irresponsible idiot! stupid!"

இவ்வளவு காவலையும் மீறி மனுசன் என்னண்டுதான் ஜம்ப் பண்ணினானோ ஜம்ப் பண்ணிட்டான்!’’

ரமணியின் பேச்சில் 'மரியாதை’ அவருக்கு வரும் கோபத்துக்கு நேர்விகித சமனாக இருந்தது.

“கன்னத்தில தழும்பொண்டும் கிடக்கு... தமிழன்தானேயெண்டு அடிச்சுக்கிடிச்சுத் துன்புறுத்தினாங்களோ தெரியேல்லை?”

“அது அதுக்கும் முதல்ல மருதானை பொலிஸிலே போய் 'எங்கேடா என்னுடைய அமரன், என்ட மகன் அமரனைக் கொண்டாங்கடா’ என்று கேட்டுச் சண்டைபிடிச்சதன் அறுவடை.”

“பொலீஸில போய் டெய்லி அவங்களுக்கு அலுப்புக் குடுத்துக்கொண்டேயிருந்தானெண்டால் நாடிருக்கிற நிலமையில அவங்கள் அடிச்சே கொண்டுபோட்டு மாறுவேசத்தில் வந்த விடுதலைப்புலியளுடைய உளவு ஆள் என்னப்போறாங்க.

இந்த மனு‘ன் யாரும் சொல்றதைக் கேட்டாத்தானே... ஒழுங்காய் இருந்தால் என்னோடை இருக்கவேண்டாமென்றனே? என்னோட இருக்கிறதில இவருக்கு என்ன கஷ்டம்?

வீட்டில இரப்பா என்றால் கேளாது. அப்பப்ப வெளிக்கிட்டிட்டிடும், வெளிக்கிட்டு கேற்றைத் திறந்துகொண்டு கிழக்கேயோ மேற்கையோ போகும். எங்கைதான் போகுதோ வருகுதோ தெரியாது, போனால் பாதி உலகத்¨த் சுத்தோ சுத்தெண்டு சுத்திப்போட்டு ஒரு வாரத்தாலே பிச்சைக்காரன் மாதிரி வரும், வந்தால் யூ சே ஹௌ கான் வண் அக்செப்ற் ஹிம்? டோன்ட் ஐ பொஸெஸ் எனி சோ‘¢யல் டிக்னிடி..... ஓர் றெஸ்பெக்ட்? நல்லாய் இருக்கிற காலத்திலேயே ஹீ வாஸ் நொட் நோமல், அன் எக்ஸென்றிக் யூ ஸீ.

வாட் எவர் இட் ஸ்... சுகமாகிறவரை அவன் இருக்கவேண்டிய இடம் அதுதான் பாரும். நோபொடி கான் ஹெல்ப் ஹிம் எனி மோ!”

அறைக்குத் திரும்புகிறேன்.

மாஸ்டர் §‘வ் எடுத்து முழுகிச் தலையுலர்த்தி அழகாக வாரிவிட்டுக்கொண்டு சுத்தமாக விறாந்தையில் பிரம்புக் கதிரையுள் இருந்துகொண்டு தன் நகங்களை வெட்டிக்கொண்டிருந்தவர் என்னைப் பார்த்துப் பச்சைப்பிள்ளை மாதிரிச் சிரிக்கிறார்.

அவருக்காக வாங்கி வந்த தினசரிப் பத்திரிகைகளைக் கொடுக்கிறேன்.

நன்றியுடன் வாங்கிக்கொண்டு “திவாகர் ஐ அம் டிறபிளிங் யூ மச்” என்றார்.

“நோ சேர் நெவர்... திஸ் இஸ் மை பிளெ‘ர்.”

இரவு வருணன் அக்கறையுடன் கேட்டான்: “மைத்துனைக் கண்டியா... மாட்டரைப் போட்டியா... என்னா சொல்றான்?”

“ளை மென்டல் ஹாஸ்பிட்டலில தள்ளிட்டு நீ உன்பாட்டுக்கு போய்க்கொண்டேயிரு என்கிறான்டா... தான்கூட அப்பிடித்தான் செய்தானாம்.”

மாஸ்டர் பத்திரிகைகள் எல்லாவற்றையும் இரவு கண்விழித்துப் படித்தார். மறுநாள் சொன்னார்:

“அவங்களுக்கு மற்றவங்களுடைய உயிரின்ர பெறுமதிதான் தெரியாது, இவங்களுக்கு

தங்களின்ர உயிரின் பெறுமதியும் தெரியாது, மற்றவையின்ரை உயிரின் பெறுமதியும் தெரியாது. எல்லாரையும் அழிச்சு என்னத்தைப் பிடிக்கப்போறாங்கள்?"

'இழப்புக்களின் துயரமோ, அல்ல பேசி என்னதான் வரப்போகிறதென்கிற அவசமோ' அவரை மௌனிக்கவைத்துவிட்டன .

மனம் சகஜமான நிலைக்கு மீளும் மிகச்சிறு சமயங்களில் மௌனம் உடைந்து பேசினார். அவரைப் பேசவைக்க வேண்டுமென்றே சிவவீரசிங்கத்தை அடிக்கடி நினைவூட்டுவேன். முகம் மலர்ந்து சிரிப்பார்.

அன்று வருணனுக்கு என்ன நினைப்பு வந்துதோ அக்கறையாய் கட்டிலுக்கு கீழே குனிந்து பார்த்துவிட்டு மாஸ்டரின் பழைய உடுப்புகள் போட்டுச் சுற்றிவைத்திருந்த பொதியைச் சுட்டிக்காட்டி "இந்தப் பொதிக்கும் தீர்வு கிடையாதோ... தோழருக்கு அதை என்ன செய்வதாக உத்தேசம்?" என்றான்.

உண்மையில் எனக்கு அப்பொதி மறந்தேவிட்டிருந்தது. அவற்றை எடுத்துக்கொண்டு லோண்றிக்கு ஓடினேன்.

உடுப்புக்களைப் பார்த்த லாண்டிறிக்காரர் "ஐய்யைய்ய... மெக்கானிக் வேலை பார்க்கிறவங்க கராக உடுப்புகளெல்லாம் நாங்க கழுவிறதில்லை ஐயா" என்று அலறினார்.

"இவர் கராஜ¢ல அல்ல கலைக்கூடத்திலதான் வேலைசெய்வாரு, எக்ஸ்றாவா ஏதாச்சும் சார்க பண்ணுறதென்றாலும் பரவாயில்லை, இது ஒரு வேண்டிய மனிதருடையது, பார்த்துச் செய்து தாங்கோ."

"ஐயா மன்னிக்கவேணும், அது எந்தக்கூடத்து உடுப்பாயிருந்தறாலும் சரிதான், அதை வெள்ளாவியில வைச்சா மற்றவங்க உடுப்பையெல்லாம் நாசம் பண்ணிடும் பிறகு கஸ்டமர்களுக்கு நாம பதில் சொல்ல இயலாது, அவங்களுக்கு புதுசு வாங்கித்தர்ற நிலமையை நாமளா தெரிஞ்சு உண்டாக்கலாமா... சொல்லுங்க?"

ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

குருகுலத்தில் பெரியவர்கள்கூட எல்லாம் பண்ணினதுதானே. நானே பாத்று¡மில் ரின்ஸோவைக் கொட்டி அவற்றைக் கழுவலானேன்.
அதைப்பார்த்த வருணன் சொன்னான்.

"அவருக்கல்ல உனக்குத்தான் மேலான் இழகிப்போச்சு... நீ இப்படியெல்லாம் பண்னா

மனுசன் இதுதான் தன்ரை வீடாக்குமென்டு நினைச்சுப் பெர்மனண்டா காம்ப்...”

“தோழர் சொல்ல வர்றது புரியுது... எந்த மனுசனுக்கும் மரணம் வந்து எப்போதும் தலைவாசலில காத்திருக்குமாம். அதனால பிறருக்குச் சேவை செய்ய எப்போவெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்குதோ அப்போதெல்லாம் செய்துபோடோணும். பிறகெல்லாம் சந்தர்ப்பங்கள் அமையுதோ என்னவோ?”

“என்ரை கவலை அதல்ல... தப்பித்தவறி அங்கொட ஸ்பத்தரியில இருந்து யாரும் வந்தால் அவரை விட்டிட்டு உன்னை இழுத்துக்கொண்டு போகப்போறாங்களே என்றதுதான்.”

இப்பொழுதெல்லாம் மாஸ்டர் து¡ங்குவது மிக அருகிவிட்டது. இரவில் து¡க்கம் வராமல் அடிக்கடி எழுந்திருந்தார். அவ தலைமாட்டிலிருந்த ஷவாசிக்கும் விளக்கை படிக்கவோ பாத்று¡ம் போகவோ எப்போது வேண்டுமானாலும் தயக்கமில்லாமல் போட்டுக்கொள்ளலாமென்று’ சொல்லியிருந்தோம்.

ஒருநாள் அந்த லைட்டைப் போட்டுவிட்டு முகட்டைப் பார்த்துக்கொண்டே நீண்டநேரம் படுத்திருந்தவர் சொன்னார்:

“அங்காலை பாதை தெரியேல்லை ஒரே இருட்டாய் கிடக்கு.”

அவர் சுட்டும் படிமம் புரிகிறது.

அந்த இரவில் நாலைந்து தரம் எழுந்து பாத்று¡ம் போனார்.
டயாபடிஸ் பிரச்சினை ஏதுமிருக்குமோவுந் தெரியேல்லை. டெஸ்ட் பண்ணுவித்தால் நல்லது. டொக்டர் கதையேதும் எடுத்தால் மீண்டும் கலவரமாகிவிடுவாரோ தெரியவில்லை. அதுபற்றி அவரிடம் பேசப் பயமாகவிருந்தது.

அதன் பின் தினமும் இரவுகளில் பல தடவைகள் பாத்று¡ம் போய்வருவது வழக்கமாயிற்று. மறுநாள் காலை தேநீர் போட்டுக்கொடுக்கையில் பக்குவமாகச் சொன்னேன்.

“அடிக்கடி பாத்று¡ம் போகிறியள்போல கிடக்கு சேர், வட் எபௌவுட் எ பிளட் சுகர் டெஸ்ட்?”

“நோ டியர்... ஐ அம் ·பெர்பெக்லி ஓல் றைட்!

தெயரா நோ ¦ஜனுயின் டக்ரேர்ஸ் இன் த ஹொஸ்பிடல்ஸ் நௌவடேஸ் யூ சீ, ஓல் பிளடி மொன்ஸ்டேர்ஸ்!”

“உங்களுக்கு என்னுடைய பாட்ஸில் படித்த கிருபரனை ஞாபகமிருக்கா, ஏன் உங்க ஸ்ருடன்ட்கூடத்தான் அவன் இப்போ கொள்ளுப்பிட் டியிலதான் தன்னுடைய பிறக்டிஸை வைச்சிருக்கிறான், ஒருக்கால் போய் கொன்சல்ட் பண்ணிட்டாப்போச்சு.”

“நொட் நெசசறி அற் ஓல், ஐ அம் பிஸிக்கலி குயட் ஓல் றைட்... பிலீவ் மீ சண்.”

முதலில் லேசான இருமல் கண்டது. பகலில் பரவாயில்லை ஓரளவு சமாளித்துவிடுவார். பின்னர் அதுவே படிப்படியாக அதிகரித்து பனியோ குளிரோ அதிகமிருக்கும் இரவுகளில் கடுமையான இருமலோடு ஆஸ்மா வேறு வந்து பெரும் அவஸ்தைப்பட்டார். மூச்சு இயல்பாயிருக்கவில்லை. அவர் சுவாசிக்க கஸ்டப்படுவது எமக்குப் பட்டவர்த்தனமாகவே தெரிகிறது. அவரோ தனக்கு அப்படி ஒரு பிரச்சினையுமேயில்லை என்று சாதித்தார். டாக்டரைக் கண்டு பயப்படுகிறரோ அல்லது எங்களுக்குத் தொல்லைதரப்படாதென நினைக்கிறாரோ தெரியவில்லை.

எந்த கொழும்பு ஹொட்டல் சாப்பாடாயினும் மாசக்கணக்கில் அடுத்துச் சாப்பிட யாருக்கும் வைக்கோல் சாப்பிட்டமாதிரி இருக்கும். சிலவேளைகளில் அவர்களின் மரக்கறிகள் குழம்புகள் முழுக அவித்த அரப்பு மாதிரியிருக்கும். மாஸ்டர் வரவர மிகவும் குறைவாகவே சாப்பிட்டார். உடல் வேறு இளைத்துக்கொண்டுவந்தது.

கிருபரனிடம் போய் லோசனை கேட்டேன். அவனோ “ஸ்த்மா அலேர்ஜ¢யால் வருவது. ன்டிஅலேர்ஜ¢ மருந்துகள் நோயாளியைப் பரிசோதிக்காமல் தரவேகூடாது” என்றான். கடைசியில் சும்மா நம்மிடம் விசிட் வரும் ஒரு நண்பனைப்போல் வந்து அவரைப் பார்த்துவிட்டுச் சில மாத்திரைகள் எழுதித்தந்தான். வாங்கிவந்து மூச்செடுக்க அவர் கஷ்டப்பட்ட வேளைகளில் தேநீரில் கரைத்துக் கொடுத்தேன். சுகமிருந்தது.

இடையில் சில்வா வேறு வந்து “உங்க விசிட்டர் இரவில் சத்தமாய் இருமுறார், பத்துத்தரம் டொயலட் பிள- பண்ணுறார், இங்கால மனுசங்க து¡ங்கமுடியவில்லை” என்று இரண்டாந்தரமாக முனகினான்.

மாஸ்டர் உடல் பலவீனமாக இருந்தபோது அல்லது லேசாக காய்ச்சல் கண்டிருக்கும் நாட்களில் இரவில் வாய் புலம்பினார். அதுவும் இங்கிலிசில் சுத்தமாய் ஒரு வார்த்தை புரியாது.

ஒருமுறை கட்டிலில் எழும்பி இருந்துகொண்டு “ரதி இருந்தால் ஒன்றும் இப்படி நேர்ந்திருக்காது” என்றார்.

பின்பொரு நாள் “இந்தக் கள்ளர் இனி எனக்குப் பென்சன் தராங்கள், எனக்கு அவங்கடை

பென்சனும் வேண்டாம் மசிரும் வேண்டாம். என்னை ரயிலேற்றி ஊருக்கு அனுப்பிவிடு" என்றார்.

அவர் யாரிடம் பேசுகிறார், என்னிடமா? அவர் என்னிடம் நேரில் கேட்கத் தயங்கும் விசயங்கள் இப்படி இரவில் அவரறியாது நெஞ்சிலிருந்து வெளியில் கொட்டுகின்றனவா?

தமிழ்த்தேசிய விடுதலைக்கான போர் உக்கிர மாகி வடக்குக் கிழக்கில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுப்போன விசயம் ஒன்றும் அவருக்குத் தெரியாது போலுள்ளது.

வருணன் இப்போது நிறையவே சிகரெட் பிடிக்கிறான்.

"எப்படி உனக்கு எப்பிடிடா மாஸ்டர் முன்னால சிகரெட் பிடிக்க முடியுது?"

"அவர் உனக்குத்தானே கண்ணா மாஸ்டர்... ·ப்டர் ஓல் டிறோயிங் மாஸ்டர்... எனக்கு வண குப்பு ஓர் சுப்புதானே?"

"அதுவும் சரிதான்."

நான் சிகரெட் பிடிக்காதேயென்று எப்படி அவனை வற்புறுத்தலாம்?

காய்ச்சல் தணிந்திருந்த ஒருநாள் மாஸ்டர் சற்றே வெளியில் போய்விட்டு வந்தார். காற்சட்டை முன் பக்கம் நனைந்திருந்தது.

வெளி விறாந்தையில் ஜன்னலோரமாய் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக்கொண்டிருந்த வருணன் அவர் கோலத்தைக் கண்டுவிட்டு தலையில் அடித்துக்கொண்டு வெளியே ஓடினான்.

மாஸ்டருக்கு ஒன்றும் புரியவில்லை. கொஞ்ச நேரம் விழித்துக் கொண்டிருந்துவிட்டுக் கேட்டார்:

"வாட்ஸ் றோங் வித் யுவர் ·ப்றென்ட்?"

"நந... நதிங்... நதிங் சேர்... ஹீ இஸ் கோயிங் அவுட் டு மீட் சம்பொடி... அன்ட் ஹீ வில் பி பாக் நௌ."

ஆனால் இரவு அறைக்கு வருணன் திரும்ப வில்லை. மாஸ்டர் இரவு து¡க்கம் வராது படுக்கையில் புரண்டுகொண்டிருந்தார். மனோநிலை பாதிப்பின் முதற்குறி து¡க்கமின்மை.

அடிக்கடி வாய் புலம்பினார்.

"எவ்றிதிங் சேஞ்கட்"

"அவளிருந்தால் இந்தச் சீரழிவில்லை."

"ரதி...! ரத்தி...!

அமரனும் மாலதியும் பள்ளிக்கூடத்தாலே வந்திட்டாங்களா?

வந்திட்டா அவங்களை டோன்ட் லெட் தெம் இன்டூ மை ர்ட் று¡ம்... ல் த பெயின்டிங் ¦ஐட் ரூ டிறை."

அடுத்த நாள் ஒரு வியாழக்கிழமை. அலுவலகத்தில் பார்த்து வருணனைச் சமாதானப்படுத்த வேண்டும். அலுவலகம் சென்றதும் அவனைத் தேடினேன். பத்துமணியாகியும் அவன் வரவில்லை. அவனது டிபார்ட்மென்டில் விசாரித்தேன். அவன் வியாழனும் வெள்ளியும் விடுப்பு எடுத்திருப்பதாகச் சொன்னார்கள்.

ஷஎனக்குச் சொல்லாமல் இப்படி எதுவும் செய்யமாட்டானே?'

நானும் அவனுக்கு கொடுத்த அலுப்பும் கொஞ்சம் ஓவர்.

மாலை பணி முடிந்ததும் அலுவலகத்தால் நேரே ஹொட்டலுக்குப் போய் மாஸ்டருக்கான சாப்பாட்டோடு காலையில் அவருக்காக ஸ்பெசலாக ஓர்டர் பண்ணிய மிளகு ரசத்தையையும் எடுத்துக்கொண்டு அறைக்குத் திரும்பினேன்.

அறைக்குள் மாஸ்டரைக் காணவில்லை.

சில்வாவை விசாரித்தேன், 'தான் காணவில்லை' என்றான்.

'எங்கேதான் போவார்... கடற்கரைப்பக்கமாக எங்காவது சுற்றிவிட்டுத் திரும்பி வருவாரென' எதிர்பார்த்தேன்.

அவர் வரவில்லை.
மறு நாள்
மறு நாள்
மறு நாள்

மறு நாள்... ஊகூம்!

ஒரு வாரமாயிற்று. ஆளைக் காணவே காணோம். அவர் மைத்துனர் ரமணிக்குப் போன் பண்ணினேன்.

“என்ன மறுபடி காணாமப் போயிட்டானா... லெட் ஹிம் கெட் லொஸ்ட்!” என்றார் வெகுசாதாரணமாக.

சம்பளம் எடுத்துக்கொண்டு வருணனிடம் போய் மாஸ்டர் காணாமற்போய்விட்டதைச் சொல்லி அவர் வருகையால் அவனுக்கு ஏற்பட்ட தொந்தரவுகளுக்கு மன்னிப்புக்கேட்டுக்கொண்டு அப்படியே அவனைச் சைனீஸ் றெஸ்றோறன்ட்டுக்குக் கூட்டிப்போய் ·ப்றைட் றைஸ், சைனீஸ் பியர் எல்லாம் வாங்கிக்கொடுத்து குளிர்த்திசெய்து அறைக்கு மீளவும் கூட்டிவந்தேன்.

அவன் முன்னை மாதிரியே விசிலடித்துக் கொண்டு வெகுசீக்கிரமே இயல்புநிலைக்குத் திரும்பியிருந்தான். போஸ்டில் வந்திருந்த குமுதங்களை வாஞ்சையுடன் படித்தான். ஷரம்பாவுக்கு அநியாயச் சதைபோடுது, சள்ளையிலும் முன்வயித்திலும் மடிப்புகள் வந்திட்டுது, படச்சான்ஸ¥கள் பறக்கப்போகுதேயென்று’ வெகுவாக வருத்தப்பட்டான்.

சில நாட்கள் பிரிவு எமக்குள்ளான கர்‘¢ப்பை அதிகப்படுத்தி இருந்தது. அதன் நிமித்தம் அவன் இரவு பருக மென்டிஸ் ஸ்பெ‘ல் வாங்கினான் . நான் டேஸ்டுக்கு முகம்மதிய ஹொட்டலில் இறைச்சி றோஸ்ட் வாங்கினேன்.

அதை டி- ஒன்றிலிட்டு, கழுவி உலர்ந்த கிளாசுகளை டீபோயில் தயார்பண்ணி வைத்துவிட்டு, எமது சிற்றொழுங்கை முக்கிலிருக்கும் பெட்டிக்கடையில் கொக்காகோலாவும் ஐஸ¥ம் வாங்கிவர செருப்பை மாட்டிக்கொண்டு கதவைத் திறந்தேன்.

அங்கப்பிரதட்சனை பண்ணிவிட்டு எழுந்துவரும் அடியாரின் திருக்கோலத்தில் புன்னகையோடு நின்றிருந்தார் சிவானந்தன் மாஸ்டர்.

பதிவுகள் மார்ச் 2003 இதழ் 39

10. ஹார்ட் அட்டாக் - கடல்புத்திரன் -

சரவணனுக்கு தலை கிறு கிறுவென சுற்றுவது போலவிருந்தது.பசி மயக்கம் வேறு, களைத்து விட்டதாக இருக்கலாம்.4 ரைவிங் கிளாஸ் எடுப்பதுக்குள்ளே சோர்ந்து போனான்.ஒரு கிளாஸை கட் பண்ணி விட்டு"நாளைக்கு பார்க்கலாம்"என்று விட்டு, வீட்டுக்கு வந்திருந்தான்.தலைக்குள் ஒரு யுத்தம் நடப்பது போலவிருந்தது.தலையை ...பிய்ப்பது போல இடித்தது.அவன் சலரோகப்..பிறவி..,(பரம்பரை)அது 40 வயதிலேயே வந்து விட்டது. பிரசர் வேறு,.சமன்நிலை தப்பிய நிலை.தையனோல் 2 யை எடுத்து தேத்தண்ணியோடு விழுங்கினான்.

'மனுசன்' சனிக்கிழமையும் பாராமல் வேலைப்பார்க்கிறதில் .. வசந்திக்கு அவன் மேல் கவலைதான்.அது அன்பாகவும் சமயத்தில் பிரவாகிக்கச் செய்தது.கல்யாணம் கட்டியபிறகு,நடத்தைகளை மாறி விடுகிறது தவிர்க்க முடியாதாகி விடுகிறதே!. உடம்பை வருத்தி, வருத்தி உழைக்க தோன்றிவிடுகிறது.மனைவி,பிள்ளைகள் ..நினைப்புகளே, சதா துரத்துகிறன. ..வெறும் டபிள் டபிள் கோப்பியோடு.. இன்னும் 2-3 கிளாஸ்களை எடுத்து பழக்கி விட்டே வருகிறான். ஆனால்,இந்தவாழ்க்கை முறை, நண்பர்களை அறவே..தூரத்தி விட்டிருக்கின்றன. பெருமூச்சு விட்டான்.பெண்களால் புரிந்து கொள்ள முடியாத பல விசயங்கள் கிடக்கின்றன.சுபாவங்களும்,தனிப்பட்ட உரிமைகளும் பின்னி பிணைந்து சிக்கலாகி போய் விட்டிருக்கின்றன. பெண் மனைவியான பிறகு, அவளின் சாதாரண நடத்தைகள் அசாதாரணமாக மாறிவிடுகிறன.
அவனிலும்..கூடத்தான்.ஊரிலே , திரிந்த.. வாசு, திலகன்..எல்லோரும் கனடாவில் தான் இருக்கிறார்கள்.அவர்களுடனும் வசந்தி முறை கிறைகளோடு தான் பழகணும் என்று அவனை கட்டுப்படுத்துகிறாள்.நண்பர்கள் அவனைப்பார்க்க வருகிறபோது வெறும் கையோடு வருவதை அவள் மட்டுமல்ல,பிள்ளைகளும் விரும்புகிறார்களில்லை.

வாசுவை,திலகனை அவனும் கூட போய் பார்ப்பதில்லை.அவர்கள் வீட்டிலும் முறை கிறை புகுந்து விட்டது .இவனுக்கும்..அங்கே சிரிப்புக்கு இடமாகியிருக்கிறது. கனடாவில்.. நட்புக்கு..குட் பை தான் ;இடமில்லை.கோப்பிக்கடையில்,வீதியில், பஸ்சில் சந்தித்தால் உண்டு.அல்லது புதிய சாதிகளாக உருவெடுத்து இருக்கிற 'மதரீதி'யான பழைய மாணவர் குழுக்களில்(இந்துக் க்ல்லூரி,சென் ஜோன்ஸ்..), ஊர்க்குழுக்களில் சந்தித்தால் உண்டு. கார் வாங்கியபிறகு ,அது கூட குறைந்து.. வேற அலுவல்கள் கூடி விட்டன. ஒவ்வொருகுளிர் காலம் வருகிறபோதும் புதிய தலையிடிகளும்.. வருத்தங்களும் கூட கூட வருகின்றன.வந்து 14-15 வருசங்களாகிவிட்டன.அவனுக்கு இன்னமும் குளிர் பிடிக்கவில்லை;பழகவில்லை. அப்பரின் டி.என்.எ இலே தான் பிரச்சனை இருக்கவேண்டும் என்று படுகிறது.ஆனால், வசந்தியிலே.. ஆச்சரியம்!அவள் தாக்குப்பிடிக்கிறாள். குளிரை கரைக்கக்கூடிய ஒரு ஓமோன் சுரக்கிறதாகப் படுகிறது.சதுரங்கம் விளையாடுகிற இக்'காலநிலை'களால் நாரி, முதுகு,தோளில் குளிர்

பிடிக்காமல் இருக்க கவனமாக பார்க்க வேண்டியிருக்கிறது.இல்லாவிட்டால்,அங்கே வலி, இங்கே வலி என வாட்டி எடுத்து விடுகிறது. பேய்க்குளிராக கிடக்கிறது; நாளை இப்படியே கிடக்கும் என எதிர்ப்பார்க்க முடியாது.கனடியனைப்போல வாழ முடியவில்லை. வெப்ப உடையணிவதால்,உடம்பு அவிகிறது,கழற்றி எறிய..,குளிர் பிடிக்கிறது.இப்படி அவன் பலதடவை உடம்புப்பிடிப்புகளால்அவஸ்தைப்பட்டிருக்கிறான்.

கடும் குளிரில் சாதாரணமாக யன்னலை சிறிது திறந்து விட்டு கூட அவனால் படுக்க முடிவதில்லை.ஆனால்,அப்படிப் படுத்தால் தொண்டையைப் புண்ணாக்கிவிடும்.அதனால் காற்று ஈரப்படுத்தி ஒவ்வொரு வீடுகளுக்கும் அவசியம் வேண்டும். அதை இயக்கிவிட்டால்,காற்றை ஈரப்படுத்திக் கொண்டிருக்கும். இம்முறையும், எப்படியோ பிடிப்பு பிடித்து விட்டது.அது,

வழக்கத்திற்கு மாறாக, தாடையோடு கழுத்து வரை நீள...ஓடி ஒருவேளை இல்லை,பலவேளை 'ஸ்ரோக்'காகவிருக்குமோ ?பயந்துதான் விட்டான்.தலையில்சூடு ஏற வாய்ப்பகுதியில்(மேல்,கீழ் அண்ணப்பகுதியெல்லாம்) 'நோ'வது அவனுக்கு சாதாரணம்.இது வேற மாதிரியாக ..!வசந்தி அவன் படுகிற அவதியைப் பார்த்து விட்டு,"நான் பஸ்சில் போகிறேன்"சொல்லி விட்டு போய்யிருந்தாள்.வழமையாக அவன் தான் காரிலே கொண்டு போய் விடுகிறவன்.இங்கே,அவளைப் போல எத்தனையோ.. பேர் குறைஞ்ச சம்பளம் என்றாலும்,வேலைக்குப் போறார்கள்.எவ்வளவு முன்னேறிய நாடாகவிருந்தாலும்,பொது வேலையாளர்களைப் பொறுத்தவரையில்...(நிறைய) அநீதிகளே நிலவுகின்றன! பெண்களுக்கு..என்றால் இன்னும் கொஞ்சம் கூட எனலாம்.சமத்துவம் அளிக்கப்படுவதென்பதெல்லாம் வெறும் பேச்சுக்களில், மீடியாக்களில் மட்டுமே .கனடா அரசு, மினிமம் சம்பளம் இவ்வளவு.. என நிர்ணயித்திருக்கிறது.மாகாண அரசு அதை 6$,7$,7.50$... என அறிவிப்பதோடு சரி. மற்றைய விசயங்களில் எல்லாம் நுழைந்து பார்ப்பதில்லை.அவை எல்லாம் யூனியன் வேலைகள் என்கிறது.சிறிய கொம்பனிகளில் 80%மானவைகளில் யூனியன்களே இல்லை.அரச கட்டாயம் அவர்களுக்கு கிடையாது.எமக்கு மலையக தமிழர்களை ஒத்த ஒரு அரை அடிமை- வாழ்க்கை கிடைக்கிறது,ஆனால் அவர்களுக்கில்லாத சில (கட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ) வசதிகள், வாய்ப்புகள் வேலையால்கிடைக்கின்றனஎன்பது தான் ச்¢றிய முன்னேற்றம். பற்களுக்கான செலவுகள் இங்கே,பொலிஸ் காரர் தார டிக்கற்றுக்களைப் போலவே.. அதிகமானவை. பொதுவாக வங்கிகளின் காப்புறுதிகளில் பற்செலவுகளில் 85% த்தை அவர்கள் பொறுப்பேற்கின்றன .அங்கேயே குடும்ப காப்புறுதியை பதிந்திருக்கிறான்.அதற்காக அவனுடைய சம்பளத்திலிருந்து சிறிய தொகை கழிக்கப்படுகிறது.வங்கி குறிப்பிட்ட ஒரு தொகையை அவனுக்காக கட்டுகிறது.இப்படி காப்புறுதிச் சமாச்சாரங்கள். சலுகையளிப்பவர்களுக்கு.. எப்பையுமே வாங்குகிறவர்கள் விசுவாசமாகவிருப்பது கர்ணன் காலத்தில் இருந்து தொடர்கிற ஒரு தர்மசங்கடமான நிலை.எனவே,நம்மவர்கள் வேலைக்கு அடிமையாகிப் போய்யிருக்கிறார்கள்.இங்கத்தைய தொழில் தார கடவுள்கள் நல்ல சக்திகளாகவிருந்து

விட்டால்.. பிரச்சனைகள் இல்லை.,. லாபம் சம்பாதிக்கிற சக்திகளாகவிருந்து விட்டால்..நிரந்தரமாக குறைஞ்ச சம்பளம் தான்.பணக்கார நாட்டு ஏழைகளாக வாழ்கிறோம்.வாழ்க்கைச்செலவு கூடக், கூட இங்கே,வீடுகள் அற்ற ஆட்கள் தொகையும் கூடிக்கொண்டு போகிறது.அதற்கான 'எதிர்ப்பு ஊர்வலங்கள்' அடிக்கடி நகரத்திற் கூடாக வந்து, பார்ளிமெண்ட்க்கு முன்னால் கூடுகின்றன.மற்றைய..., விடுமுறைப்பணம்,லாபத்தில் 1% (போனஸ்)பகிர்ந்தளிக்கப்படுவது எல்லாம் வெறும் கண்துடைப்புக்களே.ந¢றைய தொழிச்சாலையை நம்பியிருக்கிற எல்லா அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் குறைஞ்ச சம்பளத்தில் வேளையாளர்கள் தேவைப்படுகிறார்கள்.ஆனால் அவர்களுக்கு குடியுரிமையை அளிக்க.. விரும்புவதில்லை.காரணம்.. அரசியலில்,நுழைந்து விடுவார்களோ; அரசியல் கைமாறுவதற்கு இடம் கொடுப்பதாகிவிடுமோ என்ற பயங்கள்.மலையக தமிழர்களின் குடியுரிமை பறிப்பு,தமிழ் மக்களின் 2ம் பிரஜாவுரிமை விசயங்கள் எல்லாம்...இலங்கையைப் பொறுத்த..வரையில் அரசியல் விவகாரங்களே!கனடா கொஞ்சம் மனிதாபிமானமாக...குடியுரிமையை அளித்திருக்கிறது என்பது உண்மை தான்.ஆனால்,அதற்குள்ளும் ஒரு பிடி வைத்திருக்கிறது.கிரிமினல் என்று எவரையும் புறூப் பண்ணுறபட்சத்தில்'அதை' அவர்களால்பறித்துக்கொள்ளவும் முடியும். திருப்பி அனுப்பி விடவும் முடியும்.மக்களோடு நெருங்கியிருக்கிற மாகாணப்பொலிஸ் பகுதியில் நிறபேதம் நிலவுறதாக பிரபல பத்திரிக்கை ஒன்று இங்கே, இலேசாக 'குற்றம்' சாட்டியிருக்கிறது.இதே மாதிரியாட்களே எல்லா அரசியல் அமைப்புகளிலும் இருப்பார்கள். நிறவாதம் எப்பையும்,எந்த நாட்டிற்கும்.. நேர்மையான ஒன்றில்லையே!.கணக்குகளின் கூட்டல்களை(பாதிப்புக்களை) சின்னப் பிள்ளைகள் கூட..போட்டுப்பார்க்க முடியும்.இலங்கையும், இவர்களை கொப்பியடிக்கிற நாடுகளில் ஒன்றுதான்.

6$கூலியில், வேலையில் சேர்ந்தவள், 5 வருசங்கள் ஓடி விட்டன.8$சம்பளமே பெறுகிறாள்.பெண் என்பதாலும்,வருசத்தில், மில்லியன் லாபம் பெறதுடிக்கிற தொழில் அதிபர்கள் என்பதாலும் ..முன்னேற்றமற்ற தனிப்பட்ட நிலமைகள்.ஆண்ணுக்கும் கூட அதே நிலை தான்.வசந்தி உழைக்கிற காசை.. ,அவன் தொடுவதில்லை. வீட்டு வாடகை கட்டுப்பாடற்று உயர்ந்து கொண்டு போனாலும்..தன் செலவிலே சமாளிக்கப் பார்க்கிறான்..அப்படி,பல்லைக் கடித்துக் கொண்டு இருந்ததால் தான்,அவளால் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஒரு தடவையாவது யாழ்ப்பாணத்துக்கு போய் வரக்கூடியதாகவிருந்தது.அதோட ,அவளின்5 வருசசேமிப்பும்...அவுட்!இப்ப,"ரதிக்கு சீதனம் சேர்க்கணும்" என்கிறாள்.அவனுக்கு சிரிப்பு வருகிறது.இங்கே'அகதி'யின் சுறுசுறுப்பில் எறும்பு கூட தோற்றுப்போய் விடுகிறது.

சரவணன் பெரிதாக படித்தவன் இல்லை.வசந்தியைகைப்பிடித்த பிறகு, சித்திரலேக்கா மாமி,'தான் வேலை செய்கிற வங்க'யிலே ... வேலைக்கு இடமிருக்கிறது என்று விண்ணப்பிக்கச் செய்திருந்தார்.மெயில் பகுதியில் பின்னேர வேலையில் தற்காலிகமாக சேர்ந்து,இப்ப,நிரந்தமாகி ... ஒரளவு

பரவாய்யில்லையாயிருக்கிறான்.தற்போதைய சம்பாதியத்தில் 2 அறை அப்பார்ட்மெண்ட் ஒன்றும் வாங்கி, மாசத்தில் மோர்க்கேஜ் கட்டக்கூடியவனாக.. உயர்ந்திருக்கிறான். குளிர்ப்பிடிப்பால், இண்டைக்கு வங்கியிலே வேலை செய்வது கூட கஸ்டமாகவிருக்கப் போவதாகப்பட்டது.'யாழ்ப்பாண வெய்யிலுக்கு பழக்கப்பட்டுப் போன உடம்பு' கனடாவுக்கு பழக்கப்படுகிறதேயில்லை,என்ன சனியனோ!'வெறுத்துக்கொண்டான். வேலையால் வந்த வசந்தி"இன்றைக்கு வேலைக்கு போகவேண்டாம் டாக்டரிடம் காட்டுங்களன்" என்றாள். அவர்கள் தார மருந்து, மாத்திரைகளால் இந்த பிடிப்புக்களை ஒன்றும் செய்ய முடிவதில்லை.அவளுக்கு சொல்லி புரிய வைக்க முடியாது."டாக்டர் குடுக்கிற மருந்தால் தான் மாறுகிறதுது"என்று அடம் பிடிப்பவள்.வெளிய,அலைய பஞ்சியாய்யுமிருந்தது.ஏதாவது சொன்னால்,"நீங்க படிக்கயில்லை ,அதனாலே தான் ஒன்றும் புரியுதுயில்லை"என்று எரிந்து விழுவாள்.அவளின் குத்தல் பேச்சில்.. பிரியமும் இருக்கத்தான் செய்கிறது.ஆண்,பெண் உறவை என்னவென்று சொல்வது?இருவரின் அடையாளங்களும்... சமத்துவமானவைதானே!அப்படி நினைப்பது தான் ஆரோக்கியமாக இருக்கிறது. அவனும் வசந்தியின் மேல் பித்தாகித்தானிருக்கிறான்.ஆனால்,அவளின் முக முறிப்பு அவனை அப்செட்டாக்கி தான் விடுகிறது.

சேர்ட்டை மாட்டிக்கொண்டு வெளிக்கிட்டான்.டாக்டர் வெறும் 'அட்வில்' மட்டுமே 'எடுக்கச்சொன்னார்."எப்படியப்பா இருக்கிறது"நெற்றியில் கை வைத்து கேட்டபோதுஅந்த அன்பில் கிறங்கிப் போய்யிருந்தான்."தேத்தண்ணி போட்டா கொண்டு வாருமன்"என்றான்.அவனுக்கு அந்தப்பிடிப்பை விட நேற்று வாங்கிய கார் டிக்கற்றுக்கள் தான் அதிகமாக தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருந்தன.அதை அவளிடம் சொல்லவில்லை.பருந்துகள் கோழிக்குஞ்சைப் பிடிப்பது போல, இங்கே,அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் டிக்கற் கொடுக்க ஒளிந்து காத்து நிற்பார்கள்.பொலிசாய்யிருக்கட்டும், பாக்கிங் பிடிக்கிற ஆளாய்யிருக்கட்டும், ரைவிங் பழக்கிறபோது பிடிக்கிற லைசென்ஸ் கொமிசனர் ஆளாகவிருக்கட்டும்..எல்லாருமே பருந்துகள் தான்.பொலிஸ் கையில், ரேடார் கருவி வைத்திருக்கும்.இவனுடைய ஆள்,பிடித்த போது,' பழக்கிற காரில்..அது பிழை..இது பிழை .'.என்று இரக்கமற்று எழுதி பல டிக்கற்றுக்களைத் தந்து விட்டு போய்யிருந்தான். மனிதாபிமான ஒபிசர் என்றால் ' முக்கியமானது'க்கு மட்டும் ஒரு டிக்கற்றைத் தந்து விட்டு மற்றவற்றுக்கு ...கவனி.. என்று எச்சரித்து விட்டுப்போய்யிருப்பார்.இவன் வேலைக்கு புதியவன்..போலும்...!.இவன் எழுதியது(பலமடங்கு) ஓவராகவிருந்தது தான் தலையிடியைக் கொடுத்துக்கொண்டுயிருந்தது.சுமார் 500$ மட்டிலே!.நாமோ அகதியாய் வந்தவர்கள்.ஒன்றும் செய்ய முடியாவிட்டா கொஞ்சம் எங்களுக்குள்ளே ஒப்பாரி வைக்கவும் தெரியும்;இவங்களை கொஞ்சம் உய்க்கவும் பழகியிருக்கிறோம்.கோட்டிலே, ஒபிசர்,ஜட்ஜ் எல்லோரும் ஒரு டீம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விசயம்.கோர்ட் தொடங்க முதல்,டிக்கற் தந்தவர்," குற்றம் என்று ஒப்புக்கொள்,பைன் மட்டும் கட்ட வரும்"என்று ஆலோசனை வேறு தெரிவிப்பார்.ஜட்ஜ் ,"குற்றமா? இல்லையா ? "என்று கேட்பார்.'ஓம்!' என்றால், சரி(F)"பைன்னைக் கட்டி

விட்டுப் போ"என்பார்.அது, அரைவாசித்தொகைக்கு மேல வரும்.அதையும் தவிர்ப்பதற்கு முயல்கிறவன். அவன்,2-3 மொழிபெயர்ப்பாளர்களுக்கு பழக்கியதில்,.. . நண்பர்களாகியிருந்தார்கள். அடிக்கடி, ஆச்சியிட பேச்சுக்களை கேட்டதாலே.. மற்றவர்களை கவரக்கூடியவனாகவிருக்கிறான்.அவர் கொள்கைகளை கடைப்பிடிப்பவனாக இருக்கிறான்._ .., 'வயதில், சிறியவனாகவிருந்தாலும், வயசானவர்களாகவிருந்தாலும்..கூட தனக்கு கீழானவனாக பார்ப்பதில்லை.உதவி என வருகிறவர்களுக்கு..குறுகிய-கொச்சைத்தனமான நினைப்புக்களை தள்ளி விட்டு உதவவே முயல்கிறவன்.கடன் வாங்கிய நண்பர்களிடமும் கறாகக்கேட்பதில்லை'.இவை எல்லாம் வாழ்க்கையை செம்மைப் படுத்த உதவுகின்றன.ஆச்சி நிய வாழ்வில் வறுமையோடு போராடியவர்.எங்க அப்பாவோடு.,.அவருக்கு பல பிள்ளைகள்.இருந்த போதும் அயல் அட்டைகளோடு பிழங்கிய விதத்தால்.அன்பால் வென்றவர்.அவர்களின் பல பிள்ளைகள் இப்ப, கொழும்பில் நல்லாய் இருக்கிறார்கள்-

முந்தியும்,பெரிய டிக்கற் ஒன்று கிடைத்த போது, மொழி பெயர்ப்பாளர்களே, வழிமுறைகளைக் கூறி, கைகொடுத்தார்கள்.எந்த டிக்கற்றாகவிருந்தாலும் முதலில் கோட்டில், கேசை பையில் பண்ணவேண்டும்.எந்த கோர்ட்டையும் நாம் தெரிவு செய்யலாம்.அவர்கள் தெரிவிக்கிறதில்..தாக்கல் செய்யிற போது"ஜயா,எனக்கு ஆங்கிலம் அவ்வளவாக தெரியாது.மொழிபெயர்ப்பாளர் வேண்டும்"என்று சொல்ல வேண்டும்.அச்சேவை எல்லா இடங்களிலும் இலவசம்.ஒவ்வொருகோர்ட்டும் 2-3 மொழிபெயர்ப்பாளர்களையே வைத்திருக்கிறார்கள்.பல்லின நாடாகவிருந்ததால், கன மொழிபெயர்ப்பாளர்களை அவர்களால் தெரியமுடியவில்லையோ?.அவர்களிடமும், குறிப்பிட்ட வீத நிற பேதமும், உணர்ச்சியில், ரத்ததில் கலந்து போயே இருக்கிறனவோ ஏதோ ஒன்று. அவர்கள் தெரிந்த திகதியிற்கு ..இவர்களில் ஒருவர் புக் பண்ணப்படுவார்.அந்த நாளில், இவர் போன் பண்ணுவார்.. "புள்ளைக்கு சுகமில்லை, வர முடியாமல் இருக்கிறது "என்று.குறைஞ்ச சம்பளத்தில் 2-3 மணி நேரத்துக்காக கூப்பிடுறதால்...,அவர்களாலும்."இல்லை வந்து தான் ஆகணும் " என்று கட்டுப்படுத்த முடிவதில்லை போலும்.பிறகு,என்ன.?.கேஸ் திரும்ப, பின்னுக்கு போகும்.இப்படியே 3 தடவைக்கு மேல.. வந்தது என்றால்..,ஜட்ஜ்,'கேஸ் தள்ளப்பட்டு விட்டது'என்று போகச் சொல்லி விடுவார்.அவர்களுக்கும் தெரியும் .இது ஒரு சிறிய (சதுரங்க) விளையாட்டு என்று.என்ன,அவனுக்கு கொஞ்சம்.. பேய் ..அலைச்சல்!இந்த முறையும்..விசுவாசிகளைச் சந்திக்க வேண்டும்.அலைய வேண்டியிருக்கிறது.விஸ்கியை கொஞ்சம் கிளாஸிலே எடுத்து, பால்கனியில் நின்று குடித்தான்.

"விட்டிட்டேன்,என்றீர்!என்ன திரும்ப தொடங்கிட்டீர்"திறந்த வெளி வாராந்தாவிலே ,புகைக்கிறதுக்கு போறமாதிரி களவாய் போய், குடித்ததையும் கண்டுவிட்டு பின்னாலே வந்து விட்டாள்.கனடாவிலே, குடியை விடவா முடியும்!இம்மாதிரி நாடுகளில், ரத்ததிற்குப் பதிலாக குடியை உடம்பிலே ஏற்றிக்கொண்டால் தான் வாழவே முடிகிறது.அது

எங்கே, ஊரவர்களுக்கோ-வசந்திக்கோ.. புரியப்போகிறது!"இனிம குடிக்கேலையப்பா இது தான் கடைசி"பொய்ச் சத்தியம் பண்ணினான்.பக்கத்தில் இருக்கிற விண் உயர்ந்த கொண்டோக்களைப் பார்த்தான்.கொஞ்ச நேரம், சுதந்திரப் பாதையில்(கைவேயில்)பறக்கிற கார்களையும் வேடிக்கைப்பார்த்தான்.சின்ன மனிதர்களாக திரியும் உயிர்ப்பான தரையையும் பார்த்தான்.ஊரிலே, இருப்பது..போல திரிகிற..ஆடு, மாடு..,கோழிகளை..மற்றும் கிளி,பிலாக்கொட்டைக்குருவி,மாம்பிலத்திகளை..இங்கே காண முடியாது.புறாக்களையே அதிகமாக..பார்க்கமுடிகிறது.விரல் நுனியை சிகரட் சூடு சுடுறபோது ஆஸ்ரேயில் அணைத்துவிட்டு உள்ளே வந்தான்.சமூகவாழ்க்கையைத் தொளைத்து விட்டு வாழ்கிற அகதிமனிதர்களை இங்கே,அதிகமாக நோய்யும்,தனிமையுமே சூழ்ந்து கொள்கின்றன.

அவன்,கனடாவில் கால் வைத்த போது ,அகதி அந்தஸ்து..கிடைப்பதில்,பல..பிரச்சனைகள் நிலவியிருந்தன.விண்ணப்பங்கள் அதிகமானதலோ அல்லது மாகாண அரசின் அசமந்தப்போக்காலோ..சரிவரப்பார்க்கப்படாது (முதல் வந்தவர்களுடையதுகளே..)பேப்பர்கள் தேங்கிப்போய்க் கிடந்தன.லாண்டட்பேப்பரும் கிடைக்காமல்,தற்காலிக அனுமதிப்பத்திரமும் கிடைக்காமல்..சோம்பித்திரிந்ததில்..மூளை குழம்பிப்போயிடும் போலவிருந்தது.அகதி, 2ம் பிரஜை வாழ்க்கை எப்பவுமே சில்லெடுப்பானவை தான்.அவனுடைய தூரத்து மாமா ஒருத்தர் ஸ்பொன்சர் பண்ணின பிறகே,வெளிநாட்டுக்காரனின் இடியப்பச்சிக்கலான ஸ்ரெஸ்சிலிருந்து ஒரளவு விடுபட முடிந்தது.இருந்தாலும்,கனடா மற்றைய நாடுகளை விட கொஞ்சம் பரவாய்யில்லைதான்.ஆச்சியை ஒரு தடவை நினைத்துக்கொண்டு,வேலை தேடும் முயற்சியில் இறங்கினான்.கோப்பையடி வேலையில் 2 வருசம் ஓடின பிறகு,கார் ஓடும் அனுபவமும் இருந்ததால்,இத்தாலிய கேட்டரிங் கொம்பனியில்.. பரவாய்யில்லை மாதிரியான வேலைக் கிடைத்தது.ஆனால், காலநேரம் தெரியாத வேலை.கோப்பையடியும் இருக்கத்தான் செய்தது.அதோடு..உணவுகள்-அங்கிருந்த இத்தாலியக்கிழவர்களுடன் சேர்ந்து தயாரித்தல்,வானில் ஏற்றி பல பார்ட்டிகளுக்கு கொண்டு செல்லல், கிழவர்களோடு சேர்ந்து... உணவை பரிமாறல்,முடிய இருந்து கிளின் பண்ணிக்கொடுத்தல்,இவர்களின் சாமான்களை திரும்ப வானில் ஏற்றி வருதல்...என பல வேலைகள் இருந்தன.அவனோடு கூட,இன்னொரு தமிழ்ப்பெடியன் -சிவாவும் வேலைச் செய்தான். சமயத்தில்,அவர்களுக்கு கூட வேலையாட்கள் தேவைப்படும். முதலாளி,"யாரையாவது கூட்டி வாருங்கடா" என்பார்.அகதி நிவாரணப்பணம் பெறுகிற -கஸ்டப்பட்டுக்கொண்டிருக்கிற பல 'பெடியள்'களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர் இருவரையும் நம்பி முடியிற நேரம் ...திறப்பையும் கொடுத்து விட்டே போய் விடுவார்.பகலில் ,அவர்களோடு சேர்ந்து பகலில் முதலாளியும் வேலைசெய்வதால் நட்பானவராகவிருந்தார்.பகிடியும் விடுவார். அவருக்கு வளர்ந்த மகளும்,மகனும் இருந்தார்கள்.முதலாளியைப் பார்க்க அங்கே வருவார்கள்.தயாரித்த உணவுகளையும் ஒரு கை பார்த்து விட்டு பாராட்டி விட்டுச் செல்வார்கள்.அவர்களுக்கு தமிழ்ப் பெடியளான-அவர்களை பிடித்து இருந்தது.அன்புடன் பழகினார்கள்.வேலை எல்லாம் முடிந்து வர, காலை..2 -3 மணியாகிவிடும்.விடியும் விடியாப்பொழுதிலே,2 பியர்ரை அடித்து விட்டுப் படுக்க என்னடா வாழ்க்கை என்றிருக்கும்.சுமார் 12 -13 மணிநேரம் வேலை

செய்கிறார்கள்.10$படி தருகிறான்.120-130$படி நாளைக்கு, உழைத்தாலும்...உடம்பு ஆடிப்போய் விடுகிறது.சிவாஅடிக்கடி சலித்துக்கொள்வான்."டேய், வேற வேலை தேடிக்கொள்வோமடா"

"பேயா,இதை விட யார் நல்லபடி 'பே' பண்ணப்போறான்ரா"சரவணன்.

"குடும்ப சந்தோசம் இல்லாமல் போகிறதடா"சிவா.அது பிரச்சனை தான்.4 -5 வருசங்கள் ஓடினதே தெரியாமல் போய் விட்டதே!.'கல்யாணம் செய்யணும் ...என்ற யோசனையே வரவில்லையே'!டி.வி ஓடிக்கொண்டிருக்க ...கவுச்சிலேயே(சோபாவில்)அடிக்கடி தூங்கிப்போய் விடுவான்.நல்ல காலம் யாழ்ப்பாணத்திலே,அப்பாவும்,அம்மாவும் இருந்தார்கள்.அவனுக்காக பெண் பார்த்திருப்பதாக கடிதம் வந்தது.அவன் எந்தப் பெண்ணையும் வெறுப்பவனில்லை.படம் சுமாராகவிருந்தது.பிடித்து விட்டது.அவளுக்கு அவனைப் பிடிக்க வேண்டுமே... என்றே... யோசனையாயிருந்தது.யாழ்ப்பாணம் வரச் சொல்லி போனிலே,கதைத்தார்கள்.ஆச்சி உயிருடன் தானிருந்தார்.அவரைப் பார்க்கவும் ஆசையாகவிருந்தது.அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கார்ட்டிலே டிக்கற்றுக்களை எடுத்தான்.விசா, மாஸ்ரர் கார்ட்டுகளில் எல்லாம் கடை கடையாய் ஏறி,தேடி தேடி 2 சூட்கேசுகளை நிரப்பினான்.'கனடா மாப்பிள்ளை'யாக போய் இறங்கினான்.அங்கே, இருப்பவர்களுக்கு அவன் லட்சாதிபதியாகவே.. தெரிந்தான்.எல்லோரும் வலு மரியாதையாகப் பிழங்கினார்கள். கனடாவின் ஒரு டொலர் அங்கே 35-40 ரூபா.பராவாய்யில்லையே!அங்கத்தைய கள்ளு, தென்னை,பனைஞ் சாராயம் எல்லாம் மலிவு.சிறிது குடித்து ஆசையை தீர்ததான்.கைவிட்டு எண்ணக்கூடியளவு சிறியதொகையில் இருந்த நண்பர்களை திருவடி நிலை கடற்கரைக்கு கூட்டிச் சென்று குடி ,டேஸ்ட் என விருந்து வைத்தான்.அவர்கள் எல்லோரும் தேவலோகத்தில் மிதப்பதாக நினைத்தார்கள்.அவர்களின் ஒரிரு தம்பிமாருக்கும்... முதல் தடவையாக தண்ணீர் தெளிப்பதும்,சிறிது குடிப்பதும் நடந்தன.பெண்ணுக்கு அவனைப்பிடித்துப் போய் விட்டிருந்தது.அவன் கொண்டுப்போன 5000 டொலர் கல்யாணத்தை நடத்த,வீடியோ எடுக்க,தன்னை கொடுத்து வைத்தவள் என்று நினைக்க வைக்க ,'தம்பி,இன்னமும் எங்களை மறக்கவில்லை'என உறவுகளை கண் கலங்க வைக்க எல்லாம்... போதியதாகவிருந்தன.ஆச்சியும் "பேரன் பரவாய்யில்லை"என ஆசிர்வதித்தார்.அவனுடைய அப்பா நல்ல'ரலி'சைக்கிள் வைத்திருந்தவர்,அது களவு போய், பழைய சைக்கள் ...ஒன்றை வைத்திருந்தார்.காண்டிலில் சிறிது' கறள்'காணப்பட்டது. "ஏன்னப்பா,நல்ல சைக்கிளாய். வைத்திருக்கக்கூடாதா?". "வீண் செலவு!, திரும்பவும்..யாராவது களவெடுப்பான்,எனக்கும் வயசாகிப் போட்டுதுடா".போர்ச் சூழல்.!.அவர் பேச்சிலும் நியாயம் இருந்தது.அப்பாவைப் பார்க்க பாவமாக இருந்தது. இவர்களால்..எப்படி' தங்கள் செலவுகளை சுருக்கிக்கொண்டு.. பிள்ளைகளே உலகம்' என வாழமுடிகிறது..'நம்மாலே ஏன்?,அப்படி வாழமுடியவில்லை.'இம் முறையும் அப்பாவும்,அம்மாவும் வெளிய வர மறுத்து விட்டார்கள்.அப்பாவுக்கு ரேடியோவில், கர்நாடக இசையை கேட்பதில் பிரியம்.அப்படியே தான் இருந்தார்.

'அவளை'யும் ஸ்பொன்ஸர் பண்ணி விட்டு கனடா திரும்பினான்.அவள் வருவதில் குடிவரவு திணைக்களம் பிரச்சனைகள் கொடுக்கவில்லை.6 மாசத்திலே வந்து விட்டாள்.குளிர் காலமாகவிருந்ததால் அப்பார்ட்மெண்டிலே அடைந்து கிடக்க வேண்டியிருந்தது.உண்மையிலே,'வயசானவர்களுக்கு கனடா நல்ல நாடு இல்லை' தான்.என்னச் செய்வது?, போர்ச் சூழல்..,அவர்களை பெயர்த்துக்கொண்டு வந்தாலும்,...இங்கே, அவர்கள் வாழ்வதில்லை.பிள்ளைகளுக்கும் ஒட்டாத நிலை போகப்போக ஏற்பட்டுவிடுகிறது.ஒருத்தரை ஒருத்தருக்கு பிடிக்கவில்லை என்று சொல்வதை விட விளங்கிக்கொள்ள முடிவதில்லை என்பதே உண்மை. சிறைத்தண்டனையையே அனுபவிக்கிறார்கள .கூடவே,தள்ளாமை, வருத்தங்கள்.இங்கே, இவர்களுக்கு சாகப்போறது தெரிந்து விடுகிறது. அது அங்கே வாழ்றதை விட மோசமானது.இனவாதம் என்பது எந்த நாட்டுக்கும் கான்சர் போன்றதே,அது சிறும்பான்மை இனத்தை மட்டும் துரத்துவதில்லை,அங்கே இருக்கிற மனிதத் தனத்தையையே இறுதியில் அழித்து விடுகிறது.வசந்தி வந்து ,ஒரு வருசத்திற்குள்ளே..2-3 சோகமான செய்திகள் நடந்து விட்டன.'கடமை முடிந்து விட்டன'என்பது போல..அப்பரின்,அம்மாவின் சாவுகள்.இருவருக்குமே சலரோகம் இருந்தன.கறள் சைக்கிளால் கையில் ஏற்பட்ட காயத்தால்.அப்பரின் கை பாதிக்கப்பட்டது. விரல்களை எடுக்க வேண்டியேற்பட்டது.அவருக்கு அதில் விருப்பம் இல்லை.ஒரு வகை தற்கொலை போல..அவர் மருந்துகளை சரி வர எடுக்காது..மரணத்தை தழுவிக்கொண்டார்.அவனால் திரும்ப போக முடியவில்லை."ஒன்றுக்கும் கவலைப் படாதை"என்று கடிதம் எழுதிய அம்மா அடுத்த மாசமே 'அப்பா'வோடு சேர்ந்து விட்டார்.அங்கே,சாதாரண வாழ்வு குழம்பிப்போய் இருந்ததால்..,கவனிப்பாடுகள் குறைவாக இருந்ததாலும்,மருந்து வசதிகள் அற்றதாலும்..தவிர்க்க முடியாத சாக்கள்.அவனால் அப்பவும் போகமுடிய வில்லை.அப்பாட தங்கச்சியான பர்வதம் மாமியே எல்லாவற்றையும் முன் நின்று பார்த்தார்.அப்பா தான் மூத்தவர்.அது ஆச்சியை.. பாதித்து விட்டது.இரும்பு மனுசியாய் இருந்த அவர்,பிறகு 2-3 மாசத்திற்குள்ளேயே, இறந்து விட்டார். அழகான தீவு,ரத்தச் சேறாகவிருப்பதற்கும்,குழப்பமாகயிருப்பதற்கும்..'மனிதர்களில் நல்ல மனமில்லாதே.'. பெரிதும் காரணம்.தவிர,பழைய காலானி நாடுகளின் இன்னமும் மாற்றமில்லாத அதே அரசியல் கொள்கைகள்..சமாதானக்கொடியை பல நாடுகளில் பறக்கவிடாது செய்து விட்டிருக்கின்றன.பெரு மூச்சு விட்டான்.பராவாய்யில்லை,சரவணனுக்கு கூட ...அரசியல் தெரிகிறது.பகலிலே,அவளைக் கூட்டிச் சென்று, ஒகிப்,சோசல் இன்சூரன்ஸ் கார்ட்ஸ் எல்லாம் எடுக்க வைத்தான்.இங்கே, 2 கார்ட்ஸ்ஸ¤ம் முக்கியமானவை.குளிர் காலமாக இருந்ததால், உறவினர்கள் ,நண்பர்கள் வீடுகளுக்கு கூட்டிச் சென்றதோடு சரி.வேற இடங்களுக்குச் கூட்டிச் செல்ல முடியவில்லை.எல்லாம், அதுவும் ஒரு தடவை மட்டும் தான்..!பிறகு,பிறகு,வசந்தியும் கனடாவை புரிந்து கொண்டு விட்டாள்;வாழ பழகியும் விட்டாள்.நீண்ட காலத்தில், மூத்தவனாக..-மதி பிறந்தான்.இளையவளாக..-ரதியும் பிறந்தாள்.வருசாவருசம் பிறந்த நாட்கள் எல்லாம் குடி வகைகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டன."பிறந்த நாள் ஒன்றில், ரைவிங் பழக்கிறதையும் பழகினால்..பகலும்

ஒரு வேலையை தேடிக்கொண்டதாக இருக்கும்.சாமாளிக்க..முடியுமே."சிவாட தம்பி-மூர்த்தயின் யோசனை பரவாய்யில்லை போலயிருந்தது.அவன் ரைவிங் பழக்கிறவன்.அவன் வழி காட்ட, லைசென்ஸ்ஸையும் எடுத்தான்.இப்ப,அவன் கொஞ்சம் நிமிர்ந்த மனிதன்.ஞாபகத்திற்கு,வசந்தியின் தம்பி-பாபு எடுத்துத்தள்ளிய போட்டோக்களை அல்பத்தில் ,செருக முடியாது.வசந்தி அலுத்துக் கொள்கிறாள்.கழுத்து வரை இருந்த கடன்கள் எல்லாம் அடைக்கப்பட்டு விட்டன.சந்தோசம் வாழ்க்கையில் நிலவுகிறது.மூச்சு...விடுற போது ,40 வயதாகி விட்டது.காலம் எவ்வளவு விரைவாக ஓடி விட்டிருக்கிறது.இந்த வயதில்..மனிதன் கிழவனாகி விடுகிறான்..என்கிறார்கள்.இனி என்ன? கிழவன் தானே!ஆனால்,மனிதவியலாளர்களோ..'அது,ஒழுங்கில்லாமல் வாழ்வதால் தான் அப்படி நிகழ்கிறது'என்கிறார்கள்.குடி,சிகரட்,உடற்பயிற்சியற்ற-(மெசின் தனமான-) வேலைமுறை,சரி வர சாப்பிடாமை..குடும்ப,அரசியல்,(இங்கே வீட்டுப் பிரச்சனைகள்..) பிரசர்கள்..இவற்றால் தான் ஏற்படுகிறன என்கிறார்கள்.மனிதன் 'ஸ்மார்ட்'டாகிறது உண்மையிலே' 40 வயதிற்குப் பிறகே நிகழ்கிறது என அடித்துச் சொல்கிறார்கள்.வெளிநாடுகளில்..,அதிகமாக கிழ அரசியல் வாதிகளே அரசியலை நடத்துகிறார்கள்.அவர்கள் போர்ப் பிரியர்களாய்யிருப்பது தான்.. தலை கீழ் விகிதமாய் இருக்கின்றன.புத்தர் கண்டுப்பிடித்த ஆசைகள் தான் எல்லாம் குழப்பத்திற்கு ..காரணமோ?. 'நானும் ஒரு தத்துவவாதி'சிரிப்பு வருகிறது.

'நாம் சிரிக்கிறோம்.. என்றால், அழவும் தயாராகவிருக்க வேண்டும்'என்பது போல..,ஞாற்றுக்கிழமை போல..ரைவிங் பழக்கிக் கொண்டிருக்கும் போது,நெஞ்சு,தோள் மாட்டில்,எல்லாம் திடீரென வலி ஏற்பட்டது. மூச்சு விடுறதே கஸ்டமாகவிருந்தது."ஏழாமல் இருக்கிறது..விமல்,காரை வீட்டை விடு"என்றான்.விமலன்,கைத்தாங்கலாக..கூட்டி வர அப்பார்ட்மெண்ட் சென்றான். வசந்தி,உடனேயே,பாபுவை போனில் கூப்பிட்டாள்.'ஏதோ,பயங்கரமாக உள்ளுக்கே நடந்து விட்டது'போலப்பட்டது.ஸ்ரோக்காய் இருக்குமோ? செட்டியில்,படுத்துக் கண்ணை மூடிக் கொண்டான்.நினைப்பும்,மயக்கமாகவும் இருந்த அவனை,காரில் ஏற்றி ..ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனது..எல்லாம் சாடையான நினைவுகள்.பிள்ளைகளை அதே,கட்டிடத்திலே இருந்த விஜயா வீட்டிலே,விட்டு விட்டு வசந்தியும் அவனோட வந்திருந்தாள்.நல்ல காலத்திற்கு டாக்டர்கள் உடனே கவனித்தார்கள்.மோசமான 'கார்ட்டடாக்'என்பதை அறிந்து கொண்டு அவனை அம்புலன்ஸில் சனிபுறூக்கிற்கு அனுப்பினார்கள்.பிரச்சனையான கேசூகளை அந்த ஆஸ்பத்திரிக்கே அங்கே அனுப்புவது வழக்கம். பாபு பிறகு வாரதாகச் சொல்லி விடைப்பெற,அவள் கலங்கியபடியே அவனோடு இருந்தாள்.அவளுள்,எழுந்த பயங்கள்...?.மயங்கி விடுவேனோ?என்று பயந்தாள்.அவள்,யாழ்ப்பாணத்தில் டெலோ பெடியள் கொல்லப்பட்டு தொகை தொகையாய் போடப்பட்டதில் ஒரு பகுதியை ,தோழி வீட்டைப் போனபோது- சங்கரத்தைப்பகுதியில் இருந்த காம் வீட்டில் ,தற்செயலாய் பார்த்திருந்தாள்.கொஞ்ச நஞ்சமில்லை. 20 க்கு மேற்ப்பட்ட பெடியள்கள்.தம்பி வயசும், கிழ்ப்பட்ட வயசுமாக ...,பலர் முகங்களில்..பாலகப்பருவம் கடக்கவில்லை.அவர்களின் ரத்த

வெடில் மணமும்..நெஞ்சில் எழுந்த கேவல்களும்..இப்ப.. நினைவில் வந்தன.மனதை திடப்படுத்திக் கொண்டு கடவுளைக் கும்பிட்டுக் கொண்டாள்.இங்கே,வந்த பிறகு கூட இயக்கத்திலே..,இருந்த பெடியள் யாரையும் பார்த்தால்..'சாவை தலையில் காவிக்கொண்டு திரிகிறவர்கள்'என்ற நினைப்பே வருகிறது.இப்ப என்ர மனுசனுக்கு.."கடவுளே நீதான் காப்பாற்ற வேண்டும்".சரவணன் மயங்கியே கிடந்தான்.'கொஞ்சம் குடியையும்,சிகரட்டையும் குறைத்திருக்கலாம்..'அனுதாபத்தோடு தலையை தடவி விட்டாள்.சனி புறாக்கிலும்..அவனின் ரத்த நாளங்களில் இருந்த 2-3 ரத்தக் கட்டிகளை கரைக்க கஸ்டப்பட்டார்கள். 3 நாட்கள் வரை,ஒட்சிசன் மாஸ்க்கோடு, 'செலயின்' செழுத்தப்பட்டவாறு அப்படியே கிடந்தான். கட்டிகளை கரைத்த பிறகு, அவனின் இதயத்தசைகளில் 10 வீதம் பாதிக்கப்பட்டு விட்டிருந்தன.சரவணன் கண்ணைத் திறந்த பிறகே,வசந்தியின் பதற்றம் சிறிது தணிந்தது.அவன் எதையும் தாங்கும் மன வலிமை உடையவன்.பழைய மாதிரியே மாறி பகிடியாக ..பார்க்க வாரவயள்களோடு.. கதைத்துக் கொண்டிருந்தான்..'நிலையாமை' உண்மையை பெரும்பாலான மனிதர்கள் உணர்வதில்லை தான்.அவனும் என்ன விதி விலக்கா?.இருப்பவர்கள் மட்டும் பெரிதாக என்னத்தை சாதித்து விடப்போகிறார்?,ம்!. .எவருக்கும் சாகிறதுக்கு ஏதாவது..ஒரு காரணம் வர வேண்டி இருக்கிறது.ஒவ்வொரு ஆட்களுக்கு ஒவ்வொரு மாதிரி.அவனுக்கு இப்படி ஒரு வருத்தம்.கடவுளின் கிருபை இருந்தால்..அவனால்,பிள்ளைகளின் நல் வாழ்வைக் கூட பார்க்க முடியும்.அதற்காக.. தொடர்ந்து அழுது கொண்டிருப்பதா?.தேற்றிக் கொண்டாள்.பிறகு,அவனுள் 'பேஸ் மேக்கர்' வைக்கிறது நடந்தது.அச்சிறிய கருவி,இறந்த தசைகளின் வேலையை..மற்ற தசைகளுக்கு பகிர்ந்து இயங்க வைப்பதன் மூலம் சம நிலையை பேணியது.வீட்டை வந்து சேர 20 நாட்களாகி விட்டன.ஆஸ்பத்தியில்..அப்படி நீள இருந்தது,அவனைப் பொறுத்த வரையில்... ஒரு ரெக்கோர்ட் தான்.அங்கே, தொடர்ந்தும் சில பயிற்சிகளை வாழ் நாள் முழுதும் செய்யவேண்டும் என பயிற்றுவித்தார்கள்.அந்த நாட்களுக்குள்,வசந்தி ...வேலை,பிள்ளை,அவன்..என நிறையவே கஸ்டப்பட்டு விட்டிருந்தாள்.அவனும் ,பழைய உற்சாகத்தில்,குறிப்பிட்ட வீதத்தை இழந்தது இழந்தது தானே!.
இனி, ,இதோடேயே,வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.ம்!,"கடவுள் 'ஒவ்வொரு தீமையான விசயங்களிலும் ஏதோவொரு நன்மையை ஒளித்து வைத்திருக்கிறான் ..' என்னிலே,என்னத்தை.. வைத்திருக்கிறானோ?"சரவணன் தேடலுக்குள்ளாகி இருந்தான்.

பதிவுகள் ஏப்ரில் 2003 இதழ் 40

11. வெட்கம் - க. அருள்சுப்பிரமணியம், திருகோணமலை -

பல வர்ணப் பூக்கள் து¡விய பார்டர் அற்ற '¢பான் சாறி. சமான நிறத்தில் இறுக்கமான இரண்டுக்கு இரண்டு பிளவுஸ். பின்னணிக்கு ஓரளவு ஒத்துப் போகும் நிறக் குடை. பேப்பரில் மடித்த பவுடர், கொஞ்சம் சில்லறை, சின்ன லேஞ்சி...அடங் கிய லெதர் கைப்பை. ஸ்டிக்கர் குங்குமப் பொட்டு. செந்தளிப்பான முகம். மெலிதாய் இழையோடும் நாள் பட்டுப் போன சிந்தனை ரேகை..........

"அப்புச்சி போயிற்று வாறன்"

கிணற்றடிப் பக்கமிருந்து பார்க்க அபிராமி தெருக்கதவுக் கொழுக்கியை மாட்டுவதும் விரித்த குடை வேலிக்கு மேலால் நகர்ந்து மறைவதும் தெரிய பெரிய்ய்ய........ பெருமூச்சின் ஜனனம்.

"எழுதி முடிச்சிர வேனும்"...........இரவு அரைவாசி எழுதி புத்தக றாக்கை மறைவில் வைத்த கடிதத்தை எடுத்து கைகள் விரிக்க, விட்ட இடத்தின் தொடர்ச்சிக்காக கண்கள் மேய்ந்து நகர்ந்தன.

என் பிரியமுள்ள மகள் சௌபாக்கியவதி அபிராமிக்கு

ஒரே கூரைக்குள் இருந்து கொண்டு என்ன கடிதம் என்று புதினப்படுவாய். வேறு வழி தெரியவில்லை மகளே. ஒரு கிழமையாக உன்னிடம் நேரில் சொல்ல முயன்று தோற்றுப் போனேன்.

உனக்குத் தெரியும் - எந்த விசயத்தையும் நான் உன்னிடம் சொல்லாமல் இருந்ததில்லை. சந்தோசமோ துக்கமோ என் ஒரே சொந்தத்திடம் வெளிக்காட்டாமல் மறைத்ததில்லை. இப்போது மட்டும் எனக்கு என்ன வந்து விட்டது!

எந்தத் தகப்பனும் தான் பெற்ற மகளிடம் சொல்லத் துணியாத நாகரிகமற்ற இந்த விசயத்தை எப்படி உன் முகம் பார்த்துச் சொல்வது மகளே! இந்த மூன்று வருடங்களாக ஓடாத ஓட்டமெல்லாம் ஓடி விட்டேன். ஏறாத படியெல்லாம் ஏறிப் பார்த்தேன். இறங்காத பள்ளமெல்லாம் வெட்கத்தை விட்டு இறங்கிப் பார்த்தேன். களைத்து விட்டேனம்மா. களைத்து விட்டேன். என்னால் முடியவில்லை.

செருப்புகள் தேய்ந்ததும் குடைச்சீலை வெளிறிப் போனதும் உள்ளம் கூனிக் குறுகி உடைந்து போனதுந்தான் நான் கண்ட மிச்சங்கள்.

உன் அம்மா எங்களைப் பரிதவிக்க விட்டுப் போகும் போது உனக்குப் பத்து வயது. உன் துணைக்காக ஒரு தம்பி பெற்றுக் கொள்ள ஆசைப்பட்டாள். சுகவீனம் விடவில்லை. அதன் பிறகு நீயே எங்களின் ஆண் பிள்ளையும் ஆனாய்.

உன் அம்மா என் தாய்வழியில் துuரத்துச் சொந்தம். முருகன் கோயில் பிள்ளையார் பூசையில் வைத்துத் தாலி கட்டிய அன்று வீட்டுக்கு வந்த முழு அயலுக்கும் வாழை இலை போட்டு வடைபாயாசத்துடன் கல்யாணபந்தி வைத்ததைத் தவிர வேறு பெரிய செலவு எங்களுக்கில்லை. 20 ரூபாய் வாடகை வீட்டில் எங்கள் எளிய வாழ்க்கை ஆரம்பமாயிற்று. அம்மா அடிக்கடி புறுபுறுப்பாள். எலி வளையானாலும் தனி வளை நல்லது என்று. அர்த்தம் புரியவில்லை அப்போது. புரிய ஆரம்பித்த போது எலி வளைகளின் விலை எட்டாத கொம்பாகி விட்டது.

உன்னை மடியில் வைத்து ஆராரோ பாடி நித்திரையாக்கிக் கொண்டே அம்மா ஏராளமாகக் கனவுகள் கண்டாள். பக்கத்தில் அரை நித்திரையில் இருந்தபடி நான் தலை கவிழ்ந்து கவிழ்ந்து ம் கொட்டிக் கொண்டிருப்பேன். நீ பெரிய படிப்பெல்லாம் படித்து ரீச்சராய் வருவியாம். செருப்புப் போட்டுக் குடை பிடித்துக் கொண்டு டக்கு டக்கென்று தெருவில் நடப்பியாம். அயலெல்லாம் மிஸ் வாறா என்று மரியாதையாய் ஒதுங்கி நிற்குமாம். படிப்பறிவில்லாத தனக்கு அ ஆ சொல்லித் தருவியாம். பிழை விட்டால் கேட்டிப் பிரம்பெடுத்து கை நீட்டச் சொல்லி நோகாமல் பொய் அடி அடிப்பியாம்.

அம்மாவிற்குப் பிறகு அந்தக் கனவுகளின் தொடர்ச்சியை நான் காணத் தொடங்கினேன். சடக்கு சடக்கென்று சட்டம்பியாய் நீ நடந்து வரும் மிடுக்கைக் கானும் ஏக்கம் என்னில் நீக்கமற நிறைந்து போயிற்று. என் ஏக்கம் தெரிந்த நீயும் க-டப்பட்டுப் படித்துப் பட்டதாரியாகி 25 வயதில் ரீச்சராயும் வந்து என் நெஞ்சில் பாலை வார்த்தாய். அதற்குள் வயதாகி விட்டது என்று என்னைப் பென்சனில் அனுப்பி விட்டார்கள்.

பல் விழுந்து முகம் சுருங் கி கை கால் மூட்டுக்கள் பிடிக்கத் தொடங்கி கண் பார்வை குறைந்து கொண்டு வந்த போதுதானா என் கண்கள் திறக்க வேண்டும்! உன் கல்யாணம் பற்றிய கடமை வந்து என் கன்னத்தில் அறைந்தது.

எல்லோரையும் அன்பினால் பிணைத்து அணைத்துப் போகும் உயர்ந்த குணம் உன் அம்மாவிடமிருந்து நீ பெற்ற ரத்த சம்பந்தம். உன்னைக் கல்யாணம் செய்வதற்கு எந்தப் பெரிய குடும்பத்தவரானாலும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இந்த நியாயமான எண்ணம் தந்த துணிவில் உன் கல்யாணத்தை இலேசாக ஒப்பேற்றி விடலாம் என்ற இறுமாப்பில் இருந்தேன். மாப்பிள்ளை தேடும் சகதியில் காலை வைத்து வழுக்கி விழுந்த பின் தான் தெரிந்தது மகளே அந்தத் தேடலுக்கு நான் முற்றிலும் அருகதையில்லாதவன் என்று.

தாய் தகப்பன் பார்த்து "பேசி முடிக்கிற கல்யாணப்" பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாங்கள். பார்த்துப் பழகியிராத முகம் தெரியாத ஒருவரோடு குடும்பத்தை ஆரம்பித்து சிறிது சிறிதாய் புரிந்து கொண்டு காதலாய்க் கனிகிற வாழ்க்கை அது.
கருத்துவேறுபாடுகள் தோன்றினாலும் சுற்றம் அயல் என்னும் கட்டுக்குள் கட்டுப்பாடாய் உடையாமல் இருக்கிற தாம்பத்தியம் அது. இந்த அருமையான அமைப்பில் சீதனம் என்ற சிக்கெடுப்பு எப்படித்தான் வந்து சேர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை
மகளே!

போன கிழமை ஒரு நல்ல இடம் இருக்கென்றறிந்து ஓடிப் போனேன். மாப்பிள்ளை உன்னோடு படிப்பிக்கும் தர்மராசா மாஸ்டர் எனத் தெரிந்ததும் இந்த இடம் கட்டாயம் கனிந்து விடும் என்ற குது¡கலம். மாப்பிள்ளையும் அங்கே இருந்ததால் நெஞ்சு நிரம்பிய நம்பிக்கை.

குறை விளங்கப்படாது என்று நேரடியாகவே தொடங்கிய மாப்பிள்ளையின் தகப்பன் சொன்னார். "போன மாசமும் கேட்டு வந்தது. 15 பர்ச்சர்ஸ் காணியில வீடு வளவும் போடப்பட்ட நகையும் 3 லட்சம் ரொக்கமும் மாப்பிள்ளையின் தங்கச்சிக்கு இனாமாக 2 லட்சமும் தாறதெண்டு. பஸ் ஏறி இறங்கிறது கஷ்டமென்டு தம்பிக்கு விருப்பமில்லை. அவையள் ஓமெண்டதை நீங்க தாறதெண்டா குறிப்பைக் கொண்டாங்கோ பார்ப்பம். பிள்ளையை தம்பிக்கும் நல்லாத் தெரியுமாம்."

தகப்பன் சொன்னதற்கு தலையாட்டி பொம்மையாய் இருந்தார் மாப்பிள்ளை.

கிட்டத்தட்ட 25 லட்சம் இருந்தால்தான் இந்த மாப்பிள்ளை எங்களுக்குக் கிடைப்பார். குருவியாய்ச் சேர்த்த ஒரு லட்சத்தை வைத்துக் கொண்டு நான் என்னம்மா செய்ய. "பேசி முடிக்கிற" பாரம்பரியத்தில் வந்த என்னால் இவர்களோடு ஒரு
சொல்லைத் தானும் பேச முடியவில்லை. வெட்கித் தலை குனிந்து நின்றேன்
மகளே................

கண்ணீர் குண்டுகள் கடிதத்தில் விழுந்து ஈரமாக்க கைகள் நடுங்க விட்ட இடத்திலிருந்து கடிதம் தொடர்ந்தது............

மகளே நீ படித்த பிள்ளை. புத்திசாலி. இந்தக் கையாலாகாத அப்புச்சியின் நிலைமையைப் புரிந்து கொள்ளக்கூடியவள். எனக்கு ஒரு உதவி செய்வியாம்மா. இதை உன்னிடம் கேட்பதன் மூலம் என் பண்பை இழந்து உன் முன்னால் தலை குனிந்து நிற்கிறேனம்மா. ஆனால் எனக்கு வேறு வழி தெரியவில்லை.

நீயே உனக்குப் பொருத்தமான ஒருவரைப் பார்த்து கல்யாணம் செய்து கொள்ளம்மா. சீதனமில்லாமல் ஏற்றுக் கொண்டு காலம் முழுக்க உன்னை வைத்துக் காப்பாற்றக் கூடிய நல்லவனைக் கண்டு பிடித்துக் கல்யாணம் செய்து கொள்ளுவியாம்மா!

என்னால் முடியவில்லை தாயே மன்னித்து விடு.

உன் பட்சமுள்ள அப்புச்சி

அடுத்த நாள் காலை அபிராமி பள்ளிக்குப் போனதும், விறாந்தைக்குள் வர அப்புச்சி என்று முகவரியிட்ட கவர் மேசையில் வரவேற்றது.

என்னை ஆளாக்கி விட்ட அன்பு அப்புச்சிக்கு

இந்த விசயத்தை உங்களோடு நேர்நின்று கதைக்க எனக்குக் கூச்சமாக இருக்கிறது.

காலம் கனியும் போது உங்களிடம் சொல்லலாம் என்று இருந்தேன். அப்பா நான் ஒருவரைக் காதலித்தேன். அவரும் என்னோடு நல்ல விதமாகப் பழகினார்.

இதற்குள் உங்கள் கடிதம் கண்டேன்!

உங்களின் சொற்ப சம்பளத்தில் ஒரு குறையும் வைக்காமல் என்னைப் படிக்க வைத்து இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். யாரையும் நீங்கள் சுரண்டவில்லை - பிழையான வழிகளில் சொத்துச் சேர்க்கவில்லை. நீங்கள் ஏனப்பா வெட்கித் தலை குனிய வேண்டும்.

இல்லிடத்தை இழந்து உயிரைத் தானும் காப்பாற்றிக் கொள்ள எங்கள் சனமெல்லாம் காட்டிலும் மேட்டிலும் அலைந்து உலைந்து திரிகிறது. அதர்மத்தின் எல்லையில் நின்று அட்டூழியம் கூத்தாடுகிறது. இந்த நிலையில் கூட மனட்சாட்சிக்கு இடம் கொடுக்காத மாப்பிள்ளைகள் தலையாட்டி பொம்மைகளாய் இருக்கும் போது நீங்கள் ஏனப்பா தலை குனிய வேண்டும்!

மரக்கறிச் சந்தையில் வெண்டிக்காயை உடைத்து உடைத்துப் பார்ப்பது போல கல்யாணச் சந்தையில் பெண்களை உடைத்துப் பார்க்கிறார்கள். இவர்கள் செய்ய நினைப்பது கல்யாணம் இல்லையப்பா - கடைந்தெடுத்த வியாபாரம்.

வெட்கப்பட வேண்டியவர்கள் நீங்கள் அல்ல. இவர்கள் தான். எனக்கு நல்ல பண்பையும் படிப்பையும் தந்திருக்கிறீர்கள். காலம் முழுக்க மரியாதையுடன் என் காலிலேயே

வாழ்ந்து காட்டுவதற்கு அது போதுமப்பா.......அது போதும்.

எழுதுவதற்கே என் கை கூசுகிறது. நான் காதலித்தது யாரைத் தெரியுமா..

நீங்கள் போன கிழமை போய்க் கேட்டீர்களே மாப்பிள்ளை - அந்த தர்மராசாதான்!

அன்பு மகள் அபிராமி

பதிவுகள் டிசம்பர் 2002 இதழ் 36

12.. மரம் - க. அருள்சுப்பிரமணியம், திருகோணமலை

தமிழ்ச்செல்வன் ஆச்சரியத்தில் சிலிர்த்துப் போனான். "பிறேசில்" பிரதிநிதி மரங்கள் பற்றிய அறிக்கை வாசிக்கும் போது தன் இளமைக்கால எண்ணச் சுழியோட்டத்தில் அமிழ்ந்தே போனான். அணில் நன்னிய பழம் நாடி கொய்யாமரத்தில் ஏறி சறுக்கி விழுந்து காலில் பத்து கட்டிக்கொண்டதும், மாமரக்கிளை ஊஞ்சலில் அக்காவோடு போட்டிக்குக் குதியம் குத்தி விழுந்து குதிக்கால் சுழுக்கிக் கொண்டதும், பனைவடலிக்குள் "கள்ளன்பொலிஸ்" ஒளிப்பில் உடம்பெல்லாம் இரத்தக்கீறுகள் பதித்துக் கொண்டதும்.........அடுத்தடுத்து வரும் அலைகளாய் மனக்கரையில் அடித்து மோதின. அவனும் மரங்களோடு "கைக்கும் காலுக்குமாய்" பின்னிப்பிணைந்து வாழ்ந்தவன்தான். ஆயினும் மனித குலத்திற்கு மட்டுமின்றி அனைத்து சீவராசிகளுக்கும் உருப்படியான சேவையாற்றிக் கொண்டு சப்தமில்லாமல் நிற்கும் மரங்களை அவன் இன்றுவரை பெரிதாக எண்ணிப் பார்த்ததில்லை. இளக்காரமாகவே இருந்திருக்கிறான்.

பிரதிநிதி தொடர்ந்தார். மரங்களின் ஒவ்வொரு உறுப்பும் மனித குலத்திற்கு ஊழியம் செய்கின்றன. வேர்கள் மண்ணைக் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக்கொண்டு வெள்ள அரிப்பின் தாக்கத்தைக் தடுக்கும் சுவர்களாகின்றன. தண்டும் கிளைகளும் காற்றின் வேகத்தை மறிக்கும் வேலிகள். இலைகள் காற்றின் கரியமிலவாயுவை உறிஞ்சிக் கொண்டு பிராணவாயுவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள். ஆறு ஏரிகளைச் சுற்றியுள்ள காடுகள் வண்டலைப் பிடித்து வைத்து நீர் விநியோகத்தை மாசுபடுத்தும் இரசாயன கிருமிநாசினிகளை வடித்தெடுக்கின்றன. நீரைச் சேமித்து வைத்து கடும் கோடை வரட்சிக் காலங்களில் சூழலைக் காக்கும் கவசமாகின்றன.

எத்தனை விதமான காய்கள் பழங்கள் பருப்புகள் கீரைகள் சாறுகள் எண்ணைகள் மெழுகுகள் மருந்து மூலிகைகள் இராசயனப் பொருட்கள்! பூமியின் உணவுக் களஞ்சியமே மரங்கள்தான். மரங்கள் அடர்ந்த காடுகள் மனிதனுக்கு மட்டுமல்லாது பறவை மிருக இனங்களுக்கும் உணவு உறைவிடம் பாதுகாப்பு கொடுக்கும் சாம்ராச்சியமாக திகழ்கின்றன...........அவர் வாசித்துக் கொண்டே போனார். கடவுளே இத்தனை கருணையா உங்களுக்கு.....அவன் நெஞ்சு ஈரலித்து இளகிப் போயிற்று.

இடைவேளை நேரம் இருந்த இடத்திற்கு தோடம்பழச்சாறு வந்தது. பக்கத்திலிருந்த வெளிநாட்டுப் பிரதிநிதியிடம் தன்னை சம்பிரதாய அறிமுகம் செய்து கொண்டு குசலம் விசாரித்தான் தமிழ்ச்செல்வன். அடுத்தநாள் சுற்றுப் பயணத்தில் போக இருக்கும் இடங்களைப் பற்றிய அவரது கேள்விகளுக்கு விளக்கம் கொடுத்தான்.

அந்த மகாநாட்டிற்கு அவன் வந்ததே தற்செயலாக நடந்ததுதான். இளைப்பாறிய தாவரவியல் பேராசிரியர் பொன்சேகா அவர்கள் அவன் சார்ந்த அரசசார்பற்ற சர்வதேச

உதவி நிறுவனத்தின் தலைவர். ¦ஜனீவா சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினால் கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மகாநாட்டின் ஒரு அங்கமாக மரம் நடுகைத் தினமும் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருந்தது. முதல் மூன்று நாட்கள் அமர்வும் மிகுதி இரண்டு நாட்கள் சுற்றுப்பயணமுமென நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டிருந்த மகாநாட்டில் பேராசிரியரும் கலந்து கொண்டிருந்தார்.

மகாநாடு இரண்டு நாட்கள் முடிந்திருந்த நிலையில், பேராசிரியரிடமிருந்து தமிழ்ச்செல்வனுக்கு நடு இரவுத் தொலைபேசி அழைப்பு வந்தது. அவரது வயதான தாயாருக்கு சுகவீனம் கடுமைப்படுத்தியதன் நிமித்தம் காலிக்குப் போவதால் மிகுதி மகாநாட்டில் அவனைக் கலந்து கொள்ளுமாறு கேட்டிருந்தார். மகாநாட்டுக் காரியக் குழுவின் செயலாளருக்கு இதுபற்றி அறிவித்து விட்டதாகவும் சொன்னார்.

தமிழ்ச்செல்வன் அதே நிறுவனத்தின் நிர்வாக கட்டுப்பாட்டாளர். சுற்றுச்சூழல் பற்றிய பிரத்தியேக அறிவு நிரம்பியவர்கள் பங்கு கொள்ளும் மகாநாட்டில் பேராசிரியருக்கு இணையாக தன்னால் எப்படிக் கலந்து கொள்ள முடியுமென்ற நியாயமான தயக்கத்தை அவன் வெளிப்படுத்தினான். நாளை இறுதி அமர்வு நாள். தேசிய மரநடுகை தினத்தின் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே பெயர் குறிக்கப்பட்ட பிரதிநிதிகள் பேசுவார்கள். நீங்கள் அதுபற்றிய குறிப்புகளை எடுத்துவந்தால் போதும். தொடர்ந்து வரும் 2 நாள் சுற்றுப்பயணம் உங்களுக்குப் பிரச்னையாக இராது பெஸ்ட் ஒப் லக் என்று ஒரேயடியாக முடித்து விட்டார் பேராசிரியர். தமிழ்ச்செல்வன் முகாமைத்துவம் சார்ந்த வேறு மகாநாடுகளில் பங்கேற்றவன்தான். தன் நிர்வாகத் திறனால் பலரின் நன்மதிப்பையும் சம்பாதித்தவன்தான். ஆயினும் மரங்கள் காடுகளைப் பற்றி அவனுக்கென்ன தெரியும்!

மரங்களைப் பற்றி வாசித்தோ கேட்டோ அறிந்து கொள்ள அவகாசமுமில்லை. நட்ட மரம் மாதிரி நிற்காமல் நறுக்கென்று பதில் சொல் என்று இலக்கிய ஆசிரியர் பண்டிதர் சி. வைரமுத்து அவர்கள் கும்பகர்ணன் வதைப்படலத்தில் கேள்வி கேட்ட போது சக மாணவர்களின் கேலிக்கு ஆளாகி மரமாக நின்றதைத் தவிர மரங்களைப் பற்றி சிறங்கையளவு கூட அறிந்து கொள்ள நினைத்ததில்லை.

அவன் சரியான நேரத்திற்கு வந்திருந்தான். மேடையிலும் அரங்கிலும் கறுப்பும் வெள்ளையுமாய்ப் பல்நாட்டுப் பிரதிநிதிகள் வீற்றிருக்க கோலாகலமாகத் தொடங்கிய அமர்வில் நாலைந்து பிரதிநிதிகள் பேசியபின் அவன் சகஜ நிலைக்கு ஓரளவு திரும்பிக் கொண்டிருந்தான். ஆர்¦ஜன்ரீனா பிரதிநிதி சமர்ப்பித்த குறிப்புகள் அவனுக்குள் ஒருவித அச்சத்தை உண்டாக்கிற்று.

உற்பத்தித் திறன் கொண்ட நிலத்தை உருவாக்கப் போதுமான மண்ணைக் கட்டியெழுப்ப

இயற்கைக்கு 3000 த்திலிருந்து 12000 ஆண்டுகள் வரை பிடிக்கலாம். அப்படிக் கட்டப்பட்டு கட்டியெழுப்புகிற மண்ணை ஒரு சில மணிநேரத்தில் மண்அரிப்பு அழித்து விடுகிறது. இந்த அழிப்பிற்கு பிரதான காரணிகளாக காற்றும் நீரும் விளங்கினாலும் மனிதனின் தலையீடானது அரிப்பின் வீதத்தை இரட்டிப்பாக்குகிறது. மரவர்க்கம் தரும் பாதுகாப்புக் போர்வையை மனிதன் தன் சொந்த நலனுக்காக அழிக்கிறான். அந்த அநியாயத்தினால் புயலுக்கும் வெள்ளத்திற்கும் நாச வேலை இலகுவாகிவிடுகிறது. இப்போது உலகம் பூராவும் பாலைவனமாகிவிடும் பயமுறுத்தலின் கீழ் 3200 மில்லியன் ஹெக்டர் நிலமும் 700 மில்லியன் மக்களின் ஜீவனோபாயமும் ஆபத்திற்குள்ளாகி இருக்கின்றது.

அடுத்துப் பேசிய இலங்கைப் பிரதிநிதி சில திடுக்கிடும் தகவல்கள் சொன்னார்....... இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்பான சனத்தொகை வளர்ச்சி, அரசினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், நகர மயமாக்கல், கிராமிய விஸ்தரிப்பு, மகாவலி அபிவிருத்தித் திட்டம், அதனுடன் கூடிய குடியேற்றங்கள் 1881 ல் 84 வீதம் செறிவான காடுகளால் மூடப்பட்டிருந்த நிலப்பரப்பை 1999 ல் 20 வீதமாகக் குறைத்துள்ளது. அதிகரித்துக் கொண்டே போகிற காடழிப்பு வீதம் இப்படியே தொடருமானால் நமது நாட்டை அழிக்க வேறு மார்க்கம் தேவையில்லை. காடுகள் அழிந்து போக நாடு தானாகவே இயற்கையின் சீற்றங்களினால் அழிந்து போகும். எனவே தான் வனங்கள் இன்றி வளம் இல்லை என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக தேசிய மரம் நடுகைத் தினத்தின் அமைப்பாளர் கூறினார்.......வனப் போர்வையின் முக்கியத்துவம் தெரியாமல் நிறைய காடுகளை ஈவிரக்கமின்றி வெட்டிச் சாய்த்து விட்டோம். இழக்கக்கூடாத ஐசுவரியத்தை இழந்து விட்டோம். அதனை ஈடு செய்ய வேண்டிய கட்டாயம் வந்திருக்கிறது. வீட்டுக்கு ஒரு மரம் நட்டு எமது சூழலின் பாதுகாப்பிலும் பேணலிலும் முன்னேற்றத்தை உண்டாக்க வேண்டும். இந்த செய்தியை மக்களிடம் நாம் முறையாக எடுத் துச் செல்ல வேண்டும். பசுமையானதும் தூய்மையானதுமான நாட்டை நோக்கி முன்னேறுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

எல்லோரின் நெஞ்சையும் தொடும்படியாக அவர் விண்ணப்பித்தார். அமர்வு முடிவிற்கு வந்தது. இரவு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தாமே பரிமாறிக் கொள்ளும் டின்னரில் “மரியாதை“ பார்த்து உண்டுவிட்டு வீடு திரும்ப உணவின் கனத்தை விட மரங்களே மனத்தில் கனத்து நின்றன. அடுத்த நாள் சுற்றுப்பயண நிரலில் கண்டியிலிருந்து வவுனியா வரை வளமான வனங்கள் நிறைந்த பகுதிகள் தெரிவாகியிருந்தன. வெள்ளையுறை போட்டு புனிதப்படுத்திய இருக்கைகள் கொண்ட குளிரூட்டிய சொகுசு பஸ்ஸில் 25 பிரதிநிதிகள் ஏறிக்கொண்டார்கள்.

கொழும்பு கண்டிப் பாதையில் ஆங்காங்கே ஏற்கனவே திட்டமிட்டபடி பாடசாலைப் பிள்ளைகள் தாளவாத்தியம் அடித்து தேசிய கீதமிசைத்து வரவேற்க, பிரதிநிதிகள் தேக்கு பலா வேம்பு முதிரை என பல சாதிக் கன்றுகளை பாடசாலை வளவுகளில் நட்டார்கள். படம் எடுக்கும் வரை நாட்டிய மரங்களைப் பிடித்துக் கொண்டே படத்திற்குச் சிரித்தார்கள்.

பயணம் முழுக்க தகிக்காத சூரியன். மெலிதாகத் தழுவிச் செல்லும் தென்றல். வழி முழுதும் பச்சைப் பசேல். அந்தப் பகுதியில் காடுகளைப் பாதுகாத்ததால் உண்டான பயன்கள் நன்றாகவே தெரிந்தன. சரியான விசயத்தை சரியான விதத்தில் மக்களுக்கு எடுத்துச் சொன்னால் எல்லாமே சரியாக நடக்கும். பல்நாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் திருப்தியைப் பல இடங்களில் பல் காட்டித் தெரிவித்துக் கொண்டார்கள். கொழும்பு திரும்ப இரவு ஏழு மணி. அலுப்புத் தெரியாத பயணம்.

அடுத்த நாள் பயணம் தொடங்கும் போது குழுவினருடன் தொடர்பேயில்லாதது போல ஆயுதந் தாங்கிய பாதுகாப்புப்படையினரின் ஜீப் ஒன்று முன்னால் சென்றது. காடுகள் மலிந்த மடுமாதா கோவில் பகுதியைப் பார்வையிட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆர்வம் காட்டியிருந்தார்கள். திருக்கேதீஸ்வரத்திலிருந்து ஒற்றையடிப்பாதையில் காட்டினு¡டாக மடுக்கோயிலுக்குப் போன அனுபவம் அவனுக்கிருந்தது. மேலே ஒரு வரி வானம் மட்டும் தெரியும். அப்படியொரு கறுப்புக் காடு.

நில்லாமல் ஓடியது பஸ். பாதையின் இருமருங்கு மரங்களும் அவனை நு¡தனமாகப் பார்த்தன. எங்களின் பெறுமதியை இப்போதாவது புரிந்து கொண்டாயா மகனே என்று கேட்பது போன்ற பிரமை! நெஞ்சம் கரைந்து உருகினான் அவன்.

வவுனியா சந்தியில் பரிசோதனை முகாம் தொலைவில் தெரிந்தது. முகாம் வரையிலான து¡ரம் வரை தெருவோரத்தில் வரிசையாக நின்ற சரக்கு லொறிகளை அவன் எட்டிப் பார்த்தான். லொறிகளின் கீழ் சாக்கும் சாறன்களும் விரித்துப் படுத்திருந்தார்கள். வடபகுதி போக ஒரு வாரமாகக் காத்திருக்கும் உணவு லொறிகளாம். வன்னிப் பக்கம் சண்டை நடக்கிறதாம். முகம் விடியாத ஒருவர் சொல்லிவிட்டுப் போனார்.

உள்ளே போக பத்தே நிமிடத்தில் அனுமதி கிடைத்தது. காத்து நிற்கும் உணவு லொறிகளைத் தாண்டி மடுமாதா கோயிலை நோக்கிய மன்னார் பக்கம் திருமபி நின்றது பஸ். அதே வேளை தெருப்புழுதியைக் கிளப்பிக் கொண்டு மாங்குளம் பாதையிலிருந்து 3 லொறிகள் வேகமாக வந்து ஓரம் கட்டி நின்றன. டிரைவர்கள் கீழிறங்கி அன்னியோன்ய சினேகத்தில் லொறி லைசென்சுகளை காட்ட பரிசோதனைக் கூரைப்பக்கம் போனார்கள்.

ஒரேயிரையாய் நெடுநேரம் இருந்ததால் கைகால் நீட்டிக் கொள்ள அவனும் ஜப்பான்

பிரதிநிதியும் இறங்கினார்கள். வெளியே இறங்கி நிற்க, வெக்கை முகத்தில் அடித்தது. லொறிகள் நிற்பாட்டியிருந்த பக்கம் வந்து காய்ந்து போய்க்கிடந்த அந்தப் பாதையைப் பார்த்தான் தமிழ்ச்செல்வன். ஈ காக்கை கூட இல்லாத உயிரற்ற தெரு! பாதையின் இரண்டு பக்கமும் கண்ணுக்கெட்டிய து¡ரம் வரை பள்ளமும் திட்டியுமான வெட்டைவெளி. புழுதி படர்ந்த சூனியம்!

கன்வஸ் படங்கு சரியாக மாட்டப்படாமல் சற்றே விலகியிருந்த ஒரு லொறியின் பின்பக்கம் அவன் நடந்தான். கன்வசைப் பிரித்து உள்ளே என்ன இருக்கும் என்று பார்க்கும் சாதாரண விருப்பத்தில் சும்மா பார்த்தான்.

உள்ளே!

அடியோடு தறித்து செம்மையாகச் சீவி அறுத்து சீராக அடுக்கிய மரக்குற்றிகள்!! இரண்டு பேர் சேர்ந்து கைகளால் சுற்றிப் பிடிக்க வேண்டிய மொத்தத்தில் முதிரைக் குற்றிகள்!!!

பதிவுகள், டிசம்பர் 2002 இதழ் 36

13. கதைசொல்லியும், Gangs Fightsம் - -இளங்கோ-

[ஏற்கனவே 'முற்ற'த்தில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் வந்த கதையினை இளங்கோ பதிவுகளுக்கு அனுப்பியிருந்தார். இப்பொழுதும் பேசப்படும் பொருளினைப் பேசுவதால் பிரசுரிக்கின்றோம். அதுவே பதிவுகளுக்கு இளங்கோ அனுப்பிய காரணமும். நாளைய உலகின் நாயகர்களான இளைஞர் சமுதாயம் ஆக்கபூர்வமான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அடி, உதை, வெட்டு, கொத்தென்று வாழ்வினை வீணக்குவதால் பயனேதுமில்லை. மாறாக அழிவு தான். இருப்பதோ ஒரு வாழ்க்கை. பொறுப்புள்ள இருப்பாக இருப்பினை மாற்றியமைப்பது இன்றைய இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது. அதனை உணர்ந்து இளைஞர்கள் செயற்படவேண்டும். அரசியல் காரணங்களுக்காகப் போராடுவதென்பது வேறு. அற்பக் காரணங்களுக்காக அடிபடுவதென்பது வேறு. இதனை உணர்ந்து இளைஞர் சமுதாயம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.]

எனக்கு எழுதுவதென்றாலே என்னவென்று தெரியாது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், எனக்கு இலக்கியத்திலோ, தமிழிலோ அவ்வளவு பரிட்சயமும் கிடையாது. அதற்கான நேரமும் கிடைத்ததில்லை. அவ்வாறு இருந்தற்காக வெட்கப்பட்டதும் கிடையாது. இப்ப நான் சொல்லப்போகின்ற இந்த கதைகூட எந்தவடிவத்தில் அடங்கும்- அடங்காது என்பது குறித்த எந்த பிரக்ஞையும் என்னிடமில்லை. ஏதோ என் நேற்றைகளை பதிவுசெய்யவேண்டுமென்று விரும்பி, எழுதுகிறேன். அவ்வளவுதான்.

எல்லோருக்கும் ஏதாவதொரு கருத்தில் இடையீடு செய்யத்தானே அதிக விரும்பமிருக்கும். அதுபோல என்ரை கதையையும் இடையிலிருந்தே தொடங்குகின்றேன். அது ஒரு வெயில் எரித்து வியர்வை உருகும் மிகுந்த கோடைக்காலம். நானும், இன்னும் பல நண்பர்களுமாய் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த வேளையில் எங்கள் எதிர்க்குழுவில் உள்ளவங்கள் எங்கையோ கதை கேள்விப்பட்டு வந்திட்டாங்கள் . தோளில் போட்டிருக்கும் சின்ன துவாயால் துவக்கை மறைச்சுக்கொண்டு விளையாடுற இடத்திற்கு றேழு பேராய் நுழைஞ் சிட்டாங்கள். என்னையும் ஒரு நண்பனையும் தவிர எங்கட ரூமில் எவரும் காங் மெம்பர்ஸ் இல்லை. விளையாடின மற்றவையளுக்கு அடுத்து என்ன நிகழப்போகின்றதென்று விளங்கிட்டுது. பவுண்ரி லைனில் நின்ற என்னை மிட் ஓனில் வரச்சொல்லிச்சினம். அடிக்கவந்தவங்களும் ஏதோ இராமன் சீதைக்கு கீறிய கோட்டைக்கண்டு பயப்பிடும் இராவணன்போல லைனிற்கு வெளியே நின்று ‘வாங்கட வெளில’ என்று கத்தி தூஷணத்தால் அர்ச்சித்துக் கொண்டிருந்தாங்கள். நல்லவேளை உள்ளே நின்ற ஒருத்தரிற்ரை கான்ட் போன் இருந்திச்சு. அவரைக்கொண்டு எங்கட காங்கிற்கு கோல் பண்ணி கெதியாய் வரச்சொன்னோம். பத்து பதினைஞ்சு நிமிடத்தில் அவங்களும் வந்திட்டாங்கள். சா¢ இன்டைக்கு

நல்ல வாணவேடிக்கையென்டு நான் நினைச்சேன் . எங்கட ஆக்கள் வாறதைக்கண்டதும் அவங்கள் வருகீறிட்டாங்கள். நாங்கள் விடவில்லை. காரெடுத்துக்கொண்டு துரத்தினோம். மறைஞ்சிட்டாங்கள். சா¢ தப்பிச்சிட்டாங்களென்று சலிச்சு, பிறகு நைட் கிளப்பிற்குபோய் டான்ஸ் ஆடிப்போட்டு திரும்பிவாற நேரத்திலதான் எனக்கு ஞாபகம் வந்தது, நாளைக்கு பொ¢யமாமாவின் மூத்தமகனிற்கு கலியாணம் எண்டு. அவர் இரவு வீடு சோடிக்க வரச்சொன்னவர். நேரமோ பதினொன்டரை ஆச்சுது. சரி சும்மா ஒருக்கா மாமா வீட்டைப்போயிட்டு முகத்தைக்காட்டி வருவம் எண்டு நினைச்சு என்ர பிரண்ட்ஸ்சிட்டை சொன்னேன், மச்சானின்ரை வீட்டடியில் இறக்கிவிடச்சொல்லி. பிறகு இவங்களோட இப்படியே நான்கு கார்கள் பவனிவர போயிறங்கினால் வீட்டிற்கு வெளியே நிற்கிற சொந்தக்காரர்கள் ஏதும் சொல்லக்கூடுமென்று முதல் பஸ் ஸ்ரொப்பில் இறக்கிவிடச்சொன்னேன். கொஞ்சது¡ரம் நடந்துபோயிருப்பேன். எங்கிருந்தோ வந்த ஒரு கறுப்புகார் என்னை உரசிக்கொண்டு வந்துநின்டுது. அவங்கள்தான் - எதிர்க்குழுவினர். 'டேய் அடியுங்கடா'வென கத்தியபடி காரிற்குள்ளிருந்து குதித்தார்கள். சரி இண்டைக்கு முடிஞ்சன் எண்டு நினைச்சான். கிட்ட வைச்சு வெடி வைக்கிறது கொஞ்சம் கஷ்டம். அதோடு ஆரம்ப காலத்தில் முழங்காலிற்கு கீழே வெடி வைப்பதாகவும், வெட்டுவதெண்டால் கழுத்துக்கு கீழேதான் வெட்டுவதென்றும் பல குழுக்களிடையே எழுதப்படாத விதியாக இருந்தது. பேஸ்போல்மட்டையாலும், இரும்புச்செயினாலும் விளாசத் தொடங்கிவிட்டார்கள். அந்தநேரத்தில் மாமாவும், அங்கேநின்ற அண்ணாவும் வெளியே வந்திருக்கிறார்கள். யாரையோ அடிக்கிறான்களெண்டு கத்திக்கொண்டு அவர்கள் ஓடிவாறது மங்கலாத் தொ¢ஞ்சது. அவ்வளதுதான். அதற்குப்பிறகு ஆஸ்பத்திரியில் முழிக்கைக்கேதான் நினைவு வந்தது. மண்டையில் நல்லா அடிச்சுப்போட்டுட்டாங்கள். பதினொருதையல் என்று நேர்ஸ் சொன்னா. இன்னும் பல இடத்தில் சின்னச்சின்ன காயங்கள். எனக்கு நினைவுதெளிஞ்ச மறுநாள் பின்னேரத்தில் என்ர பிரண்ட்ஸ் வந்தாங்கள். அவங்களோடு அவளும் வந்திருந்தாள். 'டேய் நீயெழும்பி வீட்டை போகமுன்னம் அவங்களில் இரண்டுபோ¢ற்கு வெடிவைக்காட்டி பாரு. ஒண்டுக்கும் யோசிக்காதையடா' என்டாங்கள். அவங்கள் வாங்கிக்கொண்டு வந்த ஆப்பிள்ஸையும், ஒரேஞ்சர்ஸையும் அவள் என்னிடம் தந்தாள். சரி நாங்கள் போகப்போறம் பிறகு வாறமடாவெண்டு பிரண்ட்ஸ் வெளிக்கிட்டாங்கள். hey guys, wait outside, I catch you in a minute எண்டு அவள் சொல்லிப்போட்டு என்ரை கையை எடுத்து முத்தமிட்டு take care எண்டு சொன்னாள். அந்த நேரத்தில் அவள் கண்கள் கலங்கியிருந்ததையும், அதிலிருந்து சிதறிய ஒருதுளிக்கண்ணீர் என் கன்னத்தில் விழுந்து காதோரத்தால் உருகிக் கீழே வீழ்ந்ததும் நிகழ்ந்தது.

அறிவுரைகள் யாருக்குப் பிடிக்கும். இரத்தநாளங்களில் சந்தோஷம் துள்ளிப் பிரவாகா¢க்கும் இளமைப்பருவத்தில் கட்டுக்களையறுத்து, வெளிகளில் மிதக்கவல்லவா விரும்பும் மனம்? ஒருமுறை இப்படித்தான் இரண்டு யூனிவாசிட்டி அண்ணாமார்கள் வந்திச்சினம், ஏதோ கதைக்கோனுமென்டு. எங்களின் குழுச்சண்டைகளையும், சமூகத்தில் எங்களால் ஏற்படும்

இடையூறுகளையும், பெருங்கதையாடல்களையும் கேள்விப்பட்டுத்தான் அவையள் வந்திருக்கோணும். நாங்கள் சொன்னோம், அண்ணை நீங்கள் எதென்டாலும் எங்களோட கதையுங்கள், ஒரு பிரச்சினையுமில்லை. ஆனால் பாரிற்கு கூட்டிட்டுப்போய் கொஞ்சம் பியர் வாங்கித்தாங்கோ, நீங்கள் சொல்றதையெல்லாம் கேட்கிறோமெண்டு. அவர்களும் சரி இவங்களை விட்டுத்தான் பிடிப்போமென்டு நினைச்சிருக்கக்கூடும். எங்களுக்கு பியர் எல்லாம் வாங்கித்தந்திச்சினம். பியர் உள்ளேபோனால் எங்கட நிலைமையைச் சொல்லத்தான் வேணுமோ. கத்தி குழறி பாடத்தொடங்கிவிட்டோம். அந்த அண்ணமாரும் இருந்து பாத்திட்டு, வெறுத்துப்போய் சொல்லாமல் கொள்ளாமல் எழும்பிப்போயிட்டனம்.

இந்த நகரத்தில், உலகத்தில் வாழ்வதற்கு சிறந்த இடமென பிரகடனப்பட்ட இந்த தேசத்தில் எங்கட பெடியளின்டை காங்குகள் எப்படித்தொடங்கியது என்பது பொ¢ய கதை. அதன் நதிமூலம், ரிஷிமூலம் எல்லாம் எனக்குப்பொ¢தாய் தெரியாது. ஆனால் கொஞ்ச சம்பவங்கள் நினைவிலுண்டு. முதன்முதலில் வேற்றினத்தவா¢ன் கேலிகளையும், அவதூறுகளையும் அடக்கத்தான் எங்கட பெடியள் குழுகுழுவாய்த் திரிஞ்சினம். எனக்கு நல்லா ஞாபகம் இருக்கிறது. என்னுடைய கல்லூரித்தோழன் ஒருவன் குளிர்நேரத்தில் பஸ்சில் ஏறுகையில், ஒரு இத்தாலியன்காரன் கெட்டவாசம் வருகிறது இந்த பாக்கியிடம் என்று நக்கல் சிரிப்போடு சொன்னான். பாக்கி என்டால் அது எங்களுக்கு, இந்தியனுக்கு, பாகிஸ்தான்காரனுக்கு அவர்கள் தரும் அன்பான அடைமொழி. கெட்டவாசம் என்று அவன் சொன்னது எங்களின் சமையல் வாசத்தை. சும்மா சொல்லக்கூடாது நாங்கள் நல்லாத்தானே வறுக்கி, புரட்டி, பொரிக்கிறனான்கள். ஆனால் அவன் அப்படிச் சொன்னதற்கு, என்னுடைய நண்பனுக்கு சா¢யான கோபம் வந்திட்டுது. இவங்களுக்கு பாடம் புகட்டோனுமெண்டு கறுவிக்கொண்டான். அப்போதெல்லாம் நான் நல்ல அப்பாவிப் பெடியன். சிறிலங்காவிலிருந்து கொஞ்சமாதங்கள் முன்புதான் வந்து இறங்கியிருந்தேன். இந்த விஷயம் மற்ற நண்பர்களுக்குத் தெரியவர, அவர்கள் எல்லோரும் திட்டம்போட்டு, அந்த இத்தாலியன்காரனிற்கு பஸ் நிறுத்தத்தில் பாடம் புகட்டுவதென்று தீர்மானித்தனர். அடியெண்டால் செம அடி. பனியெல்லாம் இரத்ததுளிகள். கனதமிழாக்கள் நிற்கேக்கைதான் அடிவிழுந்தது. எல்லாரும் சேர்ந்துதான் கொடுத்தோம். அந்த இத்தாலியன்காரனுக்கு அதிக அடிகொடுத்தவன்தான் எங்கள் கல்லூரியில் தோன்றிய முதல் குழுவிற்கு பிறகு தலைவன் ஆனான். சிலநாட்களில் பின் எங்கட கேர்ஸை நக்கலடித்த வெள்ளையிற்கும் நல்லா கொடுத்தோம். அந்த பெண்கள் கூட்டத்தில் இருந்த, கெட்டிக்கார, எடுப்பான பெண், கொடுத்த அடிகளுக்கு நன்றிக்கடனாய் அந்தத் தோழனையே நேசிக்கத்தொடங்கினாள். இப்படி எங்களுக்கு பாதுகாப்பாய், ஏனைய இனக்குழுமங்களால் ஏற்படும் இடைஞ்சல்களை கிள்ளியெறியெனவெனத் தொடங்கிய குழுக்கள்தான் இப்ப எங்களுக்குள்ளேயே அடிபட்டுக்கொண்டு தலைவிரிச்சாடுகிறோம். எவ்வளவு காலந்தான் மற்றவங்களோட அடிபடுறது. வேற்றினத்தவன் எல்லாருக்கும் விளங்கிட்டுது. இவங்கள் பலமானவர்களாய் இந்த பிரதேசத்தில் இருக்கிறார்கள். ஏன் வீணாய் வாலாட்டி இவங்களிட்டை அடிவாங்குவான் என்டிட்டு அவங்கள் அமைதியாகிட்டாங்கள். ஆனால் வீரம்பேசிய கைகள்

சும்மா இருக்குமோ? அதோடு இப்படித்திரிஞ்சால்தான் வடிவானபெண்களை இலகுவாய் கைக்குள்ளை போடலாமென்ட பிலோசபியும் விளங்கிட்டுது. ஆனால் எங்கட பொம்பிளைப்பிள்ளைகள் சா¢யான கெட்டிக்காரிகள். அவர்கள் குழுக்களின் தலைவர்களை மட்டுமே விரும்பிச்சினம், தலைவர்களோடு திரியும் அடியாட்களை தூசென தட்டிவிட்டிட்சினம். எங்களுக்கோ சரியான நெருக்கடி. ஒரெயொரு வழி புதுசு புதுசாய் குழுக்கள் அமைத்து தலைவர்கள் ஆவதே. எங்கட முன்னோடியாய் பொ¢சுகள் எல்லாம், ஊருக்கொரு சங்கம், ஊர்ப்பாடசாலைக்கொரு சங்கம் எண்டு அமைத்தால், அவையளின்டை வாரிசுகள் நாங்கள் சும்மாவா இருப்போம். இப்படித்தான் எனக்குத் தெரிஞ்ச வரையில் பல்வேறு குழுக்கள் புற்றீசலாய் இங்கு கிளம்பின.

அது ஒரு பின்னிரவுப்பொழுது. அம்மா, அப்பாவிற்கு ஏன் இடைஞ்சாலாயிருப்பானென்று தனியே நண்பர்களோடு தங்கியிருந்த காலமது. வழக்கமாய் வீட்டிலிருந்து இரவு பத்து பதினொரு மணிக்கு வெளிக்கிடுவேன். பிறகு அப்படியே நண்பர்களோடு சுற்றிவிட்டு வந்து படுக்க காலமை ஆறேழு மணியாகிவிடும். ஒவ்வொருநாளும் கல்லூரிற்கு மத்தியானத்திற்கு பிறகுதான் போவேன். பேசிப்பேசியே அமைதியாகிப்போன அப்பாவையும், ஏதும் பேசாமல் மௌனமாயிருக்கும் அம்மாவையும் ஏன் வாட்டுவான் என்று நான்தான் யோசித்து வெளியில் நண்பர்களோடு தங்க தீர்மானித்தேன். இதை வீட்டில் சொன்னபோது வழக்கம்போல அப்பா எதுவும் சொல்லவில்லை. அம்மா விக்கிவிக்கியழுது சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்தாள். சத்தம் போட்டு அழுதால் அப்பா பேசக்கூடுமென்று அவா பயந்திருக்கக்கூடும். அண்ணா மட்டுந்தான், 'என்னடா ஆச்சுது உனக்கெண்டிட்டு, ஏதும் தேவையென்றால் தொலைபேசியில் அழை'யென்றார். தங்கச்சியோடு கதைச்சே கனநாளாயிட்டுது. ஒரு இறுக்கமான மௌனத்தின் விடையசைப்பே அவளிடமிருந்து வந்தது. அப்படி பிரண்சோட இருந்த நேரத்தில்தான் புதுத்தோழியொருத்தியின் அறிமுகம் கிடைச்சது. என்ரை நண்பர்கள் கூலிஸ் என்றுதான் அவர்களைப் போன்ற பெண்களை அழைப்பார்கள். அவர்களின் அசைவுகளும், நடையுடைபாவனைகளும் நிறமும்கூட பொன்னிறமாய் இந்தியப்பெண்களையொத்து இருந்தது. நான் முதலில் நினைச்சேன் தமிழன், சிங்களவன் போல அவர்களுக்கும் அந்தப்பெயர் இனக்குறியீடோ என்று. பிறகுதான் தொ¢ஞ்சிது. கூலிஸ் என்றால் குடிக்கும் பியா¢ற்கும், பத்தும் சிகரட்டுக்கும், சிலவேளைகளில் அடிக்கும் கஞ்சாவிற்காகவும் தங்களோடு ஒட்டிக்கொள்ளும் கூலிப்பெண்கள் இவர்களென பட்டஞ்சூட்டியிருக்கிறான்களென்டு. பரவாயில்லை எங்கட பெடியள் கூலியென்று பெயரைவைத்து இப்படியாவது தமிழை வாழவைச்சுக் கொண்டிருக்கிறார்களென்று எங்கட தமிழாக்கள் சந்தோஷப்படலாம். அப்படி நண்பர்களோடு தங்கியிருந்த இரவொன்றில்தான் அவளை முதன்முதலில் சந்தித்தேன். அப்போது மின்னலும், இடியுமாய், பேரிரைச்சலுடன் மழை வெளியே பொழிந்துகொண்டிருந்தது.. நாங்கள் நண்பர்கள் மூன்றுபேர். ஒரு அறையுள்ள அப்பார்மெண்ட். சரி இண்டைக்கு களிகால இரவுதான் என்று மனதிற்குள் கணக்குப்போட்டேன் . இதற்குமுன் இதுகுறித்த

எந்த அனுபவமும் இல்லை. தாங்கள் அவளின்ரை ரூமிற்குள் போயிட்டு வந்தாற்பிறகுதான் எனக்கு அனுமதியெண்டாங்கள். எனக்குரிய நேரம் வந்தது. கால்கள் சற்று நடுநடுங்க உள்ளே நுழைகிறேன். முகத்தை கால்களுக்கிடையில் புதைத்தபடி கட்டிலில் குந்தியிருந்தாள் அவள். அவளை நெருங்குகைகில், Why you people behave like animals? என்று பலகீனமான குரலில் கேட்டாள். என்னால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. அவள் உதடுகள் வெடித்துக்கிடப்பதையும், கன்னத்தில், கழுத்திலெல்லாம் காயங்கள் கிடப்பதை காண்கிறேன். யாரோ என்ரை நெஞ்சுக்குள் கைவிட்டு பிசைவது போல ஒரு உணர்வு. விரல்கள் எல்லாம் எனக்கு குளிரில் உறைந்தமாதிரி நடுங்குகின்றன. அவளை மெல்ல அணைத்தபடி, அவள் கூந்தலைக் கோதுகிறேன். நான் அவ்வளவு கெட்ட மிருகமல்லவென அவள் காதிற்குள் மெல்லியதாகச் சொல்கிறேன். பிறகு நாங்கள் எதையும் அளவோடு அனுபவகத்தொ¢யாதவர்களெண்டும், பல்வேறுபட்ட மரபின் இழைகள் எம்மை இறுக்க பாலியல் சுதந்திரம் மறுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்கள் என்றெல்லாம் ஏதோவெல்லாம் சொல்கிறேன். அவள் என்நெஞ்சில் முகம்புதைத்தபடியே தூங்கிப்போகிறாள்.

இதற்குப்பிறகுதான் அவளை ஆஸ்பத்திரியில் அடிவாங்கிக்கிடந்தபோது சந்தித்தேன். பெற்றோரோடு தங்கியிருந்த அவள் பிறகு ஒரேயடியாய் எங்கள் அப்பார்ட்மெண்டில் வந்து தங்கினாள். அவளிடம் இருந்த ஏதோவொன்று எனக்குப் பிடித்துப்போய்விட்டது. என்னுடைய நோஞ்சான் உடம்பையும், காதில் குத்தியிருந்த கடுக்கனையும்விட, அவளுக்கும் வேறெதுவோ என்னில் பிடித்திருக்கக்கூடும். ஒருமுறை நண்பர்களோடு பீச்சிற்கு போனநேரத்தில்தான் 'என்னோடு சேர்ந்துவாழ்கிறீயா?' எனக்கேட்டாள். 'இப்ப என்னவாம்' என்று நான் நக்கலாய் வினாவ, 'இல்லை நானும் நீயும் மட்டும் வேறிடத்துக்குப்போய் சேர்ந்து தனிய இருப்பமா' என்று கேட்டாள். நான் இதை என் நண்பர்களிடம் சொன்னேன். அவர்களுக்கு அவ்வளவாக இது பிடிக்கவில்லையென அவர்களின் முகத்தைப்பார்த்தே எனக்கு தெரிஞ்சுபோட்டுது. என்றாலும் அவர்களோடு நானிருந்த நன்றிக்கடனிற்காய் சம்மதித்தனர். நானும், அவளும் இப்படி தனியே வாழப்போயிருந்த ஐந்துமாதங்களிற்கும் சிலநாட்களுக்கும்பிறகு, என் தோழன் ஒருவனுக்கு எதிர்க்குழுவினர் வெடிவச்சு சீரியஸாயிருந்து பிறகு பரிதாபமாய் செத்துப்போனான் . அதனையடுத்து எங்கள் குழுவில் பல பிணக்குகள்,பிரச்சினைகள். பலர் என்னைப்போல குழுவைவிட்டு, வெளியே வந்து தனியே வாழ விருப்பப்பட்டனர். ஆரம்பகால தோழர் சிலரது கோபம் எல்லாம் என்மீது குவிந்தது. நான்தான் எங்கள் குழுவைச் சிதைத்த முதல் ளென முத்திரை குத்தினர். அந்த சமயத்தில்தான் தற்செயலாய் எங்கட பரம¨வா¢களின் குழுவில் ஒருவனை நான் சந்திக்கையில் என் தோழர்கள் கண்டிருக்கிறார்கள். எனக்கு உண்மையில் அவன் எதிர்க்குழுவின் ஆளென்று தெரியாது. அவன் புதுசாய் அங்கே சேர்ந்திருக்கிறான். அவன் எங்களின் சொந்தக்காரன் என்றபடியால் அவனை தமிழ்க்கடையொன்றில் காண்கையில் கதைச்சேன். நான்தான் எதிரணியினா¢ற்கு தகவல்கொடுப்பதாய் என்தோழர்கள்

சந்தேகப்படத்தொடங்கினார்கள். நேற்றைக்கு இப்படித்தான் என்தோழியோடு இங்கிலிஷ் படமொன்று பார்த்துவிட்டு வரேக்கை என்னுடைய நண்பர்களைக் கண்டேன். நல்ல குடிவெறியில் நின்றார்கள். எனக்குப் புரிஞ்சிட்டுது, இப்ப இவங்களோட கதைச்சால் வீண்பிரச்சனைதான் வருமெண்டு காரில் ஏறிக்கிளம்பினேன். அவள்தான் காரை ஒட்டினாள். என் நண்பர்களுக்கு தங்களை நான் உதாசீனம் செய்வதாய் என்மீதுகோபம் வந்து வேறொரு காரிலேறி துரத்தத்தொடங்கினாங்கள். அவளுக்கு விளங்கிவிட்டது, இந்த நிலைமையில் இவங்களின்கையில் அகப்பட்டால் என் உயிரிற்கு உத்திரவாதமில்லையென்று. இறுக்கி ஆக்சிலேட்டரை மிதித்தாள். ஒரு வெடி காரின்பின்புறத்தில் விழுந்த சத்தம் கேட்டது. அவள் சடாரென்று சனநெருக்கடியற்ற இருண்ட தெருவொன்றுக்குள் விட்டு, 'ஒடு, என்மேல் அன்புவைத்திருந்தால் நீ தப்பியோடு, எனக்கு என்னநடந்தாலும் திரும்பிவராதேயென்று' கத்தினாள். நான் ஒடத்தொடங்கினேன். ஓருவீட்டின் பெயர் தெரியாத செடிவேலிதாண்டி இன்னும் சிலவற்றை கடந்து ஒடினேன். என்றாலும் அவளை அப்படியே விட்டுவிட்டு செல்ல மனமிசையாததால் வேறொரு திசையில் திரும்பிவந்து அடர்ந்து கிடந்த ஒருபெருமரத்தின் கீழ் பதுங்கினேன். நண்பர்கள் வந்தார்கள். கத்திகளுடனும், பேஸ்போல்மட்டைகளுடனும், துப்பாக்கிகளுடன் என் காரை நெருங்கினார்கள், நொறுக்கினார்கள். பேய்கள் உலாவுவதுபோல அவர்கள் நிழல்கள் பயமுறுத்தின. உள்ளேயிருந்த அவளிடம் நான் எங்கேயென கேட்டு வெளியே இழுத்து காலால் உதைத்தார்கள். அவள் என்னோடு முன்பு தங்கியிருந்த தோழன் ஒருவனின் கால்களைக் கட்டிப்பிடித்துக்கெஞ்சினாள். அவனுக்கு ஏதோ உறுத்தியிருக்கக்கூடும். 'டேய் அவளை விடுங்கடா, வேறொரு சமயத்தில் அவன் கணக்கைத்தீர்த்துக் கொள்ளலாமென்று' காரில் ஏறினான்.

இது நடந்தது நேற்றுத்தான். நான் இப்போது இருப்பது அவளது தோழியொருவளின் வீட்டில். இன்றைய பொழுதில் வாழ்வு சூனியமாயிருக்கிறது. திசையெல்லாம் கறுத்து யமனின் பவனி நிகழப்போவதாய் காலம் பயமுறுத்துகிறது. ஒருபக்கம் இறுகிப்போய், விகாரித்த நண்பர்களின் இன்னொருபக்கத்தில் மிகமென்மையான நெஞ்சிருப்பது யான் அறிவேன். காலத்தை வெறுத்து கையாலாகதவர்களாகிய அவர்களுக்குள் உள்ளூறும் மனிதம்பற்றி, நல்ல நட்பிற்காய் பின்விளைவுகள் எதையும் யோசிக்காது, கைகொடுக்கும் உண்மையான தருணங்கள்குறித்து என்னைப்போன்ற சிலரே அறிவர்.

பதிவுகள், ஜூலை 2003 இதழ் 43

14. சித்தி வந்தாள் - நாகரத்தினம் கிருஷ்ணா

காரை வடசென்னையில் தொற்றிக்கொண்டிருந்த எம்.சி. ரோட்டில் இடம் பார்த்து, டிரைவரை நிறுத்தச்சொல்லி, தான் திரும்பிவரும் வரை காத்திருக்குமாறு பணித்துவிட்டு, லொட லொட வென்று மார்பில் அடித்துக் கொண்டு ஓடும் வாகனங்களை ஒதுக்கி, இராயபுர மார்க்கெட்டைக் குறிவைத்து முன்னேறி, பின்னர் ஒதுங்கி, அழுக்குக் கோஷாவில் ஒளிந்துக் கொண்டிருக்கும் அந்தக் குறுகலாச் சந்துகளை அடைந்தபோது, லட்சுமியின் கனத்த உடம்பு ஏகத்துக்குச் சோர்ந்து போயிருந்தது.

இந்தச் சந்துகளில் விழுந்து, நீந்தித் தலையைத் தூக்குவது என்பது, பழக்கமில்லாதவர்களுக்கு மூச்சுத் திணறுகின்ற விஷயம். மூக்கைப் பிடித்துக் கொண்டு, மக்கள் தொகையின் பெருக்க வேகத்தைச் சபித்தவாறு தன் கையில் வைத்திருந்த விலாசத்திற்கு உரிய மாசிலாமணித் தோட்டம் ஆறாவது குறுக்குச் சந்து, பன்னிரண்டு சீ என்ற அந்த ஓட்டு வீட்டினை- லட்சுமிக்கு, இடுப்பிலிருந்து சற்றி இறங்கியிருந்த கால்சட்டையும் திறந்த மார்புமாயிருந்த சிறுவனால் "அதோ" எனக் காட்டப்பட - வயிற்றைச் சொறிந்து கொண்டு, வாசற்படியில் எதிர்பட்ட கிழவரை மோதாமல், உள்ளே நுழைந்தாள்.

புறாக்கூண்டுகள் போல, ஓடு வேய்ந்த ஒரே மாதிரியான அறைகள், கிரீச்சிடும் ஒற்றைக் கதவுகள். யாரை விசாரிப்பது என யோசித்து, கடைசியில் இவளைச் சட்டை செய்யாமல் வாசலிலேயே ஜலக்கீரீடை செய்யும் அந்த மனிதரைப் பார்த்துக் கேட்டாள்?

"இங்கே ஜானகின்னு?"

அவர் அடிபட்டவராகச் சடக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு,

"அம்மா.... வீட்டுக்கார அம்மா நம்ம ஜானகிக்குத் தெரிஞ்சவங்க போல இருக்குது." என்றார்.

அவரது அபயக்குரலை ஏற்று, "யாரு?", எச்சில் தெறிக்க, கேள்விகேட்டுக் கொண்டு, கையில் வெற்றிலைச் செல்லத்துடன், ஏறக்குறைய லட்சுமி வயதில் ஒருவள் வெளிப்பட்டாள்.

"வாங்க .. ஜானகிக்கு உறவா?"

"அப்படித்தான்..!"

வீட்டுக்கார அம்மாவுக்குப் புரிந்து விட்டது. லட்சுமியை, இழுக்காத குறையாகக்

கொண்டுபோய், அங்கே கடைசியாக இருந்த போர்ஷன் முன்னே நிறுத்தினாள்.

"ஜானகி.. ஒங்கம்மான்னு நெனைக்கிறேன் " என்று சொல்லிவிட்டு எட்டிப்பார்த்த இதர குடித்தனக் காரர்களை, "போங்கடி உள்ள, என்ன வேடிக்கை?" என விரட்டித் தன் அரசாங்கத்தை மெய்ப்பித்துவிட்டு போய்விட்டாள்.

"அம்மாவா?.."

கண்கள் பூத்து, கரு வளையங்களைப் பூட்டிக் கண்கள் பூத்து, கரு வளையங்களைப் பூட்டிக் கொண்டு, இமைக்குக் கீழே உள்வாங்கி, உதடுகள் வெடித்துத் தோலுரித்துக் கொண்டு, முணுமுணுக்கும் பிளாஸ்டிக் வளைகளை அடக்குவது போன்று, பின்புறம் கொண்டு சென்று, நெற்றியை ஒட்டியிருந்த வியர்வையை அழுந்தத் துடைத்துக் கொண்டு வெளிப்பட்ட தனது கணவனின் முதற் தாரத்து மகள் ஜானகியை, லட்சுமி பார்த்தாள்.

"என்னடி ஜானகி? என்னடி இது கோலம்? "

என்று கேட்ட சித்தியின் கேள்விக்காகவே காத்திருந்தது போல, ஜானகி அவளது தோளை அ¨ணைத்துக் கொண்டு விசும்ப ஆரம்பித்துவிட்டாள். பிறகு உணர்வு பெற்றவளாக லட்சுமியின் கையைப் பற்றி உரிமையோடு உள்ளே அழைத்துச் சென்றாள்.

சமையலுக்கும் சல்லாபத்திற்கும் சேர்ந்தே உபயோகப்பட்ட அந்த அறை, லட்சுமியின் எதிர்பார்ப்பில் இன்னும் குறுகிக் கொண்டது. ஒரு பிளாஸ்டிக் கயிற்றுக் கொடியில் கணவன் மனைவி இருவரது ஆடைகளுமே சேர்ந்தாற்போல் தொங்கின. சுவற்றில் இயேசுவும், பிள்ளையாரும் சேர்ந்தே இருந்தார்கள். ஒரு மூலையில் பெட்டியொன்றும் அதன் மீது தலையணையுடன் சுருட்டி வைக்கபட்ட பாயும். அடுப்புக்குப் பதிலாக ஒரு கெரஸின் ஸ்டவ்வும், பக்கத்திலேயே சுவற்றில் சற்றுத் தள்ளி ஆணி அடித்து மாட்டப்பட்டிருந்த மண்ணடிப்பக்க இரும்பு ஸ்டாண்டில் வரிசையாக மிளகாய், பருப்பு டப்பாக்க்கள். இரண்டொரு வெங்காயமும் தரையிற் கிடந்தன.

"கொஞ்சம் இரு சித்தி" என்று சொல்லிவிட்டு வெளியில் சென்ற ஜானகி, சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு ஸ்டூலுடன் வந்தாள்.

"உட்காரு சித்தி.." என்று சொல்லிவிட்டு அமைதியாக நின்றாள். இருவரில் யார் மறுபடியும் ஆரம்பிப்பது என்ற குழப்பம். ஜானகியே பேசினாள்.

"எங்க அட்ரஸ் யார் கொடுத்தாங்க? எப்படிக் கண்டுபிடிச்சு இங்க வந்தீங்க?"

"சொல்றேன், உன் வீட்டைக் கண்டு பிடிக்கிறது அவ்வளவு சுலபமல்ல" என்று சொல்லிவிட்டு ஸ்டூலில் லட்சுமி உட்கார்ந்தாள்.

"என்ன புழுக்கம்! ·பேனைப் போடேன்" எனச் சொல்ல வந்தவள் அண்ணாந்து பார்த்துவிட்டு அடக்கிக் கொண்டாள்"

"இங்கதான் இத்தனை வருஷமா இருக்கறியா?"

"ஆமாம்"

"ஏதாவது?"

"ஒண்ணுமில்லை சித்தி. அதிலும் நாங்க இருக்கற நெலைமையில அது அவசியமாவும் தோணல."

"ம்... இந்த நெலைமையை நீயா தேடிகிட்ட. கடலூர்ல எப்படில்லாம் இருந்த!"

"என்ன சித்தி செய்யறது? என் விதி .. அதை யாரால மாத்த முடியும்.. இப்படிப் படனும்னு ஆண்டவன் எழுதி இருக்கான்..நீங்களும் என்னை விட்டுட்டீங்க!" நேரே பார்க்க தைரியமில்லாமல், திரும்பிக் கொண்டு, கால் கட்டை விரலால் தரையை நெருடிக் கொண்டே ஜானகியிடமிருந்து கண் கலங்கப் பதில் வந்தது.

"நாங்க படிச்சுப் படிச்சுச் சொன்னோம் கேட்டியா? காதல் கத்தரிக்காய்னு இப்படியா சீரழியறது. கோட்டை கணக்கா வீடும், கூப்பிட்ட குரலுக்கு ஆளும், காரும் இருக்க இந்தக் கூண்டுக்குள்ள வந்து அவதிப்படனும்னு உனக்கு. வேறு இடத்துல சற்றுப் பெருசா இல்லைன்னா¡லும், நல்ல இடத்துல வீடு கெடைக்கிலயா?"

"அதுக்கு வருமானம் வேணுமே சித்தி?"

"ஏன் ஒங் காதற் புருஷன் சம்பாதிக்கலியா?"

"இல்லை சித்தி. உச்சுக் கொட்டினாள். நிரந்தரம் இல்லை. இன்னும் நல்ல வேலை கிடைச்சபாடில்லை. பக்கத்து போர்ஷ்ன்ல இருக்குற வேலு நாய்க்கர்தான் கொஞ்சநாளா ஹார்பர் வேலைக்குக் கூட்டிப் போறார். அவ்வளவுதான்."

" என்ன கண்றாவி இது! வரும்படி எப்படி?

"சொல்ல முடியாது சித்தி. ஏதோ காண்ற்றாக்ட் வேலை. ஒரு நாளைக்கு ஐம்பது அல்லது அறுபது கிடைக்கும். காப்பி சாப்பிடறியா? "

"காப்பி போடறதுக்கு எல்லாம் இருக்கா?"

"இல்லை சித்தி. பக்கத்துல நாயர்கடை இருக்கு. யாராச்சும் பசங்கள விட்டு வாங்கிவரச் சொல்லலாம்."

"எந்த எழவும் வேணாம். நீ வீட்டுக்குப் புறப்படு."

"எனக்கும் வரத்தான் ஆசை. ஆனா இப்படி திடுதிப்புன்னு கூப்பிட்டா எப்படி சித்தி? அப்பாவை நெனைச்சாத்தான் பயமா இருக்குது. அப்புறம் அவரும் வந்திடுவார். அவரையும் கூப்பிட்டுப் பாரேன்."

"எப்ப வருவார்?"

"சொல்ல முடியாது சித்தி. சில நாட்கள்ல வேலை குறைவாயிருந்தா சீக்கிரம் திரும்பிவிடுவார். இல்லன்னா மாலை நான்கு அல்லது ஐந்து மணியாகும்."

"சம்பாத்தியம்தான் ஒண்ணுமில்ல. மற்றபடி உன்னை எப்படி நடத்துறார்?

"பச்...அதை ஏன் சித்தி கேட்கிற? கிடைக்கிற வேலையில ஒட்டறதில்ல. தனது தகுதிக்கு ஏத்த வேலை அமையலைங்கிறார். வீட்டிலே உட்கார்ந்து கொண்டு 'அது சொத்தை இது சொத்தைன்னு' பிரச்சினைகளுக்குக் காரணம் தேடறார். காதுல கழுத்துல இருந்தது எல்லாம் அடகு வச்சாச்சு. இப்பக் கொஞ்ச நாளா அப்பாவைப் போய்பார்த்துட்டு வான்னு, எந்நேரமும் தொந்தரவு."

"ம்.. இதை நீயா தேடிக்கிட்டது; பாவி மனுஷன் ஒரு குந்துமணியைப் பாக்கிவைக்காம எல்லாத்தையும் உருவிட்டிருக்கானே! இந்தக் கோலத்துல வச்சிருக்கிற அவன், உன் தகப்பன் முன்னாடி வந்தான்னா, மனுஷன் கண்டம் துண்டமா வெட்டிப் புடுவார்".

லட்சுமியின் வார்த்தை மண்வெட்டி, மடையைச் சீண்ட மறுபடியும் ஜானகி கண்களைக் கசக்கிக்கொண்டு, சித்தியின் தோளில் தலையை இறக்கினாள்.

"சரி ..சரி.. கண்களைத் தொடைச்சுக்கோ. காரில் வந்திருக்கேன். முகத்தைக் கழுவி, கொஞ்சம் பவுடர் போட்டுக்கோ. மாற்றிக் கட்ட, புடவை கொண்டு வந்திருக்கேன். கட்டிக் கொண்டு புறப்படு. பொல்லாத புருஷன், பிறகு சொல்லிக் கொள்ளலாம்"

காதல் வேகத்தில் சுகத்தைத் துறந்திருந்த ஜானகி, கொஞ்சநாட்களாகவே பழைய வாழ்க்கையை நினைத்து ஏக்க ஆரம்பித்திருந்தாள். இதமான வார்த்தைகளும், வசதிகளும் அவளுக்குத் தேவைப்பட, அடுத்த அரை மணி நேரத்தில் தயாராகிவிட்டாள்.

எதிர்ப்போர்ஷனில் இருந்த கோவிந்தம்மாவிடம் சாவியைக் கொடுத்து, "அக்கா.. நான் கடலூர்வரைக்கும் எங்க வீட்டுக்குச் சித்தி கூட போறேன். அவர் வந்தா சாவியைக் கொடுங்க. போயிட்டு அண்ணாச்சிக் கடைக்கு போன் பண்றேன்னு சொல்லுங்க", என சொல்லிவிட்டுக் சந்தோஷமாகக் கிளம்பிவிட்டாள்.

மறுநாள் கடலூர் மஞ்சகுப்பத்திலிருந்த, ராமசாமி பிள்ளை வீடே அமர்க்களப்பட்டது. ஹோட்டல் பிருந்தாவனத்தில் ஜானகி திரும்பிவந்ததற்கான டின்னர் ஏற்பாடு செய்யப்பட்டது. ராமசாமிப் பிள்ளைதான் சந்ந்தோஷத்தை முழுசாக வெளிபடுத்தவில்லை. அன்று மாலையே அண்ணாச்சி கடைக்குப் போ'ன் செய்து புருஷனிடம் ஜானகி சந்தோஷத்தில் வழிந்தாள். "வீட்டில எல்லாரும் மாறிட்டாங்க" என்று சத்தியம் செய்தாள்.

ஒரு வாரம் கழிந்திருக்கும்.

"ஜானகி கிளம்பு. டாக்டர் கோமதியைப் பார்க்கணும்".

"எதுக்குச் சித்தி? "

"உனக்காகத்தான். இதுவரைக்கும் ஒண்ணுமில்ல. என்னன்னு செக்கப் செய்துக்கலாம்."

"வேண்டாம் சித்தி. இன்னும் கொஞ்சம் நாள் ஆகட்டும்"

" சரி. பரவாயில்ல, என் கூட வா அனீமியா இருக்கற மாதிரி ரொம்பவும் பலவீனமாயிருக்க. உடம்பையாவதுக் காட்டிக் கொஞ்சம் திடப் படுத்திக்கோ. உன்னைப் பழைய மாதிரிப் பார்க்கணும்னு நாங்க துடிக்கிறோம்."

"இந்தச் சித்திதான் எவ்வளவு பாசத்தைக் காட்டறா" என்று நினத்தபோது, ஜானகி கண்கலங்கிவிட்டாள். உங்க மனசெல்லாம் எனக்குச் சரியாக விளங்காமப் போச்சு சித்தி, தப்புப் பண்ணிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க.."

"சரி சரி.. நடந்ததைப் பத்தி என்ன பேச்சு இப்ப.. சரி விடு. டாக்டர்கிட்ட சொன்ன டைமுக்கு இருந்தாகணும். கிளம்பு சீக்கிரம்.."

அடுத்த அரைமணி நேரத்தில் லட்சுமியும், ஜானகியும் புது நகரிலிருந்த கோமதி கிளினிக்கை அடைந்தார்கள். பெனாயில், மருந்து வாசனைகளைக் கடந்து வெள்ளை யூனி·பார்மில் வெளிப்பட்ட நர்சுகளுக்கும், ஹாஸ்ப்பிட்டல் ஊழியர்களுக்கும் தலையாட்டிவிட்டு, இறுதியாக டாக்டர் கோமதி அறையில் இருவரும் வெளியே காத்திருந்தார்கள். முதலில் ஜானகிதான் உள்ளே அழைக்கப்பட்டாள்.

புடவைக்குமேல் வெள்ளைக் கோட்டும், படித்த கல்வியை வெளிப்படுத்தும் தடித்த பிரேம் போட்ட கண்ணாடியும், பகுத்தறிவில் உடன்பாடில்லை என்பதுபோலப் பெரிய குங்குமப்பொட்டும், தாலிக்கொடியுமாக டாக்டர் கோமதி அமர்ந்திருந்தாள்.

"ப்ளீஸ் சிட் டவுன்"

"தேங்க் யூ டாக்டர்"

"லட்சுமி அம்மாவோட டாட்டரா?"

"அப்படித்தான் வச்சுக்குங்க டாக்டர்."

"புரியலை. "

"ஷி இஸ் நாட் மை நேச்சுரல் மதர், என்னோட அம்மா இறந்ததுக்கப்புறம், கொஞ்ச வருடம் அப்பாமறுபடியும் கல்யானம் செய்துகொள்ள விருப்பமில்லாமத்தான் இருந்தாரு. அப்பத்தான் எங்க கம்பெனியில மார்க்கெட்டிங் லைன்ல இருந்த எங்க சித்தி, அப்பாவுக்கு ரொம்ப ஹெல்ப்புல்லா இருந்திருக்காங்க. பிறகு அது திருமணத்துல முடிஞ்சிடுச்சி. ஷி வாஸ் வெரி கைண்ட். நான்தான் சரியா புரிஞ்சுக்கல."

" சரி இப்படி வந்து கொஞ்சம் படுக்கறியா?"

என்று அங்கிருந்த படுக்கையைக் காட்ட, ஜானகி ஏறி அதிற் படுத்தபிறகு சம்பிரதாய பரிசோதனைகளை டாக்டர் செய்தார். கண் இரப்பையையும், காதுகளையும் ஆப்தால் மாஸ்க்ஓப் வழியாகப் பார்த்து, நாக்கை நீட்டச் சொல்லி, பல்ஸைப் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டதன் அடையாளமாக 'ஓகே' என்றாள்.

"எல்லா டெஸ்ட்டுக்கும் எழுதித் தறேன். டெஸ்ட்கள் முடிஞ்சதும், லாப் ரிப்போர்ட்டோட வந்து பாருங்க. உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு. ட்ரிப்ஸ்க்கு ஏற்பாடு பண்றேன். தற்காலிகமா சில விட்டமின் டேப்லட்ஸ் எழுதித் தறேன். மத்தபடி நல்லாத்தான் இருக்கறீங்க"

"சித்திதான் என்ன வற்புறுத்தி கூப்பிட்டு வந்தாங்க. நான் வேண்டான்னா கேக்கலை".

"அதனாலென்ன பரவாயில்லை. நீங்க போயிட்டுச் சித்தியை உள்ள அனுப்பறீங்களா?

உள்ளே நுழைந்த லட்சுமி பதை பதைத்தாள்.

"வணக்கம் டாக்டர்"

"வணக்கம். உட்காருங்க. பரவாயில்லையே. எப்படியோ உங்க கணவரோட முதல் தாரத்துப் பெண்ண கன்வின்ஸ் செய்து கூட்டியாந்துட்டீங்களே!

மெள்ளப் பேசுங்க டாக்டர். அவளுக்கு இன்னும் விஷயத்தை நான் சொல்லல. மெதுவாகத்தான் சொல்லணும்."

"அப்படியா? ... நான் சொன்ன மாதிரி, உங்க கணவருக்கு தொடர்ந்து டயாலிசீஸ் செய்துக் கொண்டிருப்பதைவிட, கிட்னி ட்ரான்ஸ்ப்ளண்ட் செய்துடலாம். ரத்த உறவுள்ளவங்க கிட்னி டொனேட் செய்தா எந்தப் பிரச்சினையும் வராது, பெட்டரும் கூட. நான் இன்னும் உங்கப் பெண்ணுக்கிட்ட அது பற்றிப் பேசல".

"இப்போதைக்கு வேண்டாம் டாக்டர். நான் பக்குவமா அவக்கிட்ட சொல்றேன். ஒரு வாரம் கழித்து மறுபடியும் அவளோட வந்து பார்க்கிறேன். வரட்டுமா?"சித்தி சொல்லிகொண்டு புறப்பட்டாள்.

பதிவுகள், ஜூலை 2003 இதழ் 43 -

15. நாகமணி - நடேசன் (ஆஸ்திரேலியா) -

கிறுக்குப் பிடித்தாலும் ஆம்பிளைதானே...பாடசாலை முடிந்து தனியாக வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன். நாலாம் வகுப்பில் நான் மொனிட்டராக இருந்ததால் வருட இறுதி நாளில் என்னிடம் இருந்த சாவிகளை வகுப்பு ஆசிரியரிடம் கொடுத்து விட்டு வருவதற்கு சிறிது நேரம் பிந்திவிட்டது. ""மொனிட்டராக வந்தபின்பு பொறுப்பு வந்திருக்கு"" என அம்மா பலமுறை கூறுவதுண்டு. மாலை சூரியன் முற்றாக மறையவில்லை. ஆனாலும், பாதை ஓரத்தில் இருந்த பாரிய மரங்கள் பாதையை இருட்டாக்கின. தோளில் புத்தகங்கள் கனத்தன. இந்த பாடப்புத்தகங்களை இனித் து¡க்க வேண்டியதில்லை என்ற சிறுசந்தோசம் மனத்தில் மலர்ந்தது. ஐந்தாம் வகுப்புக்கு எப்படியும் புத்தகப் பை ஒன்று வாங்கித் தருவதாக அம்மா சத்தியம் செய்திருக்கிறாள். பையுடன் கழுத்தில் தொங்கும் தண்ணீர் போத்தலுடன் பாடசாலை செல்லும் என் தோற்றம் கனவுகளில் எட்டிப் பார்த்தது.

ஐந்தாம் வகுப்பை நினைத்து கற்பனை செய்யும் போது இடுப்பில் இருந்த கால்சட்டை நழுவப் பார்த்தது! சிறிது நேரம் நின்று கால்சட்டையை சரி செய்ய முயன்றபோது பாதை ஓரத்து பாரிய ஆலமரம் மனத்தை கலக்கியது. பாதையில் இருந்து சிறிது விலகி இருந்தாலும் பாரிய குடைபோல் கிளை விரிந்து இருந்தது. மரத்தின் அடிப்பகுதியை மூன்றுபேர் கைகோர்த்து நின்றால் மட்டும் பிடிக்க முடியும். மரத்தின் கீழ் வயிரவர் சூலம் உள்ளது. அரசடி வயிரவரைப் பற்றிய பல கதைகள் ஊரில் உலவின.
பொய், களவு போன்ற குற்றம் செய்தவர்களை \இங்குதான் வந்து சத்தியம் செய்யச் சொல்வது ஊர் வழக்கம். திருடியவர்கள் மீண்டும் அப்பொருளை வயிரவரிடம் கொடுத்துவிட்டுப் போவார்கள் என என்னுடன் படிக்கும் கண்ணன் பொழிப்புக் கூறினான்.

"சமீபத்தில் ஏதாவது பொய் சொன்னேனோ" என யோசித்துக்கொண்டு வேகமாக நடந்தேன். "எதற்கும் ஒரு தேவாரம் பாடினால் பயம் போய்விடும்" என, ""தோடு உடைய செவியன்"" என கூவியபடி நடந்தேன்.

""நாயினாரா? ஏன் இவ்வளவு நேரம்?"" என கேட்டபடி ஆலமரத்துக்கு பின்னாலிருந்து நாகமணி திடீரென்று தோன்றினான்.

"இந்தநேரத்தில் இவன் எங்கே வந்தான்?" என நினைத்தபடி தேவாரத்தை நிறுத்திவிட்டு வேகமாக நடந்தேன்.

நாகமணி அதே மண்ணிற அரைமுழ வேட்டியை நிலத்தைக் கூட்டும்படி அணிந்திருந்தான்.. சட்டை போட்டதை நான் என்றுமே கண்டதில்லை. தலையில் உச்சி மொட்டையை மூன்றுபக்கம் அணைகட்டியபடி நரை கலந்த தலைமயிர் உள்ளது. அடிக்கடி

ஊதிய பலு¡னைப் போன்ற முகம். பலகாலம் சவரம் செய்யப்படவில்லை. அடிக்கடி தலையைத் தடவியதால்தான் இவனுக்கு மொட்டை விழுந்ததோ என நான் பலதடவை நினைத்தது உண்டு. நெஞ்சில் கத்தையாக மயிர் இருந்தது. முதுகில் பாரிய தளும்புகள் தெரியும்: அவை துலாக்காவடி எடுத்ததால் ஏற்பட்டவை என கேள்விப்பட்டேன். சேற்றுக்கடலில் தெரியும் மட்டியின் சிறுகண்கள் போன்ற கண்கள் நாகமணிக்கு. ஆனாலும், அலைந்து கொண்டிருக்கும் பார்வை.

நாகமணிக்கும் தனக்கும் ஒரேவயது என அம்மா கூறியதை வைத்துப் பார்த்தால், அவனுக்கு முப்பத்தைந்து வயதாவது இருக்க வேண்டும். நாகமணியின் பூர்வீகம் ஊரே அறிந்தது. அவனுடைய தாய் தந்தையர் மிகவும் வசதியாக சிங்கப்பூரில் வாழ்ந்தார்கள். இவன் சிறுவனாக இருக்கும் போது யப்பானியர்களின் குண்டு தாக்கி இருவரும் இறந்துவிட்டார்கள். உறவினர் உதவியுடன் கப்பலேறி இங்கு வந்து து¡ரத்து உறவுக்காரப் பாட்டியுடன் வாழ்ந்து வந்தான். பாட்டிக்கிழவி இறந்ததும் நாகமணி அனாதையானான்.

அம்மாவிடமிருந்து பெற்ற விசேட தகவல்களின்படி... சிறுவயதில் நாகமணி பாடசாலைக்கு வந்தாலும், படிக்கமாட்டான். மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடமாட்டான். இடையிடையே குழப்பம் விளைவிப்பான். சாப்பிடும் போது எச்சில் ஒழுகச் சாப்பிடுவதால் மற்றய பிள்ளைகளிடம் இருந்து விலக்கப்பட்டான். சத்தம் போட்டு அழுவதோ, சிரிப்பதோ அரிது. வாலிப வயதிலும் வேலைகள் செய்வதில்லை. கோவிலில் சாப்பாடு கிடைக்காத நாட்களில் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று சாப்பிடுவான். தங்குவதற்கு மட்டும் தனது கொட்டிலுக்குச் சென்றுவிடுவான்.

இவனது கொட்டில் தடிகளால் கட்டப்பட்டு, கிடுகுகளால் வேயப்பட்டு, சுற்றிவர அடைத்து இருக்கும். வாசல்கதவு இல்லாமல் கிடுகுத் தட்டியால் மறைக்கப்பட்டிருக்கும். இவனது கொட்டிலுக்கு பக்கத்தில் காவல் கோபுரம் எப்பவும் இருக்கும். இவனது கொட்டிலும் கோபுரமும் மாதம் ஒருமுறை இடம் மாறும்.

தாத்தா நடுஇரவு நேரத்தில் மீன் பிடிப்பதற்காக பட்டரி லைட்டுடன் கடல்கரைக்குச் சென்றபோது கரையில், அலைந்து கொண்டிருந்த நாகமணியிடம்,

““ஏன் படுக்கவில்லை““ எனக் கேட்டார்.

“காலடித் தடயங்களைத் தேடுகிறேன்““ என்றான் நாகமணி.

““உனக்கு வேலை இல்லையா?““
““எதிரிகள் இந்த ஊருக்குப் படையெடுப்பதற்கு முன்பாக உளவு பார்க்க வந்திருக்கிறார்கள்

என எனக்குத் தகவல் வந்துள்ளது"" எனக் கூறிவிட்டு காலடி தடயங்களை மீண்டும் தேடினான்.

""போய் படுத்துத் து¡ங்கு"" என தாத்தா துரத்தினார். தாத்தா பாட்டியிடம் ஒருமுறை கூறியதிலிருந்து இந்த வரலாற்றை அறிந்து கொண்டேன்.

இளம் பெண்கள் நாகமணியைக் கண்டாலே வெறுப்புடன் காறி உமிழ்வார்கள். ""கரப்பான் பூச்சியைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது"" என பக்கத்து வீட்டுத் தேவி என்னிடம் கூறினாள்.

இந்த வெறுப்புக்கு அழுக்கான நாலுமுழவேட்டி. மொட்டையான தலை, வாத்துப் போன்ற நடை மட்டும் காரணம் என கூறமுடியாது. கயிற்றுக் கொடிகளில் உலரப் போடும் பெண்களின் உள்ளாடைகள் காணாமற் போவதற்கு நாகமணிமேல் சந்தேகம் பெண்கள் வட்டாரத்திலே நிலவி வருகின்றது.

எதிர்வீட்டு சந்திரா பட்டணத்தில் படிப்பவள். விடுமுறைக்காக வீடுவந்து நின்றபோது தனது உள்ளாடையைக் காணவில்லை எனக் கூறியபடி தடிஎடுத்துக் கொண்டு நாகமணியை அடிப்பதற்குச் சென்றாள். தாத்தா இடைமறித்து, "அவன்தான் எடுத்தான் என்பதற்கு என்ன ஆதாரம?" எனக் கேட்டுச் சந்திராவைத் தடுத்து நிறுத்தினார்.

இரவு முழுவதும் ஊரைச் சுற்றித் திரியும் நாகமணிக்கு புத்திசுவாதீனம் அற்றவன் என சிலரின் அனுதாபம் கிடைத்தாலும், பெரும்பாலானவர்கள் அசிங்கமான விலங்கையோ அல்லது குஷ்டரோகியையோ பார்ப்பது போன்றே பார்த்தார்கள். இளம் பெண்கள் நாகமணியை வெறுப்பதிலும், சிறுவர்கள் துன்புறுத்துவதிலும் முன்னின்றார்கள். நாகமணி சாப்பிட்டுவிட்டு அதே இடத்தில் பகல்நேரத்தில் கண்ணயர்வது உண்டு. என்னோடு ஒத்த சிறுவர்கள் நாகமணிமேல் வண்டைப் பிடித்து விடுவதும், காதுக்குள் ஈர்க்கிலால் நுழைப்பதும், பேப்பரைச் சிகரட்டாகச் சுருட்டி அவன் வாயில் திணிப்பதிலும் இன்புறுவார்கள்.

நான் ஒருமுறை சிவப்பு நிற கம்பளிப்பூச்சியை நாகமணிமேல் விட்டபோது பிடிபட்டேன். நாகமணி உலுப்பிய உலுப்பில் பயந்துவிட்டேன். இந்த சம்பவத்தின் பின் மரியாதை கலந்த பயம் நாகமணிமேல் உருவாகியது. கோயில் திருவிழா தொடங்கினால் ஊருக்கு மட்டுமல்ல நாகமணிக்கும் கொண்டாட்டம். கோயில் வாசலில் உள்ள வாழைமரத்தின் கீழ் இருந்து தேவாரம் தப்பும் தவறுமாகப் பாடுவதும், அங்கு கிடைக்கும் பிரசாதங்களை உண்பதுமாக நேரத்தைச் செலவிடுவான். கோயிலுக்கு வரும் பெண்களைப் பார்க்க, நாண்டு கிடக்கிறான்" என்பது பெண்கள் வட்டாரத்தில் நிலவிய அபிப்பிராயம். சிறுவர்கள் நாகமணிமேல் கல்லெறிந்து குறும்பு செய்தாலும், பெரியவர்களுக்கு பயந்து

தங்கள் குறும்புகளைக் குறைத்துக் கொள்வார்கள். திருவிழா காலம் நாகமணிக்கு விடுமுறைக் காலம் போன்றது.

அந்தவருடம் எங்கள் ஊரில் மழை பெய்யவில்லை. கிணறுகள் வற்றிவிட்டன. எங்கள் வீட்டுக் கிணற்றில் ஒரு வாளி தண்ணீர்கூடக் கிடைக்காது. குடிப்பதற்கு கடற்கரையில் மணற்பகுதியில் சிறிய குழி தோண்டி அதில் இருந்து பொசியும் நீரைத் தென்னஞ் சிரட்டையால் அள்ளி எடுத்துக் குடத்து வாயிலில் துணிகட்டி வடித்தெடுப்போம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குழி சொந்தமாக இருக்கும்.

குளிப்பதற்கு கோயிலுக்குப் பக்கமான பெரிய கிணற்று நீரில் ண்கள் பகலில் குளிப்பதும், மாலைப் பொழுதில் பெண்கள் குளிப்பதும் ஊர் வழக்கம்.

அன்று ஒருநாள் அம்மா, தேவி, சந்திரா ஆகியோருடன் கோயில் கிணற்றுக்குச் சென்றேன். அம்மா துணி துவைக்கும்போது சந்திரா எனக்கு முன்பு தண்ணீர் அள்ளிக் குளித்தாள். ஒன்பது வயதான என்னை ஓர் ஆணாகவே நினைக்கவில்லை என்ற ஏமாற்றத்தில் சுற்றி இருந்த பனந்தோப்புக்குள் பந்தை எறிந்துவிட்டுத் தேடிக்கொண்டு சென்றேன். இரண்டு கட்டைப்பனை மரங்களுக்கு இடையே நாகமணியைக் கண்டேன்.

""அம்மா நாகமணி ஒளிந்திருக்கிறான்"" என கூவினேன்.

""அட நாயே பெண்கள் குளிக்கும் இடத்தில் உனக்கு என்ன வேலை"" என அம்மா அவனை விரட்டினாள்.

""சந்திரா பாரிய கல்லைத் து¡க்கியபடி நாகமணியை நோக்கி ஓடினாள். வாத்துப் போல் நடக்கும் நாகமணி முயலைப் போல், பாய்ந்து, பாய்ந்து ஓடினான்.

அடுத்தநாள் நாகமணி வீட்டுக்குச் சாப்பிட வந்தான். ""இனிமேல் இந்த வீட்டுக்கு சாப்பிட வராதே"" என கூறி அம்மா படலையைப் பூட்டினாள்.

""நாச்சியார் அப்படிச் சொல்லாதே, பசிக்குது""...

""பொம்பிளை குளிக்கிறதைப் பார்க்கிற உனக்கு என்ன சாப்பாடு"" என ஆத்திரமாக அம்மா கத்தினாள்.

நாகமணியின் கண்களில் கண்ணீர் வந்தது.

""அவனை ஏன் துரத்துகிறாய்?"" என்றபடி சமையல்கட்டிலிருந்து பாட்டி வந்தாள்.

““இவன்ர குணத்துக்கு வீட்டில் அடுக்கக் கூடாது.““ இது அம்மாவின் கொள்கைப் பிரகடனம்.

““சும்மா உள்ளே போ, நான் சாப்பாடு போடுகிறேன்““ தலையில் கிறுக்குப் பிடித்தாலும் அவன் ஆம்பிளைதானே என்றாள் பாட்டி.

““தலையில் கிறுக்குப் பிடித்தாலும் ஆம்பிளைதானே...“ என்று பாட்டி முணுமுணுத்தது அம்மா செவிகளிலே விழுந்திருக்குமா?

பதிவுகள், ஜூன் 2003 இதழ் 42

16. **ஜூலியாவின் பார்வையில்..... - நடேசன்-**

ஐ¥லியா சொன்ன அந்த வார்த்தைகள். அவள் அறையை விட்டு வெளியேறிய பின்பும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. “You are a arrogant man”. அந்த மென்மையான இதழ்கள் உதிர்த்த கடினமான வார்த்தைகள். மேசையின் கீழிருந்த தனது ஹான்ட் பாக்கை இழுத்த வேகத்தில் தனது செல்ல நாய் றோசியையும் அழைத்தவாறு அவள் வெளியேறினாள். சுமார் ஆண்டு கால நட்புக்கு அவளே முற்றுப்புள்ளி வைத்தாள். நட்பு இனிமையானது. ஆனால் முறிவோ கொடுமையானது என்பதை அனுபவபூர்வமாக உணர்வதற்கு அந்த சம்பவம் தான் காரணமானது. நடந்தது என்ன? மெல்பேண் நகரின் மத்தியில் உள்ள மிருக வைத்தியசாலையில் நான் பணியாற்றும் காலத்தில் எனக்கு அறிமுகமானவள் தான் ஐ¥லியா. அவளது செல்லப்பிராணி றோஸி. றோசிக்கு உடல்நலக்குறைவு ஏற்படும் போதெல்லாம் ஐ¥லியா அதனையும் அழைத்துக் கொண்டு என்னிடம் தான் வருவாள். அவளைப் பொறுத்தவரையில் நான் கைராசிக்காரனாக இருக்க வேண்டும். ஒருநாள் எனக்கு உதவியாகப் பணியாற்றும் நர்ஸ் சுகவீனம் காரணமாகக் கடமைக்கு வரவில்லை. தனியாகத் தவித்துக் கொண்டிருந்த எனக்கு ஐ£லியாவின் வரவு உற்சாகமளித்தது. ஏற்கனவே அறிமுகமாகியிருந்த அவளை புன்முறுவல் பூக்க வரவேற்றேன்.

““றோஸிக்கு ஊசி போட வேண்டும்““ என்றாள்.

““அதற்கென்ன போடலாமே““

“எங்கே உங்கள நர்ஸ்?“

““அவளுக்குச் சுகமில்லையாம். வரவில்லை.““

““நான் உதவி செய்யட்டுமா?““

““உனக்கு நர்ஸ் வேலை தெரியுமா?““

““முடிந்தவரை செய்வேன்““ எனச் சொல்லிவிட்டு எனது பதிலுக்கும் காத்திராமல் கிளினிக்கைச் சுத்தப்படுத்தி ஒழுங்கு செய்தாள். ஒரு நர்சுக்கான அனுபவம் இல்லாவிடினும் குறைந்த பட்சம் நாய், பூனைகளைப் பரிசோதிக்க உதவுவாள் என்ற நம்பிக்கையுடன் அவளது உதவிகளை ஏற்றுக்கொண்டேன். முற்பகலில் வந்தவர்களின் செல்லப்பிராணிகளைப் பரிசோதிப்பதற்கு ஐ¥லியா உதவியாக இருந்தாள். எதுவிதப் பிரச்சினையும் இல்லாமல் முற்பகல் பொழுது கழிந்தது. நண்பகலுக்குப் பின் நடுத்தர வயதான மாது ஒருத்தி தனது சிறிய ““பப்பியோன்““ ரக நாயைக் கொண்டு

வந்தாள். அதனது வாலின் அடிப்பகுதியில் ஒரு காயம் இருப்பதாகச் சொன்னாள்.

நாயைப் பரிசோதித்தேன். அதன் உடலில் தெள்ளுகள் ஊர்ந்து கொண்டிருந்தன. நாய்க்குரியவளிடம் அதனைச் சுட்டிக்காட்டி ""இந்தக் காயம் தெள்ளுகளினால் ஏற்படும் அலர்ஜ¢யைப் போக்குவதற்கு நாய் கடிப்பதனால் ஏற்படுகிறது. என விளக்கிவிட்டு ""அலர்ஜ¢க்கு ஊசிபோடுகிறேன்"" இந்த மருந்தைத் தெள்ளுகள் நீங்கப் பாவிக்க வேண்டும்"" என்றேன்.

அதுவரையில் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஜ¥லியா திடீர் எனத், தெள்ளுக்கு ""ரீ றி"" ஒயில் போடலாம் என்றாள்.

""பேசாதே"" எனக் கண்ணால் சைகை செய்துவிட்டுச் ""சாதாரண புண்ணாக இருந்தால் ""ரீ றி"" ஒயில் போடலாம். ஆனால் இது அலர்ஜ¢யால் வந்தது என்று சற்று, கோபமாகச் சொன்னேன்.

ஜ¥லியாவின் முகம் வாடிவிட்டது. எமக்கிடையே மூண்ட மௌனயுத்தத்தை நாயைக் கொண்டு வந்த பெண் புரிந்து கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட நாய்க்கு ஊசியும் போட்டு, தெள்ளுக்கு மருந்தும் கொடுத்து அனுப்பினேன்.

""ஜ¥லியா! இவர்கள் பணம் செலுத்தி ஆலோசனைக்கு வருகிறார்கள். இவர்களிடம் நீ ஆலோசனை செய்வது முறையல்ல, மேலும் விஞ்ஞான ரீதியில் ""ரீ றி"" ஒயில் வேலை செய்யும் என்பதற்கு ஆதாரமில்லை என்றேன்.

""அப்படியானால் இதைப்பற்றி முன்பே கூறியிருக்க வேண்டும்.""

""நான் சொன்ன விடயங்கள் ""கொமன் சென்ஸ"" ஆனவை.""

"You are a arrogant man"

எனக் கூறிவிட்டு வெளியேறினாள்.

ஆறு வருடங்களுக்கு முன்பு எனது சிகிச்சை அறையிலுள்ள சிறிய மைக்ரோ போனில் ""ஜ¥லியா ஜ¢ப்ஸ்"" எனக் கூறினேன்.

கறுப்பு நிற ""கொட்வீலர் நாயுடன் பெண்ணொருத்தி என் அறைக்குள் நுழைந்தாள்.

அவுஸ்திரேலிய மரபுப்படி நலம் விசாரித்தேன். ""நான் நலம். ஆனால் றோஸி மாத்திரம்

மூன்று காலில் நடக்கிறது.""

ஐம்பது வயதைத் தாண்டியிருந்தாலும் எலிசபெத் டெய்லரை நினைவுக்குக் கொண்டுவரும் முகவெட்டு, வட்டமான முகம். கண்களின் கீழ் இரு மடிப்புகள் தெரிந்தாலும் நீலக் கண்மணிகள் ஊடுருவிப் பார்க்கும் தன்மை கொண்டவை. அணிந்திருந்த உடைக்களில் சமூக எதிர்ப்புணர்வு தெரிந்தது.

""என்ன நடந்தது?""

""போர்ட் மெல்பண் கடற்கரையோரத்தில றோஸியுடன் வோக்கிங் போய்க் கொண்டிருந்த பொழுது திடீரென எதிர்பாராத விதமாகக் குறுக்கே ஓடிய முயல் குட்டியொன்றைத் துரத்திக் கொண்டு ஓடிய றோஸி ஒரு கற்பாறையில் மோதுண்டு விழுந்தது.""

மூன்று நாட்களுக்கு முன் நடந்த இச் சம்பவத்தில் ஒரு கால் வீங்கிவிட்டது. நாயைப் பரிசோதனை மேசையில் கிடத்தி விட்டுப் பார்த்தேன். ஒரு முழங்காலில் சவ்வு அறுந்திருப்பது தெரிந்தது.

""றோஸியின் முழங்கால் மூட்டிலுள்ள Anterior Cruciate Ligament அறுந்துவிட்டது. சத்திர சிகிச்சையின் மூலம் தான் குணப்படுத்த முடியும். உதை பந்தாட்ட விளையாட்டு வீரர்களுக்கும் இப்படிச் சவ்வு அறுந்துவிடுவது வழக்கம்."" என்றேன்.

""றோஸி உதைபந்தாட்டம் விளையாடவில்லை"" என்று சிரி¢த்தவாறு சொன்னாள்.

பலமணி நேரமும் அதிக பணமும் விரயமாகும் இந்த சத்திர சிகிச்சையைப் பற்றி இவளுக்கு எப்படி விளக்குவது என்று யோசித்தேன். பின்னர் எனது வலது காலைக் கதிரையில் வைத்து முழங்கால் மூட்டில் சவ்வுகள் அமைந்துள்ள விதத்தை விளங்கப்படுத்தினேன். இதைச் சரிப்படுத்தாது விட்டால் றோஸியால் நடக்க முடியாது என்றும் சொன்னேன். அவள் ""களுக்"" எனச் சிரித்தாள். எனது முழங்காலை உதராணம் காட்டிக் கூறியதைக் கேட்டு அவள் சிரிக்கிறாள் எனத் தெரிந்தவுடன் அசட்டுப் புன்னகை நெளியச் சங்கடத்துடன் காலைக் கீழே வைத்தேன். சத்திர சிகிச்சைக்காக அவளிடம் சம்மதக் கையொப்பம் வாங்கிக் கொண்டு மறுநாளே சத்திர சிகிச்சையும் செய்துவிட்டேன். இரண்டு மாதத்தில் ""றோஸி"" நான்கு கால்களில் நடக்கும் என உறுதியளித்தேன். குறிப்பிட்ட காலத்தில் ""றோஸி"" நடக்கவில்லை. மீண்டும் மயக்க மருந்து கொடுத்து X Ray எடுத்துப் பார்த்தேன். குறிப்பிட்ட காலில் எதுவிதக் கோளாறும் தெரியவில்லை. எனது சக வைத்தியர்களின்

அபிப்பிராயத்தையும் கேட்டேன். மற்றவர்களாலும் எதுவித முடிவுக்கும் வரமுடியவில்லை.

ஜ¥லியா கவலையுடன் ““இனி என்ன செய்வது?““ எனக் கேட்டாள்.

““நான் உங்கள் றோஸிக்கு “Accupuncture“ சிகிச்சை செய்கிறேன். அதற்கு நீங்கள் பணம் தரவேண்டியதில்லை““ என்றேன்.

“’Accupuncture’ பயன் தருமா?““ அவள் அப்பாவியாகக் கேட்டாள்.

“’Accupuncturte’ சீன சிகிச்சை முறை.. இது நான்காயிரம் வருடகாலமாக அங்கு பிரயோகிக்கப்படுகிறது. உடலில் “மெரிடியன்“ எனப்படும் பகுதிகளினு¡டாக ஒரு சக்தி பாய்கிறது. இந்த “மெரிடியன்“ களில் 365 புள்ளிகள் உண்டு. இந்தப் புள்ளிகள் உடலின் அங்கங்களை ஆளுமை செய்கிறது. இப்புள்ளிகளில் ஊசிகளை மென்மையாகச் செலுத்துவோம்.““ என்று ஒரு விரிவுரையே நடத்தினேன்.

எந்தவொரு விடயத்திலும் informed consent எடுக்கவேண்டியது முக்கியமாக உள்ள காலத்தில் வாழ்கிறோம். அக்கியூபங்சர் படித்திருந்தாலும் முதல் முறையாக ஜ¥லியாவின் றோஸிக்குத் தான் அந்த சிகிச்சை முறையைப் பிரயோகித்தேன். றோஸியும் அந்த ஊசிகளை அமைதியாக ஏற்றுக் கொண்டது. மிக வேகமாக றோஸியின் காலில் முன்னேற்றம் தென்பட்டது. இந்தச் சிகிச்சை முறையால் வியக்கத்தக்க முறையில் றோஸி நான்கு கால்களிலும் நடக்கத் தொடங்கியது. இந்தச் சிகிச்சையின் போது ஜ¥லியாவுடன் பல விடயங்களையும் பேசுவேன். எமது உரையாடல்களில் இருந்து ஜ¥லியா ஒரு இலக்கிய ஆர்வலர் என்பதும், ஓவியங்கள் வரைபவர் என்பதும் தெரிய வந்தது. விக்கிர சேத்தையும், சல்மன் ருஷ்டியையும் பெயரளிவில் அறிந்திருந்த எனக்கு அவள், அவர்களது புத்தகங்களைப் பற்றி விளக்கினாள். அவளது து¡ண்டுதலின் பேரில் விக்கிரம் சேத்தின் “ A Suitable Boy’ வாங்கிப் படிக்க முயன்றேன். அரைவாசிக்கு மேல் படிப்பதற்கு எனக்குப் பொறுமை இருக்கவில்லை. றோஸியின் கால்களைக் குணப்படுத்தியதற்கு நான் எதுவித கட்டணமும் அறவிடவில்லை, என்பதனாலோ என்னவோ ஜ¥லியா, தன் கைப்பட வரைந்த அழகான ஓவியமொன்றை எனக்குப் பரிசளித்தாள். அந்த ஓவியம் இன்றும் எனது வீட்டின் சுவரை அலங்கரிக்கிறது. ஆங்கில இலக்கியத்திலும், அக்யூபங்கரிலும் என்னைத் தற்செயலாக ஈடுபடத் து¡ண்டிய ஜ¥லியாவும், றோஸியும் என்னால் மறக்க முடியாதவர்கள். இலக்கிய உணர்வும், ஓவிய ஆற்றலும் நிரம்பிய கலையுள்ளமான ஜ¥லியாவிடம் ““உனக்கு உழஅஅழ¦ ளநளெந இல்லை என்று நான் கூறியது கடுமையான சொற்பிரயோகமா? என்பதை இன்றும் நான் எனக்குள் விவாதித்துக் கொண்டிருக்கிறேன்.““ என்னை அவள் சுய விமர்சனத்திற்கு உட்படுத்திவிட்டாள்.

uthayam@ihug.com.au நவம்பர் 2003 இதழ் 47 -

17. அம்மா எனக்கொரு சிநேகிதி. -நாகரத்தினம் கிருஷ்ணா -

அம்மாவின் கனவுகளை மட்டுமல்ல, நினைவுகளையும் கூடப் பொய்யாக்கிவிட்டு ஓடிப்போனவன் நான். அம்மாவை இறுதியாக எப்போது பார்த்தேன். இருக்கலாம். ஓர் இருபது ஆண்டுகள் இருக்கலாம்.என் மனத்துள் இருக்கும் அம்மா நூற் சேலையில், முழங்கை நீண்ட, கழுத்துவரை உயர்ந்த கிளாஸ்கோ மல் இரவிக்கையில் ஐம்பது வயதிலும் நரை அறியாது என்னை ஆச்சரியப்படுத்துபவள். காலையில் தோசைக்கல் வழிய மாவை வார்த்து, பொன் சிவப்புக்குக் காத்திருந்து, "குறைந்தது மூன்றாவது தின்னுட்டுத்தான் எழுந்திருக்கணுமெனச் " சத்தம் போடுவதையும், மாலையில் எனக்குக் கண்ணூறு கழிப்பதையும் கொண்டு சராசரி அம்மாவாகக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் எங்கள் கிராமத்தில் பொம்மை, பேசும்படம் மட்டுமே வாசித்த பெண்களைப் புதுமைப்பித்தன், மு.வ. ஜெயகாந்தன் எனப் பேசவைத்தவள் அவள்.

என் கைபிடித்து, சுக துக்கங்களை பர்¢மாறிக்கொள்வதில், அம்மா எனக்கொரு சிநேகிதி. அதிர்ந்து பேசமாட்டாள். அன்போ, கோபமோ, வார்த்தைகள் வராது. கண்களும் கைகளுந்தான் அவளுக்கான கருவிகள். உதடுகள், ஏன் முகவாய்கட்டைகூட சில தருணங்களில் அவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றன.

அன்பு மட்டுமே அறிந்த அம்மாவிற்கு இடைக்கிடை கோபமும் வருவதுண்டு. அம்மாவின் கோபத்தைத் தணிக்க எனக்குத் தெரிந்த தந்திரம் ஓடி ஒளிவது. அது ஆரம்பக் காலங்களில் மணிக்கணக்கில் துவங்கி, பின்னர் அவள் வாங்கிவந்திருந்த மான் மார்க் குடையைத் தொலைத்துவிட்டு கிராமத்துப் பெருமாள் கோவிலில் கருடாழ்வார் பின்னே ஒருநாளாய் ஆகியிருக்கின்றது. பிறகு இருபது ஆண்டுகளாக ஒளிந்து வாழ்ந்தவனை, முகவரி கண்டுபிடித்து அழைத்து வந்தவன் கிராமத்து நண்பன் குட்டியாப்பிள்ளை. அம்மா படுத்த படுக்கையிலிருப்பதாகவும், என்னை 'ஒருமுறை பார்த்தாளென்றால் அவள் உயிர் நல்லபடியாப் போய்ச் சேர்ந்திடும்' என்றும் அவன் சொல்லியிருந்தான்.

அம்மாவிடம் முதன் முதலில் நான் முரண்படத் தொடங்கியது படையாட்சி வீட்டுக் கல்யாணத்தின் போது. கிராமத்தில் நல்லது கெட்டது என்றால் முன் நிற்கும் அம்மாவைக் குறித்து சுளீர் என்று வந்து விழுந்தது அந்த விமர்சனம்.

"அந்த.......ஆளுக்கு இங்கென்ன வேலை". அதற்காகவே காத்திருந்தது போல இரண்டொருவரின் முனங்கல், தொடர்ந்து நக்கற் சிரிப்பு.

கடந்த சில மாதங்களாகவே, கிராமத்தில் அம்மாவைக் குறிவைத்த வதந்தியின் உக்கிரத்தை ஜாடை மாடையாக குட்டியாப்பிள்ளை சொல்லியிருந்தான். அம்மா செய்திருந்த குற்றம் தெருவில் அலைந்து கொண்டிருந்த பைத்தியக்காரன் ஒருவனுக்கு

வீட்டுத் திண்ணையில் அடைக்கலம் கொடுத்துச் சோறுபோட்டுக் கொண்டிருப்பது. அன்றைக்கு அவள் மீது வீசப்பட்ட தீக்குழம்பு விமர்சனத்தில் துடித்துப் போனது நான் மட்டுமல்ல குட்டியாப்பிள்ளையும் கூட.. இரவு முழுதும் வாதிட்ட அம்மாவிடம் நான் கண்டது ஓர் "சாதரண மௌனம். மற்றவர்களின் பார்வைக் கோளாறுக்கு நான் பொறுப்பாக முடியாது என்கின்ற மௌனம். முதன்முறையாக அம்மாவுக்கும் எனக்குமிருந்த சிநேகிதச் சங்கிலி அறுந்து விழுந்தது. இந்தமுறை அவளிடமே சொல்லிகொண்டு ஒளிவதெனத் தீர்மானித்தேன்.

இரவு முழுக்க, புரள்வதும் எழுந்து உட்காருவதுமாய்க் கழித்தேன்.. தூக்கமில்லை. மனத்தை அமைதிப் படுத்த முயன்று களைத்துவிட்டேன். அம்மா சற்றுத் தள்ளி ஒருக்களித்துப் படுத்திருக்கிறாள். அவளும் தூக்கமின்றி என்னைக் கவனித்துக் கொண்டிருப்பாளோ? இருட்டுத் திரை என்னைக் குழப்பத்தில் நிறுத்த, இருவருக்கிடையில் விழுந்து கிடந்தது. எங்களுக்குள் உண்டான சிநேகித வாசிப்பில் எங்கே புள்ளி விழுந்தது?. பதில் கிடைக்காததால் கழிவிரக்கம், கோபம், ஆத்திரம்.

மறுநாள் காலை "நான் கிளம்பறேன்" என்று சொன்னவனைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பதிலில்லை. "எங்கே கிளம்பற? ஏன் கிளம்பற?" என்கின்ற கேள்விகள் ஏதுமில்லை. எனது இரு கைகளையும் இறுகப்பற்றினாள். அமைதியாக இருந்தாள். அதன் மூலம் என்ன சொல்ல வருகிறாள்? என் புறப்பாடு குறித்து அவளுக்குத் துக்கமா? சந்தோஷமா? யூகிக்க முடியலை. இப்படிக் கைகளைப் பற்றிகொண்டு மௌனம் பேசுவதை காட்டிலும், வாயைத் திறந்து நான்குவார்த்தையில் என்ன திட்டியிருக்கலாம்.. எப்போது பேசினாள்? இப்போது பேசுவதற்கு? மௌனம். அசாதரண மௌனம். என் கைகள் அவள் கைகளில் இறுக்கப்படுவதையுணர்ந்தேன். அவளது உதடுகளும், முகவாய்க் கட்டையும் வழக்கம்போல நடுங்கின. எனக்கென்னவோ அவள் செயல் பைத்தியக்காரத்தனமாக இருந்தது. அவள் மனதில் என்ன இருந்திருக்கும்? உணர்வை உணர்வால் மட்டுமே அறிய முடியும் என்கின்றார்களே? அப்படியா? எனக்கு யாரேனும் விளக்கினாத் தேவலாம். கடந்த இருபது ஆண்டுகளாக என்னுள் அந்த வினா துரத்துகின்றது. இன்றுவரை 'என் புறப்பாடு தினத்தில் அம்மா என்ன சொல்லியிருப்பாள் என்பது புதிராகவே உள்ளது.

அம்மா படுக்கையிலிருந்தாள். சற்றுத் தள்ளி அகல் விளக்கொன்று எரிந்து கொண்டிருக்கிறது. எனக்காவேக் காத்திருந்தது போல, நாசியில் திடுமென்று நுழைந்து, உடலில் சிலிர்ப்பையும், கதகதப்பையும் ஒரு சேர அழைத்துவந்தது என் வீட்டு மணம்.

பாயிலிருந்து எழுந்து உட்காரமுயன்ற அம்மா, என்ன நினைத்தாளோ மறுபடியும் படுத்துக் கொண்டாள். அவளது இருண்ட கண்கள் கூரை, சுவர்கள் என அலைந்துவிட்டு இறுதியாக என்னைப் பதிவு செய்து கொண்டன.

"பக்கத்துல வா..!" கையசைத்து என்னை அருகில் அழைத்தாள். எனக்கே என்னிடம் பயம். என் பயத்திற்கு நேர்மாறாக அம்மாவின் முகத்திலே எப்போதும்போல நான் அறிந்த அமைதி. எதையோ மெல்லுவது போன்ற தாடை அசைவுகள். முகவாயும் அதில் சேர்ந்து கொள்கின்றது. எதனை அசை போடுகின்றாளோ? இந்த முறை ஏதோ சொல்ல வருகிறாள். பெரும்பாலும் வார்த்தைகளை நம்பாதவள். பேசுகிறாள். ஆச்சரியமாயிருக்கிறது.

"இப்படி வா..!" அம்மாவிடம் இன்னும் நெருங்கி நிற்கிறேன். விளக்கின் தீபம் இருள் சேர்ந்த ஒளியை அம்மா முகத்திலும் என் முகத்திலுமாக பங்கீடுச் செய்திருந்தது.

"கையை என்னிடம் கொடு" வெகுக் காலத்திற்குப் பிறகு அம்மா பேசுவதால் மனதுக்குள் ஏற்பட்ட சுகம் சிறிது நேரமே நீடித்தது. மனதுக்குள் மறுபடியும் பயம். ஏதோ ஒரு அசம்பாவிதத்தை எதிர்நோக்கும் பயம்.

அம்மாதான் மௌனத்தை கலைத்துக் கொண்டு பேசினாள்:

"மகனே..! இப்போதாவது வந்தாயே. சந்தோஷம்.. உன் அஞ்ஞாத வாழ்க்கையின் தேடுதல் முடிந்ததா?

எதையாவது எதிர்பார்த்து வந்தாயா? நான் உனக்கு என்ன கொடுப்பேன் ? இருப்பேதுமில்லாத வாழ்க்கை என்கின்றபோது, கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்க முடியும்.. என்னிடம் இருப்பதெல்லாம் இதயம் அதன் சுமைகள், ஏக்கங்கள், அதில் சுரக்கும் அன்பு. ம்.. அதுமட்டுமே எஞ்சியிருக்கின்றது. அன்பை புரிந்துகொண்டமையில் இரண்டுபேருமே தவறியிருப்போமா? நல்லதோ கெட்டதோ மாந்தர்களின் ஒழுக்கங்களில் அன்பிற்கும் பங்கிருக்கிறது. இப்பொழுது என்னுடைய முறை. நான் புறப்பட்டாக வேண்டும். உனக்காகத்தான் காத்திருந்தேன். உன்னிடமிருந்து ஒளிந்து வாழப்போகின்றேன். உன் சினேகிதி நான் பிரியப் போகின்றேன். இனி 'நான்' என்பது உன்னிடம் நிழலாகக் கூட இருக்கமுடியாது.".

'பிரிவென்பது இறப்பின் ஒரு பகுதி' யென்று யாரோ சொன்னதாய் ஞாபகம். என் சிநேகித அம்மா அந்தப் பொருளில் சொல்லியிருப்பாளோ? மெள்ளக் குனிந்து உதடுகளைக் குவித்து சுட்டுவிரலை நிறுத்திய என் குறியீட்டில் என்ன புரிந்துகொண்டாளோ அமைதியானாள். இப்போது என் முறை. நான் பேசியாகவேண்டும். அவள் காதுமடல்கள் விரிந்து, ஆர்வத்தோடு என் வார்த்தைகளுக்குக் காத்திருக்கின்றன.

"அம்மா..! புறப்பாடெல்லாம் முடிவாக முடியுமா?. பிறப்பு இறப்பு, ஆரம்பம் முடிவு, இரவு பகல் அனைத்துமே ஊழின் சுழற்சி. முடிவல்ல ஆரம்பம்.. நீ இருப்பாய். உன்னுடைய

அன்பும் கோபமும், என்னிடமும் இருக்கும். பிரிவென்பதே ஆத்மாவிற்கு இல்லை. "

"ம்... மறுக்கலை. இறுதியாக ஒரு வேண்டுகோள். குந்திக்கு நேர்ந்தது போல என்மார்பு நிறைய அன்பு. வா. கிட்டத்தில் வா.. தாகசாந்தி செய். என் மார்பில் உறைந்திருக்கின்ற பாலை உறிஞ்சு. என் ஆன்மா வெண்பஞ்சாக மேலே எழுந்திருக்கவேண்டும்.
ஏற்பாடு செய்வாயா?. எதற்காக இப்படி குனிந்து நிற்கிறாய்? நிமிர்ந்து என்னை நேராகப்பார். என் மடியில் படுத்து எத்தனை நாளாகிறது. இப்போதாவது என் விருப்பத்தை நிறைவேற்று. மறுத்தாய் என்றால் காலத்திற்கும் அதற்காக வருந்த நேரிடும்."
அம்மாவின் உலர்ந்த கைகள் மெல்ல மெல்ல என்னிடம்.....

* * *

அம்மாவின் விருப்பத்தை நிறைவேற்ற, பாயில் நெருங்கி உட்கார்ந்து கைகளில் அவளை வாங்கிக் கொண்டான். நெஞ்சத்தில் பீறிட்ட அழுகை, வெடித்து சிதறியது. அம்மாவை அணைத்துக் கொண்டு கதறினான். அவன் கதறலைக் கேட்கின்ற நிலையில் அவள் இல்லை. இறந்திருந்தாள் .

Na.Krishna@wanadoo.fr

பதிவுகள், நவம்பர் 2003 இதழ் 47

18. பழைய பாடல் - கடல்புத்திரன்

ரவியின்,காம்பிலிருந்து 'இதயக்கோயின்..சோகப்பாடல் ஓடியோ கசட்டிலிருந்து காற்றில் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. ரவிக்கு,சிறிது அடர்த்தியான தலை மயிர்,கூடைபோல சிறிது வாரிவிட்டிருந்தான். ரவுசரும்,சேர்ட்டுமாக... பல்கலைக்கழகப் பெடியன் போல.. இருந்தான். காம்பில்,'பிரீட்டீஸ்'என்று அழைக்கப்படுற-கதிர், இளங்கோ, பரமேஸ் ஆகியோரும் இருந்தார்கள். 1983ம் ஆண்டு நடந்த கலவரம் தான் அவர்களை தோழர்களாக்கி.. விட்டிருந்தன. அதற்கு,முதல் நண்பர்களாகவே இருந்தார்கள்.கலவரம் முடிந்து பத்து நாட்களாகியும்.. இளங்கோவின்,அண்ணன் -செந்தில் திரும்பி வரவே இல்லை. ஏற்கனவே, ஊருக்கு வந்தவர்கள்'சொல்லிய கதைகளும், வராதவர்களின் சோகங்களும் அவர்களின் மனங்களை கனன்றுகொண்டிருக்கச் செய்திருந்தன."நான் இயக்கத்தில் சேரப் போறேன்ரா"என்று இளங்கோ தனித்து வெளிக்கிட்ட போது,மனம் கேளாமல் மற்றவர்களும் சேர்ந்து விட்டவர்கள். அவர்கள், இப்ப.. இயல்பான சந்தோசங்களை இழந்தவர்கள்; காதல்,கல்யாணம், குடும்பம்,சகோதர உறவுகள்.. எல்லாம் அறுபடும் நிலையில் இருப்பவர்கள். ரவிக்கு, முந்தி ஊர்ப்பெட்டைகள் மேல் மையல் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது.'கமலத்'தை நினைத்தால்..நண்பர்கள் இப்பவும் கதைத்து சிரிப்பவர்கள்.

கலவரத்துக்கு முதல், அரசாங்க வேலை செய்தவர்களில் பலர், ஸ்ரைக் செய்த போது மட்டகளப்பு கசசேரியில் வேலை செய்த அவ் ஊரைச்சேர்ந்த சபாவதி ,தர்மராஜா, கந்தசாமி ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். அரசாங்கம் அமைத்திருந்த அரசியற் கட்சி வெளிநாடுகளில் நடப்பது போல .. சட்டமூலத்தை பார்ளிமெண்டில் கொண்டு வந்து ,அத்தனை பேரின் வேலைகளையும் பறித்து விட்டிருந்தது. பிறகு,மன்னிப்பு கோரி கடிதம் எழுதினால்'அன்றி மீள வேலையில் சேர்க்கப்படமாட்டார்கள்'என்று சிறு திருத்தம் கொண்டு வந்தது.பல சிங்களவர்கள் கடிதத்தைக் கொடுத்து வேலையில் கொளுவி விட்டார்கள். சில சிங்களவர்களுக்கு பொது மன்னிப்பு கொடுத்து வேலையில் சேர விட்டார்கள். ஆனால்,தமிழர் பகுத¢யில் சேரல் வெகுவாக நடக்கவில்லை.சிங்களத்தில் கடிதம் எழுதப்படாதாலோ.. என்னவோ? இழந்தது இழந்ததாகியே போனது.அவர்கள் குடும்பங்களோடு ஊர் திரும்பி இருந்தார்கள். தர்மராஜா குடியில் வீழ்ந்து போனார்.சபாவதி'இயக்கப் பெடியளால் தான்..உந்த அரசியலை மாற்றி அமைக்க முடியும்'என்று நம்பினார்.அவசரத்திற்கு தன் சைக்கிளைக் கொடுத்து உதவி செய்ப்பவர்.அவருடைய மூத்தவன்,செல்வன், ..உயர்தர வகுப்பில்(கணிதப்பிரிவில்)நல்ல மார்க்குகளைப் பெற்று ..பொறியியல் துறையில்படிக்க சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.கடவுள் 'ஒன்றை இழந்தால் இன்னொன்றைக் கொடுப்பார்'என்பார்கள். செல்வன் மூலமாக மீண்டும் தலையெடுக்கப் போகிறார்கள். அப்பவும்,சிங்களம் படிக்கவில்லை, சிங்களத்தில் எழுதவில்லை எனத் தூக்கி எறியப்போறானோ? அது எதிர்காலத்தின் பிரச்சனை!கமலம் அவனுக்கு அடுத்தாக 2-3 வயசு இளையவளானவள். அவளை சிறுவயதிலிருந்தே டான்ஸ்

வகுப்புகளுக்கு அனுப்பியிருந்தார்கள். ஒல்லியான அச்சிறுப்பெட்டையைக் கவனித்ததிற்குக் காரணம் அந்த டான்ஸ் தகமை தான். பள்ளிக்கூடத்தில், சரஸ்வதிப் பூசை விழாவில்,அவள் ஆடியது..”இந்த சுட்டியிடம் இத்தனைத் திறமையா? “என அவளைப் பார்க்க வைத்து விட்டது. ஊர்ச்சனங்களால் வெகுவாக பாராட்டப்பட்டாள். கமலம் சாமர்தியப்பட்ட பிறகு, இவர்கள் மையல் கொள்ளும் பெண் வரிசையிலும் இடம் பெற்றுவிட்டாள்.பெடியள் கெட்டவர்களில்லை.அவளையும் முழுசிப் பார்த்தார்கள்.அவள் வெடுக்கென முகத்தை சுளித்துக் கொண்டு போவாள்.அவளில் ஏற்பட்ட மாற்றம் அப்படி பார்க்க வைத்து விட்டது. அவ்வளவு தான்.அவர்கள் பார்த்தது சபாவதிக்கோ,செல்வனுக்கோ தெரிந்திருக்கவில்லை.இயக்கப்பெடியளை ஊரவர்கள் ஒதுக்கியே வைத்திருந்தார்கள். எங்களுக்கெல்லாம்..அநீதி நடக்கையிலே தான் விழிக்கிறோம்; மற்றவர்களுக்கு நடந்த அநீதிகளை எதிர்த்துப் போராட என்று படிப்பை,வீட்டை,உறவை,வசதிவாய்ப்புக்களை விட்டு விலகி நிற்கிறவர்கள் பெடியள். அவர்கள் ஊர்ப்பெட்டைகளை ஏக்கத்துடன் பார்ப்பது அவருக்கு தவறாகப் படவில்லை. அவர்களும் சமானியர் தானே. அவர்களால் இனிமேல் இயக்கத்தை விட்டு விலகி சாதாரண வாழ்க்கைக்கு வருவது முடியாது போலவேப் பட்டது. கந்தசாமிக்கு வயல் நிலங்கள் இருந்தன.அவர்க்கு இயக்கங்களிலும் நம்பிக்கையில்லை, அரசியல்க்கட்சிகளிலும் நம்பிக்கை இல்லை.தானுண்டு,தன் குடும்பமுண்டு என்றிருந்தார். இந்தியாவிற்குப் போய் பயிற்சி பெற்று வந்த பிறகு அவர்கள் பார்வையில் மாற்றம் நிகழ்ந்திருந்தது. முழுசிப் பார்க்கிறது..முற்றிலும் குறைந்து போய்யிருந்தது. ஊர்ப்பெட்டைகள் ”அண்ணே, இவங்கள் சேட்டை விடுறாங்கள்,கொஞ்சம் கவனியுங்கள்” என்று கேட்ட போது, அப்பள்ளிப் பெடியள்களை மிரட்டியிருக்கிறார்கள்; கையை நீட்ட கண்டிச்சுமிருக்கிறார்கள். வயசுப்பெட்டைகள் போற போதுஅவர்களை மீறி பார்வை எறியியறதும் நடக்கத்தான் செய்கிறது. அதேசமயம்,’நமக்கு இந்த வாழ்க்கை இல்லை’என்ற உண்மையும் செவிடில் அடித்த மாதிரி புரிகிறது. இப்பவெல்லாம் அவர்களுக்கு பழைய மாதிரி கனவுகள் வருவதில்லை.

சுசிலாவின் பழையப்பாடல்களே அவர்களை ஆறுதல் படுத்துகின்றன.காம்களில் அடிக்கடிப் போட்டுக் கேட்கிறார்கள். அப்பாடல்களிலுள்ள ...காதல் உறவுகள், மொழிகள்,ஏக்கங்கள், சோகங்கள்..எல்லாவற்றுடனும் ஐக்கியப்பட்டு விடுகிறார்கள். இவர்களுக்கு ஒரு வித தாலாட்டை அளிக்கின்றன. இவர்களை மட்டுமில்லை,எல்லா இயக்கக் காம்களையும் பழைய பாட்டுக்கள் கட்டிப் போட்டேயிருக்கின்றன. அதோட, இதயக்கோவில் சோகப்பாட்டுக் கசட்டும் கூட சேர்ந்தே இருக்கின்றது. அவர்களுடைய காம், அரசாங்க அதிபருடையது போன்ற தலைப்பகுதி. உப அரசாங்கப்பிரிவினரைப் போல ஒரமைப்புப் பெடியளும், சில ஊர்ப்பிரதிநிதிகளும் வந்து ரவியோடு கதைக்கிறார்கள். ரவி தெளிவாய் கதைப்பதில் பேர் போனவன். ஆற அமர கதைக்கிறான்.திரும்பிச் செல்லும் அவர்கள் முகங்களில் ‘நிம்மதி’ தெரிகின்றன. ரவணன் கிராமத்து அமைப்பைச் சேர்ந்தவன்,கிராமசேவை அமைப்பைப் போன்று அவனுக்கு மேலவிருந்த உபஅரசாங்க அமைப்பைப் போன்ற அமைப்பைச் சேர்ந்த சிவமும் ரவிக்காக.. காத்துக்

கொண்டிருக்கிறார்கள். வேறு என்ன,ஏதோப் பிரச்சனையை பேசிக்கதைக்கவே வந்திருக்கிறார்கள். பிரிட்டீஸ் அவர்களுக்கு 'டீ'கொண்டு வந்து கொடுக்கிறான். பாட்டுக்கள் முடிய கசட்டை மாற்றிப் போட்டும் விட்டுப் போகிறான். "வானுயர்ந்த சோலையிலே..." பாட்டு பெடியள் மனதை கவ்விக் கொண்டு.. தொடர்கிறது. சரவணன்,உயர் வகுப்பில் ..உயிரியல்ப் பிரிவில் படித்தவன்.பரிட்சையில் தவறியதே இயக்கத்தில் சேர்வதற்குக் காரணம். அந்த ஏமாற்றத்தை தாங்க முடியாது அள்ளுப்பட்டவன். அவன் கிராமத்துபள்ளி ஆசிரியை ஒருவரின் மகன் என்பதால் ,அங்கே தனி மரியாதை நிலவியிருந்தது. தன் தரப்பு மரியாதைகளை எல்லாம் இயக்கத்திற்கு தாரை வார்க்க செய்து விட வேண்டும் என்று விரும்பினான். ஆனால்,அவனுக்கு இயக்கம் என்பது என்னவென்றே தெரியாது. தவிர,சேர்ந்திருந்த கிராமத்துப் பெடியள்.. அவனை விட பல மடங்கு பின் தங்கிய அறிவைக் கொண்டிருந்த சிறுவர்கள். அவர்களுக்கு படிப்பிக்க வந்த டியூசன் மாஸ்ரர்களாலும், பல்கலைப்பெடியள் வைத்த கூட்டங்களாலும் இயக்கத்தினுள் தம் பேரை கொடுத்துப் பிணைத்துக் கொண்டவர்கள். அவர்களை வழி நடத்தும் பொறுப்பு சரவணன் தலையில் இருந்தது. அவனுடையதைப் போல, 12-13 காம்களை... சிவத்தின் காம் பிரதிநிதிப்படுத்தியது. சிவத்திற்கும் அவன் வயசு தானிருந்தது, நண்பர்களாகி விட்டார்கள். சிவத்தின் காம்களைப் போல,50

-60 காம்களை... ரவியின் காம் பிரதிநிதிப்படுத்தியது. எனவே,பெடியள்களுக்கும் சிவத்தின் காம்பிற்குமிடையில் தபால் காரனாகவிருப்பதே தன்னுடைய முதல் வேலை என்பதை சரவணன் சுலபமாக புரிந்து கொண்டான்.மிச்சப்படி, இயக்கத்தின் மேல்மட்டதினர்.. பிரசுரிக்கிற பிரசுரங்கள் , நூல்கள் ,பேப்பர்கள்,விளக்கக் கையேடுகள் எல்லாம் சிவம் அனுப்பிற பிரச்சாரப்பிரிவினரால் கூட்டங்கள் வைக்கப்பட்டு சரிவர கிராமத்துப் பெடியள்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டன. "அத்தைமகனே போய் வரவா..?" அந்தப்பாட்டு அவனுக்கு மச்சாளின் ஞாபகத்தை ஏற்படுத்தி விட்டது.படிப்பில் தவறி இயக்கம் என சிரழிகிற அவனை அந்தப் பெண் கூட ஏறெடுத்துப் பார்த்ததில்லை.அவளின் பெற்றோர்கள் அவனை ஒருப் பொருட்டாக கூட மதிக்கவில்லை.ஒதுக்கப்பட்டவனாக இருந்தான்.தனக்குள் சிரித்துக் கொண்டான். யாழ்ப்பாணத்துப் பெற்றோர், படியாத பெடியள்களை தறுதலை என ஒதுக்கிவைத்ததுப் போல ,இயக்கப்பெடியள்களையும் ஊரவர்களும், உறவுகளும்..'சாதாரண வாழ்க்கைக்கு ஒத்து வராதவர்கள்' என்று ஒதுக்கியே வைத்திருந்தார்கள்.ஆமி,பொலிஸ் இவர்களைத் தேடி வருவதால்..எதிர்காலத்தில் தம் பெண் பிரசைகளுக்கு ஆபத்து என்ற பயங்கள் வேறு..!ஜனநாயக அரசியலில் பணக்காரர்களே பயன் பெறுகிறார்கள். அதோடு,அவற்றில் இருக்கிற அரசப் படைகளில்.. பெண்பிரசைகள் மேல் பாலியல் வன்முறை செய்வதை ஒரு ராஜதந்திரமாகவே வைத்திருக்கிறார்கள்.நேர்மையற்ற இவ்ஒழுங்கீனத்தை யூ.என்.ஓ போன்ற அமைப்புகள் கூட கண்டுக்கிறதில்லை. இதெல்லாம் பெடியள்களை வெகுவாக தனிமைப்படுத்தி விடத்தான், ..ஒரு வித 'சைக்கோ'நிலையில் இயக்கங்களுக்கு அள்ளுப்பட்டுக் கொண்டுக்கிறார்கள். இயக்க கட்டுமாணங்களும் சரிவர கட்டப்படாதலால்.. அங்கேயும் நிறையப் பிரச்சனைகள்.விடுதலைப் பெற்ற

மண்ணில் தான் எவருக்குமே சுபிட்ச வாழ்க்கை காத்திருப்பதாக நம்புகிறார்கள். கல்யாணம் கட்டி..நிறைவான குடும்பமாகிவிருப்பவர்கள் வாழ்க்கையில் கூட..அரசப்படைகளின் கூரிய நகங்கள் நீட்டப்பட்டே கிடக்கின்றன.விட்டில் பூச்சிகளாக அவர்களைப் போல மடிவதிலும் பார்க்க,கல் எடுத்து எறியிற பாலாஸ்தீன பெடியள்களைப் போல.. இயக்கமாகி மடிவதே மேல் என வந்தவர்கள் அவர்கள். என்னதான் கட்டாய வாழ்க்கை கவிந்திருந்தாலும் அவர்களும் சாமானியர் தானே. சுசிலாவின் பழையப் பாடல்களுக்கு அடிமையாகிப் போய்க் கிடக்கிறார்கள். “ஆலைய மணியின் ஒசையை நான் கேட்டேன்..”என்ற பாட்டு தவழ்ந்து கொண்டிருந்தது. ரவி”என்னடா மச்சான் பிரச்சனைகள்?” என்று அவர்களை நோக்கி வந்தான்.”வடமராட்சிப் பக்க பெடியள் எம் பகுதியில்,மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பறித்துக் கொண்டு போய்விட்டார்களாம்.ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா?”கேட்டான் சரவணன்.”முயற்சித்துப் பார்க்கிறேன். பெரும்பாலும் முடியாது என்றே படுகிறது.”என்றான் தணிவான குரலில். சில பகுதி அமைப்புக்கள் ஆயுதப்பற்றாக்குறையால்..

இப்படி சில விசயங்களை செய்து, இந்தியாவிற்குப் படகுகளில் கடத்தி.. விற்று ,அப்பணத்தில் கள்ளமார்க்கட்டில் ஆயுதங்களை வாங்கி வருகிறார்கள். மற்ற இயக்க நெருக்குவாரமும், புல்லுருவிகள் போல ..புலன் உருவிகள் ஊடுருவி விட்ட பகுதிகளின் நெருக்குவாரமும் அதிகமாகவிருக்கும் பகுதிகளிலே..இப்படி தன்னிச்சையாக செயல்படுவது நடக்கின்றது. வானில் வட்டமிடும் கெலியும், பொம்பர்களின் மத்தியிலும் வாழ்ற அவர்களுக்கு கையில் ஒரிரண்டு ஆயுதங்களாவது இருக்க வேண்டும். ஆயுத வறுமை அவர்கள் மத்தியில் ..அந்த மாதிரி நிலவியிருந்தது. இயக்க மேல் மட்டத்தினருக்கும் ,இந்திய இரகசிய உதவியாளர் மத்தியிலும் எழுந்த பிரச்சனைகளால்..போதியளவு ஆயுங்களோ,தகுந்த ஆயுங்களோ சரிவர வழங்கப்படவில்லை.ஆயுதக் கலாச்சாரமும்,ஒப்பந்தங்களும் எப்போதுமே சிக்கலானவை. அவர்கள் தம் அரசியல் நலன்களை முதன்மைப் படுத்தி பேரம் பேசும் போது .. அனேகமான பெரிய இயக்கங்களுக்கு வெறுத்துப்போய் விடுகின்றன. அவர்கள், அவ்வவ்வியக்கங்களிலிருந்து பிரிபட்டு பிரிபட்டு இருக்கும் சிறு சிறு அணிகளுக்கு உதவிகளை வழங்கிப் பிரச்சனைகளை பெருப்பித்து விடுகிறார்கள். இவர்களாகவே தன்முயற்சியால் பணத்தைத் திரட்டி,களவாக ஆயுதங்களை கொள்வனவு செய்கிற போதும்..இந்தியப் பிரிவு மூக்கை நுழைத்து பறிமுதல் செய்துவது நடக்கிறது. அவர்களுடையது இரு தடவைகள் அகப்பட்டுக் கொண்டு விட்டிருந்தன. தளத்தில் தலை நிமிர்ந்து நிற்க முடியாதளவு ஆயுத வறுமையில் இருக்கிறார்கள். ஒரு தடவை, வடமராட்சிப் பகுதியில் கொஞ்சப் பெடியள் சிறிலங்கா ஆமிகளால் சுற்றி வளைக்கப்பட்டு விட்டனர். கையில் கிடந்த ஓர் எ.கே 47 ரைபிளுடனும்,சில கிரனைற்றுகளுடனும் கடைசி வரையில் போராடியப் போது, ..தீர்ந்து ..தப்பி ஒடுகையில், இரண்டு மூன்று பேர் சுடப்பட்டு இறப்பைத் தழுவினர். இயக்க மேல் மட்டங்களின் மத்தியில் பகைமை மோசமாகவிருந்தப் போதிலும்..கீழ்ப்பிரிவினர், சமயோசிதமாக நடந்து கொள்றதும் இருந்தன. தோழமையை விட, ஊரவர், நண்பர், ஒரே வகுப்பில் படித்தவர்கள்.. என்ற மனச்சாட்சி

விழிப்பினாலும் செயல்பட்டார்கள். பெடியள்களின் தசையாடியது. மற்ற ஒரு இயக்கம் வந்து, ஆமியை விரட்டியது. ஆமி பழையபடி கெலியில் ஏறி, தப்பி ஓடியது. பிறகு,அவர்கள் மத்தியில் நடந்த விசாரணையில்,"அண்மையில் இருந்த எம் காம்பிற்கு கிட்டவாக வந்து விட்டார்கள்,அதனாலே ஆமியை விரட்டினோம்"என்றதை.. அவ்வியக்கம் பெரிசு படுத்தாது விட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு, அவ்வமைப்பு இப்படி' மோட்டார் சைக்கிள்களை பறித்து 'ஆயுதமாக்குவது பல்வேறு இடங்களில் நடந்தன. இங்கே, சிறிதளவு பிடிபட்டு விட்டார்கள்.பிடிபட்டது என்றால் பெடியள்களை பிடித்துவைத்திருக்கிறார்கள் என்றில்லை, இவர்கள் தான் செய்தவர்கள்..என்று. அச்செய்தியை மற்ற இயக்கம் பொது மக்கள் மத்தியில் காரசாரமான விமர்சனமாக வைத்து விட. .நம் பெடியள் வார்த்தையாடி களைத்துப் போய்விட்டார்கள்.'பெடியள் நல்லாய் அரசியல் பேசுறான்கள்'என்ற பேர் தான் கடைசியில் கிடைத்திருந்தது. ரவி "விசாரித்துப் பார்ப்போம்.விசாரிக்கிறோம்..என்று சொல்லி வையுங்கள்.இந்த விசாரணை நீளமாக.. நீளமாக..மக்களை வேறொருப் பிரச்சனை வந்து பிடித்துக் கொள்ளும்"என்றான்.அவர்கள் என்ன செய்வார்கள். "அத்தான்..உன்னைத்தான்.."பாடல் தவழ்ந்தது.பழையப் பாடல்களைப் போய்க் கேட்க வேண்டியது தான்.சீர்காழியின் வீர முழக்கப் பாடல்கள்,அவர்களின் இயக்கப் பாடல்கள்..அவர்களை பாடல்கள் தாலாட்டுற காலம்.

[இக் கதை நிகழ்ந்த காலகட்டம் 1983-1986]

பதிவுகள், அக்டோபர் 2003 இதழ் 46

19. ஓய்வு இல்லத்தில் ஒரு மாலைப்பொழுது! - நடேசன்-

"ஜெனற், உனது தாயார் இந்த ஓய்வு இல்லத்திற்கு இடம் பெயர்ந்து வந்தபோது உனது மனநிலை எப்படி இருந்தது""?

""எனது மனத்தில் ஓர் ஆறுதல் உணர்வு ஏற்பட்டது. நான் வேலையில் இருந்து களைப்பாக வீடுவந்ததும் அம்மாவிடம் பேசவேண்டும். நாள் முழுவதும் தனியே இருந்த அம்மா நான் வந்ததும் என்னுடன் பேசுவதற்கு வருவார். நான் மனமும் உடலும் களைத்த நிலையில் சாவகாசமாக உரையாட முடியாது, நான் வந்தவுடன் எனக்காக அம்மா கஸ்டப்பட்டு சமைக்க வேண்டும். தான் உண்ணாவிடிலும் கூட, ஒரேவீட்டில் வாழும்போது இப்படியான எதிர்பார்ப்புகள் உண்டு. இதில் இருந்து பரஸ்பரம் விடுதலை பெறுவதற்கு இந்த ஓய்வு இல்லம் உதவுகிறது, வாரத்தில் ஒருநாள் நான் அம்மாவுடன் இரவு தங்குவேன்.

என்னோடு வேலை செய்த ஜெனற்றின் அம்மா தனது வசதியான பெரிய வீட்டை விற்றுவிட்டு ரிற்றயமண்ட் வில்லேக எனப்படும் ஓய்வு இல்லத்தில் வீடு வாங்கிக் கொண்டு சென்றுவிட்டாள் என அறிந்து இருவரையும் சந்திக்க ஓய்வு இல்லத்துக்கு சென்றேன்.

மருத்துவ நுட்பத்தாலும் புதிய மருந்துகளாலும் மனிதர்களில் வாழ்வுக்காலம், முன்னேறிய நாடுகளில் மட்டுமல்ல எல்லா நாடுகளிலும் கூடியுள்ளது, வாழும்காலம் கூடும்போது முக்கியமாக மூன்று தலைமுறையினர் வாழும்போது இவர்களது உடற்சக்தி, மனசிந்தனை மற்றும் தேவைகள் வேறுபடுகிறது, வேறுபட்ட தேவைகள் உள்ளவர்கள் ஓரிடத்தில் இருக்க முடியாது. ரீன் ஏஜ் (teen age) வயதுடையவர்களின் தேவைகள் அவர்களின் பெற்றோர்களின் தேவைகளில் இருந்து வேறுபடுகிறது. இதேபோல் அறுபது வயதுக்கு மேற்பட்டோர் மாடிவீடுகளிலும் வசிப்பதற்கு ஏற்பாகாது.

இந்தவகையில் உடல்நலம் குறைந்து பராமரிப்பு தேவைபடும் வரை அவர்கள் ஒத்த வயதானவர்களுடன் வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்டது தான் இந்த ரிட்டயமன்ற் வில்லேக. ஆசிய நாடுகளில் இந்த முறை பெருமளவில் இன்னும் வரவில்லை.
வெகுவிரைவில் இந்தியா சீனா போன்ற இடங்களில் பெரும் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

மெல்பேனில் வடபகுதியில் போக்னர் என்ற இடத்தில் நான் சென்ற இந்த ஓய்வில்லம் இருக்கிறது, இயற்கையின் தன்மையை நினைவுபடுத்தும் முகமாக அருகில் நேர்சிங்கோமும் முன்புறமாக போக்னா மயானமும் அமைந்துள்ளது,

மெல்போனின் குளிர்கால மாலைவேளையில் நான் சென்றபோது வாசலில் ஜெனற் என்னை எதிர்கொண்டார். உள்ளே சென்றபோது இருநூற்றுக்கு மேற்பட்ட சிறிய வீடுகளைக் கொண்ட சிறிய கிராமம். சுத்தமான தெருக்களும், அளந்து வெட்டப்பட்ட புல்தரைகளும் கவர்ச்சியாக இருந்தது,

"ஜெனற், ஏன் இவ்வளவு அமைதியாக இருக்கிறது?"

"இன்று ஞாயிற்றுக்கிழமை. பிள்ளைகள் வந்து தாய்தந்தையரை தங்களது வீட்டுக்கு கூட்டிக்கொண்டு சென்றுவிட்டார்கள். இரவானதும் மீண்டும் கூட்டிவருவார்கள."

ஜெனட்டின் தாயார் ஜெஸ் இருந்த மூலை வீட்டுக்குள் சென்றபோது அவர் என்னைக் கட்டி அனைத்துக் கன்னத்தில் முத்தமிட்டார்.

.

நானும் இரண்டு கன்னத்திலும் முத்தமிட்டேன். ""இரண்டு கன்னத்திலும் முத்தமிடுவது இத்தாலியர்கள்தான் எனக் கூறிச் சிரித்தார்.

.

"அப்படியா எனக்குப் பல கிரேக்க, இத்தாலிய மோல்ரிய நண்பர்கள் இருந்ததால் இந்தப் பழக்கம் வந்தது என்றேன்."

கால் நு¡ற்றாண்டுக்கு முன் ஜெஸ் தனது கணவர் குழந்தைகளுடன் இங்கிலாந்தின் ஜக்சயர் பகுதியில் இருந்து வந்தாள். ஜக்சயர் ஆங்கில உச்சரிப்பு இன்னமும் ஜெஸ்சிடம் மட்டுமல்ல ஜெனட்டிடமும் உள்ளது,

மருத்துவ தாதியாக மெல்பேனில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது கணவன் இறந்ததால் தனது வேலையை நிறுத்திவிட்டு குழந்தைகளை வளர்த்தாள். அவர்கள் வளர்ந்தது மீண்டும் பெண் மருத்துவ தாதியானாள். இவர்களது பெரிய வீடு கிளன்ரோய் பகுதியில் இருந்தது.

""ஜெஸ், எப்படி இந்த வீடு கிடைத்தது"" என்றேன்.

""ஒன்பது மாதங்கள் காத்திருந்து கிடைத்தது, என்றார். வீட்டைச் சுற்றிப் பார்த்தேன்.

ஒரு படுக்கை அறையுடன் அத்தோடு குளியல் அறை, குளியல் அறையில் கைபிடி இருப்புகள். வழுக்காத தரையமைப்பு. வீட்டில் ஒவ்வொரு பகுதியிலும் அலாரம் பொருத்தப்பட்டுள்ளது, தீ அணைக்கும் கருவி பொருத்தப்பட்ட சிறிய சமையலறை.

மீண்டும் ஜெஸ்சிடம் ""இந்த வீடு கிடைக்க என்ன தகுதி வேண்டும்"" என்றபோது

""ஜம்பத்தைந்து வயது இருக்க வேண்டும்."" என்றார்.

பொதுவான வசதிகளை எனக்குக் காட்டுவதற்கு தாயும் மகளும் என்னுடன் வந்தனர். நீச்சல்குளம், நூல்நிலையம், பிலியட்மேசை, டீடீ" ற்கான இடம். இதைவிட சிறிய நாடக அரங்கு இருந்தது,

இந்த நாடக அரங்கு ஏன்? என்றேன். "இங்கு பல நடிகர்கள் இருக்கிறார்கள். தாங்களாகவே நாடகம் போடுவார்கள். இதைவிட போல்ரூம் நடனத்திற்கு சங்கீது அரங்காகவும் பயன்படும்.""

இவ்வளவு வசதிகள் உள்ளதே. இந்த இடத்தை பற்றி ஏதாவது குறை சொல்லமுடியுமா"" என்றேன்.

""இந்த இடத்தைப் பராமரிக்க எமது பென்சனில் இருந்து பணம் அறவிடுகிறார்கள். மிகுதியாக எதுவும் மிஞ்சுவதில்லை.""

வீடுகளின் பின்பகுதியில் வெளியான இடத்தில் சிலபகுதிகளில் காய்கறி செடிகள் இருந்தன. இதைப்பற்றி கேட்டபோது, ""தோட்ட வேலையில் ஈடுபடுபவர்கள் இந்தபகுதியயை உபயோகிப்பார்கள்."" என பதில் வந்தது,

ஜெஸ் தனது தோழியான பிலிஸன் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றாள். பிலிஸ். கடந்த பன்னிரண்டு வருடங்களாக இந்தவீட்டில் வசிக்கிறார். ""கடந்த வருடம் கணவன் இறந்ததால் தனது மனம் தவித்தாலும் இந்த கிராமத்தில் இருக்கும் மற்றையோரின் துணையால் ஆறுதல் அடைகிறேன்."" என்றாள். ""உங்கள் பிள்ளைகளிடம் போவதில்லையா?"" என கேட்டபோது ""எனக்கு எட்டு பிள்ளைகளும் பதினெட்டு பேரப்பிள்ளைகளும் உள்ளார்கள்."" என பெருமிதமாக கூறியபடி அவர்களின் போட்டோ அல்பத்தை எனக்கு காட்டினார். பலர் குழந்தைகளுடன் சிறிய வீட்டில் வசித்த பின் ஜம்பது, அறுபது வயதின் முன்பு மாடிவீடு கட்டுவார்கள். அக்காலத்தில் முள்ளந்தண்டு நோ. இடுப்பு வலி, என்பன கணவனுக்கோ மனைவிக்கோ வந்துவிட்டால் வீட்டைச் சீராக வைத்திருக்க முடியாது. ஓருவர் மாடிவீடு கட்டிவிட்டு முதுகு நோய் காரணமாக மாடிப்படிக்கு பக்கத்திலே இருக்கிறார்.

ஜெனட்டிடமும் ஜெஸ்சிடமும் விடைபெற்று வெளியே வந்தபோது மயானமும் நேசிங்கோமும் தெரிந்தது, இந்தப் பகுதியை நிர்மானித்த ரவுண் பிளானரை (Town Planning) உண்மையாகவே வாழ்த்தினேன்.

பதிவுகள் அக்டோபர் 2003 இதழ் 46

20. வாசல்தோறும் - - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி) -

வானத்தில் முகில் கூட்டங்கள் நிற்பதும் நடப்பதுமாக எதையோ தேடி ஓடியபடி என் நினைவுகளும் அதுபோல்தான். என் கையைவிட்டு மட்டும் தொலைந்துபோன அற்புதமான அந்த நினைவுகள் என்னுள் எப்போதும் படர்ந்தபடி. அம்மா அடிக்கடி கூறுவா உன்னால ஒருவேலையும் முழுசா செய்ய முடியாது.எந்த வேலையை தொட்டாலும் அரைகுறைதான். அதைபடிக்கவேணும் இதை படிக்கவேணு -மென்று எல்லாவற்றையும் தொட்டு பார்த்ததோட சா¢. நேற்று இந்த ஒன்று கூடலுக்கு போய்வந்ததிலிருந்து என் எண்ணங்களும் அங்கேயும் இங்கேயும் தொட்டுக்கொண்டே இருக்கின்றது.

அங்கு செல்லும்பொழுது சாதாரணமாகத்தான் சென்றேன். ஆனால் அது இவ்வளவு இனிமையான சந்திப்பாக இருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கவே இல்லை. முதலில் அங்குவந்திருந்த அத்தனை முகங்களும் அன்னியமாய் விலகி நின்றன.பின்பு ஒவ்வொருவராய் அறிமுகம் ஆனபின் ஓ அதேசிரிப்பு, அதேகண்கள் ஆனால் உடலால்மட்டும் எல்லோரும் மாறியிருந்தனர். ஒவ்வொருவா¢ன் முகங்களையும் பார்க்கும்பொழுது என்னுள் ஒவ்வொரு கதை எழுந்து கொண்டே இருந்தது. அன்று குழந்தையாய், பருவமடைந்த பெண்ணாய் எவ்வளவு இனிமையான நாட்கள். எத்தனை வருடங்கள் கடந்தாலும் என் மனதைவிட்டு அகலாத அந்தப் பகுதியை என் நினைவுகள் திரும்ப திரும்ப தொட்டுக்கொண்டே இருக்கும். அந்த இனிய காலத்தில் இல்லை என்ற வார்த்தையை நான் கேட்டதே இல்லை. இதனால் என் நட்புக்கள் என்னை ஏதோ ஒரு வழியில் பழிவாங்கிக்கொண்டே இருப்பார்கள். மழைக்காலங்களில் கான்கான்வைத்து தைச்ச ஓகன்ரி சட்டையை நனைப்பதற்க்கென்றே தேமாமரத்தின்கீழ் நிற்கவைத்து அதைட்டி விடுவதும். பின் அதேமரம் எங்கள் வீடாய், இரயில்வண்டியாய், எல்லாமாய் மாறி சமயத்தில் எங்கள் பவைப்பிள்ளைகளோடு அதன் கீழ்படுத்து நித்திரை கொள்வதும் அப்போதெல்லாம் பலகைக்கட்டைதான் எங்கள் பிள்ளைகள். அதை குளிக்கவார்ப்பதும், பவுடர் பூசுவதும் குட்டான் சோறுசமைத்து சாப்பிடுவதும். ஆனால் ரஞ்சன் ராஜன் ரவி இவர்கள் இந்த விளையாட்டுக்கு மட்டும் எங்களோட சேரவே மாட்டார்கள். கோவில் வைத்திருப்பர்கள், குரும்பை எடுத்து தேர்கட்டி இழுப்பார்கள். பின் நாங்கள் சமைத்த குட்டான்சோறை சாப்பிடமட்டும் வருவார்கள். ஆண்என்ற அகம்பாவம் அப்போதே அவர்களிடம் ஊறியிருந்தது. ஆனால் இப்போ அதே ரஞ்சன், ராஜன், ரவி தங்கள் பிள்ளைகளுக்கு பால்கொடுப்பதும், நப்கின்மாற்றி விடுவதும் உருவத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும் மாறியதுபோல் ஒருதோற்றம். எது மாற்றியிருக்கும் காலமா, இல்லை புலம்பெயர்வாழ்க்கையா, எதுமாற்றியிருக்கும் ?

புலம் பெயர் வாழ்வு அவர்களை மட்டுமல்ல என்னையும். இல்லாவிட்டால் கனடாவில் ஓன்று விட்ட அண்ணா உயிரற்று உடல் மட்டும். அதையும் இல்லாமல் அழிக்கும் நேரத்திற்காக காத்து கிடக்கும்பொழுது நான் குழைத்து வைத்த டோனட்ஸ் மா

வீணாகிப்போய் விடுமென்று சுட்டுக்கொண்டு இருப்பேனா? என்மகன் என்னைக் கேட்ட கேள்வி டோனட்ஸை எண்ணை சுடுவதைவிட மோசமாக என்னை சுட்டுக்கொண்டே இருந்தது. நான் எப்படி இதை மறந்தேன்? இருபது வருட இல்வாழ்க்கையில் எல்லாவற்றையும் மறந்து போனேனா? அல்லது உறவுகளை தொலைத்த இந்த புலம்பெயர் அவலவாழ்வு எல்லாவற்றையும் மறக்கடித்துவிட்டனவா? எது எதுவென என் மனம் பதிலை தேடியலைந்தது.நானே இப்படி மாறினால் இங்கு வளர்ந்து வரும் அடுத்த சமுதாயம் ? கேள்விக்குறி விழிகளின் முன் வளைந்து நின்றது.

எல்லோருடைய குழந்தைகளையும் பார்க்கும்பொழுது சிறுபிராயத்தில் என்னுடன் கைகோர்த்து நின்ற என் நட்புக்கள் மறுபடியும் சிறுகுழந்தைகளாகியதுபோல் எனக்குள் ஓர் பிரமை ஏற்பட்டுக்கொண்டே இருந்தது.வாழ்க்கையில் எத்தனையோ விடயங்களை மறக்க முடியாததுபோல் இந்த ஒன்று கூடலையும் என்மனது பதிவு செய்துவைத்தது. அனைவரும் பிரியும் பொழுது அத்தனை விழிகளிலும் ஏக்கங்கள். இனி அவரவர்கள் தங்கள் தேடலில் மூழ்கி நிஜத்தை மறந்து தம்மை இயந்திரமாக்கி. மறுபடியும் எப்போது என்ற கேள்விக்கு விடையை தேடியபடி அந்த காலத்திற்காக இனி உயிரை கையில்பிடித்தபடி வாழவேண்டும்.

ஒரு இனத்தை அழிக்கவேண்டுமென்றால் முதலில் அதன்கலாச்சாரத்தை அழியென்று சிங்கள அரசாங்கத்திற்கு யார் சொல்லிக்கொடுத்திருப்பார்கள்? கூட்டுக்குடும்பமாக உறவுகளோடு வாழ்ந்த அந்த இனிமையான வாழ்க்கையை...... கூட்டமாக இரையுண்டு மகிழும்பொழுது கல்லெறிந்து காக்கைகளை கலைத்தால் அவை திக்கு திக்காக திசைமாறி பறந்த மாதிரி நாங்களும்........புவியியல் ஆசிரியர் உலகவரைபடத்திலுள்ள நாடுகளை சுட்டிக்காட்டுமாறுகூறினால் விழிபிதுங்கி நின்ற காலம்மாறி.இன்று டென்மார்க்கும்,பிரித்தானியாவும், நோர்வேயும், கனடாவும் ஏதோ சொந்த ஊர்போல் கிவிட்டது. யாழ்ப்பாணத்திலிருக்கும் பொழுது பொ¢யக்கா கொழும்பில, பெரியண்ணா பொகவந்தலவில, சின்னக்காமானிப்பாயில என்ற காலம் தொலைந்து அவர்களெல்லாம் இன்று உலக வரைபடத்திலுள்ள அத்தனை இடங்களிலும். நம்மக்கள் உலகத்தை உள்ளங்கைக்குள்வைத்து மூடிவிட்டார்கள் .

ஆனால் பிரிவு அதன்வலி அத்தனை உள்ளங்களிலும் நிரந்தர இடத்தை பிடித்துவிட்டது என்பதை எல்லோரினதும் முகங்கள் கட்டியம் கூறிக்கொண்டிருந்தது. வாழ்க்கையில் பிரிவது இணைவது இயற்கை.ஆனால் நாங்கள் பிரிவுக்கிடையில் அல்லவா வாழ்வை நகர்த்திக்கொண்டு இருக்கின்றோம். இதனால் அன்பு கொஞ்சம் கொஞ்சமாக விலகுவதுபோல் எனக்குள் ஓர் உணர்வு உணர்த்தியபடியே இருக்கின்றது.என் குழந்தைகளுக்கு என் தாயை தந்தையை புகைப்படத்தின் மூலம்தான் அறிமுகப்படுத்தினேன்.இன்று அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு நாங்களும் அந்தபுகைப்படங்களும்தானே அத்தாட்சியாக இருக்கின்றன. இதே நிலை நீடித்தால் நாளை

என் சகோதா¢களின் குழந்தைகளும் என்குழந்தைகளும் எப்படி வாழப்போகின்றார்கள் ? அந்த இருண்ட எதிர்காலம் என்னை இப்பொழுதே அச்சுறுத்துகிறது. விடுமுறையில்ஊருக்கு சென்று திரும்பிய என்தோழி கூறியது என்னை நெருடியபடி இருந்தது.எங்கு சென்றாலும் பலநாட்டு மொழியின் உரையாடல்கள் காற்றில் கரைந்தபடி இருந்ததாம். பைபிலில்கூறியதுபோல் இறைவனை அடைய கட்டிய கோபுரம் மொழிகள் மாறியதால் இடையறுந்துபோனதுபோல எங்கள் குழந்தைகளின் எதிர்காலமும் மொரிசியஸ்சில் வாழும் தமிழர்கள்போல் அவர்களின் பெயர்களிலாவது தமிழ் இன்னும் வாழுகின்றது. ஆனால் எம்குழந்தைகளின் பெயர்களும் அல்லவா மாறிவருகின்றன.

உயிருக்கு அஞ்சி நாட்டைவிட்டு நகர்ந்து இங்குவந்தபின் தனிமையில்வாடி உறவுகளுக்காக ஏங்கி அறிமுகம் அற்றவர்களை உறவாக, நட்பாக கற்பனை புனைந்து. பின் அந்த கற்பனைஉறவு ஒருநல்ல நாளில் தன் பொய்முகத்தைகளைய அதை ஜ£ரணிக்க முடியாமல் புலத்தில் தொலைத்துவிட்டு வந்த அந்த இனிய நட்புகளை எண்ணி எத்தனை நாட்களாக இதயம் ஏங்கித்தவித்தது.தங்க முனிவர் தண்ணீரைத்தேடி பாலைவனத்தில் அலைந்ததுபோல் நானும் இங்கு உண்மை நட்பை தேடி அலைந்தபொழுது வீடுகளின் மறைவான இடங்களில் பலவிதமான பொய்முகமூடிகள் ஆணி அடித்து தொங்கவிடப்பட்டிருப்பதைதான் கண்டுபிடித்தேன். தேவைப்படும் முகங்களை அவ்வப்போ எடுத்து அணிந்து கொள்வார்கள் என்பதையும் பின்புதானே அறிந்துகொண்டேன். இப்போ அவை என்னையும் அணிந்துகொள் அணிந்துகொள் என அடிக்கடி வற்புறுத்துகின்றன. எனக்கு அச்சமாக இருக்கின்றது நானும்

இப்போதெல்லாம் எந்த மனிதரை பார்த்தாலும் இது இவா¢ன் உண்மை முகமா அல்லது பொய் முகமா என்று சிந்திப்பதே வேலையாகிபோய்விட்டது. இதனால் அவர்கள் பேசுவதை என் மூளை கிரகிக்க முடியாமல் எத்தனை அவஸ்தைபட்டுள்ளேன் என்பது எனக்கு மட்டுமேவெளிச்சம்.மனிதர்கள் மட்டுமா இப்படி? இல்லை இல்லை எல்லா உயிரினங்களும் அப்படித்தான் என்பதற்காகத்தான் நா¢யும் வடையும், முயலும் சிங்கமும் என்று கதைகளை வடித்துவைத்திருப்பார்களோ ? இவர்கள் ஏன் இப்படி மாறிவிட்டார்கள் ?

எந்த உயிரினங்களும் தன் இனத்தை அழிப்பதே இல்லை. ஆனால் மனிதன் மட்டும் ஏன் தன்னையொத்த இனத்தை அழிப்பதே கர்மமாக எண்ணி காலத்தை கழிக்கின்றான்? பத்திரிகையிலும் வானொலிகளிலும் எப்போதும் கொலை, கொள்ளை, பாலியல்வல்லுறவு எனக்கு ஊருக்கு போகவேண்டும்போல் இருக்கிறது. வாழ்க்கை எங்கும் பயங்கரமாக காட்சி அளிக்கின்றது. மனிதமனங்கள் மரணித்துவிட்டன. பாடசாலைக்குபோன பிள்ளைகள் தாமதமாவீடுவந்தால் ஒரே பதற்றமாக இருக்கின்றது நாசி அடித்திருப்பானோ? என்ன நடந்திருக்கும் என்ற தேவையற்ற கற்பனையில் மூழ்கி நான் தினம் தினம் செத்துக்கொண்டிருக்கின்றேன்.முன்பு எல்லாம்முற்றவெளிக்கு போன மாடுகள் காணமல்

போனால் முனியப்பருக்கு நேர்த்திவைக்கும் அம்மா கடிதத்தில் எழுதியிருந்தா மாடுகள் காணமல்போன காலம் மாறி இப்போ மனிதர்கள் காணமல் போகிறார்கள் எந்த கடவுளுக்கு நேர்த்திவைக்கலாம் என்று சிந்தித்தே காலம்கரைகின்றதாம். மனிதர் மட்டும் இல்லையம்மா மனிதமும் தொலைந்துபோகின்றது என பதில் எழுதவேண்டும் என நினைத்ததோடு சா¢.

ஒன்று கூடலில் நான் அடிக்கடி கதைத்தது என் அம்மாவைபற்றித்தான். என் நட்புகளுக்கு புரியும் என்னை என் அம்மா எப்படியெல்லாம் செல்லம் தந்துவளர்த்தா, அதேபோல் பிறந்தநாளைதவிர மற்றைய நாட்களெல்லாம் எப்படி அடித்தா. பலகக்கட்டையை பறித்துவிட்டு நல்லூரில் பாவைப்பிள்ளை வாங்கி தந்ததையும் ஆனால் நான் மறுபடியும் பலகக்கட்டையை இடுப்பில் து¡க்கி திரிந்ததையும் தைப்பற்றி விமர்சித்து சிரித்து சிரித்ததனால் கண்ணீர்வழிந்ததும்... வெளிப்பார்வைக்கு எல்லோரும் வசதியாகவும் மகிழ்வாகவும் இருப்பதுபோல் தோற்றமளித்தாலும் மனழத்தில் எத்தனையோ வடுக்கள். எல்லோரிலிருந்தும் சற்றுவிலகி அவர்களின் பேச்சை உற்றுநோக்கிய எனக்கு சிரிப்புதான் பிறந்தது.வெளியில் பிரச்சனை முடியவேண்டும் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என அளந்து கொண்டு இருப்பவர்கள். உள்ளுர நல்ல விசா இல்லையே என பயந்தபடி பிரஜ¡ உரிமை பெற்றவர்களிடம் ஆலோசனை கேட்பதும் அவர்களும் ரட்சிக்கவந்த இயேசுபிரான்போல் தங்களை உருவகபப்டுத்திக்கொள்வதும் எனக்கு சிறவயது நிகழ்வைத்தான் நினைவுபடுத்தியது.எங்கள் வீட்டுக்கு மா இடிக்கவரும் இலட்சுமியும் ஆவடையம்மாவும் இப்படித்தான் அன்று இழுதார்கள். பிராஜ¡ உரிமை மறுக்கப்பட்டு நாடு திரும்பும் நாள் நெருங்க நெருங்க அவர்களின் கண்களிலிருந்து கண்ணீரும் பெருகிக்கொண்டே இருந்தது. ஆனால் எனக்குத்தான் எல்லாம் புரியாத புதிராகவே இருந்தது. தங்கட சொந்த நாட்டுக்கு போவதற்கு ஏன் அழுகிறார்கள் ?

அங்கபோனால் நடிகைகளை நோ¢ல பார்க்கலாம், கண்ணாடிக்காப்பு, மாலையெல்லாம் மலிவாக வாங்கலாம் ஏன் அழுகிறார்கள்? இவர்கள் எப்பவும் இப்படித்தான். கச்சைதீவுக்கு போவதற்கு அம்மாவிடம் காசுவாங்கி அதில பார்சோப், தேங்காய் எண்ணை எல்லாம் வாங்கிக்கொண்டுபோய் பின் அங்கிருந்து தாழம்புசேலை, சின்னாளம்பட்டுசேலை என்று பண்டமாற்றும் செய்து அதை அம்மாவுக்கு விற்பதும். அப்போதும் அழுவார்கள். இப்ப ஏன் அழுகிறீங்கள்? சகோதரங்களை சொந்தங்களை அடுத்த வருசமும் சந்திக்கலாம்தானே என அம்மா ஆறுதல் கூறுவதும்....அவர்கள் ஏன் அழுதார்கள் என்ற கேள்விகளுக்கான விடைஎன் கையில் கிடைப்பதற்கு எத்தனை காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. எமதுநாட்டுக்கு செல்லமுடியாத நிலையில் கொழும்பிலிருக்கும் அக்காவை இந்தியாவுக்கு அழைத்து செரெட்டோனிலும், எம். ஐ¢. எமிலும் தங்கி குழந்தைகளுக்கு உறவுகளை அறிமுகப்படுத்தி பிரியும்பொழுது அழுத அழுகை. ரவி கூறினார் சா¢ சா¢ இப்ப ஏன் அழுகிறீங்கள் ? அடுத்த வருசமும் சந்திக்கலாம்தானே

அரசன் அன்று கொல்வான் தெய்வம் ?

அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியது சிங்கள அரசாங்கமாக இருந்தாலும் நாங்களும்தானே மௌனம்சாதித்தோம்.இன்று எமக்கென்று வரும்பொழுதுமட்டும் வெள்ளையன் எமக்காகபேசமாட்டானா என்ற எதிர்பர்ப்பு எங்களுக்குள் எழுகின்றது.அவர்களின் உணர்வுகள் அன்றுபுரியாமல் கள்ளத்தோணி என கூறியதும். இலட்சுமியின் மகள் பாப்பா கண்ணாடிக்காப்பு தரவில்லை என்ற கோபத்தில் வடக்கத்தையம்மா வாலம்மா வாலை பிடித்துக்கொண்டு ஓடம்மா எனப்பாடியதற்காக அம்மாவிடம் அடிவாங்கியதும்...

சீ இப்போ நினைத்தாலும் வேதனையாக இருக்கின்றது. வெள்ளைக்காரர் எங்களை கறுப்பர், அகதிகள், என ஏசும்பொழுது மனம் எப்படி வலிக்கிறது? இப்படித்தானே அன்று அவர்களுக்கும் வலித்திருக்கும்.

சின்னவயதில படித்த கதையில் அந்த மந்திரவாதியின் உயிர் ஒரு மரப்பொந்தில் இருக்கிறது என்றமாதிரி என்னுடைய உயிர் என்னுடைய வீடு, அந்த முற்றம், அம்மாவின் சாய்மனைகதிரை அவைகளில்தான். வெட்ட வெட்ட முளைக்கும் ராவணனின் தலையைப்போல எனக்குள்ளும் பழைய நின¨வுகளும் புதிய நிகழ்வுகளும் முளைத்துக்கொண்டே இருக்கின்றது. யாழ்போய்வந்த அண்ணா கூறினார் வீட்டுக்குபோகவேணும் என்று ஆசைப்படுகிறாய் அங்க அம்மாவின் நினைவாக என்ன இருக்கிறது? அந்த சாய்மனைகதிரையும் முகமறியா மனிதர்களையும்தவிர. அண்ணாவின் அறியாமை எனக்கு எரிச்சலைத்தான் அளித்தது. அதுவெறும் சீமெந்தும் மணலும் குழைத்து சக்கரைபோட்டு கட்டிய கட்டிடமாகத்தான் அண்ணாவுக்கு தொ¢கிறது. ஆனால் எனக்கு அதன் ஒவ்வொரு சதுர அடியிலும் வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் என்தாயும் தந்தையும் அல்லவா வாழ்வதாய் தொ¢கிறார்கள். என் உடல்மட்டும்தான் இங்குவாழ்கிறது உள்ளம்.

ஆனால் ரவியும் பிள்ளைகளும் இது தங்கள் நாடு என்று எண்ணத்தொடங்கிவிட்டார்கள். அன்று ஒரு மதியம் பாடசாலை முடிந்து வீடு திரும்பிய என்மகன்.....

அம்மா ஏன் அம்மா எனக்கு உங்கட நாட்டைப்பற்றி பிழையா சொல்லித்தந்தனீங்கள்?

என்ன பிழையா சொன்னனான்?

அது உங்களுடைய நாடு என்று சொன்னது பிழை. நீங்கள்தான் இந்தியாவில இருந்து வந்தனீங்களாம். எங்கட ரீச்சர் இன்றைக்கு சரித்திரபாடத்தில் படிப்பிச்சவ!

புரியாத மொழிக்குள்ளும் மனிதர்களுக்குள்ளும் மூழ்கும் என் குழந்தைகளை நான்காப்பாற்றவேண்டும். இப்படித்தான் அந்த சிங்கக்கொடியும் நமோ நமோ தாயே என்ற தேசியகீதமும் என்னையும் மூழ்கடித்திருந்தது.பாடசாலையில் அதை பாடும்பொழுது பக்திசிரத்தையோடு கண்மூடி நம....

என்று ஒரேயடியாக இழுப்பதும் பின்பு சினிமா தியேட்டா¢ல் கறுப்பு வெள்ளை நிறத்தில் சிங்கக்கொடி பறக்க அண்ணாவின் மடியிலிருந்து குதித்து எழுந்து நின்றதும். நமது என்று நம்பி நாம் வாழ்ந்தபொழுது இல்லை என்பதை எத்தனை வழிகளில் குத்திக்காட்டினார்கள். குத்திய இடங்களில் ஏற்பட்ட எரிவு இன்னும் ஆறாமல் எரிந்து கொண்டுதானே இருக்கின்றது. நமது மூன்னோர்களின் ஆணிவேர் ஆழமாக பதிந்த எம்நாடே எமது இல்லையென்று அவர்கள் கூறும்பொழுது. அடைக்கலம் தந்த இந்த நாட்டை தமது நாடு எனஎண்ணும் எம் குழந்தைகளின் முகங்களின் முன்னே இவர்களின் விரல்கள்நாளை நீளலாம் நீளும். அப்போது எம் சிறார்களின் நிலை. எம்மைப்போல் எல்லாவற்றாலும் உடைந்து போகப்போகிறார்கள். இதிலிருந்து இவர்களை நாம் எப்படி காப்பாற்ற போகிறோம்?

சமர் முடிந்து குளிர்காலம் ஆரம்பிக்கத்தொடங்கிவிட்டது. இந்த மூண்றுமாதமும் ஆரவாரித்துக்கொண்டிருந்த மனிதர்களும் மரங்களும் தங்களை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்கி விட்டார்கள். எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் நீண்ட கம்பிகளில் பறவைகள் தங்கள் இனங்களுடன் ஒன்று கூடி பேச ஆரம்பித்துவிட்டன. நான் சமையலையும் விட்டுவிட்டு யன்னலால் அவைகளை பார்த்தபடியே இருந்தேன். ஓ எத்தனை பறவைகள் இவைகள் என்ன பேசுவினம் ? எந்த நாட்டுக்கு போகலாம் என்றா ? ம் உங்களுக்கென்ன குளிர்காலம் ஆரம்பித்தவுடன் பறந்து போய்விடுவீர்கள். ஆனால் நான் இந்த குளிரில் உறைந்து பனியினில் நனைந்து....

மறுபடியும் பேசுகின்றன. அப்படி என்னதான் கதைக்கின்றீர்கள்? கேட்கவேண்டும்போல் இருந்தது. அதோ முக்கோணவடிவில் பறக்க ஆரம்பித்துவிட்டன. முன்னால் பறக்கும் பறவைதான் வழிகாட்டி காற்றின் தாக்கத்தையும் தாங்க வேண்டும். முதல் பறக்கும் பறவையின் சிறகு கீழ்நோக்கி அடிக்கும்பொழுது ஏற்படும் காற்றின் உதவியால் மற்றய பறவைகளின் சிறகுகள் மேலோக்கி எழுகின்றனவாம். முதல் செல்லும் பறவை களைத்தால் அடுத்தவர் இப்படியே ஒற்றுமையாக ஒற்றுமை ஏதோ மனதை நெருடியது. என்னை மறந்து போய்வாருங்கள் நான் இருந்தால் அடுத்த வருடம் சந்திப்போம் என பிரியாவிடை கொடுத்துவிட்டு திரும்பிய என் விழிகளில் ஒரு பறவைமட்டும் தனியாக அவைகள் போவதை ஏக்கத்துடன் பார்த்தபடி..... ஏன் ஏன் நீ போகவில்லை? பற பறந்து போ போ என என்மனம் அலறியது.

ஆனால் அது மறுநாளும் அதற்கடுத்துவந்த நாட்களிலும் அவைகள் எல்லோரும் பிரிந்த

அந்தநேரத்தில் அதே இடத்தில் வந்தமர்ந்து ஏதோ சோகமாக கத்துகிறது. இப்படித்தான் இப்படித்தான் அன்று எமது பெற்றோரும் நாளை நாங்களும் ....

rajashanthy@t-online.de

பதிவுகள், அக்டோபர் 2003 இதழ் 46

21. அறிவு - திருகோணமலை - க. அருள்சுப்பிரமணியம்-

31.12.97 - போர் யுவர் ஐஸ் ஒன்லி - உங்கள் பார்வைக்கு மட்டும் முத்திரையோடு லாஸ்ஏஞ்சலிஸ் தலைமை நிலையத்திலிருந்து வந்த மின்தபாலை நீட்டிய பிராந்திய முகாமையாளர் மார்க் எப்சன் என்ன நினைக்கிறீர்கள் பத்மா என்று கேட்டார். அவசர, ரகசிய அழுத்தங்களை ஒருங்கே உள்ளடக்குகிற அலுவலக சமிக்கை அது. பிரித்துப் பார்க்க முன் அவரது முகக்குறிப்பை கண்ணாடிக் கண்களால் அளந்தான் இயக்க முகாமையாளர் பத்மா என்கிற பத்மநாபன்.

டேக் இட் ஈசி பத்மா, ஆற அமரப் பார்த்து விட்டு அரை மணி நேரத்தில் வாருங்கள் பேசுவோம்.

நேரம் பத்து. ஆற அமரப் பார்க்கச் சொல்லி விட்டு அரை மணி நேரத்தில் வா என்றால் ஒரு முடிவோடு வா என்றுதான் அர்த்தம். பளிச்சிட்ட கன்பரன்ஸ் மேசையில் காப்பி ஆறிப் போயிருந்தது. காபி மக்கை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தான். நடைவழியின் இரு பக்க போமிக்கா அடைப்புகளுக்குள் கணனிப் பெண்கள் மௌஸில் கை இருத்தி மொனிட்டரில் விழி பதித்திருந்தார்கள்.

இதமான மார்கழிப் பகலில் சென்றல் ஏசி ஏகப்பட்ட குளிரைப் பரவலாக்க காலுறைக் குள்ளும் சில்லிட்டது. காலை வணக்கம் சொல்லத் தவறியிருந்த ஒரு இரட்டைப் பின்னல் எழுந்து குட்மோர்னிங் சேர் சொன்னது. இண்டர்கொம்மும் ஹலோக்களும் ஏராளமாய் ஒலித்துக் காதைக் குழப்ப தயவு செய்து என் போன் கோல்களைப் பாருங்கள் என காரியதரிசினியிடம் கூறிவிட்டு அறைக் கதவைப் பூட்டிக் கொண்டான்.

ஆச்சரியந்தான். பிரசிடெண்ட் வில்லியம் அவர்களே ஈமெயில் அனுப்பியிருக்கிறார். விசயம் விவகாரமானதுதான்.

இந்த ஆண்டு எங்கள் கொம்யுட்டர் மைக்றோசிப்ஸ் விற்பனை தங்கத்தின் விலைச் சரிவை விட மோசமாகி விட்டது. கேள்விக் குறியோடு நிற்கிறது கம்பனியின் எதிர்காலம். தாய்வான் சவுத்கொரியா மலேசியா உட்பட ஏழு தொழிற்சாலைகளை இழுத்து மூடிவிடும் பத்து காத்திருக்கின்றது. ஆயிரக்கணக்கான தொழிலாளர் வீட்டிற்குப் போக நேரிடும்.

சென்ற மாத மகாநாட்டில் மைக்றோசிப்ஸ் பற்றிய தன் ஆராய்ச்சி பற்றி பரே'ன்ஸ் மனேஜர் பத்மநாபன் கூறியிருந்தார். 98 மார்ச் இறுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தேன். எங்களது மைக்றோசிப்ஸ்சின் பலதரப்பட்ட சேர்க்கியூட் எலிமெண்ட்களை அளவில் சிறியதாக்கி செறிவும் வேகமும் கொண்டதாக உடனடியாக

மாற்றா விட்டால் இந்த இண்டர்நெற் யுகத்தின் பந்தயத்தில் நாம் பிந்திவிடும் அபாயம் தெரிகிறது.

98 ஜனவரி முடிவிற்குள் பத்மநாபனின் முயற்சி இறுதி வடிவம் பெறுமா என்பது நிச்சயமாகத் தெரிய வேண்டும். இரண்டு மணி நேரத்துள் உங்கள் கருத்தை ஈமெயில் செய்யவும். புத்மாவைத் தவிர வேறு யாருடனும் கலந்தாலோசிக்க வேண்டாம். பல பில்லியன் டாலர்கள் புரளும் இப்போட்டி வர்த்தகத்தில் நம் ஆராய்ச்சியின் பலன்கள் திருட்டுப் போகும் வாய்ப்பு இருக்கிறது. பதில் இசைவாக இருந்தால் 2.2.98 ந் திகதி ரீஜனல் மனேஜர்களின் கூட்டமொன்றினை நடத்த முடியும். பத்மநாபன் தனது இறுதிக் கட்ட அறிக்கையைச் அப்போது சமர்ப்பிக்க வேண்டும்..

எக்சிகியூட்டிவ் கதிரையில் பின்னோக்கிச் சாய்ந்து கலண்டர் பார்த்தான் பத்மா. இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. மகாநாட்டில் ஆராய்ச்சி பற்றிக் கூறிய போது பிரசிடெண்ட் கை தந்ததும் மார்க்கட்டிங் மனேஜர் ஹாவி றொபர்ட் நாம் வெல்லப் போகிறோம் என்று கட்டிப் பிடித்ததும் நெற்றிக்குள் வந்தது. காலம் கானுமா?

அங்குமிங்குமாக உதைத்துக் கொண்டிருக்கும் சில நுண்ணிய சிப்ஸ் தொழிற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டும். புத்தகங்கள் சிலவற்றைப் புரட்ட வேண்டும். நவீன இன்ரெல் பென்ரியம் சிப்ஸ்சின் வளர்ச்சிப் பரிமாணங்களை கணனியின் முன்னால் முதுகு உளைய உட்கார்ந்து துப்பறிய வேண்டும். முடியுமா?

உன்னால் முடியும் பத்மா.. .. .. உன்னால் முடியும்!

எழுந்து நேரம் பார்த்தான். அச்சொட்டாக பத்தரை. காபிமேக்கரிலிருந்து சூடான காப்பியை வார்த்துக் கொண்டு நடந்தான்.

குடும்பத்திற்கு ஒரே பிள்ளை. ஐந்தாம் தரம் படிக்கையில் கண்ணாடி போட்டுக் கொண்டான். இரவில் புத்தகம் பார்த்தால் தலையிடிக்கிற ஏதோ ஒரு பரம்பரைக் குறை. தகப்பன் ஞானசம்பந்தனுக்கு இனியில்லையென்ற கவலை. அட மடையா அது அறிவுக்கு அடையாளமடா. நீ இருந்து பார், கடல் கடந்து போய் உனக்கு மாலை போட வைப்பான் உன் பிள்ளை என்று ஆறுதல் சொன்னார் நண்பர் தார்சீயஸ். அவர் சொன்னதை 29 வயதில் மெய்ப்பித்துக் காட்டினான் பத்மா. முதன்முறை அமெரிக்கா போய் திரும்ப வந்த போது மாலை போட்டு பெருமைப்பட தகப்பன் இருக்கவில்லை.

எப்சனின் அறையை இருட்டாக்கினான் பத்மா. சில சிப்ஸ்களை பல கோணங்களில் புறெக்டரில் போட்டுப் பார்த்தார்கள். தலையைச் சொறிந்து கொண்டார்கள். கண்ணாடிகளைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள். ஏழெட்டுக்

காப்பிகளை குடித்து முடித்தார்கள். ஆடையை தளர்த்திக் கொண்டார்கள். சரியாக இரண்டு மணிக்கு பிரசிடெண்டிற்கு ஈமெயில் தயாரானது.

வில்லி டியூக் - பத்மநாபன் ஆராய்ச்சியின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறார். பல மணி நேரம் விவாதித்தோம். எனக்கு பூரண நம்பிக்கை வந்திருக்கிறது. நீங்கள் தீர்மானித்த திகதியில் கூட்டத்தை வைக்க முடியுமா என விரைவில் அறிவிப்பேன். - மார்க் எப்சன்.

10.01.98 - நியூயோர்க் மன்கட்டன் வோல் ஸ்ரீட்டில் 450 அடி உயரத்தில் என்னை விட யார் என்ற கம்பீரத்தில் நின்ற கட்டிடமொன்றின் பத்தாவது தளத்தில் இருவர் தங்கள் இரகசிய சம்பா'ஷணையின் இறுதிக் கட்டத்தில் இருந்தார்கள்.

அவர்களின் மைக்றோசிப்ஸ் முயற்சியை முடிந்த அளவிற்குப் பிந்தச் செய்ய வேண்டும். எங்கள் எண்ணப்படி நடந்தால் நாம் அவர்களை முந்தி விடலாம்

ஆளின் பெயர்?

§ஐ. பத்மநாபன். இதோ விபரங்கள். ஆளுக்கு ஒன்றும் நேரக்கூடாது. யாருக்கும் சந்தேகம் ஏற்படாமல் இயல்பாக காரியம் நடக்க வேண்டும். புரிகிறதா?

ஓகே.. .. .. டன்

15.01.98 - இரவு இரண்டு மணி. பத்மாவின் பென்ரியம் இன்டெல் மைக்றோசிப்ஸ் தன்னைப் பூரணமாக நிர்வாணமாக்கிக் கொண்டிருந்தது. இன்னொரு சிறிய சிப்ஸ்சை கணனியின் மதர்போர்டில் பொருத்தி சுவிட்சைப் போட்டு ஊடுருவிப் பார்த்தான்.
சீபீயூ வேகமாக இயங்கி கண் மூடித் திறப்பதற்குள் விண்டோஸ் புறோகிறாம் மனேஜர் மெனு¡வில் வந்து நின்றது. அக்சஸ் சொப்ட்வெயரில் நுழைந்து பெரிய கோவையொன்றை ஓடப் பண்ணி சிப்சின் வேகத்தை மீட்டரில் பார்த்தான். அடுத்த பத்து நிமிடத்தில் நிம்மதியாக நித்திரை வந்தது. வில்லி டியூக் கனவில் வந்து தோளில் தட்டிக் கை குலுக்கி விட்டுப் போனார்.

25.01.97 - காலை எட்டு மணியின் அபரிமிதமான போக்குவரத்து நெரிசலில் அகப்பட்டிருந்த பத்மாவை - வெள்ளை நிற டொயாட்டா கம்றி ஒன்று ஐ¡க்கிரதையாகப் பின் தொடர்ந்து கொண்டிருந்தது.

இறங்கியதும் நேரே எப்சனிடம் போனான். அறிக்கையை இன்றிரவு டைப் பண்ணத் தொடங்குகிறேன். கூட்டத்தில் பேச எனக்கு சுமார் 2 மணி நேரம் தேவைப்படலாம்.

ஈமெயில் மெனு¡விற்குள் நுழைந்தார் எப்சன். வில்லி டியூக் - நீங்கள் விரும்பியபடி பெப்ரவரி 2 கூட்டத்திற்கு இருவரும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். - மார்க் எப்சன்.

இருவரும் ஒரு கப் காப்பி குடித்து முடிப்பதற்குள் பதில் வந்தது. காங்கிராஜ¢லே'ன்ஸ் பத்மா அண்ட் எப்சன்.. .. .. இருவருக்கும் கதீ பசிபிக்கில் கொழும்பு டூ நியூயோர்க் இங்கிருந்தே புக் பண்ணப்பட்டுள்ளது. 1ந் திகதி காலை லாஸ்ஏஞ்சலிசில் எதிர்பார்க்கிறேன். பை த வே வந்து சேரும் வரை எல்லாம் பத்திரம்.

மாலை 5 மணிக்கு லப்டொப் கணனியோடு வீட்டுக்குப் புறப்பட்டவனை ரெலிபோன் நிறுத்தியது. எப்சன் தான்.

பத்மா நாளை இரவு என்னுடன் இண்டர்கொண்டினென்டில் டின்னருக்கு வருகிறீர்களா?

நிச்சயமாக

பத்மாவின் கார் வெளியே வர தெருவோர மர நிழலில் காத்திருந்த கறுப்புக் கண்ணாடி மனிதன் வெள்ளை டயோட்டா கம்றியை முடுக்கினான்.

25.1.98 - இண்டர்கொண்டினென்ற் டைனிங் பாலரின் சாந்தமான மெழுகுவர்த்தி ஒளியில் மெலிதான அமுக்க இசை காதுகளைத் தடவ - கடல் றால் மெனு¡வோடு அவர்கள் டின்னர் சாப்பிட்டார்கள். மார்க் எப்சன் தோளோடு அணைத்து அவனுக்கு நன்றி சொன்னார்.

டின்னர் முடிந்து வீட்டுக்கு வந்த பத்மாவை இருட்டு வித்தியாசமாக வரவேற்றது. லைட் போட்டுவிட்டுத் தானே போனேன்? சந்தேகம் பிடரியைத் தள்ள சுவிட்சைத் தட்டி லப்டொப் கணனியை அவசரமாய் இயக்கினான்.

நெஞ்சு நின்றது போல் இருந்தது. கணனி ஸ்கிரீன் வெறுமை காட்டி இளித்தது. கால்வாசி அடித்திருந்த அறிக்கை காணாமல் போயிருந்தது. நல்ல காலம்! பிரதி பண்ணி வைத்த புலொப்பி டிஸ்க் லப்டொப்பில் இருந்தது. அடுத்த நிமிடம் புலொப்பியுடன் காரில் பறந்தான். அலுவலக வாசலில் இரவு செக்யூரிட்டி பிடித்த தம்மை மறைத்துக் கொண்டு சல்யூட் அடித்தான். அறைக்குள் வந்ததும் கணனியைப் போட்டு புலொப்பியை ஓட விட்டான்.

அதுவும் ஈயென இளித்தது. கொப்பியும் போச்சா! இதற்காகத்தான் கவனமாயிருக்கும்படி வில்லி டியூக் எழுதினாரா? யார் வந்திருப்பார்கள்! அங்கிருந்தே எப்சனுக்கு போன் செய்தான்.

கவனம் பத்மா - எவ்வளவு டைப் பண்ணியிருந்தீர்கள்?

இன்றிரவுதான் முக்கிய பகுதியை முடிக்க இருந்தேன்.

அங்கே இருக்க வேண்டாம். .பத்மா உடனே நோட்சை எடுத்துக் கொண்டு இங்கே வந்து சேருங்கள்

01.02.98 இரவு 8 மணி. லாஸ்ஏஞ்சலிஸ் சிற்றிஹோலிற்கு முன்னால் மேகம் தொட்டு நின்றது அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல். மார்க் எப்சனும் ஹாவி றொபர்ட்டும் சம்பெயினில் சுகித்திருக்க பத்மா டின்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ஹாவி றொபர்ட் சொன்னார். பத்மா நாளைக்காலை 9 மணிக்கு உங்கள் பேச்சு. 11 மணிக்கு டிஸ்கசன். பன்னிரண்டரைக்கு பிரசிடெண்ட் பேசுவார். றெஸ்ட் எடுங்கள். எட்டு மணிக்கு கூட்டிப் போக வருகிறேன்.

கட்டிலுக்குப் போகுமுன் பல்கனியிலிருந்து சுற்றிலும் பார்த்தான். தாறுமாறாய் அடுக்கிய நெருப்புப்பெட்டிக் குவியலாய் மனித முயற்சியின் உயரத்தைக் காட்டும் வானுயர் கட்டிடங்கள். அடர்த்தியான மின்சார வெளிச்சங்களின் ஹோவென்ற ஓசை! 15 பக்க அறிக்கை, பெற்ற பிள்ளையைப் போல கையில் இருந்தது. மூன்று மாதங்களின் மும்முரமான உழைப்பு. ஒரே மூச்சில் கடைசியாக ஒரு முறை ஆழமாக வாசித்தான். கண்ணாடியைக் கழட்டித் துடைத்து கேசில் வைத்தான்.

விடியப் போவதை நினைக்க நெஞ்சு அடித்துக் கொண்டது. அப்பா இருந்திருந்தால் என் பிள்ளை அமெரிக்கா போயிருக்கிறான் என்று இதற்குள் ஐம்பது பேரிடமாவது வாய் நிறையச் சொல்லியிருப்பார்! எல்லாத்துக்கும் கொடுத்து வைக்க வேண்டும். இமைகளை மூட கண்ணீர்ப் பொட்டுக்கள் விழுந்தன. அவன் அறைக்குள் வந்தான். கண்ணாடிக் கேசை பிரீப் கேசில் வைத்தான். ஐ¡க்கிரதை கருதி அறிக்கையை தலையனையின் கீழ் வைத்தான். மேசை விளக்கை மங்கச் செய்து கட்டிலில் விழுந்தான்.

02.02.98 - அந்த வெளிர் நீலக் கண்ணாடிக் கட்டிடத்தின் ஏழாவது தளத்திற்கு லிப்ட் அடிக்கடி போய் வந்தது. பளிச்சிட்ட நீண்ட தேக்கு மேசையில் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள் நிமிர்ந்து நின்றன. ஐப்பான் தாய்வான் சவுத் கொரியா இந்தியா இலங்கை, எல்லா பிராந்திய நிர்வாகிகளும் மிடுக்கான உடையில் அடுக்காக இருந்தனர். பிரசிடெண்ட் வில்லி டியூக் வரும் போது சரியாக மணி 8.59. அவர் பின்னால் மார்க் எப்சன் பத்மநாபன் ஹார்வட் றொபர்ட் வரிசையாக வந்து அமர்ந்தார்கள்.

ஜென்டில்மென் என்று பிரசிடெண்ட் வரவேற்புரை தொடங்க பிரீப் கேசிலிருந்து கண்ணாடிக் கேசை வெளியே எடுத்தான் பத்மா. கேசைத் திறந்து கையை வைத்தான். அங்கே கண்ணாடி இல்லை. வெறும் கூடு அவனை ஏளனத்தோடு பார்த்து இப்போது என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டது. எவ்வளவு புத்திசாலித்தனமான திருட்டு! இன்னொரு சறுக்கலா! அவனுக்கு வியர்த்தது. டையை தளர்த்தினான். மூளை விறைத்துக் கொண்டு வந்தது. எங்கே போயிற்று? அறிக்கையில் கவனமாயிருக்க - கண்ணாடியைக் கொண்டு போய்விட்டார்களே! நான் தயாரித்த அறிக்கையை இன்னொருவர் வாசிப்பது முறையா?

ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் பத்மநாபன். பிரசிடெண்ட் புகழ்ந்து கொண்டிருந்தார்.

இருட்டிக் கொண்டு வந்தது. அவன் நிதானித்தான்.

பொறு பத்மா குழம்பாதே. நீ பெற்ற குழந்தையை உனக்குத் தெரியாதா. மூன்று மாதங்களாக உன் மூளைக்குள் ஒவ்வொரு வரியாகப் பதிவாகியிருக்கும் ஆராய்ச்சியை மீட்டுவதற்கு கண்ணாடி தேவையா? அது இல்லாமல் உன்னால் முடியாதா? உன் அறிவில் நம்பிக்கை வை. பயப்பிடாதே. அறிக்கையில்லாமலே பேசு. உன்னால் முடியும் பத்மா..

அவன் அறிக்கையை மடித்து வைத்தான். கண்ணாடிக் கூட்டை மூடி வைத்தான். பிரசிடெண்ட் முடிக்கும் வரை காத்திருந்தான்.

ஐ வெல்கம் பத்மா டு டெலிவர் ஹிஸ் குட்ஸ்.. .. .. பிரசிடெண்ட் கைதட்டல்களுக்கிடையே அவனை அழைத்தார். கண்ணாடியில்லாத பத்மா எழுந்தான். பிரசிடெண்டைப் பார்த்தான். மார்க் எப்சனைப் பார்த்தான்.

மிஸ்டர் பிரசிடெண்ட் அண்ட் த ரீஜனல் கெட்ஸ்.. .. .. புத்துணர்வோடு பேசத் தொடங்கினான்.

உன்னால் முடியும் பத்மா.. .. .. உன்னால் முடியும்!

karulsubramaniam@yahoo.com

பதிவுகள், அக்டோபர் 2003 இதழ் 46

22. என் கவிதைக்குக் காயமடி! - வேதா

அந்த அறை முழுவதும் மெல்லிய சோகம் அப்பிக் கிடந்தது. ஏஸி குளிரில் என் சட்டையையும் தாண்டி பாக்கெட்டில் இருந்த அவளின் கொலுசு சில்லிட்டது. ஒன்றுமே அறியாத ஒற்றைக் கொலுசாய், ஊமையாய் என் மன ஓட்டங்கள்....சில மணி நேரத்திற்கு முன்னர் இப்படி எல்லாம் நடப்பதற்கு முகாந்திரமே இல்லாமல் எப்படி சந்தோஷமாய் இருந்தேன்? சிதறிப்போய் சிதைந்து கிடந்த கொலுசைப் பார்த்து மனம் வெம்பியது. தெறித்து விழுந்த இதன் மணியைப்போல், உன் உருவில் உயிராக இருக்கும் என் ஒட்டுமொத்த சந்தோஷமும் தெறித்துப் போய் விடுமோ? நினைக்க நினைக்க, நெஞ்சு பதறியது. இதோ இன்னும், சில அடிகள் தள்ளி, மூடிய கண்ணாடித் திரையின் வழியே தெரியும் மங்கலான உன் இருப்பு....இருப்பாயா? இல்லை , பறப்பாயா? விடை தெரியாத விடுகதையாய் என் மனசுக்குள் ஓராயிரம் சலனங்கள்....நேரம் போகப்போக நினைவுகளின் சங்கமிப்பால் நெஞ்சு சமனிலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

வெளியே போக்குவரத்து சன்னமாகிக்கொண்டே வந்தது. அவர்கள் இந்நேரம் வீட்டிலிருந்து கிளம்பி இருப்பார்கள். அநேகமாக பேருந்தில் தான் வரவேண்டும். எப்படியும் சென்னை வந்திறங்க காலை 7 மணியாவது ஆகிவிடும்! நர்ஸ் ஒருத்தி கதவு திறந்து எதிர்ப்பட்டாள்.

"கவிதா...கவிதா பேஷண்ட் ஆளுங்க யாரு இங்க?"

நான் எழுந்து உள்ளே சென்றேன்.

டாக்டர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள். "உங்க பேர்?"

"அமுதன்....தமிழமுதன்!"

"வாங்க, ...உட்காருங்க".....அமுதன், நான் டீன் கிட்ட பேசிட்டேன். லண்டன் டாக்டர்க்கு போன் பண்ணி கன்பர்ம் பண்ணியாச்சு, எப்படியும் இன்னிக்கி நைட் 10.30 க்கு வீடியோ மூலமா நாங்க வெற்றிகரமா ஆபரேஷன் நடத்திருவோம். ஒண்ணும் கவலை வேண்டாம். நரம்பும் சேர்ந்து சிதைஞ்சிட்டதால , உடனே செய்யறதுதான் அவங்களுக்கும் நல்லது. இதோ இந்த ·பார்ம்ல கையெழுத்துப் போட்டுடுங்க..."

அவள் சொன்ன இடத்திலெல்லாம் நான் கையெழுத்துப் போட்டேன். மீண்டும் அதை சரிபார்த்தாள்.

"இதுல நீங்க என்ன உறவுன்னு போடலை..." என்னிடமே நீட்டினாள். நான் நிமிர்ந்தேன். காதல் என்பது உறவா? உணர்வா? தெரியவில்லை....வார்த்தைகள் வர மறுத்தன.

".....ஒண்ணு செய்யுங்களேன்...பக்கத்துல எதும் தூரத்து உறவு இருந்தாக்கூட போதும் , கூட்டிட்டு வாங்க, நானே வண்டி ஏற்பாடு பண்றேன்....ஏன்னா, பேஷண்ட் ரொம்ப வீக்கா இருக்காங்க... அப்புறமா எதும் ஆகிடுச்சுன்னா.....ஆக்ஸிடெண்ட் கேஸ் பாருங்க, அதான்!"

எனக்கு எதுவுமே தெரியாது என்று சொன்னேன்.

"பர்ஸ்ல தான் டைரி வெச்சிருப்பாங்க! ஆனா இப்போ....வீட்டுக்குத் தகவல் சொல்லிட்டேன். அவங்க கோவைல இருந்து கிளம்பி நாளைக்கு காலைலதான் வந்து சேருவாங்க.....நான் ஆபரேஷன் செய்யும்போது இங்கயே இருக்கேன். முக்கியமா அது கண்ணு முழிச்சா பக்கத்துல ஆள் வேணும், நான் வெளில எங்கயும் போகலை"

என் பதிலில் நியாயம் இருப்பதாகப் பட்டது எனக்கு.

"சரி, இந்த உறுதிமொழில கையெழுத்துப் போட்டுடுங்க!......ஒண்ணும் பயப்படாதீங்க, எப்படியும் ஆபரேஷன்ல காலைக் காப்பாற்ற முயற்சி செய்யறோம். அதுக்கும்மேல எல்லாம் அவன் செயல்!"

நான் மெலிதாகப் புன்னகைத்தேன்.

"அவங்க தூக்கத்துல இருக்காங்க, முழிச்சா கூப்பிடறோம்..நீங்க வெளில வெயிட் பண்ணுங்க!"

நான் நன்றி சொல்லிவிட்டு வெளியில் சென்று அமர்ந்தேன். ஏஸி குளிரில் என் சட்டையையும் தாண்டி பாக்கெட்டில் இருந்த அவளின் கொலுசு சில்லிட்டது.

ஒருதடவை அதை வெளியில் எடுத்துப் பார்த்தேன். ம்...ஒற்றைக்கொலுசு!! அந்த இன்னொன்று எங்கே விழுந்திருக்கும்? எங்கேயோ தொலைந்து போனதில் அந்த கொலுசுக்கு சந்தோஷமாகத் தான் இருக்க வேண்டும்! தொலையாமல் இருந்த ஒரே காரணத்தால், இது தன் சலங்கை சத்தமெல்லாம் தொலைத்து இன்று தனியாகிப் போய்விட்டதே... விரல்களால் உணருகையில் பாம்பைப்போல் இருந்தது கொலுசு.

"எனக்கு இந்த டிசைன் ரொம்ப பிடிக்கும்பா! நல்லாருக்கா??"

அவள் விழிகள் விரிய சொன்னபோதே கவனித்தேன், அதில் ஒன்று அளவு அதிகமாய் இருந்தது. அதுதான் எங்கேயோ கழன்று விழுந்திருக்கும்.... ஆனால், அது ரோட்டைக் கடக்கும்போதுதான் அவளில் கண்ணில் பட்டுத் தொலைக்கவேண்டுமா? ஒரு நொடியில் என்னவெல்லாமோ நடந்துவிட்டதே! டாக்டர் சொன்னதை வைத்துப் பார்த்தால், ஒருவேளை.....அய்யோ! அவள் கொலுசே போட முடியாது போய்விடுமோ? என் மொத்த நரம்பும் விறைத்தது. உடம்பு ஒருதடவை தூக்கிவாரிப்போட்டது. தொலைந்துபோன கொலுசு எந்தக் காலில் போட்டிருந்தது? கொலுசில் இடது, வலது எல்லாம் இருக்கிறதா என்ன? என் கொலுசு ஆராய்ச்சியை நர்ஸ் கலைத்தாள்.

அவள் இருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. சட்டென்று என் கர்வமெல்லாம் கலைந்துபோன மாதிரி உணர்ந்தேன் நான்! 'என் செல்லம்,....இந்நேரம் எப்படி வலிக்குமோ? கண்மூடித்திறப்பதற்குள் (!?) அத்தனையும் நடந்துவிட்டதே! இத்தனை வலியையும் நீ தாங்கிவிடுவாயா என்ன?'....துவண்ட தளிராய் கண்ணாடி வழியே தெரியும் அவள் முகம்,.....ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாய்! 'எங்கு இருக்கிறோம்' என்பதே தெரியாமல் இருக்கிறாய்.....விழித்ததும் யாரைத் தேடுவாய்? உன் பெற்றோரையா? கவிதை எழுத வேண்டும் போல் இருந்தது எனக்கு.....சட்டையில் இருந்த துண்டுக்காகிதத்தை எடுத்துக் கிறுக்க ஆரம்பித்தேன். என்னவெல்லாமோ எழுதியும், கடைசியில் இரண்டே வரிகளில் திருக்குறளாகிப் போனது கவிதை!

அவள் அப்படியல்ல...நிறைய எழுதுவாள், நீண்டதாக எழுதுவாள்.. கேட்டால், "விரல் இருக்கு,...தமிழும் இருக்கு...எழுதறேன் " என்று சிரிப்பாள். அவள் பேச்சின் அர்த்தம் எனக்குப் புரிந்த போதும் அதை மற்றவர் முன்னிலையில் காட்டிக்கொள்ள மாட்டேன். அவளும் அதைப் புரிந்து அமைதியாகி விடுவாள். அவள் விரல்கள் கூட , அவள் கவிதை போலவே நீளமாய் இருக்கும். ஒவ்வொரு விரலிலும் ஒவ்வொரு கவிதையே எழுதிவிடலாம், அப்படி இருக்கும்! அவள் பேச்சும் அழகு, எழுத்தும் அழகு.... "மனசும் கூட அழகு!" என்னையும் அறியாமல் வாய்விட்டுச் சொன்னேன். கொலுசை என் நெஞ்சோடு சேர்த்து இறுக்கிக்கொண்டேன். 'உனக்கு எதுவும் ஆகிவிடாது, நீ என்னுடையவள்!' மனசுக்குள் சொல்லிக்கொண்டேன். ஒவ்வொரு மணியாக மானசீகமாக முத்தமிட்டேன். அது சத்தம் போடாமல் செல்லமாக சிணுங்கியது.

"உள்ளே போங்க!"

நர்ஸ் கதவு திறந்தாள். என் கனவெல்லாம் கலைத்து நிஜத்துக்குத் தயாரானேன். அதுவரை மென்மையாய் இருந்த என் மனம், ஆதங்கத்தை அடக்க முடியாமல் திணறியது. கதவோரம் இருந்த கூடையில் அவள் காலுக்குச் சுற்றியிருந்ததெல்லாம் கழற்றிப் போட்டிருந்தார்கள்.... அய்யோ.....வெள¢ளையே தெரியாதபடி அத்தனையும் ரத்தம்...அங்கங்கே திட்டுத் திட்டாய்! எனக்குள் அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டது.

இந்த வலியை மொத்தமும் எனக்கே யாராவது பெற்றுத் தந்துவிடமாட்டார்களா என்று தோன்றியது. 'நான் அழுது உன்னையும் அழ வைக்கக் கூடாது' அவசரமாக என் கண்களைத் துடைத்துக்கொண்டேன்.

'அதோ....மெல்லிய இமை மலர்த்தி என் மனசுக்குப் பிடித்தவள் மல்லாந்து கிடக்கிறாள்' மெல்ல அவள் அருகில் சென்றேன். என்னைப் பார்த்ததில் அவள் விழிகளில் ஒரு சின்ன பரவசம் தெரிந்தது. தலைப்பக்கமாக ஸ்டூலைப் போட்டு உட்கார்ந்து கொண்டேன். நெற்றியில் கொஞ்சமாக தையல் போட்டிருந்தார்கள். கன்னங்களில் அவள் உணரும் வலியின் தீவிரம் தெறித்தது. 'எவ்வளவு பெரிய முட்டாள்தனத்தை செய்திருக்கிறது இந்தப் பெண்?' நாக்கைக் கடித்தபடி என் அழுகையை அடக்கினேன். அவள் என் கை பிடித்து போர்வையை விலக்கிப் பார்க்கச் சொன்னாள். 'இல்ல....இருக்கட்டும், வேண்டாம்' என்று தான் சொல்ல நினைத்தேன், அதற்குள் அவள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து என் கைகள் அனிச்சையாய் போர்வையை விலக்க.... ஒரு குட்டிக் கூற்றம் பார்ப்பது போல்.... உள்ளே எலும்பு வரை தெரிய.... என்னால் அதற்கு மேலும், உணர்ச்சிகளைக் காப்பாற்ற முடியவில்லை. அழுதேன்...அவள் முகத்தோடு முகம் புதைத்து அழுதேன். வெகு நேரம் வரை ......அவள் என்னை சமாதானப்படுத்தினாள்.

" நரம்பு கட் ஆகிடுச்சாம்...எனக்கு இப்போ வலியே அவ்வளவா தெரியலைப்பா!"

சொல்லி முடிக்கும்போதே அவளும் அழுதாள். இப்போது என் முறை...அவளை திசை திருப்புவதற்காக என் சட்டைப் பையில் இருந்த கவிதையை எடுத்தேன். அதைப்பார்த்து அவள் அழுகை கொஞ்சமாக நின்று போனது....முகம் முழுக்க அப்படி ஒரு மலர்ச்சி....அவள் சொல்லாமலே , நானே அதை வாசித்தேன். மீண்டும் மீண்டும் வாசிக்கச் சொல்லி மனசு நிறைய ரசித்தாள்.

"உங்க கவிதை தான் எனக்கு சுவாசமே....என்னிக்கும் இப்படி எழுதறதை நிறுத்திட மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணுங்க!" என்று கையை நீட்டினாள்.

"ஏய்! என்ன இதெல்லாம்?" நான் குனிந்து அவளின் உள்ளங்கையை முத்தமிட்டேன்.

"சரி, நேரம் ஆச்சு, நான் கிளம்பட்டுமா?" நான் கேட்டதும் , சிரித்துக்கொண்டே என்னுடன் கை குலுக்கினாள்.

"ஒருவேளை, அடுத்த பிறவி ஆகிடுச்சுன்னா, அப்போ என்னை எப்படிப்பா அடையாளம் கண்டுபிடிப்பீங்க?" எனக்கு கோபம் கோபமாக வந்தது.

"ஏண்டீ! என்ன பேசறதுன்னே இல்லையா?" அவள் என் கோபத்தை ரசித்தாள். நான் எழுந்து

கொண்டேன்.

"ஒரு நிமிஷம்ப்பா...." ஒரு துண்டுக் காகிதத்தைக் கொடுத்தாள். அரைகுறையாக ஏதோ கிறுக்கி.......ஓ! கவிதை....இதென்ன நாலே வரியில்? என் முகம் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"படிங்களேன்...." எனக்குள் புதுசாக ஒரு ரத்தம் பாய்ந்தது.

நிறுத்தி நிதானமாக அவள் வரிகளை வாசித்தேன்:

" உப்புச் சிதறலாய் உருக்குலைந்து போயிருப்பேன்; என்
உயிர் உரசிப்போன மரணம் சொன்னது,
உன் 'அனுமதி' வேண்டும் என்று! "

ஆஹா...எத்தனை ஆழமான வார்த்தைக் கோர்ப்பு....என் மூளை தொடங்கி உயிர் முடிச்சு வரை அவளின் கவிதை இனித்தது. அந்தப் பரவசத்தை இம்மியும் கலைக்காமல், நிறைந்து வழிந்த மனதில் இருந்து கொஞ்சம் போல எடுத்து அவள் நெற்றியில் முத்தமிட்டேன், ...மென்மையின் மென்மையாய்!! அவளின் இரு விழிகளும் இசைந்து மூடி அந்த சொர்க்கத்தை ஏற்றுக்கொள்ள, ஏஸி குளிரில் என் சட்டையையும் தாண்டி பாக்கெட்டில் இருந்த அவளின் கொலுசு சில்லிட்டது.

piraati@hotmail.com

பதிவுகள், செப்டம்பர் 2003 இதழ் 44 -

23. நான் தாத்தா தான்! - ஜி.சுப்ரமணியன் (சென்னை)

மதிப்பிற்குரிய வாசக நண்பரே, கொஞ்சம் அருகில் வந்து காது கொடுத்துக் கேளும்.. என்னைப்பற்றி ஒரு ரகசியத்தை உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். எனக்கு முப்பத்தைந்து வயது தான் ஆகிறது.. ஆனால் என்னைப் பார்த்தீர்களானால் வயதை எக்கச்சக்கமாகக் குறைத்துச் சொல்கிறேனோ என்று நீங்கள் சந்தேகிக்கக்கூடும்.. ஏன் தெரியுமா? அடியேனின் தலை முழுவதும் வெள்ளைவெளேர் என்று பஞ்சுப்பொதியாய் நரைத்து இருக்கும். ".என்னய்யா, உப்பு சப்பில்லாத இதைப் போய் ஒரு பெரிய விஷயமாக சொல்ல வந்துட்டீரே "ன்னு மனசுக்குள்ளே நீங்க அலுத்துக்கறது எனக்குப் புரிகிறது. நீங்கள் நினைப்பது போல் இது சாதாரண விஷயம் இல்லை ,சாமி.. நடுத்தர வயதிலேயே இந்த நரைத்தலையால் நான் படும் அவஸ்தையும் அவமானமும் எனக்குத்தான் தெரியும்.

யாரோ ஒரு புலவர் - பிசிராந்தையார்ன்னு நினைக்கிறேன் - முதுமை அடைந்தும் தனக்கு நரை இல்லாததன் காரணங்களை விலாவாரியாக விளக்கியிருப்பது பற்றி சின்ன வயதில் தமிழ்ப்பாடத்தில் படித்தது நினைவிருக்கிறதா? அவர் சொன்ன அதே காரணங்கள் எனக்கும் முழுக்க முழுக்கப் பொருந்தினாலும், எனக்கு மட்டும் ஏன் இள வயதிலேயே நரை வந்து விட்டது என்பது புரியாத புதிராய்த்தான் இருக்கிறது.

என் நண்பன் அனவரதம் தெரியுமா உங்களுக்கு ? தனக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லைங்கற அலட்டலும் தலைகனமும் அவன் பார்வையிலும் பேச்சிலும் பளிச்சிடும். குழந்தையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் ரகம். . என் வெள்ளை முடி விஷயம் , அவன் வெறும் வாய்க்கு மெல்லக் கிடைத்த சூயிங்கம் போல.

நான் கேட்காமலேயே வலிய வந்து இதைப்பற்றி பிரமாதமாக ஒரு லெக்சரே கொடுத்துவிட்டான்.

"இதுக்காகக் கவலைப்படாதேடா சுப்புணி.. உன் தப்பு எதுவும் இல்லை இதிலே.. இது ஜீன்ஸ் சம்பந்தப்பட்டது. அதனாலே சில குடும்பங்கள்¢ல் பரம்பரையாக தொடந்து இப்படிவர வாய்ப்புண்டு.. சில பேருக்கு பித்தத்தினாலே வருவதுண்டாம்.. அதிக கவலைகளாலும் இப்படி ஆவதுண்டுன்னு ஆராய்ச்சி பண்ணி சொல்லி இருக்கா. நிறைய மாகஸின்களிலே. இதைப்பற்றி படிச்சிருக்கேன்" என்று தனக்குத் தெரிந்த அரைகுறை அறிவியல் ஞானத்தை என்னிடம் கொட்டி என்னை மேலும் குழப்பிவிட்டான்.

எனக்கு ஒரு விஷயத்தில் கொஞ்சம் வருத்தம்தான்.

நம்ம ஆட்களுக்கு ஒரு மனிதனின் முகத்தைப் பார்த்துத் தோராயமாகக் கூட வயதைத்

மதிப்பிடத்தெரிவதில்லை...தலைமுடி நரைத்துவிட்டால் போதும். உடனேயே அந்த நபர் 'கிழவன்' என்றோ 'தாத்தா' என்றோ முத்திரை குத்தப்படுவதும் அவ்வாறே அழைக்கப்படுவதும் நாம் அனுபவத்தில் கண்கூடாகப் பார்க்கிறோமே !

இந்த விஷயத்தில் எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைப் பொறுமையாகக் கேளுங்கள். என் மனவருத்தம் நி¢யாயமானது என்பது உங்களுக்கே புரியும்.

போன வாரம்.

உஸ்மான் ரோட் டிராபிக்கைச் சமாளித்துக்கொண்டு ஒரு வழியாகக் கடக்கத் தடுமாறிக் கொண்டிருந்தபோது, கண்மூடித்தனமக வந்துகொண்டிருந்த ஒரு லாரி டிரைவர் கதவைத் திறந்துகொண்டு," ஏ கிழட்டுப் பொணமே, ஊட்லே சொல்லிட்டு வந்துட்டியா?
" என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டே போனபோது எனக்கு எப்படி இருந்திருக்கும்?

இன்னொறு நாள். மாநகரப் பேருந்தில் பயணித்துக்கொண்டிருந்தேன். எக்கச்சக்கக் கூட்டம் நிரம்பி வழிந்தது. கண்டக்டர் என்னைப் பார்த்து," சிவப்பு சட்டை தாத்தா, பொம்பி¨ளை ஸீட் ஒண்ணு காலியா இருக்கு பாரு, அதிலெ போய் குந்திக்கோ. வயசானவரு. யாரும் ஒன்னும் சொல்ல மாட்டாஙக" -- என் மீது இரக்கப்பட்டது போல் அவன் சொன்னாலும் ,எனக்கு ஏனோ அவன் என்னை மறைமுகமாகக் கேலி செய்வதாகத்தான் தோன்றியது.

சொல்ல மறந்துவிட்டேனே! இன்னொரு வேடிக்கையான சம்பவம்.

எங்கள் மும்பை பிராஞ்ச் ராஜா--- என் கல்லூரி நண்பன்--போன முறை சென்னைக்கு வந்தபோது ரங்கனாதன் தெருவில் என்னைத் தற்செயலாகப் பார்த்தான். வியப்புடன் என் தலையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன் என்னைக் கேட்ட முதல் கேள்வியே என்னை அயர வைதது விட்டது. "நீ ரிடையர் ஆயி எத்தனை வருஷம் ஆயிற்று?" என்றானே பார்க்கலாம் ! அப்போது எனக்கு இன்னும் இருபது வருட ஸர்விஸ் பாக்கி இருந்தது.

எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. என் எண் சாண் உடம்பில் தலைநரைமட்டும் தான் அவன் மனதில் இந்த சந்தேகத்தைக் கிளப்பி விட்டது.

'தாத்தா' என்று யார் அழைத்தாலும் எனக்கு அப்போது கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடும்.

பின்னே என்ன ஐயா? கைகால்கள்¢ல் நடுக்கத்துடன் கைத்தடியோ அல்லது யாராவது ஒருவர் உதவியுடனோ நடக்கும் வயோதிகனா நான்?. பார்வைக்கோளாறு,காது கேளாமை,

ஆஸ்த்மா, ஞாபக மற்தி, ஆகியவற்றுள் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட வியாதிகளாலேயோ பாதிக்கப் பட்டு சதா படுத்த படுக்கையாக இருப்பவனா? நாற்பது வயதைக் கூடத் தாண்டாத ---, சதா பம்பரமாய்ச் சுறுசுறுப்புடன் ஒடியாடி வேலை செய்யும் நான்--- இவங்க கண்களுக்குத் கிழவனா,தாத்தாவா? இது அனாவசியக் கிண்டலாகத் தோன்றவில்லயா உங்களுக்கு ?

என் வயதுக்குக் கொஞ்சமும் பொருந்தாத இந்தக் கௌரவ தாத்தா பட்டத்திலிருந்து எப்படியாவது தப்பித்தாக வேண்டும் .இது தான் என் முதல் காரியம்.

என் மண்டையைக் குடைந்துகொண்டிருந்த இந்தத் தர்மசங்கடமான பிரச்னையிலிருந்து விடுபட மீண்டும் அனவரதன்தான் வழி காட்டினான். இளமையாகக் காட்சியள்¢க்க தலைக்கு 'டை' போடச்சொல்லி எனக்கு யுக்தி சொன்னவன் அவன்தான். அதோடு நிற்காமல் விடாப்பிடியாக என்னை நச்சரித்து அதற்கான வழிமுறைக¨ளைப் உபதேசித்து செயல் முறையையும் காட்டி என்னை ஆட்டாமல் ஆட்டுவித்தான்... சின்னத்திரையில் தலைச்சாயம் பற்றி வந்த அசட்டுத்தனமான விளம்பரங்கள் (டை போட்டுக்கொண்ட ஆன்ட்டி அக்காவாக மாறிய விந்தை) என்னை மேலும் உசுப்பி எனக்கு ஆதரவுக் குரல் கொடுத்தன.

சும்மா சொல்லக்கூடாது. டையினால் ஏற்பட்ட மாற்றங்கள் எனக்கே ஆச்சரியத்தை அளித்தன.

ஆரம்ப காலத்தில் என் நண்பர்களும், சொந்தக்காரர்களும்-- மாறு வேஷத்தில் திரியும் பிரபல கேடியை §ந¡ட்டமிடும் போலீஸ் போல-- என்னைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தாலும் நாளாவட்டத்தில் அவர்களுக்கு என் கறுகறு தலை பழக்கமாகிவட்டது..

யாருமே இப்பொது என்னை 'தாத்தா' என்றோ 'கிழவா' என்றோ அழைப்பதில்லை. எல்லாருக்கும் நான் 'சார்' அல்லது 'ஐயா'தான் இப்பொது. ஒரு விதத்தில் மனசுக்குத் திருப்தியாக இருந்தது.

காலம் தான் எத்தனை வேகமாக ஓடுகிறது?

முப்பது வருடஙகள் விளையாட்டுப்போல் உருண்டோடிவிட்டன.

தலைச் சாயம் போடுவது என்னிடம் ஒரு பழக்கமாக ஒட்டிக்கொண்டு விட்டது.

நான் பதவியிலிருந்து ரிடையர் ஆகிவிட்டேன். தி.நகரில் சொந்த வீடு .கை நி¨றைய

பென்ஷன். வெளி நாட்டிலிருந்து என் மகன் அவ்வப்போது தாராளமாக அனுப்பும் பணம். சொகுசான வாழ்க்கைதான்.

எத்தனை சௌகரியங்கள் இருந்த போதிலும் எதையோ இழந்துதுபோல் மனம் தவிப்பது ஏன்?

விவரிக்கமுடியாத ஒரு சூன்யம், அமைதி, ஏக்கம், தனிமை ----- மௌனமாக எங்களை துன்புறுத்துவதாக உணர்ந்தோம்.

ஒரே பையன். ஹாங்காங்கில் வேலையாய் இருக்கிறான். அவன் மனைவிக்கும் அங்கேயே வேலை.. இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை இந்தியா வந்து எங்களைப் பார்த்துவிட்டுப் போவார்கள். இந்த முறை நான்கு வருஷங்களாகியும் வரவில்லை.. போன தடவை இந்தியா வந்த போதுதான் என் பேரன் விக்ரம் பிறந்தான்.

என் மகன் குடும்பத்தோடு டிஸம்பர் முதல் வாரத்தில் சென்னை வருவதாக ஈ மெயில் வந்தபொது நானும் என் மனைவியும் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தோம். .

அந்த நாளும் வந்தது. எங்களுக்கு ஏற்பட்ட படபடப்பு,பரவசம், தவிப்பு சொல்லி முடியாது. வழிமேல் விழி வைத்து அவர்கள் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தோம்.

கால்டாக்சியிலிருந்து குதூகலம் பொங்கக் குதித்து வந்த பேரன் விக்ரம், பால்கனியில் ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டிருந்த என்னிடம் ஒடி வந்து "தாத்தா" என்று இரு கை நீட்டி என்னைப் பாசத்துடன் கட்டிக்கொண்டான்.

துறு துறு வென்ற முகம்: விஷமத்தனத்துடன் கூடிய சிரிப்பு; துடிப்பான பேச்சு:

என் உடலெல்லாம் மின்சாரம் பாய்வது போல் சிலிர்த்தது. மனதில் ஆனந்தம் பெருக்கெடுத்தது.

"தாத்தா" என்ற சொல்லேஅப்போது ஏன் தேனாய்த் தித்தித்தது ?

அது ஒரு அழகான, சக்திவாய்ந்த வார்த்தை அல்லவா? என் தூசிபடிந்திருந்த இதயத்தைத் திறந்த மந்திரக் கோல் அல்லவா ?

"இன்னும் நிறைய தடவை உன் வாயாலே என்னைத் தாத்தான்னு கூப்பிடுடா என் கண்ணு"ன்னு சொல்லி அவனை கட்டி அணைத்து உச்சி முகர்ந்தேன்.

அவன் பார்வை என் தலை மேல் தாவியது.

ஏதோ அதிருப்தி அடைந்தவன் போல் முகத்தைச் சுளித்துக்கொண்டே, " போ, தாத்தா, உன் தலை ஒரே கருப்பா இருக்கு. நல்லாவெ இல்லை. ரமேஷ் இருக்கானே- என் ப்ரண்டு - அவன் தாத்தாவுக்கு முடி எல்லாம் வெள்ளைவெ§ள்ர்னு கிறிஸ்மஸ் தாத்தா மாதிரி சூப்பரா இருக்கும் தெரியுமா" என்றான்.

"சரிடா, கண்ணு, அடுத்த வாரம் நானும் அதே மாதிரி ஆயிடுவேன் பாரு" என்று உத்திரவாதமளித்தேன்.

தலைச்சாயம் சம்பந்தப்பட்ட என் உபகரணங்கள் மிகுந்த கவனத்துடன் அன்று இரவே எங்கள் தெருக் கோடியில் இருந்த குப்பைத்தொட்டியில் சேர்க்கப்பட்டன.

g.subramanian_chennai@vsnl.net

பதிவுகள், டிஸம்பர் 2003 இதழ் 48

26. லாப நஷ்டங்கள் - குமரவேலன் -

ஏதோ பலத்த சிந்தனைவசப்பட்டவராய்-- சோகமே உருவாக --பால்கனி சோபாவில் அமர்ந்திருந்தார் சத்யமூர்த்தி. துணிச்சல் மிகுந்தவர், பிரச்னைகளைக் கண்டு அஞ்சாமல் சாமர்த்தியமாக சமாளித்து வெற்றி காணும் அசகாய சூரர் என்¦றல்லாம் அவரைப் பற்றி பேசிக்கொள்வார்கள். ஊரின் பெரும் புள்ளிகளில் ஒருவரான அவர் நகரின் மாபெரும் டிலைட் ஏ.சி. தியேட்டர் முதலாளி. போன வாரம் தான், 'லவ்வர்ஸ்' என்ற புத்தம் புதுத் தமிழ்த் திரைப்படத்தை ஏராளமாகச் செலவு செய்து, தடபுடலாக விழாவும் எடுத்து தன் தியேட்டரில் உற்சாகத்துடன் ரிலீஸ் செய்தார். திரையுலகின் முன்னணி நக்ஷத்திரங்கள் பலர் பங்கேற்கும் படம்; கண்ணைக்கவரும் அயல் நாட்டுக்காட்சிகள்; அசத்தும் இசையமைப்பு; பல அவார்ட் படங்களை அளித்த டைரக்டரின் வித்யாசமான படைப்பு; நாலைந்து காமெடியன்களின் அட்டகாசக் கலக்கல் -- இப்படிப் பல சிறப்பு அம்சங்க¨ளைக் கொண்ட படம் என்பதால் நிச்சயமாக அது திரை உலகில் ஒரு மகத்தான சாதனை புரிந்து கலெக்ஷன் விஷயத்தில் வரலாறு படைக்கும் என்று பத்திரிகைகள் புகழ்ந்து தள்ளின.

ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த எதிர்பார்ப்புகளும் கணிப்புகளும் நிறைவேறாமல் பொய்த்துப் போனதுதான் பெரிய பேரிடி! முதல் வாரமே தியேட்டர்களில் ஈயடிக்க ஆரம்பித்தது சம்பந்தப்பட்ட அனைவரையும் கதிகலங்க வைத்துவிட்டது.

ரசிகர்களின் ரசனையை முன்கூட்டியே யூகிக்க முயல்வது ஆபத்தான சோதனை என்பதும் அது எந்த நேரத்திலும் எந்தத் திசைக்கும் மாறிவிடக்கூடும் என்பதும் தெளிவாக நிரூபணமாயிற்று.

சேமிப்பின் பெரும் பகுதியை திரைப்பட வெளியீட்டில் முதலீடு செய்திருந்ததால், சத்தியமூர்த்தி செய்வதறியாது அனலில் விழுந்த புழுவாய்த் தவித்தார். காலைச்சுற்றிய பாம்பு கடிக்காமல் விட்டல் போதும்

என்பது போல, லாபமே வேண்டாம், பெருத்த நஷ்டப்படாமல் ஒரு வழியாகக் கரை சேர்ந்தால் பொதும் என்ற நிலமைக்கு தள்ளப்பட்டு விட்டார்.

அவர் ஒரே மகள் கவிதா பட்டப்படிப்பை முடித்து ஒரு வருடம் ஆகிவிட்டது. அவள் கல்யாணத்தை சீரும் சிறப்புமாக நடத்தி முடித்தாக வேண்டும் என்று மனைவி தினந்தோறும் நச்சரித்த வண்ணம் இருக்கிறாள். பெரிய இடத்து வரன் ஒன்று பார்த்து பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. பையனுக்கு அமெரிக்காவில் டாக்டர் வேலை; அப்பா கோயம்புத்தூரில் பிரபல மில் ஓனர். செல்வத்தில் புரளும் ஆடம்பரமான குடும்பம் ; அவர்கள் பெண் பார்த்து சம்மதம் சொல்ல வேண்டியது தான் பாக்கி..

இந்த நெருக்கடியான சமயத்தில் இப்படி ஒரு சோதனையா?

இனி தாமதிப்பதில் அர்த்தமில்லை. ரசிகர்களைக் கவர்ந்திழுத்து வசூலைப்பெருக்கி நிதி நிலமையை சீர்திருத்த அதிரடி நடவடிக்கை ஏதேனும் தேவைப்பட்டது. அவர் வியாபார தந்திரத்திற்கு விடப்பட்ட ஒரு சவால் இது!

அடுத்த வாரம்.......

மாருதி ரெஸ்டாரன்டில் டிபனுக்கு ஆர்டர் செய்துவிட்டு அவர் காத்திருந்தபோது ------

எதிர் டேபிளில் இரண்டு இளைஞர்கள் சுவாரசியமாக ரகசியக் குரலில் பேசிக்கொண்டிருந்தது அவர் கவனத்தைக் கவர்ந்தது.

வெளியூர் தியேட்டர் ஒன்றி¢ல் நடந்த ஒரு விஷயத்தை ம¨றமுகமாகக் குறிப்பிட்டதும் லேசாகக் காதில் விழுந்தது. அனுபவம் மிகுந்த அவரால் அவர்கள் பேச்சை முற்றிலும் ஓரளவு ஊகிக்க முடிந்தது.

அவர் மூளையில் ஒரு மின்னல் -- அவர் மனதைக்குடைந்து கொண்டிருந்த ப்ரசனைக்கு தீர்வு கிடைத்து விட்டதே! திக்குத்தெரியாமல் காட்டில் தவித்தவருக்கு வழி தென்பட்டு விட்டது போல் குதூகலித்தது அவர் மனம்.

அடுத்த நாளே அந்தத் திட்டம் ரகசியமாகத் தியேட்டரில் செயல்படுத்தப் பட்டது. பலான படங்களின்

பிட்கள் இன்டெர்வலுக்கு முன்னும் பின்னும் இணைத்துக் காட்டப்பட்டன. தியேட்டர் ஊழியர்கள் மூலம் இந்த விஷயம் வாய்ச்சொல்லாக ஊருக்குள் லேசாக பரப்பப்பட்டது.

ஆச்சரியப்படும் விதத்தில் உடனடிப் பலன் கிடைத்தது. டிக்கட்டுகள் மின்னல் வேகத்தில் விற்றுத் தீர்ந்தன. காஷ் பாக்ஸ் நிரம்பி வழிந்தது. நிதி நிலமை சீரடைந்ததில் சத்யமூர்த்தி நிம்மதிப் பெரு மூச்சு விட்டார்.

அடுத்த வாரமே கோயம்புத்தூர்காரர்கள் பெண் பார்க்க வந்தார்கள். வழக்கம் போல் ஊருக்குப் போய் தங்கள் முடிவைத் தெரிவிப்பதாக சொல்லிச் சென்றார்கள்.

எதிர்பார்த்த கடிதமும் வந்தது. சத்யமூர்த்தி அடக்க முடியாத ஆவலுடன் பிரித்துப் பார்த்தார்.

" பெண்ணையும் உங்கள் குடும்பத்தையும் எங்களுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. கல்யாணத்தைச் சீக்கிரமே நடத்தி விடச் சொல்லி எழுதவேண்டும் என்ற முடிவுடன் தான் உங்கள் ஊரை விட்டுக் கிளம்பினோம். வழியில் உள்ளூர் நண்பர் ஒருவரைச் சந்தித்தோம். அவர் முலம்கேள்விப்பட்ட ஒரு விஷயம் ---உங்கள் தியேட்டரைப் பற்றி-- எங்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. கௌரவமும் கண்யமும் உள்ள குடும்பம் என்றுதான் பெண் பார்க்க வந்தோம். நல்ல வேளையாகக் கடவுள் எங்களைக் காப்பாற்றிவிட்டார். எங்கள் தற்போதைய முடிவு என்ன என்பதை

நாங்கள் சொல்லாமலே நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். கவிதாவிற்கு வேறு நல்ல இடத்தில் மாப்பிள்ளை கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நன்றி "

ஒரே நொடியில் சத்யமூர்த்தியின் உலகம் மீண்டும் இருண்டு போயிற்று.

பத்தே நாட்களில் போலீஸ் சத்யமூர்த்தியை கைது செய்துகொண்டு போனதும், பத்திரிகைகளில் இந்தச்செய்தி அவருடைய போட்டோவுடன் பரபரப்பாக வெளியிடப்பட்டதும் தனிக்கதை!

thambudu@hotmail.com

பதிவுகள், ஜனவரி 2004 இதழ் 49

27. பிற்பகல் விளையும்...!? - ஆல்பர்ட் (விஸ்கான்சின், அமெரிக்கா) -

குரு கௌம்பு....இப்ப பொறப்பட்டாத்தான் இருட்டறதுக்குள்ள டெட்ராய்ட் போய்ச் சேர முடியும், என்றவாறு வாசு வந்தான். என்னடா, என்னாச்சு? குரு பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருக்கவே, மூன்று நாள் ஜாலியா இருந்துட்டு நாளைக்கு வேலைக்குப் போகனுமேன்னு கவலையா இருக்கா? என்று மீண்டும் கேட்டான் வாசு. மம்...ஜலாலும் டேவிட்டும் ரெடியாயிட்டாங்களா? என்றவாறே குரு படுக்கையை விட்டு எழுந்தான்.

நாங்கள்லாம் ரெடி... நீ என்ன தூங்கீட்டியா? கேட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்தான் ஜலால்.

இதோ ஒரு நொடியில ரெடி.. நீங்க ரூமை செக் அவுட் பண்ணுங்க நானும் வாசுவும் வந்துடுறோம்
என்ற குரு, பாத் ரூமில் புகுந்து கொண்டான்.

நண்பர்களிடமிருந்து விடுபட்டு குளியலறைக் கதவைச் சாத்திக் கொண்ட குருவால் தன் மனக் கதவைச்
சாத்தமுடியவில்லை.

"ஒருவேளை நாம அந்தப்பெரியவர் கேட்டதுக்கு சரின்னு சொல்லீருந்தா அந்த அநியாயம் நடந்திருக்காதோ " அந்த குளுகுளு சூழலிலும் கூட 'குப்' பென வியர்த்தது குருவுக்கு. அவனின் எண்ண ஓட்டம் பின்னோக்கித் தாவியது. நயாகரா அருவியை அங்குல அங்குலமாக ரசித்துவிட்டு, 'போட் ரைடு' போவதற்காக அந்த நீண்டு வளைந்து நின்ற வரிசையில் குரு தன் நண்பர்களோடு நின்றிருந்தபோது தான் அந்த பெரியவரைச் சந்திக்க நேரிட்டது. பெரியவர் ஒருவர் ஒரு சிறுவனையும் சிறுமியையும் கையில் பிடித்துக் கொண்டு வரிசையில் இருந்தவர்களிடம் ஏதோ கேட்பதும் அவர்கள் ஏதோ சொல்வதும் அவர் அடுத்தடுத்தவர்களாக கேட்டு நகர்ந்து கொண்டிருந்தார்.

அவரைப் பற்றி இவனருகில் நின்று கொண்டிருந்த சிலர் இந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசி சிரித்துக் கொண்டிருந்தனர். இந்தியாவுல தான் பிச்சைக்காரங்க தொல்லைன்னா, இங்க கூடவா? என்றான் ஒருவன். அட இவுங்களும் இந்தியா தான், விமானம் ஏறி வந்து இப்ப இங்கயே பிச்சை எடுக்க ஆரம்பிச்சாச்சா? என்று இன்னொருவன் சொல்ல ஒரு கூட்டம் கொல்லென சிரித்தது.

அந்தப் பெரியவரோ, "நீங்க தமிழா?.....ஸார் நீங்க தமிழா?" என சற்றும் மனம் தளராமல் ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே குருவிடம் வந்தார்.

"தமிழ் தான் நான், என்ன விஷயம் பெரியவரே?" தமிழ் தான் என்று குரு சொன்ன மாத்திரத்தில், பெரியவரின் கண்களிலிருந்து மளமளவென கண்ணீர் உருண்டு சிதறியது.

"என்ன பெரியவரே ஏன் அழறீங்க?"

"தம்பி ஒரு நிமிசம் ஒங்ககிட்ட தனியா பேசனும். இதோ இப்படி வர்றீங்களா? "அவருடைய தோற்றம் பரிதாபமாக இருந்திருக்கவேண்டும்.

சரி வாங்க, "நீங்க மூவ் பண்ணீட்டே இருங்க. நா வந்து ஜாயின் பண்ணிக்கிறேன், "நண்பர்களிடம் சொல்லிவிட்டு எதிரே இருந்த பூங்காவை நோக்கி நடந்தான்.

"ம்..இப்ப சொல்லுங்க பெரியவரே...!?"

மீண்டும் மளமளவென கண்ணீர் கசிந்து, சிதறியது.

"அழாதீங்க... ஒங்க ப்ரச்னை என்ன?"

திடீரென்று குருவின் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டு , "தம்பி இந்தக் கைய ஒங்க காலா நெனச்சு கும்புட்டுக் கேக்கறேன், என்று சொல்லி மீண்டும் குலுங்கிக்குலுங்கி அழத் துவங்கிவிட்டார். வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. பெரியவரின் அருகே நின்றிருந்த குழந்தைகள் எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்னோட அப்பா மாதிரி இருக்கீங்க. சின்னப் பையனான என்னிடம் பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. என்னன்னு சொல்லுங்க. என்னால எதும் உதவமுடியும்னா செய்றேன்."

"தம்பி, எப்படி சொல்றது? என்ன சொல்றது? புரியல. திருச்சில இருந்து தஞ்சாவூர் போகனும் பஸ் சுக்கு காசு தரமுடியுமான்னு கேக்கலாம். அமெரிக்காவுல இருந்து தஞ்சாவூர் போகனும் பிளேன்ல டிக்கட் எடுத்துத் தர முடியுமான்னு கேக்க முடியாது. என் மகன்னு சொல்லிக்கவே வெக்கப்படறேன் தம்பி. என்னப் பிரிஞ்சு இருக்க முடியல, நாங்க வரணும்னா நாலு பேர் செலவாகும். நீங்க ஒருத்தர் தான வாங்கன்னு கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதினான். எம் பொண்டாட்டி போய்ச் சேர்ந்துட்டா, நாந்தான் ஒத்தக் கட்டையா பென்சன் பணத்துல காலத்த ஓட்டிக்கிட்டு இருந்தேன். எனக்கும் பேரப்புள்ளைகளை பாக்கலாம் போல் ஒரு எண்ணம் வந்துச்சு. இங்க வந்தேன். இங்க வந்தப்புறம் தான் தெரிஞ்சுகிட்டேன். பாசம் ஏதும் இல்ல, எல்லாம் பசப்பல் தான்னு. என்னைய ஜெயில்ல வச்ச மாதிரி வச்சு இந்தப் புள்ளங்களுக்கு காவக்காரனாக்கி விட்டான். மருமக பேச்சும் ஏச்சும் என்னால தாங்க முடியல. பத்தாதுக்கு மகனும் சேந்துகிட்டு கை

நீட்டி அடிக்கக் கூட ஆரம்பிச்சுட்டான். என்னை ஊருக்கு அனுப்பி வச்சிடுப்பான்னு கூட கேட்டுப் பாத்துட்டேன். ஊரா? இங்கேயே கெடந்து சாவுங்கிறான் பெத்த மகன். இப்ப ஹெலிகாப்டர் ரைடு போயிட்டு வர்றோம் புள்ளங்களை பத்திரமா பாத்துக்கன்னு சொல்லீட்டுப் போய் இருக்காங்க", என்று சொல்லி நிறுத்தினார் பெரியவர்.

"கேக்க கஷ்டமாத்தான் இருக்குங்க. இதுல நான் என்ன செய்யணும்னு எதிர்பார்க்குறீங்க?"

"தம்பி எனக்கு பணம் காசு உதவி வேணாம். சமையல் செய்யத் தெரியும். ஒங்களுக்கும் நண்பர்களுக்கும் சமைச்சுட்டு, எதோ ஒரு மூலைய காட்டினா மொடங்கிக்கிருவேன். வேற எதுவும் வேணாம். ஊர்ல இருந்து பணத்துக்கு ஏற்பாடு பண்றவரைக்கும்தான். ஒங்களுக்கு எக்காரணம் கொண்டும் பாரமாயிருக்கமாட்டேன்", என்றார் சிறு குழந்தை போல.

புராஜெக்ட் அடுத்த மாசம் முடியப்போகுது. தானே பெஞ்சில் உக்காரப் போகிறோமா? நிக்கப் போகிறோமா? என்ற சிந்தனை அப்போது குருவுக்கு எழுந்தது.

"தம்பி யோசிக்கிறதப் பாத்தா....!?"

"இல்ல...எனக்கு இப்ப இருக்கிற வேலை அடுத்த மாசத்தோட முடியுது. அப்புறம் நானே எங்க போவேன்னு எனக்கே தெரியாது. அதான் யோசனை பண்ணிட்டு இருக்கேன்."

"தம்பி ஒங்க ப்ரெண்ட்ஸ்க கிட்டயாவது சொல்லி ஒரு ஏற்பாடு செஞ்சீங்கன்னா கோடிப் புண்ணியம் ஒங்களுக்கு...!" என்று சொல்லி குருவை இரட்சகன் போல பெரியவர் ஏறிட்டார்.

"ஒங்க போன் நம்பரை கொடுங்க ஏதாவது ஏற்பாடு பண்ண முயற்சிக்கிறேன்."

"தம்பி ஒங்கள வற்புறுத்திக் கேட்க எனக்கு கொஞ்சம் கூட உரிமை இல்லை. இங்க எனக்கு வேற வழியும் தெரியல. இல்லன்னா சாகறது தான் ஒரே வழியா தெரியுது."

"நா டிரை பண்றேன். ஆனா இப்ப உறுதியா ஒங்ககிட்ட ஏதும் சொல்ல முடியாது. மகனுக்காக இருக்கிறவரை கொஞ்சம் அனுசரிச்சுப் போங்க பெரியவரே. தூரத்தில் நண்பர்கள் சைகை செய்யவே அப்ப நா வர்றேன். போன் பண்றேன். கவலப் படாதீங்க."

"இவ்வளவு பேர்ல நீங்க ஒருத்தராவது மனிதாபிமானத்தோடு வந்து கேட்டீங்களே. ரெம்ப நன்றி தம்பி, என்று தலைக்கு மேல் கையெடுத்துக் கும்பிட்டார் பெரியவர்."

*** *** ***

வானத்திலிருந்து பூமிக்குத் தாவிக் குதிக்கிற நயாகரா நதியழகை கீழிருந்து நனைந்து கொண்டே பார்க்கக் கண்கோடி வேண்டும். அமெரிக்கப் பகுதி, குதிரைக் குளம்பு பகுதி, (குதிரைக் கால் போன்றஅமைப்பு) கனடா பகுதி என மூன்று பிரிவும் ஒரே அருவியாக அணி வகுத்துக் கீழிறங்குகிற அற்புதத்தில் மனதைப் பறிகொடுத்து இருந்தான் குரு.

படகுச் சவாரி முடிந்து கூட்டணிக் கடையில் பீட்ஸா சாப்பிட்டு , மெழுகு பொம்மை கண்காட்சி கூடத்துக்குள் சென்று விட்டு வெளியே வந்தபோது தான் அந்தக் கொடூரம் அரங்கேறிப் போயிருந்தது. வாகனங்கள் நீண்ட வரிசையில் ஸ்தம்பித்து நிற்க, சற்று தூரத்தில் ஒரு கூட்டம் மொய்த்துக் கொண்டிருப்பதையும், காவலர்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருப்பதையும் குரு கவனித்தான். கும்பலாய் இருந்த இடத்தை அடைந்து பார்த்த குருவிற்கு இருதய இயக்கமே நின்றுவிட்டதுபோலானது.

அங்கே... அந்தப் பெரியவர்... இரத்தச் சகதியில் இடுப்புக்கு கீழ் கூழாகியிருக்க முகத்தில் அங்கங்கே இரத்தப் பொட்டுக்கள் உறைந்து ... பார்க்கச் சகிக்காமல் உடம்பைக் குலுக்கி நிமிர்ந்தகுரு, பெரியவருடன் வந்த இரு குழந்தைகள் தட்டுப் பட்டனர். அருகில் சுடிதாரினி, கொஞ்சம் தள்ளி காவலரிடம் பேசிக் கொண்டிருந்தது அந்தப் பெரியவரின் மகனாக இருக்க வேண்டும். பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுடிதாரினி பெரியவரின் மகனை காவலரிடமிருந்து பிரித்து, குரு இருந்த பக்கம் ஒதுங்கினார்கள்.

"எங்க ஒளறிக் கொட்டிருவீங்களோன்னு பயமாயிருச்சு. நல்ல வேளை... நான் சொன்ன மாதிரி சொல்லீட்டிங்க. அப்பாகிப்பான்னு சொல்லி பாடிய நாம வாங்கி, கிழத்தைப் புதைக்கவே ஆயிரக்கணக்குல டாலர் செலவு பண்ணனும். நயாகரா வந்த எடத்துல தற்செயலா சந்திச்சோம், எங்க நாட்டுக்காரர் என்பதைத் தவிர வேற ஏதும் தெரியாதுன்னு சொல்லீட்டிங்க; நாம தப்பிச்சோம். சரி...சரி நாம இந்த எடத்தை விட்டு மொதல்ல கெளம்புவோம்."

குருவுக்குத் திக்கென்று இருந்தது. அதே இடத்தில் அவர்களை அடித்துப் பந்தாட வேண்டும் போலிருந்தது. சே... என்ன மனிதர்கள்? என்ன வாழ்க்கை? பெத்த அப்பாவை யாருன்னே தெரியலைன்னு எப்படி மனம் கூசாமல் சொல்ல முடியுது? சில மணித்துளிகளுக்கு முன் பேசிய ஒரு உயிர்ப் பறவை சிதைந்து கிடப்பதைப் பார்த்ததுமே, என் உள் மனம் பெருங்குரல் எடுத்துக் கதறுகிறதே, தோளைத் தொட்டிலாக்கி, நெஞ்சைப் பஞ்சு மெத்தையாக்கி, எறும்பு கடித்தால் பதைபதைத்து, எத்தனைஎத்தனை இரவுத் தூக்கம் தொலைத்து இந்த வாலிபத்தை வளர்த்தெடுத்த அன்பான ஒரு தந்தையை எப்படி அனாதையாக விசிறிவிட்டுப் போக முடிகிறது? தொண்டை அடைக்காம, துக்கமில்லாம எப்படி? எப்படி இவர்களால் பாறாங்கல்லாய் இருக்க முடிகிறது?

"டேய்...பாத்ரூம்ல என்னடா பண்றே..?" கதவு தடதடவென தட்டப்பட குருவின் நினைவிழை அறுந்தது.

*** *** ***

ஒருமணி நேரத்துக்கு மேல் வண்டியை ஓட்டிய ஜலால், "டேய்...என்னாச்சு ஒரு மைல் நீளத்துக்கு வண்டி டிராபிக் ஜாமாகி நிக்கிது,"என்றான்.

"சரிதான்... எப்ப கிளியராகி, நாம எப்ப போய்ச் சேர்றது? இப்பப் போனாலே டெட்ராய்ட் போய்ச்சேர இராத்திரி ஒம்பது ஆயிடும்..." என்றான் டேவிட் எரிச்சலாக.

"சரி நான் கொஞ்சம் முன்னாடி போய் என்ன?ஏதுன்னு போய் பாத்துட்டு வாரேன்" குரு கிளம்பினான்.

இந்தமாதிரி டிராபிக் ஜாமில் எப்படித்தான் அமெரிக்கர்கள் பொறுமையாய் இருக்கிறார்களோ? நம்மூராய் இருந்தால் குறுக்கமறுக்க பூந்து போறவன் போயிக்கிட்டே இருப்பான்...என்று நினைத்துக்கொண்டே நடந்ததில் கார்கள் நிற்கும் முன்பகுதிக்கு வந்திருந்தான் குரு.

அங்கே.... அப்பா...அம்மா... என்று மெலிதாய் அழும் குழந்தைகள்.....அட....அந்தப் பெரியவரோட பேத்திகள்.

கார் தலைகீழாய் கவிழ்ந்து கிடக்க டிரக்கின் பின்புறத்தின் கீழ் கார்.. இரத்தம் உறைந்து கிடக்க....சுற்றிலும் போலீஸ் தலைகள்.
அரசன் அன்றே கொல்லுவான்; தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். பெரியவரின் சாவுக்கு காரணமான இருவருக்கும் தண்டனையை தெய்வம் காலம் தாழ்த்தாமல் வழங்கிவிட்டதோ.... குரு அந்தக் குழந்தைகளை நோக்கிப் போகிறான்!

albertgi2004@yahoo.com

பதிவுகள், ஜனவரி 2005 இதழ் 61 -

24. புலம் பெயர்தல். - வ.ந.கிரிதரன் -

நிலத்திற்கு மேல் ஐந்து அடுக்குகளையும் கீழ் ஐந்து அடுக்குகளையும் கொண்ட வாகனத்தரிப்பிடமொன்றின் பாதுகாவலர் ஆசைப்பிள்ளை. ஆசைப்பிள்ளை ஒரு புலம் பெயர்ந்த ஈழத்தமிழர். ஊரில் அரச திணைக்களமொன்றில் 'கிளாக்க'ராகக் (குமாஸ்தாவாக) காலத்தை ஓட்டியவர் கிளாக்கர் ஆசைப்பிள்ளை. இலங்கையில் அரசபடைகளின் அட்டகாசம் அதிகமாகயிருந்த சமயத்தில் நாட்டை விட்டுத் தலை தப்பினால் புண்ணியமென்று கனடாவுக்கு தலையை மாற்றி ஓடிவந்தவர். ஆரம்பத்தில் கோப்பை கழுவிப்பார்த்தார். தொழிற்சாலையொன்றைக் கூட்டிக் கழுவிப்பார்த்தார். கிளாக்கராக ஊரில் வலம் வந்தவரால் தொடர்ந்தும் இத்தகைய வேலைகளைச் செய்ய முடியவில்லை. இதற்கு எளிதான வழியாகப் பாதுகாவலர் வேலை படவே ஒரு பிரபல பாதுகாவலர் நிறுவனமொன்றில் பாதுகாவலராக வேலைக்கமர்ந்து விட்டார். நள்ளிரவிலிருந்து அதிகாலைவரை வேலை. அன்றும் வழக்கம் போல தன் வேலையை ஆரம்பித்தார். அப்பொழுது தான் அந்த வெள்ளையினத்தவன் தனது காரினைத் தரிப்பிடத்தில் நிறுத்தி விட்டு வந்தான். வந்தவன் ஆசைப்பிள்ளையைப் பார்த்ததும் அவருக்கு முகமன் கூறினான்.

"இனிய காலை! நீ எப்படியிருக்கிறாய்?" என்றவனுக்குப் பதிலாக ஆசைப்பிள்ளை பின்வருமாறு கூறினார்:

"நான் நல்லாகத் தானிருக்கிறேன். நீ எப்படியிருக்கிறாய்?" என்றார்.

"நன்றி நண்பனே! நானும் நலமே" என்ற வெள்ளையினத்தவன் திடீரெனக் குண்டொன்றினைத் தூக்கிப் போட்டான்.

"இரண்டாவது தளத்தில் 'பா'மிருப்பது உனக்குத் தெரியுமா?"

இரண்டாவது தளத்தில் 'பாம்'மா...' ஆசைப்பிள்ளைக்குக் குலை நடுங்கியது. பாதுகாவலர் தனது பயத்தினை வெளிப்படுத்தலாமா? அவமானமில்லையா? எனவே தனது பயத்தினை மறைத்தபடி அவர் கேட்டார்

"எனக்கு அறிவித்ததற்கு உனக்கு பல நன்றிகள் உரித்தாகட்டும். அது சரி இரண்டாவது தளத்திலிருப்பது 'பாம்' தானென்பதை எவ்வளவு உறுதியாகக் கூறுகின்றாய்?"

அவரது இந்தக் கேள்விக்கு அந்த வெள்ளையினத்தவன் சிரித்தான். "எனக்குத் தெரியாதா? 'பாம்'மைக் கண்டுபிடிப்பதிலென்ன சிரமமிருக்கமுடியும்?"

"எனக்கு அறியத் தந்ததற்கு உனக்கு நன்றிகள். கவலையை விடு. நான் கவனித்துக்

கொள்கின்றேன்."

அந்த வெள்ளையினத்தவன் அப்பால் நகர்ந்ததும் ஆசைப்பிள்ளையின் 'கிளாக்கர்' மூளை வேலை செய்யத் தொடங்கி விட்டது. எவ்வளவு இலகுவாக இந்த வெள்ளையன் 'பாம்' இருப்பதைக் கூறி விட்டுச் சென்று விட்டான். துணிச்சல்காரன் தான். குண்டென்றதுமே ஆசைப்பிள்ளைக்குக் குலையே நடுங்கி விடுகிறது. ஊரில் இலங்கை விமானப்படையின் விமானங்கள் பொழிந்த குண்டு மழை ஞாபகத்தில் வந்து விடுகிறது. அதில் மடிந்த அவரது நண்பர்கள் பலரின் நினைவுகள் தோன்றி விடுகின்றன. இந்த வெள்ளையனுக்கோ இந்தக் குண்டுச் சமாச்சாரமே அற்பமான விடயமாகவிருந்து விடுகிறது. இப்பொழுது ஆசைப்பிள்ளையைப் பல எண்ணங்கள் சூழ்ந்து ஆட்டிவைக்கத் தொடங்கின. முதலில் இந்த 'பாம்'மை அப்புறப்படுத்த வழி பார்க்க வேண்டும். மிகவும் கவனமாக எட்டவிருந்து ஆராய வேண்டும். அதன் பின் காவல் துறையினருக்கு அறிவிக்கலாமா என்று தன்னைத் தானே ஒருமுறை கேட்டுக் கொண்டார். இந்த 'பாம்' ஏற்கனவே ஆயத்தமான நிலையிலுள்ள 'நேரக்குண்டு' (Time bomb) ஆக இருந்து விட்டால்... வெடித்து விட்டால்...அவருக்கு ஊரில் அவரையே நம்பியிருக்கும் மனைவி , குழந்தைகளின் ஞாபகம் வந்தது. 'கதிர்காமக் கந்தா நீதான் என்னை இந்த இக்கட்டிலையிருந்து காப்பாற்ற வேஎண்டும்' என்று மனதில் பலமுறை வேண்டிக் கொண்ட ஆசைப்பிள்ளை இறுதியிலொரு முடிவுக்கு வந்தார். காவல்துறைக்கு அறிவிப்பதற்கு முதலில் அந்த வெள்ளையன் கூறியது உண்மைதானா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த வெள்ளைக்காரரையும் நம்ப முடியாது. சில நேரங்களி சரியான வேடிக்கைப் பேர்வழிகளாகயிருந்து விடுகின்றார்கள். ஆராய்ந்து பார்க்காமல் எதற்கும் முடிவெடுக்கக் கூடாது. இவ்விதமானதொரு சூழலில் ஆசைப்பிள்ளை இரண்டாவது தளத்திற்குச் சென்று பார்க்க முடிவு செய்தவராகப் புறப்பட்டார். ஆனால் உள்ளூர அந்தக் குண்டு வெடித்து விட்டாலென்றதொரு பயமும் இருக்கத் தான் செய்தது. அதற்கு முதல் முன்னெச்சரிக்கையாகத் தனது குறிப்புப் புத்தகத்தில் 'பாம்' பற்றிய வெள்ளையனின் தகவல் பற்றிக் குறிப்பிடவும் அவர் தவறவில்லை.

அந்த வாகனத்தரிப்பிடத்திற்கு வடக்கிலும் தெற்கிலுமாக இரு படிக்கட்டுகளிருந்தன. அந்த வெள்ளையினத்தவன் குறிப்பிட்டது தெற்குப் படிக்கட்டினை. ஆசைப்பிள்ளையார் வடக்கிலிருந்த படிக்கட்டினைப் பாவித்து ஐந்தாவது தளத்திற்குச் சென்று அங்கிருந்து ஒவ்வொரு தளமாகக் கீழிறங்கி வந்தார். ஒவ்வொரு தளத்திற்குமான படிக்கட்டுகளுக்கான தரிப்பிடத்தில் நின்று நிதானமாகச் சோதனை செய்து பார்த்தார். இவ்விதமாக ஒவ்வொரு தளமாகச் சோதனை செய்து கொண்டு வந்தவர் அந்த வெள்ளையன் குறிப்பிட்ட இரண்டாவது தளத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு வீடற்ற வாசிகளிலொருவனான ஜோர்ஜ் மூலையில் படுத்திருந்தான். ஜோர்ஜ் முன்பு நல்லதொரு வேலையிலிருந்தவன். மனோநிலைப் பாதிப்பினால் வீடற்றவனாகி இவ்விதம் அலைந்து கொண்டிருந்தான். இவருக்கு அவன்மேல ஒருவிதப் பரிதாபமிருந்த காரணத்தினால் அவனை அவ்விதம் இரவுகளில் துயில்வதற்கு அனுமதித்திருந்தார். பாவம் இவனைப் போன்ற பல

வீடற்றவர்களை இந்த டொரோண்டோ மாநகரின் கீழ்நகர்ப் பகுதியில் காண முடியும். நகரிலுள்ள 'மான் ஹோல்' மூடிகளின் கணகணப்பில் இரவுகளை வானமே கூரையாகக் கழிக்கும் இவ்விதமான பல வீடற்றவர்களை ஆங்காங்கே காண்பதென்பது இந்நகரின் அன்றாட இரவுக் காட்சிகளில் சாதாரணமானதொரு நிகழ்வே. இவர்களுக்குப் போர்வைகள் வழங்க, சூடான உணவு வழங்க..எனப் பல இலாப நோக்கற்ற ரீதியில் இயங்கும் சமூக சேவை ஸ்தாபனங்களும் இம்மாநகரில் நிறையவேயிருந்தன.

மனித நடமாட்டம் கண்ணயர்ந்திருந்த அந்த வீடற்றவனை ஆழ்ந்த தூக்கத்திலிருந்து இலேசாக எழுப்பி விட்டது. வந்தது இவர்தானென அறிந்ததும் இலேசாக இஅவரைப் பார்த்தொரு முறுவலைத் தவள விட்டான். ஆசைப்பிள்ளை வந்த வேலையில் கண்ணும் கருத்துமாகச் சில கணங்களைக் கழித்தார். பாதுகாவலராகச் சுற்றுப் புறத்தை ஒரு கணம் நோட்டமிட்டார். அந்த வெள்ளையன் குறிப்பிட்டது மாதிரி எந்தவொரு 'பாம்' இருந்ததற்கான தடயங்களையும் அவரால் அவதானிக்க முடியவில்லை. இவனிடமே சிறிது விசாரணை செய்து பார்த்தாலென்னவென்று பட்டது.

"என் நண்பனே. எவ்வளவு நேரமாக இங்கிருக்கிறாய்..." என்று அவனை விளித்தார்.

படுத்திருந்தவன் 'நான்..?' என்று சைகையில் தன்னைக் காட்டி ஒரு கேள்விக்குறியுடன் அவரைப் பார்த்தான்.

"ஆம். உன்னைத்தான் நண்பனே...எவ்வளவு நேரமாக இங்கேயிருக்கிறாய்? வந்து நீண்ட நேரமாகிவிட்டதா?" என்றார்.

'இரண்டு மணித்தியாலங்கள்' என்பதை விளக்கும் வகையில் அவன் கை விரல்களை விரித்துக் காட்டினான்.

"இரண்டு மணித்தியாங்கள்...?"

'ஆம்'என்பதற்கு அடையாளமாக அவன் தலையை அசைத்தான். "நல்லது நண்பனே! உன் தூக்கத்தினைக் கலைத்தடஹ்ற்கு என்னை மன்னித்துக் கொள்" என்று கூறியபடியே அப்பால் நகர்ந்தார் ஆசைப்பிள்ளை. அந்த நிலையிலும் அந்த வீடற்றவனுக்கு அவரைப் பார்த்து இலேசாகச் சிரிப்பு வந்தது. அவனை அவ்விதம் படுப்பதற்கு அனுமதி கொடுக்காது கலைக்க வேண்டியவர் அவனைப் பார்த்து மன்னிப்புக் கேட்டுச் செல்கின்றாரே என்று எண்ணினானோ?

ஆசைப்பிள்ளைக்கோ அந்த வெள்ளையன் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவரை அவன் எவ்வளவு கேலியாக எண்ணி விட்டான். அவர் தான் எவ்வளவு பெரிய கண்டிப்பான

பாதுகாவல் அதிகாரி. அவரை எவ்வளவு கீழ்த்தரமாக அவதித்து விட்டான் அந்த வெள்ளையன். அவனை மீண்டுமொருமுறை கண்டால் அவனுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேண்டும். இவ்விதமாகப் பொய்யான வதந்திகளைப் பரப்புவது எவ்வளவு தவறான , சட்டவிரோதமான செயலென்பதை அவனெளக்குப் புரிய வைக்க வேண்டும். இதனைக் காவல் துறையினருக்கு அறிவித்தாலே போதும் ..அவ்வளவுதான் அவன் மேல் வழக்குத் தொடர்ந்து உள்ளே தள்ளி விடுவார்கள். இவ்விதமாகப் பல்வேறு எண்ணங்களில் மூழ்கினார் ஆசைப்பிள்ளை. அந்த வீடற்றவன் அங்கே கடந்த இரு மணித்தியாலங்களாகப் படுத்திருக்கின்றான். அந்த வெள்ளையனோ பத்து நிமிடங்களுக்கு முன்னர் தான் 'பாம்' பற்றி அவருக்கு அறிவித்திருந்தான். எனவே அந்த வெள்ளையன் வேண்டுமென்று தான் அவ்விதம் கூறியிருக்க வேண்டும். அவருடன் அவனுக்கு ஒரு விளையாட்டு. ஊரிலை அவர் எவ்வளவு பெரியதொரு 'கிளாக்கர்'. அதுவும் அரசத் திணைக்களக் கிளாக்கர். அவரைப் போய் எவ்வளவு கிள்ளுக்கீரையாக எண்ணி விட்டான் அந்த வெள்ளையன். ஆனால் புலம் புலம் பெயர்ந்த தமிழரான ஆசைப்பிள்ளையார் ஒன்றை மட்டும் மறந்தே விட்டார். உச்சரிப்பு (Accent) கூடச் சில சமயங்களில் எவ்வளவு தூரம் அர்த்தங்களுடன் விளையாட முடியுமென்பதை அவர் மட்டும் உணர்ந்திருந்தால்.... 'பம்'மிற்கும் (Bum) 'பாமி'ற்கு (bomb)மிடையிலுள்ள உச்சரிப்பினை மட்டும் அவர் சரியாக விளங்கியிருந்தால்...அந்த வெள்ளையன் 'பம்'மென்றது அவருக்கு 'பாம்'மாகப் பட்டிருக்குமா? ஆனால் பேச்சு வழக்கில் ஊரில் 'பாம்' என்று கூடக் கூறுவதில்லை. 'அங்கை பம்ஸ் அடிச்சிட்டான் போலைக் கிடக்கிறது' என்று 'பம்' என்று கூறிக் கூறி ஒரு மொழியில் ஒரு சொல்லுக்குப் பல்வேறு அர்த்தங்கள் இருப்பதைக் கூடக் கிளாக்கர் ஆசைப்பிள்ளையால் அறிய முடியாமல் போய் விட்டதை....அறியாமை எனலாமா? இல்லை புலம் பெயர்தலில் பதிவு செய்யப்பட வேண்டிய முக்கியமான அனுபவங்களிலொன்றாகக் குறிப்பிடலாமா? மொழியின் உச்சரிப்புக் கூடப் புலம் பெயர்தலில் பதிவு செய்யப் படவேண்டிய முக்கியமான அனுபவமொன்றினைத தந்து விடுவதற்குக் காரணங்களொன்றாகப் புலன் பெயராத புலம் பெயர்தல் இருந்து விடுகிறதா? குறித்தலில் குறிப்பிடுகளின் அர்த்தங்கள் கலாச்சாரத்திற்கேற்ப மாறுபடுவதன் சாட்சியாக கிளாக்கர் ஆசைப்பிள்ளையின் புலம்பெயர்தலின் அவதாரமான 'பாதுகாவலர்' ஆசைப்பிள்ளையின் அனுபவங்கள் இருந்து விடுகின்றனவா?

நன்றி: மானசரோவர்.காம், திண்ணை, பதிவுகள்.

25. 10. 'காங்ரீட்' வனத்துக் குருவிகள்! - வ.ந.கிரிதரன் -

தற்செயலாகத் தான் அவற்றைக் கவனித்தேன். அதன் பின் தொடர்ந்தும் அவை என் கவனிப்பிற்குள்ளாகின. நான் வேலை செய்யும் உயர்மாடிக் கட்டிடத்தின் அருகாக, இந்தக் காங்ரீட் வனத்தில் தப்பித் தவறி சுவரோரமாக வளர்ந்து நின்ற சிறியதொரு கிளைகளுடன் கூடிய மரம் தான் அவற்றின் வாசஸ்தலம். 'மனிதசாலை'யாக விளங்கும் நகர். எங்கு திரும்பினாலும் காங்ரீட் கூண்டுகள். காங்ரீட் விருட்சங்கள். டொராண்டோ நகரின் மட்டுமல்ல கனடாவின் பொருளாதார மையமே இந்த கிங்யும் பே வீதியும் சங்கமிக்கும் பகுதி தான். இங்கு தான் பிரபல தகவல் தொழில் நுட்பச் சேவை வழங்கும் நிறுவனமொன்றில் தகவல் தொழில் நுட்ப நிபுணர்களிலொருவனாக பணி புரிந்து கொண்டிருக்கின்றேன். ஆரம்பத்தில் நகரத்துப் பரபரப்பில் நான் அந்த மரத்தையோ அதில் வாசம் செய்து கொண்டிருந்த அந்த உயிரினங்களையோ கவனிக்காமலிருந்து விட்டேன். சிறிது சிறிதாக நகரத்தின் பரபரப்பான வாழ்விற்கு இயல்பூக்கம் அடைந்த பின்னர் என் கவனம் சுற்றாடல் மீது அதில் நிகழும் நிகழ்வுகள் மீது திரும்பியது. இயற்கையிலேயே வான், நதி, மழை, சுடர், மதி, புள்..என இழகிவிடும் இயற்கையினை ஆராதிக்கும் மனது என்னுடையது. இதுவரைகாலமும் தற்காலிகமாக மேற்படி பரபரப்பான வாழ்வின் ஆழத்தில் அடைந்து கிடந்து விட்டது. அதனை அந்தச் சிறிய மரமும் அதில் வாசம் செய்து கொண்டிருந்த அந்த அடைக்கலான் குருவிகளும் தான் மீண்டும் புலப்படுத்த உதவியாக இருந்து விட்டன என்று கூறலாம். அவை என் கவனிப்பிற்கு உள்ளானது முதல் எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவற்றை அவதானிப்பதை என் அன்றாட அலுவல்களிலொன்றாக ஆக்கி விட்டேன். அவதானிக்க அவதானிக்க நாளுக்கு நாள் எனக்கு அவற்றின் மீதிருந்த அபிமானமும் அனுதாபமும் அதிகரிக்க ஆரம்பித்து விட்டன.

நாள் முழுவதும் அவை நகரெங்கும் பறந்து திரிவதும், அடிக்கடி அங்கு வந்து ஓய்வெடுப்பதும், கூடிக் கலப்பதும் களிப்பதுமாகவிருந்தன. தனித்திருந்த அந்த மரமும் அதனால் ஒருவித பொறுப்பு கலந்த பெருமிதத்துடனிருப்பதாக எனக்குப் பட்டது. அந்தக் குருவிகளுடன் ஒரு சிறிய சுண்டெலியும் அந்த மரத்தைப் பகிர்ந்து வந்ததை அவதானித்தபொழுது அதிசயித்துப் போனேன். மனித நாகரிகத்தின் உச்சத்தில் மிதந்து கொண்டிருந்த நகரொன்றின் கவனத்தை அதிகம் கவராத மரமொன்று. அதில் இருப்பினைக் கழிக்கும் உயிர்கள் சில. முதன் முதலாக இயற்கை விருட்சங்களில்லாத காங்ரீட் வனத்தை உருவாக்கிய எமது மடமையை மனம் உணர்ந்தது. எத்தனை உயிர்களின் இருப்பினை அழித்துக் கேள்விக்குறியாக்கி விட்டது நமது வளர்ச்சி என்றும் பட்டது. ஒவ்வொரு நாளும் எத்தனைவகையான புள்ளினங்கள் உயர்ந்த காங்ரீட் விருட்சங்களின் கண்ணாடிச் சுவர்களுடன் மோதிக் குற்றுயிரும் குலையுயிருமாகவாழ்வை முடித்துக் கொள்கின்றன. எத்தனை அணில்கள் , ரக்கூன்கள் வாகனங்களில் அடிபட்டு அழிந்து போகின்றன. இவை பற்றியெல்லாம் எந்தவித உணர்வுமில்லாது வான் முட்டும் கோபுரங்கள் கட்டி, பெருஞ்சாலைகள், ஆலைகள் அமைத்து..என்னவிதமான வளர்ச்சியிது!

இளவேனில் கழிந்து சுட்டெரிக்கும் கோடைவந்தது. குருவிகளின் கும்மாளத்திற்கும் குறைவேயில்லை. இன்னும் சிறிது காலம் தான். மாநகரைக் குளிர் கவ்வத் தொடங்கி விடும். இலைகளின் இழப்பில் மரங்களை சோகம் கப்பி விடும். ஆனால்..என் மனத்தை அரித்தது கேள்வியொன்று. இந்தக் குருவிகள் அப்பொழுது என்ன செய்யும்? எங்கே போகும்? தொடர்ந்தும் இங்கு தான் இவ்விதமாகக் கூச்சலும் கும்மாளமுமாகக் களித்துக் கிடப்பினமோ? சூழலை எதிர்த்துச் சுற்றிப் பறந்து திரிவினமோ? என் கவனத்தை அண்மையில் தான் இவை ஈர்த்த போதினும் இது போல் பல வருடங்கள் ஏற்கனவே வந்து போயிருக்கின்றன. இனியும் வந்து போக இருக்கின்றன. இந்நிலையில் என் சிந்தனை எனக்கே சிரிப்பையும் தந்தது. உயிர்கள் எவ்விதமும் தம்மிருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வழி கண்டு விடும். இந்நிலையில் என் கவலை அர்த்தமற்றதாகப் பட்டது.ஆயினும் அவதானிப்பைத் தொடர வேண்டுமென்று முடிவு செய்து கொண்டேன். அதே சமயம் அவற்றின் இருப்பினை, உணர்வினை உணராத மனிதர்கள் மத்தியில் அவை வளையவருவதைப் பார்க்க ஒருவித கவலை கலந்த உணர்வொன்றும் படர்ந்தது. அவற்றின் வாழ்வு எவ்வளவு அற்பமாகவிருக்கின்றது. எம்மைப் போல் அவற்றால் சிந்திக்க முடியாது. நூல்களைப் படிக்க முடியாது. விவாதிக்க முடியாது. இயற்கையை இரசிக்க முடியாது. இருப்பு பற்றிக் கேள்விகளை எழுப்பிட முடியாது. எவ்வளவு அற்பமான அறியாமை மிக்க வாழ்வினை அவை வாழ்கின்றன அவை. இரை தேடச் சுற்றித் திரிவது, வருவது, அம்மரத்தில் கூடிக்களிப்பது, இரவில் தலை கவிழ்த்துத் தூங்குவது..இவை தவிர அவை அறிந்தவைதானெவை? ஒரு கணம் என்னை, என் வாழ்வினை அவற்றின் இருப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தது மனம். வேலைக்குப் போகின்றேன். முடிந்ததும் என் காங்கீரிட் பொந்தில் போயடைகின்றேன். மீண்டும் வருகின்றேன். மீண்டும் போகின்றேன். இது தவிர சில சமயங்களில் வேறு சில செயல்களில் அழிந்து விடுகின்றேன். அவை முடிந்ததும் மீண்டும் பழையபடி வேலை. கூடு. வேலை. கூடு.....பெரிய வித்தியாசம் அதிகம் இல்லை போல் படவே வெட்கித்துப் போனேன் நான். அதே சமயம் எம்மைப் போல் அவை துவம்சம் செய்வதில்லை என்பதையும் உணர்ந்தபொழுது , இந்த விடயத்தில் அவை எம்மை விட உயர்வையானவையாகவும் பட்டது. தம் இருப்பால் இருக்கும் சூழலை எம்மைப் போல் அதிகம் அவை அழிப்பதில்லைதான். இனி இவ்விதம் ஒப்பிட்டு மூக்குடைப்படுவதில்லையென்று முடிவு செய்து கொண்டேன். அதே சமயம் அவையும் நானும் இவ்விடயத்தில் ஓரளவு ஒன்றென்ற தோழமை கலந்ததொரு உணர்வு எழுந்து முன்பை விட இப்பொழுது அவற்றை அதிகமான தோழமை கலந்த அன்புடன் நோக்கத் தொடங்கினேன் நான்.

மெல்ல மெல்ல மாநகரைக் குளிர் கவ்வத் தொடங்கத் தொடங்கியது. இலைகளை விருட்சங்கள் மிக அதிக அளவில் இழக்க ஆரம்பித்தன. அந்தச் சிறிய மரமும் தன் இலைகளை அதிக அளவில் இழந்தது. இலைகளை அது இழக்க இழக்க அதனை நாடி வரும் குருவிகளின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்தது. இலைகளை இழந்த மரம்

காய்ந்து மூளியாகக் கிடந்தது. ஆனால் இப்பொழுதும் ஒரு நான்கு சோடிக் குருவிகள் மட்டும் அந்த மரத்தையே நாடி வந்தன. அவ்றை எண்ண எனக்குப் பரிதாபமாகவிருந்தது. பிழைக்கத் தெரியாத அப்பாவிக் குருவிகளாக அவை எனக்குத் தென்பட்டன. ஆனால் அவையோ என் பரிதாபத்தைப் பற்றியோ அல்லது இயற்கையின் சீற்றத்தைப் பற்றியோவெல்லாம் அதிகமாகத் தங்களை அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. முன்பை விட அதிகமாக ஆனந்தமாகவே அவை இருப்பதாகப் பட்டது. முன்போ அவை அதிக எண்ணிகையிலான குருவிகளுடன் தங்களது இருப்பினை பகிர்ந்து கொள்ளவேண்டிய தேவை அவற்றிற்கிருந்தது. இப்பொழுதோ அந்த மரம் முழுவதுமே அவற்றின் இராச்சியத்திலிருந்ததென்ற ஆனந்தம் போலும். இருந்தாலும் முன்பிருந்த அந்தக் கூச்சலும் கும்மாளமும் இப்பொழுது அறவே இல்லாதுதான் போய் விட்டன. ஒருவிதமான சோகம் கப்பிய நிலை அவற்றின் ஆனந்தத்தையும் மீறித் தென்படத்தான் தெரிந்தது. ஒருவேளை அவை ஆனந்தமாக இருப்பதாகத் தங்களைக் காட்டிக் கொள்ள விழைகின்றனவோ? சிற்சில சமயங்களில் அவற்றை இலைகளுதிர்ந்த நிலையில் காய்ந்து தென்பட்ட மரத்தின் நிறத்திலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதே சிரமமாகவிருந்தது. இயற்கையின் கடுமை அதிகரிக்க அதிகரிக்க அவற்றின் ஆனந்தமும் சிறிது சிறிதாகக் குறைந்து வர ஆரம்பித்தது. அடிக்கடி தலைகளைக் கவிழ்த்துச் சோர்ந்து கிடந்தன. களிப்பின் சாயலை அவற்றின் இருப்பில் தேட வேண்டியிருந்தது.

இப்பொழுதோ மாநகரில் அடிக்கடி பனிமழை பொழியத் தொடங்கி விட்டது. குளிர்க் காற்றின் உக்கிரமும் அதிகரிக்கத் தொடங்கி விட்டது. போதாதற்கு மழை வேறு. இவையெல்லாம் அந்தக் குருவிகளின் பிடிவாதத்தினை மாற்றி விடுமென்று நான் நினைத்திருந்தேன். ஆனால் ஒவ்வொரு முறையும் பனிப்புயல் அடிதோய்ந்து மறு நாள் வேலைக்குச் செல்லும் போது அல்லது வேலை முடிந்து வரும்பொழுது வழக்கம் போல் அந்தக் குருவிகள் அங்கேயே மரத்தோடு மரமாக ஒன்றிக் கிடந்தன. இருப்பிட மாற்றத்தினை அவற்றால் சிந்திக்கவே முடியவில்லை போலும். எது வந்த போதினும் இது தான் நம் இருப்பு என்று திடமாக அவை இருப்பதாக உணர்ந்து நான் வியப்புற்றேன். அதே சமயம் பேசாமல் ஏனைய குருவிகளைப் போல் இடம் மாறித் தப்புவதற்குப் பதிலாக இவ்விதம் கிடந்து இவை இவ்விதம் வருந்தத் தான் வேண்டுமாவென்றும் மனம் நொந்தேன். மனம் நோக மட்டும் தான் என்னால் முடிந்தது. அதனை உணரவேண்டிய அவையோ அது பற்றியெல்லாம் எந்தவிதக் கவலையுமில்லாமல் இருப்பதை உண்டு, பறந்து மீண்டும் அங்கு வந்து உறங்கிக் காலத்தைக் கழித்தன. ஐயோ பாவமென்றிருந்தது. இந்தப் பறவைகளால் இருப்பினை மாற்றுவது முடியாததொரு செயலாக இருக்கின்றது. அதனை இலகுவாக இருப்பினை மாற்றிய என்னால் உணரமுடியாமலிருந்ததில் வியப்பென்னவிருக்க முடியும்?

ஓரிரவு நீண்ட நேரமாக வேலை செய்ய வேண்டியிருந்தது. 'சாவ்ட்வெயர் அப்டேட்ஸ்' ஒவ்வொரு வெப் சேர்வருக்கும் செய்ய வேண்டியிருந்தது. அதற்கு இரவு தான் சரியான

நேரம் .அதிக 'இன்ராநெட்' பாவனையாளர்கள் இருக்க மாட்டார்கள். வேலை முடிந்து வந்து கொண்டிருந்தபொழுது வழக்கத்தைவிட மிக அதிகமாக அன்று மாநகரைப் பனிப்புயல் தாக்கிக் கொண்டிருந்தது. காற்றின் உக்கிரமும் மிகவும் அதிகமாக இருந்தது. பனியோடு பனியாக, காற்றோடு காற்றாக அந்த நான்கு குருவிகள் மட்டும் வழக்கம் போல் மரத்தோடு மரமாக ஒன்றிக் கிடந்தன. அடிக்கடி சிறகுகளை உதறிவிட்டுக் கொண்டிருந்தன. காற்றின் உக்கிரம் அதிகரித்த சில சமயங்களில் கொப்புகள் மாறிச் சமாளித்தன. தூங்க வேண்டிய சமயத்தில் அவற்றின் தூக்கமும் கெட்டுப் போனதை எண்ண எனக்குக் கவலை அரித்தது. இப்பொழுதாவது அருகிலிருந்த கட்டிடமொன்றில் ஏனைய குருவிகள் செய்ததைப் போல் போய் அடையவேண்டியது தானே. இன்னுமேனிந்த இறுமாப்பென்று பட்டது. அன்றிரவு முழுவதும் என் தூக்கம் முழுவதும் அந்தக் குருவிகளின் ஞாபகம் தான். இரவு முழுவதும் பனிப்புயல் மாநகரைத் துவம்சம் செய்து விட்டது. இரண்டடிவரையில் பனிமழை பொழிந்து மாநகரை மூடி விட்டதாக அடுத்த நாட்காலையில் தான் அறிந்தேன். பனிப்புயல் காரனமாக அன்று காலை நான் வேலைக்குப் போக விரும்பவில்லை. இருந்தாலும் அந்தக் குருவிகளின் ஞாபகம் வரவே காரியாலயம் நோக்கிக் கிளம்பினேன். காரியாலயத்தை அண்மித்த என்னை அந்த மரத்தின் நிலை அதிர்ச்சியடைய வைத்தது. மாநகரை மூடிய பனிமழை அந்த மரத்தை மட்டும் சும்மா விட்டு விடுமா? அந்த மரத்தை அதன் அயலை எல்லாம் பனிமழை மூடிவிட்டிருந்தது. அந்தப் வெண்பனியையும் மீறி மரத்தோடு மரமாக, சிலையாகச் சில்லிட்டுக் கிடந்த அந்த நான்கு குருவிகளையும் கண்டு மனது ஒருமுறை அதிர்ந்தது. எதற்காக அவை இவ்விதம் தம்மிருப்பினை முடித்துக் கொண்டன? ஏனைய குருவிகளெல்லாம் தப்பிப் பிழைக்க வழி கண்டு ஓடி விட்ட நிலையில் இவை மட்டும் எதற்காக இவ்விதமானதொரு முடிவைத் தேட வேண்டும்? சூழல் மாற்றத்தைத் தாங்கும் மன உறுதி, ஆற்றல் இல்லாத காரணத்தினாலா? அல்லது இதுவரை வாழ்ந்த, களித்த அந்த வீட்டினை இழக்க முடியாத துயராலா?

நன்றி: பதிவுகள், திண்ணை

26. வீடு வாடகைக்கு - குமரவேலன் (சென்னை) -

சூரி தாஸைத் தற்செயலாக பனகல் பார்க் அருகில் பார்த்ததும், அவன் மனம் சந்தோஷத்தால் துள்ளியது. ஸ்பெஷல் டிக்கெட் வாங்காமல், க்யூவில் நிற்காமல் கும்பிடப்போன தெய்வம் அவனருகே வந்து தரிசனம் தந்துவிட்டது போலிருந்தது அவனுக்கு.

"தாஸ், உன்னைத்தான் பார்க்கணும்னு நினைச்சேன்...நல்லவேளை, நீயே கண்ணிலே பட்டுட்டே..என் மச்சான் ராமபத்ரன் படப்பை பக்கத்திலே வீடு கட்டினது உனக்குத் தெரியுமில்லயா?.."

"தெரியாமே என்ன? அவர்தான் குடும்பத்தோட அங்கேயே குடி போயிட்டதாச் சொன்னீங்களே...இப்போ அதுலேஎன்ன பிரச்னை?"

"அவனை இப்போ டெல்லிக்கு மாத்திட்டாங்க.சொந்த வீட்டைக் காலி பண்ணிட்டு குடும்பத்தோடக் கிளம்பி டெல்லிக்கே போயிட்டான். வீட்டுக்கு யாராவது நல்ல பார்ட்டியாப் பார்த்துக் குடிவைக்கிற பொறுப்பை என் தலையிலே சுமத்திட்டான். இந்த விஷயத்திலே உன்னைதான் முழுக்கமுழுக்க நம்பி இருக்கேன்.
என்ன சொல்றே?'

"என்கிட்டே சொல்லிட்டே இல்லே ..கவலையெ விடு..நான் பாத்துக்கறேன்."--உற்சாகத்துடன் அவன் அளித்த உத்திரவாதம் சூரிக்குத் தெம்பாயிருந்தது.

தாஸ¤க்கோ கணிசமாகப் பணம் பார்க்க ஒரு சான்ஸ் கிடைத்து விட்ட சந்தோஷம்!

ஏதோ சின்னக் கம்பனியில் ப்யூன் வேலை அவனுக்கு. வயதான பெற்றோர்கள்; நிரந்தர நோயாளியாய் மனைவி: கல்யாண வயதில் படிப்பு ஏறாமல் வெட்டிப் பொழுது போக்கும் பெண்; மூளை வளர்ச்சியில்லாத பத்து வயதுப் பையன்; இவர்கள் அடங்க¢யது அவன் குடும்பம்.

ஓயாத கவலைகள், பிரச்னைகள்,பற்றாக்குறை இவை காரணமாக எப்போதும் அவனுக்குத் தேவை பணம்தான். வருமானத்தைப் பல வழிகளிலும் பெருக்கிக் கொள்ள, அவன் எந்த வேலையையும் செய்யத் தயார். சிக்கலான விஷயங்களைக்கூடதகுந்த ஆட்களைப் பிடித்து அனுகூலமாக முடித்துத் தருவதில் அவன் படே கில்லாடி. ஆனால், அவன் கேட்கும் பணத்தை மட்டும் தயங்காமல் தந்து விட வேண்டும்.

அடுத்த நாள் காலையிலே தாஸ் சூரியிடமிருந்து வீட்டு சாவியை வாங்கிக்கொண்டான்.

இரண்டு நாட்கள் விடுமுறைக்குப்பின், சூரியை வீட்டில் சந்தித்தான்.

'நாக்பூர்லேருந்து மாத்தாலாயி வந்திருக்கிராரு ஒரு ஆபீசரு, கார்த்திக் பயலோட சகலனாம்..ஊடு வேணும் அர்ஜென்டான்னாரேன்னு காமிச்சா.'

"பிடிக்க்கலைன்னு சொல்லிட்டாரா?;"

" ஆமா..ஏதோ பாலைவனத்திலே இருக்காப்பிலே தனியா இருக்காம். ஏதாவது அவசரம்னு பக்கத்து வீட்லே உதவி கேக்கணும்னாக் கூட , ஆட்டோவிலெதான் போகணுமாம். சும்மா சதாய்க்கிறாரு..உடு..நமக்கு ஆள் கிடைக்காமே போயிடாது.. அடுத்த வாரம் திரும்பவும் பாக்கறேன்..சாவியை நானே வச்சுக்கவா, குடுத்துடவா?"

"வாடகைக்கு ஆள் கிடைக்கிற வரை சாவி உன்கிட்டேயே இருக்கட்டும். வீணா அதுக்காக நீ அலைய வேண்டாம்"

அடுத்த வாரம் தாஸ் வந்தான். பலன் என்னாவோ பூஜ்யம்தான்.

அதற்கடுத்த வாரமும் வந்து ஏமாற்றத்துடன் உதட்டைப் பிதுக்கினான். நாலைந்து வாரங்கள் இதே கதை தொடர்ந்தது.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம் சொல்வான்.

"வயசான அப்பா அம்மா இருக்காங்க; துணைக்கு அக்கம் பக்கத்திலே யாருமே இல்லை"ங்கறாரு ஒருத்தர்.

"கடை கண்னி£யேல்லாம் ரொம்பத் தொலைவாயிருக்கு"ன்னு புலம்பராரு இன்னொருத்தர். "பஸ் ஸ்டாப்புக்கே எக்கச்சக்க தூரம் நடக்க வேண்டீருக்கு"ன்னு ஒரு பார்ட்டி.

"சின்னப்பசங்களுக்கு பக்கத்துலே ஸ்கூலே இல்லையே" அப்படீன்னு ஒரு ஆள்;

"தண்ணி வசதி போதாதாம். கிணத்துத் தண்ணி கருப்பா இருக்காம். வியாதி வந்துடுமாம்" ஒரு பெரிசு பயம் காட்டுது.

"இவனுங்களோட 'டீல்' பண்றதே பெரியா பேஜாரு, சூரி சார். மைசூர் மகாராஜா அரண்மனையைக் காட்டினாக்கூட எதாவது சொட்டை சொள்ளைன்னு குத்தம் சொல்வானுங்க போல இருக்கு" என்று அலுப்புடன் சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டான்.

பத்து நாட்கள் பறந்தோடின. தாஸ் வரவே இல்லை. அவனிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை; தன்னிடம் இருந்த மாற்றுச்சாவியை எடுத்துக்கொண்டு ஸ்கூட்டரில் ராமபத்ரன் வீட்டைப் பார்த்துவரச் சென்றான் சூரி.

வீட்டின் மெயின் கேட் பூட்டப்படாமல் திற்ந்திருந்ததைப் பார்த்ததும் அவனுக்குத் திக்கென்று இருந்தது.
வீட்டின் கதவு உள் பக்கமாகத் தாழிடப்பட்டிருந்தத்து அவன் திகைப்பை மேலும் அதிகமாக்கியது. 'ஒரு வேளை தாஸ் வீட்டைக்காண்பிக்க யாரையாவது அழைத்து வந்திருக்கலாமோ' என்ற சந்தேகமும் எழுந்தது.

கதவை பலமாகத் தட்டினான். லேசாகக் கதவு திறந்தது.

குடி போதையிலிருந்த ஒரு முரட்டு மனிதனின் மீசை முகம் சந்தேகக் கண்களுடன் அவனைத் துழாவியவாறு,"யார்ரா அது?" என்று அதட்டலாகக் கேட்டதும் சூரிக்கு உடலெல்லாம் வியர்த்து நடுங்க ஆரம்பித்தது.

"நீங்க யாரு?"-- பயத்துடன் கம்மிய குரலில் சூரி கேட்டான்.

"நான் யாருங்கறது அப்பாலே தெரியும். மொதெல்லெ நீ யாருன்னு சொல்டாங்கறேனே, பிரியலியா ஒனக்கு?" கோபத்தால் முரடனின் மீசை துடித்தது.

கதவின் இடைவெளி வழியே சூரி பார்வையை ஓட்டியபோது அவன் கண்ட காட்சி அவனை மேலும் திடுக்கிட வைத்தது.

கட்டியிருந்த வேஷ்டி கலைந்தது தெரியாமல் கருத்த தடிமனான ஆள் ஒருவன் பயங்கர குறட்டை சத்தத்துடன் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். காலி மது பாட்டில்கள் தரையில் உருண்டிருந்தன. சிற்றுண்டிப் பொட்டல மிச்சங்கள்ஆங்காங்கே தரையை அசுத்தப்படுத்திருந்தன. மிதித்து நசுக்கப்பட்ட சிகரெட் துண்டங்கள் தரையில் கருப்பு ஓவியங்களை வரைந்திருந்தன. அரைகுறை ஆடைகளுடனிருந்த இரண்டு 'பலான' இளம்பெண்கள் அன்னியக்குரலைக் கேட்டதும் அலறிடித்துக்கொண்டு ஆடைகளைச் சரி செய்துகொண்டார்கள்.

சூரிக்கு உடலும் மனமும் பதறியது. இயற்கையாகவே அவன் பயந்த சுபாவம் கொண்டவன். கூச்சல், சண்டை, சச்சரவு என்றாலே பத்திரமான தூரத்தில் ஒதுங்கி

நிற்பவன்.

"ஐயையோ! ஒதுக்குப்புறமா, தனியா இருக்கிற இந்த வீட்டிலே ஏதேதோ தப்பான காரியங்கள் நடக்கறாப்பிலே இருக்கே.எப்படியாவது இதை உடனடியாத் தடுக்கணுமே. ஆனா ஒண்டியா வந்து மாட்டிக்கிட்டோமே, இந்தத் தடிப்பசங்களை எப்படி விரட்டி அடிக்கறது?" - மனதில் எண்ணங்கள் அலைபாய செய்வதறியாது குழம்பித் தவித்தான் சூரி.

ராமபத்ரன் தீவிர தெய்வ பக்தி கொண்டவன்: பூஜை, புனஸ்காரங்கள் என்று ஆசார நியமங்களுடன் வீட்டைக் கோவிலாக்கிப் புனிதமாகப் பாதுகாத்தவன்; அப்படிப்பட்ட வீட்டைத் தெருவில் போகும் கண்ட கழிசடைகளெல்லாம் அசிங்கப்படுத்துவதை பார்த்துக்கொண்டு சும்மா இருப்பது மன்னிக்க முடியாத குற்றம் இல்லையா?

"ஏண்டா, கேக்கறேனில்லை? வாயிலே கொழுக்கட்டை வச்சிருக்கியா? யாரு நீ? ஒனக்கு இங்கே என்ன வேலை?"

சூரிக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. லேசாகத் தைரியமும் தலை தூக்கியது. நிலமையைச் சமாளிக்க 'தில்'வேண்டுமே.

"என்னைப் பார்த்தா நான் கேக்க வேண்டிய கேள்வியக் கேக்கறே? நாந்தான்யா இந்த வீட்டு ஓனர்; உங்களுக்கு யார் இந்த வீட்டு சாவியைக் குடுத்தாங்க?:" கடுமையைக் குரலில் வரவழைத்துக்கொண்டு கேட்டாலும், உள்ளூர மனதில் கிலிதான்!

"தோ பாரு! இந்தக் கேள்வியெல்லாம் இங்கே வேணாம். யார் கிட்டே சாவி குடுத்தியோ அவங்க கிட்டே போயிக் கேளு. ஆனா ஒண்ணு மட்டும் சொல்லிடறேன்.. நாங்க சும்மா ஓசியிலே வந்து இங்கே உக்காரலை. ஒரு நாளைக்கு முன்னூறு ரூபா வாடகை தந்துட்டு வந்திருக்கோம் தெரிஞ்சுக்கோ."

"உங்களை இனிமேல் ஒரு நிமிஷம் கூடத் தங்க விடமாட்டேன். மரியாதையாய்க் காலி பண்ணிட்டா, உங்களுக்கு நல்லது"
"பண்ணல்லேன்னா?"
"இந்த ஏரியா போலீஸ் கமிஷனர் சாரங்கன் எங்க கஸின் தான். அவருக்குப் போன் பண்ணி போலீசை வரவழைப்பேன்.அப்புறம் என்ன ஆகும்னு உங்களுக்கே தெரியும்"

மீசை ஒரு நொடி ஆடிப்போனான்.
அடுத்த கணமே சமாளித்துக் கொண்டு உள்ளே தூங்கிக்கொண்டிருந்தவனைப் பார்த்து ஆவேசத்துடன் கத்தினான்.

"டே. முத்து! இங்கே டமாஸைப் பார்றா...இந்த ஒல்லிப் பாப்பான் நமக்குப் பூச்சாண்டி காமிக்கிறாண்டா! நம்மளைப்பத்தி இவனுக்குத்தெரியாது, கொஞசம் விலாவாரியா ஐயாவுக்குச் சொல்லேண்டா இந்த கருப்பண்ணணைப் பத்தி. பாத்தாலே பரிதாபமா இருக்கு. வீணா அடிபட்டு செத்துத் தொலைக்கப் போறான்."

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த முத்துவின் காதில் இந்தப் பேச்செல்லாம் ஏறவில்லை; கருப்பண்ணன் ஏமாற்றத்துடன் சூரியின் பக்கம் திரும்பினான்.

"ஏய், இப்ப என்னாங்கறே! நாளைக்கு ராத்திரி வரையிலெ தங்கிட்டுத்தான் வீட்டை காலி பண்ணுவோம். உசிரு மேலே ஆசை இருந்த்திச்சுன்னா எதையும் கண்டுக்காத மாதிரி உடனே இங்கிருந்து ஓடிப்போயிடு...போலீசுக்கா போவே? மவனே, ,உன்னை கைகாலை ஒடிச்சு இந்த வீட்டுப் பின்னாடியே சமாதி வச்சுடுவேன்.யார் கிட்டே விளையாடிப் பாக்கிறே?. என் தங்கச்சி கிட்டே வாலாட்டின டீக்கடைத் தருமராசனை ஒரே வெட்டுலே கொன்னு அவன் தலையை எடுத்து கிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனவன்டா நானு..பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது, தெரியுமா?போலீஸ¤ன்ன பயந்துடுவங்கன்னு பாத்தியா? போலீஸ்தாண்டா எங்கபேரைக் கேட்டாப் பயப்படும் இன்னிக்குப் போதாத காலம் உனக்கு.. வசமா என்கிட்டே வந்து மாட்டினே,"-- ஆக்ரோஷத்துடன் வெறி பிடித்தவனைப்போல் கத்திக்கொண்டே இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து சுழற்றியவாறு சூரியை நோக்கிப் பாய வந்தான்,

சூரி வெலவெலத்துப்போய் பின்னங்கால் பிடரியில் பட வெளியில் ஓட ஆரம்பித்தான். .உடலெல்லாம் குப்பென்று வியர்த்தது. உயிரொடு இருக்கப்போவது இன்னும் சில நிமிஷங்கள்தான் என்ற ம்ரணபயம் ஆட்டிப்படைக்க, தன்னைக் காப்பற்றுமாறு இஷ்ட தெய்வங்களை எல்லாம் மனம் கசிந்து பிரார்த்தித்துக்கொண்டான். அந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில்தான் அவன் கால்கள் வலுவை இழந்துவிட்டவை போல ஓட மறுத்துச் சண்டித்தனம் செய்தன. குழப்பமான மனநிலையின் காரணமாகவும் கவனம் தடுமாறியதாலும் கால்கள் படியில் தடுக்கிப் 'பொத்'தென்று பலத்த சப்தத்துடன் கீழே விழுந்தான்.

"ஐயோ! என்னைக்கொல்ல வரானே, படுபாவி! யாராவது காப்பாத்துங்களேன்,கோடி புண்ணீயம் உண்டு.,ப்ளீஸ்," என்று ஓலமிட்டு உரக்க அழத் தொடங்கினான்.

"அடேடே! என்னங்க இது, எதுக்கோ பயந்துகிட்டு சின்னக்குழந்தை மாதிரி அழறீங்க? ஏதாவது கெட்ட சொப்பனம் கண்டீங்களா? எழுந்து சாமி படத்தைப் பார்த்துட்டு, பல் தேச்சுட்டு விபூதி வச்சிகிட்டு வாங்க, சூடாக் காபி தரேன்." என்று மனைவி எழுப்பியபோதுதான் சூரிக்கு போன உயிர் திரும்பி வந்தாற்போல் இருந்தது..தான் கண்ட கனவை அவளுக்கு விவரித்துச் சொன்னான்.

அவள் கலகலவென்று சிரித்துக்கொண்டே, "இதுக்குத்தான் கண்ட கண்ட கிரைம் நாவல்களையெல்லாம்
ராத்திரி கண் முழிச்சுப் படிக்கக் கூடாதுன்னு சொல்றது. அதனாலேதான் கற்பனை இப்படி கண்டபடி தறி கெட்டு ஒடி, கனவா வருது, புரியுதில்லை?" என்றாள்..

அடுத்த நாள் காலையிலேயே தாஸ் சூரிக்கு முன் பிரசன்னமானான்.

"சார், ஒரு வழியா விசயம் சக்ஸஸ்..குடக்கூலிக்குப் பிரமாதமான பார்ட்டி கிடைச்சாச்சு. குடும்பத்தோட வீட்டைப்பாத்துட்டு ஓகே சொல்லிட்டாரு..இப்போ திருப்திதானே?' --உற்சாகத் தொனியில் விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னான்.

சூரிக்கு ஒரு புறம் மனம் சந்தோஷப்பட்டாலும், மற்றொரு பக்கம் ஏதோ இனம் தெரியாத பயமும் தோன்றியது.
முந்திய இரவு கனவின் நினைவு லேசாக மனசை நெருடிக் கொண்டிருந்தது. தாஸை நம்பி ஏதாவது வம்பில் மாட்டிக்கொண்டு விடுவொமா என்ற கவலை அவனுள் தலை தூக்கியது.

"நல்லா வீட்டைச் சுத்திப் பாத்தாங்களா? ஏரியாவெல்லாம் பிடிச்சிருக்காமா? வீடு தனியா ஒதுக்குப்புறமா இருக்குன்னு பயப்படல்லியா? கடை கண்ணி யெல்லாம் தூரத்திலேதான் இருக்குன்னு தெரியுமில்லையா அவங்களுக்கு?" தனக்குத் தோன்றிய கேள்விகளையும் சந்தேகங்களையும் அடுக்கிக்கொண்டே போனான் சூரி.

"என்ன சூரி ஸார்? இவ்வளவு பழகியும் என் வார்த்தையை நம்ப மாட்டேங்கரீங்க§ளே? என்கிட்டே வேலையை ஒப்படைச்சிருக்கறப்போ, நான் அப்படிப் பொறுப்பில்லாமே நடந்துப்பேனா? நான்தான் விவரமாச் சொல்றேனே...குடி வரப்போற ஆளு மிலிடரிலே பெரிய ஆபீஸரா இருந்து ரிடையர் ஆனவராம். காடு மலை எல்லைப் புறமெல்லம் செர்விஸ் பண்ணவராம். ரெண்டு பசங்க வெளிநாட்டுலே இருக்காங்களாம். சென்னை ரொம்பப் பிடிச்சுட்டதாம். இங்கேயே செட்டில் ஆயிடலாம்னு வந்திருக்காங்க.. ஜன சந்தடி, நெரிசல், சத்தம் இல்லாத அமைதியான ஏரியாவிலே வீடு தேடிகிட்டு இருந்தாங்களாம். நம்ம வீடு அவர் எதிர் பார்த்த மாதிரி கச்சிதமாஅமைஞ்சு போச்சாம். சொந்தக் கார் இருக்கறதினாலே தூரம் அவங்களுக்குப் பிரச்னை இல்லைன்னு அடிச்சு சொல்லிட்டாங்க....ரொம்பத் திருப்தின்னு கிட்டத்தட்ட நூறு தடவை சொல்லிட்டார்னா பர்த்துக்குங்க.. வெள்ளிக்கிழமை நல்ல நாளாம்..அன்னிக்கு உங்களைப் பாத்து அட்வன்ஸ் குடுத்துட்டு சாவி வாங்கி¢கிட்டுப்   போகப்போறாராம்"

சூரிக்கு தாஸின் வார்த்தைகளில் அப்போதுதான் முழு நம்பிக்கை பிறந்தது. கமிஷன் தொகையைச் சற்றுத் தாராளமாகக் கொடுத்து தாஸை நன்றியுணர்ச்சியுடன் சந்தோஷமாக

அனுப்பி வைத்தான்.

யூன் 2004 இதழ் 54 -

E-mail: thambudu@epatra.com

27. பிற்பகல் விளையும்...!? - ஆல்பர்ட் (விஸ்கான்சின், அமெரிக்கா) -

Man குரு கெளம்பு....இப்ப பொறப்பட்டாத்தான் இருட்டறதுக்குள்ள டெட்ராய்ட் போய்ச் சேர முடியும், என்றவாறு வாசு வந்தான். என்னடா, என்னாச்சு? குரு பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருக்கவே, மூன்று நாள் ஜாலியா இருந்துட்டு நாளைக்கு வேலைக்குப் போகனுமேன்னு கவலையா இருக்கா? என்று மீண்டும் கேட்டான் வாசு. ம்ம்...ஜலாலும் டேவிட்டும் ரெடியாயிட்டாங்களா? என்றவாறே குரு படுக்கையை விட்டு எழுந்தான்.

நாங்கள்லாம் ரெடி.... நீ என்ன தூங்கீட்டியா? கேட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்தான் ஜலால்.

இதோ ஒரு நொடியில ரெடி.. நீங்க ரூமை செக் அவுட் பண்ணுங்க நானும் வாசுவும் வந்துடுறோம் என்ற குரு, பாத் ரூமில் புகுந்து கொண்டான்.

நண்பர்களிடமிருந்து விடுபட்டு குளியலறைக் கதவைச் சாத்திக் கொண்ட குருவால் தன் மனக் கதவைச் சாத்தமுடியவில்லை.

"ஒருவேளை நாம அந்தப்பெரியவர் கேட்டதுக்கு சரின்னு சொல்லீருந்தா அந்த அநியாயம் நடந்திருக்காதோ " அந்த குளுகுளு சூழலிலும் கூட 'குப்' பென வியர்த்தது குருவுக்கு. அவனின் எண்ண ஓட்டம் பின்னோக்கித் தாவியது. நயாகரா அருவியை அங்குல அங்குலமாக ரசித்துவிட்டு, 'போட் ரைடு' போவதற்காக அந்த நீண்டு வளைந்து நின்ற வரிசையில் குரு தன் நண்பர்களோடு நின்றிருந்தபோது தான் அந்த பெரியவரைச் சந்திக்க நேரிட்டது. பெரியவர் ஒருவர் ஒரு சிறுவனையும் சிறுமியையும் கையில் பிடித்துக் கொண்டு வரிசையில் இருந்தவர்களிடம் ஏதோ கேட்பதும் அவர்கள் ஏதோ சொல்வதும் அவர் அடுத்தடுத்தவர்களாக கேட்டு நகர்ந்து கொண்டிருந்தார்.

அவரைப் பற்றி இவனருகில் நின்று கொண்டிருந்த சிலர் இந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசி சிரித்துக் கொண்டிருந்தனர். இந்தியாவுல தான் பிச்சைக்காரங்க தொல்லைன்னா, இங்க கூடவா? என்றான் ஒருவன். அட இவுங்களும் இந்தியா தான், விமானம் ஏறி வந்து இப்ப இங்கயே பிச்சை எடுக்க ஆரம்பிச்சாச்சா? என்று இன்னொருவன் சொல்ல ஒரு கூட்டம் கொல்லென சிரித்தது. அந்தப் பெரியவரோ, "நீங்க தமிழா?.....ஸார் நீங்க தமிழா?" என சற்றும் மனம் தளராமல் ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே குருவிடம் வந்தார்.

"தமிழ் தான் நான், என்ன விஷயம் பெரியவரே?" தமிழ் தான் என்று குரு சொன்ன மாத்திரத்தில், பெரியவரின் கண்களிலிருந்து மளமளவென கண்ணீர் உருண்டு சிதறியது.

"என்ன பெரியவரே ஏன் அழறீங்க?"

"தம்பி ஒரு நிமிசம் ஒங்ககிட்ட தனியா பேசனும். இதோ இப்படி வர்றீங்களா? "அவருடைய தோற்றம் பரிதாபமாக இருந்திருக்கவேண்டும்.

சரி வாங்க, "நீங்க மூவ் பண்ணீட்டே இருங்க. நா வந்து ஜாயின் பண்ணிக்கிறேன், "நண்பர்களிடம் சொல்லிவிட்டு எதிரே இருந்த பூங்காவை நோக்கி நடந்தான்.

"ம்..இப்ப சொல்லுங்க பெரியவரே...!?"

மீண்டும் மளமளவென கண்ணீர் கசிந்து, சிதறியது.

"அழாதீங்க... ஒங்க ப்ரச்னை என்ன?"

திடீரென்று குருவின் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டு , "தம்பி இந்தக் கைய ஒங்க காலா நெனச்சு கும்புட்டுக் கேக்கறேன், என்று சொல்லி மீண்டும் குலுங்கிக்குலுங்கி அழத் துவங்கிவிட்டார். வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. பெரியவரின் அருகே நின்றிருந்த குழந்தைகள் எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்னோட அப்பா மாதிரி இருக்கீங்க. சின்னப் பையனான என்னிடம் பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. என்னன்னு சொல்லுங்க. என்னால எதும் உதவமுடியும்னா செய்றேன்."

"தம்பி, எப்படி சொல்றது? என்ன சொல்றது? புரியல. திருச்சில இருந்து தஞ்சாவூர் போகனும் பஸ் சுக்கு காசு தரமுடியுமான்னு கேக்கலாம். அமெரிக்காவுல இருந்து தஞ்சாவூர் போகனும் பிளேன்ல டிக்கட் எடுத்துத் தர முடியுமான்னு கேக்க முடியாது. என் மகன்னு சொல்லிக்கவே வெக்கப்படறேன் தம்பி. என்னப் பிரிஞ்சு இருக்க முடியல, நாங்க வரணும்னா நாலு பேர் செலவாகும். நீங்க ஒருத்தர் தான வாங்கன்னு கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதினான். எம் பொண்டாட்டி போய்ச் சேர்ந்துட்டா, நாந்தான் ஒத்தக் கட்டையா பென்சன் பணத்துல காலத்த ஓட்டிக்கிட்டு இருந்தேன். எனக்கும் பேரப்புள்ளைகளை பாக்கலாம் போல் ஒரு எண்ணம் வந்துச்சு. இங்க வந்தேன். இங்க வந்தப்புறம் தான் தெரிஞ்சுகிட்டேன். பாசம் ஏதும் இல்ல, எல்லாம் பசப்பல் தான்னு. என்னைய ஜெயில்ல வச்ச மாதிரி வச்சு இந்தப் புள்ளங்களுக்கு காவக்காரனாக்கி விட்டான். மருமக பேச்சும் ஏச்சும் என்னால தாங்க முடியல. பத்தாதுக்கு மகனும் சேந்துகிட்டு கை நீட்டி அடிக்கக் கூட ஆரம்பிச்சுட்டான். என்னை ஊருக்கு அனுப்பி வச்சிடுப்பான்னு கூட கேட்டுப் பாத்துட்டேன். ஊரா? இங்கேயே கெடந்து சாவுங்கிறான் பெத்த மகன். இப்ப ஹெலிகாப்டர் ரைடு போயிட்டு வர்றோம் புள்ளங்களை பத்திரமா பாத்துக்கன்னு

சொல்லீட்டுப் போய் இருக்காங்க", என்று சொல்லி நிறுத்தினார் பெரியவர்.

"கேக்க கஷ்டமாத்தான் இருக்குங்க. இதுல நான் என்ன செய்யணும்னு எதிர்பார்க்குறீங்க?"

"தம்பி எனக்கு பணம் காசு உதவி வேணாம். சமையல் செய்யத் தெரியும். ஒங்களுக்கும் நண்பர்களுக்கும் சமைச்சுட்டு, எதோ ஒரு மூலைய காட்டினா மொடங்கிக்கிருவேன். வேற எதுவும் வேணாம். ஊர்ல இருந்து பணத்துக்கு ஏற்பாடு பண்றவரைக்கும்தான். ஒங்களுக்கு எக்காரணம் கொண்டும் பாரமாயிருக்கமாட்டேன்", என்றார் சிறு குழந்தை போல.

புராஜெக்ட் அடுத்த மாசம் முடியப்போகுது. தானே பெஞ்சில் உக்காரப் போகிறோமா? நிக்கப் போகிறோமா? என்ற சிந்தனை அப்போது குருவுக்கு எழுந்தது.

"தம்பி யோசிக்கிறதப் பாத்தா....!?"

"இல்ல...எனக்கு இப்ப இருக்கிற வேலை அடுத்த மாசத்தோட முடியுது. அப்புறம் நானே எங்க போவேன்னு எனக்கே தெரியாது. அதான் யோசனை பண்ணிட்டு இருக்கேன்."

"தம்பி ஒங்க ப்ரெண்ட்ஸ்க கிட்டயாவது சொல்லி ஒரு ஏற்பாடு செஞ்சீங்கன்னா கோடிப் புண்ணியம் ஒங்களுக்கு...!" என்று சொல்லி குருவை இரட்சகன் போல பெரியவர் ஏறிட்டார்.

"ஒங்க போன் நம்பரை கொடுங்க ஏதாவது ஏற்பாடு பண்ண முயற்சிக்கிறேன்."

"தம்பி ஒங்கள வற்புறுத்திக் கேட்க எனக்கு கொஞ்சம் கூட உரிமை இல்லை. இங்க எனக்கு வேற வழியும் தெரியல. இல்லன்னா சாகறது தான் ஒரே வழியா தெரியுது."

"நா டிரை பண்றேன். ஆனா இப்ப உறுதியா ஒங்ககிட்ட ஏதும் சொல்ல முடியாது. மகனுக்காக இருக்கிறவரை கொஞ்சம் அனுசரிச்சுப் போங்க பெரியவரே. தூரத்தில் நண்பர்கள் சைகை செய்யவே அப்ப நா வர்றேன். போன் பண்றேன். கவலப் படாதீங்க."

"இவ்வளவு பேர்ல நீங்க ஒருத்தராவது மனிதாபிமானத்தோடு வந்து கேட்டீங்களே. ரெம்ப நன்றி தம்பி, என்று தலைக்கு மேல் கையெடுத்துக் கும்பிட்டார் பெரியவர்."

*** *** ***

வானத்திலிருந்து பூமிக்குத் தாவிக் குதிக்கிற நயாகரா நதியழகை கீழிருந்து நனைந்து கொண்டே பார்க்கக் கண்கோடி வேண்டும். அமெரிக்கப் பகுதி, குதிரைக் குளம்பு பகுதி, (குதிரைக் கால் போன்றஅமைப்பு) கனடா பகுதி என மூன்று பிரிவும் ஒரே அருவியாக

அணி வகுத்துக் கீழிறங்குகிற அற்புதத்தில் மனதைப் பறிகொடுத்து இருந்தான் குரு. படகுச் சவாரி முடிந்து கூட்டணிக் கடையில் பீட்ஸா சாப்பிட்டு , மெழுகு பொம்மை கண்காட்சி கூடத்துக்குள் சென்று விட்டு வெளியே வந்தபோது தான் அந்தக் கொடூரம் அரங்கேறிப் போயிருந்தது. வாகனங்கள் நீண்ட வரிசையில் ஸ்தம்பித்து நிற்க, சற்று தூரத்தில் ஒரு கூட்டம் மொய்த்துக் கொண்டிருப்பதையும், காவலர்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருப்பதையும் குரு கவனித்தான். கும்பலாய் இருந்த இடத்தை அடைந்து பார்த்த குருவிற்கு இருதய இயக்கமே நின்றுவிட்டதுபோலானது.

அங்கே... அந்தப் பெரியவர்... இரத்தச் சகதியில் இடுப்புக்கு கீழ் கூழாகியிருக்க முகத்தில் அங்கங்கே இரத்தப் பொட்டுக்கள் உறைந்து ... பார்க்கச் சகிக்காமல் உடம்பைக் குலுக்கி நிமிர்ந்தகுரு, பெரியவருடன் வந்த இரு குழந்தைகள் தட்டுப் பட்டனர். அருகில் சுடிதாரினி, கொஞ்சம் தள்ளி காவலரிடம் பேசிக் கொண்டிருந்தது அந்தப் பெரியவரின் மகனாக இருக்க வேண்டும். பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுடிதாரினி பெரியவரின் மகனை காவலரிடமிருந்து பிரித்து, குரு இருந்த பக்கம் ஒதுங்கினார்கள்.

"எங்க ஔறிக் கொட்டிருவீங்களோன்னு பயமாயிருச்சு. நல்ல வேளை... நான் சொன்ன மாதிரி சொல்லீட்டிங்க. அப்பாகிப்பான்னு சொல்லி பாடிய நாம வாங்கி, கிழத்தைப் புதைக்கவே ஆயிரக்கணக்குல டாலர் செலவு பண்ணனும். நயாகரா வந்த எடத்துல தற்செயலா சந்திச்சோம், எங்க நாட்டுக்காரர் என்பதைத் தவிர வேற ஏதும் தெரியாதுன்னு சொல்லீட்டிங்க; நாம தப்பிச்சோம். சரி...சரி நாம இந்த எடத்தை விட்டு மொதல்ல கௌம்புவோம்."

குருவுக்குத் திக்கென்று இருந்தது. அதே இடத்தில் அவர்களை அடித்துப் பந்தாட வேண்டும் போலிருந்தது. சே... என்ன மனிதர்கள்? என்ன வாழ்க்கை? பெத்த அப்பாவை யாருன்னே தெரியலைன்னு எப்படி மனம் கூசாமல் சொல்ல முடியுது? சில மணித்துளிகளுக்கு முன் பேசிய ஒரு உயிர்ப் பறவை சிதைந்து கிடப்பதைப் பார்த்ததுமே, என் உள் மனம் பெருங்குரல் எடுத்துக் கதறுகிறதே, தோளைத் தொட்டிலாக்கி, நெஞ்சைப் பஞ்சு மெத்தையாக்கி, எறும்பு கடித்தால் பதைபதைத்து, எத்தனைஎத்தனை இரவுத் தூக்கம் தொலைத்து இந்த வாலிபத்தை வளர்த்தெடுத்த அன்பான ஒரு தந்தையை எப்படி அனாதையாக விசிறிவிட்டுப் போக முடிகிறது? தொண்டை அடைக்காம, துக்கமில்லாம எப்படி? எப்படி இவர்களால் பாறாங்கல்லாய் இருக்க முடிகிறது?

"டேய்...பாத்ரூம்ல என்னடா பண்றே..?" கதவு தடதடவென தட்டப்பட குருவின் நினைவிழை அறுந்தது.

*** *** ***

ஒருமணி நேரத்துக்கு மேல் வண்டியை ஓட்டிய ஜலால், "டேய்...என்னாச்சு ஒரு மைல் நீளத்துக்கு வண்டி டிராபிக் ஜாமாகி நிக்கிது,"என்றான்.

"சரிதான்... எப்ப கிளியராகி, நாம எப்ப போய்ச் சேர்றது? இப்பப் போனாலே டெட்ராய்ட் போய்ச்சேர இராத்திரி ஒம்பது ஆயிடும்..." என்றான் டேவிட் எரிச்சலாக.

"சரி நான் கொஞ்சம் முன்னாடி போய் என்ன?ஏதுன்னு போய் பாத்துட்டு வாரேன்" குரு கிளம்பினான்.

இந்தமாதிரி டிராபிக் ஜாமில் எப்படித்தான் அமெரிக்கர்கள் பொறுமையாய் இருக்கிறார்களோ? நம்மூராய் இருந்தால் குறுக்கமறுக்க பூந்து போறவன் போயிக்கிட்டே இருப்பான்...என்று நினைத்துக்கொண்டே நடந்ததில் கார்கள் நிற்கும் முன்பகுதிக்கு வந்திருந்தான் குரு.

அங்கே.... அப்பா...அம்மா... என்று மெலிதாய் அழும் குழந்தைகள்.....அட....அந்தப் பெரியவரோட பேத்திகள்.

கார் தலைகீழாய் கவிழ்ந்து கிடக்க டிரக்கின் பின்புறத்தின் கீழ் கார்.. இரத்தம் உறைந்து கிடக்க....சுற்றிலும் போலீஸ் தலைகள்...அரசன் அன்றே கொல்லுவான்; தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். பெரியவரின் சாவுக்கு காரணமான இருவருக்கும் தண்டனையை தெய்வம் காலம் தாழ்த்தாமல் வழங்கிவிட்டதோ.... குரு அந்தக் குழந்தைகளை நோக்கிப் போகிறான்!

பதிவுகள், ஜனவரி 2005 இதழ் 61
albertgi2004@yahoo.com